அகஸ்தியர் 12000

என்னும் பெருநூல் காவியம்

பாகம் - 1



தாமரை நூலகம், சென்னை - 600 026.

அகஸ்தியர் பனிரெண்டாயிரம்

என்னும்

பெருநூல் காவியம்

(முதல் காண்டம்)--

பதிப்பாசிரியர்

ஆர்.சி.மோகன்

தாமரை நூலகம்

7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு

வடபழனி, சென்னை - 600 026

தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 111
முதல் பதிப்பு : பிப்ரவரி 1994
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் 2007
மூன்றாம் பதிப்பு : ஏப்ரல் 2013
நான்காம் பதிப்பு : ஏப்ரல் 2016
ஐந்தாம் பதிப்பு : அக்டோபர் 2019
ஆறாம் பதிப்பு மார்ச் : 2023

பதிப்புரிமை பெற்றது

நூலைப்பற்றி

நூலின் பெயர்	:	அகஸ்தியர் 12000 காண்டம்- 1
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	மார்ச் : 2023
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி
அச்சுத்தாள்	:	16 கி.வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	242
பிரதிகள்	:	1000
நூல் விலை	:	ரூ. 150.00
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை -34

அகஸ்தியர் 12000 முன்னுரை

அகத்தியர் பனிரெண்டாயிரம் என்ற இப்பெருநூல் காவியத்தின் பெருமையை எடுத்துச் சொல்வதென்பது இயலாத காரியம். இந்நூலில் உள்ள அரிய விஷயங்கள் அறிஞர்களுக்கு வியப்பூட்டக் கூடியவை. தமிழ் மொழி வல்லுநர்களும், வரலாற்று ஆசிரியர்களும், அறிவியல் மேதைகளும் தனித்தனியே ஆராய்ந்து முடிவு காண வேண்டிய அற்புதங்கள் மிகப் பல கொண்டவை.

அறிவுத்துறைகளுக்கு மட்டுமல்ல ஆய்வுத் துறைகளுக்கும் வேலையளிக்கும் எண்ணற்ற விஷயங்களை அகத்திய மாமுனிவர் இந்நூலில் கூறியுள்ளார்.

நிறைத்திட்ட நூலதுதான் குருநூலாகும்
நீடாழி யுலகமெல்லாம் இதற்குள்ளாச்சு

(பாடல்-8)

என்று அவரே கூறுவது எள்ளவும் மிகையன்று என்பது கற்றுணர்வோர்க்கு நன்கு புலப்படும்.

மழை போன்ற சோனைநீர் தன்னைப்போலும்
மாசற்ற ஞான சாகரமுமாகும்
தழைபோலே படர்ந்திருக்கும் நூல்கட்கெல்லாம்
தாயான நூலிதுதான் குருநூலாகும்

என்று அகத்திய மாமுனிவர் தமது நூலைப் பற்றிக் கூறுகிறார்.

முப்பு விபரம்

அகத்தியர் இந்நூலில் தேகத்தினை கல்தூண் ஆக்கி மனதின் சிந்தனைகளை ஒடுக்கி, சின்மயத்திலிருந்து கொண்டு வாசியை மூட்டி பழக்கம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார்.

உடலைக் கல்தூணாக்க வேண்டுமென்றால் முப்பூவை அறிய வேண்டும். ஆனால், முப்பூ என்ன என்பதைச் சித்தர்கள் யாருமே தெளிவாகச் சொல்லவில்லை. இந்த நூலில் சிவமுப்பூ, சத்திமுப்பூ, விஷக்கல் சுண்ணம், அண்ட முப்பூ போன்றவைகளைப் பற்றிக் கூறுகின்றார். துரதிர்ஷ்டவசமாக அப்பாடல்களில் சில சிதைந்து விட்டன. இருப்பினும் மற்ற நூல்களையும் ஆராயும் பொழுது சரியான முறையை அறிந்து கொள்ள இயலும் என்று நினைக்கிறோம்.

முப்பூவை அறியவும் சித்தர்களின் வாத, வைத்திய, யோக ஞான நுணுக்கங்களை அறிந்து கொள்ளவும் பல நூல்களைப் படிக்கவேண்டும் என்று கூறுகின்றார். அதன் பொருட்டு சித்தர்கள் இயற்றியுள்ள நூல்களை எல்லாம் தொகுத்துக் கூறுகின்றார்.

அகத்தியர் நூல்கள்

அகத்திய முனிவர் வைத்தியத் துறையில், சதுர்காண்ட வைத்தியம் 4000, பற்பம் 500, செந்தூரம் 300, திராவகம் 300, வைத்திய காவியம் 1500, நசகாண்டம் 300, அசுவ காண்டம் 500, கலைக்ஞானம் 100, பூரணம் 400, கருக்கிடை 200, தைலம் 500, சரக்கு சுத்தி 3000, கர்மகாண்டம் 300, வல்லாதி 600, பாண்டுவைப்பு 600, வைத்தியம் 600, எட்சணி 900, சூத்திரம் 300, மற்றும் வாத காவியம், ஞான காவியம், லட்சண காவியம், மாந்திரீக காவியம், தத்துவ காவியம் ஆகிய காவியங்கள், வகைக்கு ஆயிரம் பாடல்கள் சௌமிய சாகரம், சிமிட்டுரத்தினம், பரிபாஷை, பள்ளு, நாடகம், மருத்துவ பாரதம் ஜாலம் இவை தவிர நாடி நூல் 8000, மணி 4000, நிகண்டு 200, கரிசல் 300, வாகடியம் 500, எமகாண்டம் 800, ஏமதத்துவம் 800 முதலான பல நூல்களைப் பாடியிருப்பதாகக் கூறுகின்றார்.

இந்த நூல்களைப் படித்தால் மட்டும் போதாது அவற்றின் உட்பொருள் கண்டு அறிய முயற்சிக்க வேண்டும் என்று கூறுகிறார். இவை தவிர மேலும் பத்து இலட்சம் பாடல்கள் பாடி இருப்பதாகவும் கூறுகின்றார். இப்படி பாடி வைத்த நூல்கள் எல்லாவற்றிற்கும் இந்த நூல் குரு நூல் போன்றதாகும் என்று கூறுகின்றார்.

நூல்கள் கடலில் மிதந்தது

இப்படியாக சித்தர்கள் பலரும் பாடிவைத்த நூல்களின் பெருமை அறியாமல், தக்கபடி ஆராய்ச்சி செய்யாமல் சிலர் தவறாகப் பேசியதாலும், தகுதி அற்றவர்கள் அருமையான நூல்களின் பயனைத் தவறான வழியில் உபயோகப்படுத்தியதாலும், திரேதா யுகத்தில் வரரிஷி என்பவர் கோபம் கொண்டு கொடுத்த சாபத்தினால் சித்தர் நூல்களை எல்லாம் கடல் கொண்டு போயிற்று.

ஏராளமான நூல்கள் கடலால் கொள்ளப்பட்டன. போனது போக, தப்பித்தவறி ஒதுங்கிய நூல்களைச் சித்தர்கள் தேடிக் கண்டுபிடித்து சேகரித்து வைத்தனர்.

வேடதாரிகள்

சித்தர்களின் பெருமை ஓங்கி இருந்ததால் பலபேர் பொய் சொல்லி வேஷம் போட்டுக் கொண்டு சகல நூல்களையும் கற்றவர்கள் போல் வாயடி கையடி அடித்துக் கொண்டு மக்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதனைத் தொழிலாகக் கொண்டு விட்டார்கள். அப்படிப்பட்ட போலிகளைக் கண்டு ஏமாந்து போகாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று அகத்தியர் எச்சரிக்கிறார். இப்படிப்பட்ட போலிவாதிகளைச் சூழ்ந்து கொண்டு வயிறு பிழைப்பதற்காக ஒரு கும்பல் சீடர்கள் என்று சொல்லிக்கொண்டு, தங்கள்

குரு அதைச் செய்தார் இதைச் செய்தார் என்று மற்றவர்கள் நம்பும்படியாக பேசித் திரிவதைப் பற்றியும் அகத்திய மாமுனிவர் எச்சரிக்கிறார்:

வயித்தியன் எப்படி இருக்க வேண்டும்

வயித்தியன் என்பவன் நல்ல யோகவானாய் இருக்க வேண்டும். தர்ம சிந்தனை உடையவனாகவும், குரு வணக்கம் உடையவனாகவும் இருக்க வேண்டும். சகல நூல்களையும் கற்றுணரவேண்டும். மாயா சம்பந்தம் நீக்கி சின்மயத்தின் சோதி கண்டு, ஞான சாகரத்தின் நேர்மை அறிந்து ஆசாபாசங்களை விட்டு பெரியோர்கள், ரிஷிகள், தேவர்கள், அறிந்து கொள்ளத்தக்க அறிவும் உடையவனாக இருப்பவனே உண்மையான வைத்தியன் ஆவான் என்று கூறுகிறார்.

நூல்கள் அறியாமலும் முறையான வயித்தியப்பயிற்சி இல்லாமலும் வயித்தியன் என்று பேர் சொல்லிக்கொண்டு திரிகின்றவன் மீளா நரகத்திற்கு ஆளாவான் என்று கூறுகிறார்.

வயித்தியன் என்பவன் பூர்வ ஜென்ம பலனாக வயித்தியத்தினை அறியவும் நோய்களைத் தீர்க்கவும் வாய்ப்புடையவனாகப் பிறந்து இருக்க வேண்டும். அப்படி இருந்தாலே அவனுக்கு வயித்தியம் சித்தியாகும். பூநீறு எடுக்கவும், முப்பூ முடிக்கவும் அவனால் மட்டுமே முடியும். மற்றவர்களால் முடியாது என்றும் கூறுகிறார்.

பாடல்கள் 170 முதல் பூநீறு எடுக்கவும் குருமுடிக்கவும் விதிகளைக் கூறுகிறார்.190 முதல் அண்டக்கல் எடுப்பதற்கான வழிகளைக் கூறுகின்றார்.

இந்த 12000த்தில், முதற் காண்டத்தில் முப்பு மார்க்கத்தினைப் பற்றி பல சூட்சுமங்களைத் தான் கூறி இருப்பதாகவும் அதனை நன்றாக அறிந்து கொள்வது கடமை என்றும் கூறுகிறார்.

சித்தர்கள் தர்க்கம்

222 பாடல் முதல் சித்தர்களுக்கும் தமக்கும் நடந்த தர்க்கத்தினை அகத்தியர் கூறுகிறார். இப்பகுதியில் பல அரிய விஷயங்கள் விளக்கப்படுகின்றன. இரகசியங்கள் வெளியாகின்றன. பிரமக்கல், சுக்கான்கல், மட்டிக்கல், இரத்தினக்கல், விஷபீஜக்கல், ரோமக்கல் போன்று பலவகைக் கற்களையும், சித்தர்கள் பரிபாஷையாக பிண்டம் என்று குறிப்பிடுவது பிண்டக் கல்லையே என்பதும் இப்பாடல்களில் இருந்து விளங்குகின்றன.

258ம் பாடல் முதல் அகத்தியர் தாம் சுப்பிரமணியரிடம் ஞானோபதேசம் பெற்றதனைக் கூறுகிறார். 274 முதல் அகத்தியர் தாம் பாடிய நூல்களையும், மற்ற சித்தர்களின் நூல்களையும் பற்றிக் கூறி

அவற்றைக் கற்று உணரவேண்டியது ஞான மார்க்கத்தில் செல்வோர்க்கு மிகவும் அவசியம் என்று கூறுகிறார்.

அவ்வாறு அகத்தியர் கூறியுள்ள முக்கியமான நூல்கள் நந்தீசர் கருக்கிடை 300, நிகண்டு 300, காவியம் 1000, திருமூலர் 600, கடைக் காண்டம், தீட்சாவிதி, போகர் நிகண்டு, திருமூலர் வைத்தியம் 1000, கருக்கிடை 500, சட்டைமுனி 1000, ஞானம் 200, கொங்கணவர் கடைக்காண்டம், ஜெகஜாலம், நாற்காண்ட ஜாலம், தன்வந்திரி 1000, நிகண்டு 300, புலிப்பாணி 500, ஞானம் 100 பூரணம் 1000, ஒட்டியம் 1000 இவை போன்ற பெரு நூல்களும்,

சுப்பிரமணியர் 32, இராமதேவர் 10, வேதாந்த வழலை சூத்திரம், சுடலை சூத்திரம், சஞ்சீவி எண்ணெய், நந்தி 16, சித்தாதி எண்ணெய், ரோமரிஷி 51, சூதமுனி நாடி ஞானம் 8, வாதசூத்திரம், திருமூலர் உபதேசம் 20, தட்சிணாமூர்த்தி வகாரம் 10, தீட்சை 16, கொங்கணவர் முக்காண்டம், இவை போன்ற பல நூல்களைப் பற்றி வரிசையாக கூறி இருக்கிறார்.

வால்மீகர் 32, வரரிஷி 50, சிவராஜயோகம் கமலமுனி சூத்திரம் 16, சட்டைமுனி சூத்திரம் 64, தேரையர் சூத்திரம் 600, தன்வந்திரி கியாழம் 100, வேதமுனி காவியச் சுருக்கம் 20, சூத்திரம் 100, வியாசமுனி காவியம் 1000, சூத்திரம் 100, சிவவாக்கியர் குளிகை, இப்படி பல நூல்களைப்பற்றிக் கூறுகிறார்.

நாம் கேட்டிராத பல சித்தர்களைப் பற்றியும், இதில் கூறுகிறார், வேதமுனி, வரரிஷி, வால்மீகி, வியாசர், ஊர்வசி போன்றவர்களைப் பற்றியும் கூறுகிறார்.

அடுத்தபடியாக 374வது பாடல் முதல் சித்தர்கள் இருக்கும் இடங்களையும் அவ்வப் பகுதிகளில் வாழும் சித்தர்களின் தோற்றம்; உயரம், ஆயுள் முதலானவை பற்றியும் கூறுகிறார். காசிக்கு மேற்கே, நர்மதைக்குத் தெற்கே, டில்லிக்கு மேற்கே, அயோத்திக்கு மேற்கே மற்றும் சிங்கள தேசத்திலும் வாழும் சித்தர்களைப் பற்றியும் கூறுகின்றார்.

தென் பொதிகைக்குக் கிழக்கே, வேதவியாசர் சமாதி இருப்பதாகக் கூறுகின்றார். வியாசர் 8000, பாடல்களை பாடியதாகவும் அவற்றை குகைக்குள் வைத்து மறைத்து இருப்பதாகவும் கூறுகின்றார்.

தாமிர பரணிக்குத் தெற்கே பூமிக்கு அடியில் வருண மகாரிஷி தவம் செய்து கொண்டிருப்பதாகவும் அவர் கெவுட நூல் 1000, சமுத்திர நூல் 200, மேக நூல் 300, சப்த மண்டலம் 100, வான நூல் சுருக்கம் 10, பூமி நூல் 1000, சோதிடம் 8000, போன்ற நூல்களை செய்திருப்பதாகவும் கூறுகின்றார்

இப்படி நூல்கள் எல்லாம் இருக்கின்றன என்பதனை அகத்தியர் 12000 வாயிலாக நாம் படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டி இருக்கின்றதே தவிர வேறு வகையில் அறிய முடியாது. 537 பாடலில் கங்கை நதிக்கு மேற்கில் நரசிங்க ஸ்தலம் இருப்பதாக கூறுகின்றார்.

கங்கை நதிக்குக் கிழக்கே ஜமதக்கினி முனிவர் வசிப்பதாகக் கூறுகின்றார். இப்படி அகத்தியர் நாம் நினைத்தும் கூட இராத ரிஷிகளைப் பற்றியும் அவர்கள் செய்த நூல்களைப் பற்றியும் கூறுவது வியக்கத்தக்க தாக உள்ளது.

தேக வாழ்க்கை

ஆச்சப்பா பஞ்சகர்த்தாள் ஆடுங்கூத்து
அப்பனே உனக்குள் உற்றுப்பாரு
பேச்சப்பா பிருதிவிதான் அப்புதனிலொடுங்கி
பேரான அப்பதுவும் தேய்வினிலொடுங்கி
தேச்சப்பா தேய்வது வாயுவினிலொடுங்கி
தெளிவான வாயுவது விண்ணிலொடுங்கி
ஆச்சப்பா ஒன்றுக்குள் ஒன்றோடொன்று
அப்பனே உற்பனத்தால் அறியலாச்சே. பாடல் 575

இப்படி பஞ்ச பூதங்களாலான தேசத்தை வசப்படுத்த ஆசனங்கள், யோகம், நிஷ்டை முதலானவை பற்றி கூறுகிறார். மேலும் தொடர்ந்து சித்தர்களின் நூல்களைப் பற்றிக் கூறும் அகத்தியர் சூரகிரியைப் பற்றியும் அம்மலையிலுள்ள மூலிகைகளின் வளப்பத்தையும் அங்கு வாழும் சண்டீசுவரரின் ஆசிரமத்தைப் பற்றியும் கூறுகிறார்.

700வது பாடலில் தமிழ்ச் சங்கத்தினைச் சேர்ந்தோர்கள் எல்லோரும் சேர்ந்து தன்னுடைய நூலைப் பாராட்டி தமக்கு குருமுனி என்று பட்டம் கொடுத்ததாகக் கூறுகிறார்.

சீரேதான் சங்கத்தார் எல்லாங்கூடி
சிறப்புடனே அரங்கேற்றஞ் செய்துமேதான்
தீரேதா னகஸ்தியர்க்கு குருபட்டந்தான்
திகழாகத் தான்கொடுத்தார் சித்தர்தானே.

அகஸ்தியருக்குப் பட்டச்சிறப்பு

தானான குருமுனியா ரென்று சொல்லி
தன்மையுள்ள சங்கத்தா ரெல்லாருந்தான்
கோனான குருவணக்கம் மிகவுங்கூறி
குவலயத்தி லின்னூல்போல் யார்தான்செய்வார்

பானான பராபரியாள் கடாட்சத்தாலே
    பாடிவைத்த பெருநூலாங் காவியந்தான்
தேனான மனோன் மணியாள் காமரூபி
    தேற்றமுட னாசீர்மஞ் செய்தார்காணே. 700

காணவே அகஸ்தியர்க்குத் திருமூலவர்க்க
    சுண்கானா அஞ்சலிகள் மிகவுஞ் சொல்லி
தோணவே பாரிசாத மாலையொன்று
    தொடுத்தார்கள் அகஸ்தியர்க்குத் திருமூலத்தார்
வேணபடி சங்கத்தார் முன்னதாக
    விருப்பமுடன் மகிமைகளும் மிகவுங்கூறி
வாணர்முதல் பண்டிதங்க ளதிகங்கூறி
    வளமாக செயவாழ்த்துக் கூறினாரே 701

கூறவே பொதிகைமலை நகரிமேளம்
    குறிப்புடனே துத்தாரி தாரைசின்னம்
ஆறவே செயபேரி முரசுமார்க்கம்
    அகஸ்தியர்க்கு சங்கத்தார் கொண்டுசென்று
மாறவே பொதிகைமலை சுத்தியல்லோ
    மகத்தான முனிவரிடம் நடந்து வந்து
ஏறவே மலை தனிலே சென்றுமேதான்
    எழிலான குகைக்குள்ளே வழிவிட்டாரே. பாடல் 702

இவ்விடத்தில் ஒன்றினைக் குறிப்பிட வேண்டியது அவசியமாகின்றது. அகத்தியருக்கு மற்ற ரிஷிகள், நகரி, துத்தாரி, தாரை சின்னம் முரசு செயபேரி மார்க்கத்தோடு குருமுனி என்று பட்டம் கொடுத்துச் சிறப்பித்து இருக்க யாரோ சிலர் சிறுமதியாளர்கள் குருமுனி என்பதை குறுமுனி என்றாக்கி அகத்தியர் குட்டையான உடல் படைத்தவர்கள் என்று கதை கட்டி விட்டு விட்ட கொடுமையைக் காண்கிறோம்.

அகத்தியர் 12000த்தில் தமக்குக் குருமுனி என்ற பட்டம் கிடைத்த வரலாற்றைக் கூறியிராவிட்டால் அவரைக் குறுமுனி என்றும் குட்டையான உருவம் உடையவர் என்றும் நாமும் நினைத்துக் கொண்டிருக்க நேரிடும். இதை தமிழ் பயிலும் ஒவ்வொருவரும் மனதில் கொண்டு அகத்தியரை குறுமுனியாக்காமல் குருமுனியாக வைத்து வணங்க வேண்டும்.

இந்நூலின் பிற்பகுதிகள் அசுவதாரிடி திருமூல வர்க்கதார் முப்பூ எடுத்தல், சுகர் நாடி சோதிடத்தால் திருமூலவர்க்கத்தைச் சேர்ந்த சித்தர் ஒருவர் விபீஷணரின் பேரன் என்பது அறியப் பெற்று விபீஷணன் வைத்திருந்த திரவியத்தை எடுக்க உதவியது, கெருட மகாரிஷி, யுகாந்த

மகாரிஷி, துவாபரரிஷி, நவகண்டரிஷி, அஞ்சன மகாரிஷி போன்ற ரிஷிகளைப் பற்றியும் அவர்கள் புராண புருஷர்களுக்கு உதவி செய்ததைப் பற்றியும் கூறுகிறார்.

அகத்தியர் 12000 என்னும் இந்நூலின் முதற்காண்டத்தின் வாயிலாகவே வேதவியாசர், வால்மீகி, சூதகமுனிவர். வரரிஷி முதலானவர்கள் தமிழில் பாடி உள்ளார்கள் என்பதும், ரிஷிகள் செய்த பெரும்பாலான நூல்கள் கடலால் கொள்ளப்பட்டு அழிந்து போயின என்பதுவும், கடலால் கொள்ளப்பட்டவை போக, மிஞ்சியவை கிடைத்துள்ளதைப் பற்றியும் அறிய முடிகின்றது.

வால்மீகிக்கும் வேத வியாசருக்கும் தமிழ் தெரியுமா என்று யாரும் சந்தேகப்படவேண்டியதில்லை. ஏனென்றால் இக்காலத்திலும் பல மொழிகளில் தேர்ச்சி பெற்ற சிலரை நாம் காண்கிறோம். ஒரே சமயத்தில் நான்கு ஐந்து மொழிகளில் பாண்டித்யம் பெற்று கதை கவிதைகள் இயற்றுபவர்களைக் காண்கிறோம். அப்படி இருக்க மகாதவசிகளும், வாழ்நாள் முழுவதையும் சிந்தனையிலேயே செலவிட்டவர்களுமான ரிஷிகளுக்குப் பல மொழிகளை அறிந்து கொள்வதோ அவற்றில் புலமை பெறுவதோ இயலாத காரியம் அன்று.

அகத்தியர் 12000 என்ற இப்பெரு நூல் ஒரு என்சைக்கிளோபீடியா போல் பெரிய பொருள் களஞ்சியமாக திகழ்கிறது என்பதில் ஐயமில்லை. இத்தனை காலம் இந்த நூல் தமிழ் மக்களுக்குக் கிட்டாதிருந்தது அவர்களுடைய துரதிர்ஷ்டமே என்று கருதுகிறோம். தமிழ் மக்கள் தங்கள் பெருமையையும் சிறப்பையும் உணர்ந்து கொள்ளத் துணை புரியும் இந்த நூல் முழுமையாக வெளி வருவது தமிழ் நாட்டின் தவப்பேறு ஆகும்.

இந்நூலில் 5 காண்டங்கள் மட்டுமே எமக்குக் கிடைத்துள்ளது. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், தஞ்சை சரஸ்வதி மஹால் போன்ற இடங்களிலும் 5000 பாடல்கள் கொண்ட முதற்பகுதியே உள்ளது. இதன் பிற்பகுதி யாரிடமேனும் இருந்து, கொடுத்து உதவினால், அவர்கள் தமிழகத்திற்கு ஈடு இணையற்ற சேவை செய்தவர்களாவார்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறோம்.

எஸ்.பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

உ

கடவுள் துணை

பதினெண் சித்தர்களில் மகாமருத்துவம்

பொருந்திய

அகஸ்திய முனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

பெருநூல் காவியம்

12,000

முதலாவது காண்டம்

காப்பு

ஆதியென்ற கணேசருட பாதம்போற்றி
அப்பனே மனோன்மணியாள் கமலம்போற்றி
சோதியெனுஞ் சுடரொளியே சொரூபாபோற்றி
சொற்கபதி நான்முகன்றன் பாதம்போற்றி
விதியெனும் வயித்தியர்கள் பிழைக்கவென்று
வகுத்திட்டேன் பனிரெண்டு காண்டந்தன்னை
நீதியுடன் ஆயிரத்துக் கொருகாண்டந்தான்
நிகழ்த்தினேன் மாணாக்கள் பிழைக்கத்தானே. 1

தானான புலஸ்தியனே சாற்றக்கோளும்
தகைமையுள்ள குரு நூலாம் பெரு நூலாகும்
பானான பராபரியை மனதிலெண்ணி
பாடினேன் பனிரெண்டு காண்டமப்பா
தேனான காண்டமது வொன்றுக்கேதான்
செப்பினேன் காவிய மாயிரந்தானாகும்
மானான வசுவனியை வணங்கியானும்
மகிழ்ச்சியுடன் பாடிவைத்த காண்டமாமே 2

காண்டமாம் பன்னீராயிரந் தானாகும்
காசினியி லிதைப்போலொரு நூலுண்டோ
தூண்டியதோர் காவியமாம் பன்னிராயிரம்
துறையோடு முறையோடு செப்பினோம்யாம்
மீண்ட தொரு யின்னூலை திரட்டியேதான்
மேதினியில் குகைக்குள்ளே வைத்தேன்யானும்
ஆண்டகையாம் அசுவனியாந் தேவர்யானும்
அடியேனுக் கோராணை செப்பினாரே 3

செப்பியதோ ராணையென்றால் சொல்லக்கேளும்
செகமதிலே பாவிகளும் கர்மியுண்டு
ஒப்பியதோர் நூலதனைக் கொடுத்தாலப்பா
என்மகனே லோகமெல்லாஞ் சித்தாய்ப்போகும்
தப்பியே தலைதெறித்துக்போகு மென்று
சாற்றினா ரெந்தனுக்குச் சாபமப்பா
இப்புவியி லின் நூலைக் கொடாதேயென்று
யெழிலுடனே வாக்குரைத்தார் தேவர்காணே. 4

காணவே அடியேனுந் தாள்வணங்கி
கருத்துடனே நாதாக்கள் சொற்படிக்கு
வேணவே அடியேனும் மனதுவந்து
விருப்பமுடன் அசுவினியை மிகவும்வேண்டி
தோணவே சாபமதை நிவிர்த்திசெய்ய
தொன்மையுடன் அடியேனுந் தாள்பணிந்து
ஊணவேயவர்பாதங் கரத்தால் வேண்டி
உத்தமனே பலகாலும் வந்தித்தேனே. 5

வந்தித்தேன் கோடிமுறை அஞ்சலித்து
வாகுடனே அவர்மனதுக் கிசையவென்று
சிந்தித்தேன் பலகாலும் நாதர்தம்மை
சிறப்புடனே நவகோடி ரிடிகள்மெச்ச
தொந்தித்த யான்செய்த பெருநூல்தன்னை
தொல்லுலகில் சித்தர்முனிமாந்தர்யாவும்
நிந்தித்த தோஷங்கள் கூறொண்ணாது
நீணிலத்தில் சாபமதை நீக்கவென்றே. 6

நீக்கவென்று கேட்கையிலே அசுவனிதாமும்
நிட்சயமா யெந்தனுக்கு வுண்மைகூறி
ஆக்கமுடன் குகைக்குள்யேயிருந்த நூலை
அவனியிலே யாவருக்கும் போதித்தேதான்
தாக்கமுடன் சதாகாலந் தரணிமீதில்
சதகோடி யுகவருஷம் அழியாவென்று
நோக்கமுடன் வரமொன்றுங் கொடுத்தாரப்பா
நுணுக்கமுடன் பாரினிலே நிறைத்திட்டேனே. 7

நிறைத்திட்ட நூலதுதான் குருநூலாகும்
நீடாழி யுலகமெல்லாம் இதற்குள்ளாச்சு
வறைத்திட்டேன் மூன்றுலட்சங் கிரந்தத்தன்னை
வாகுடனே ஆராய்ந்து உளவுகண்டு

பறைத்திட்ட பலநூலும் பார்த்தாராய்ந்து
பாரினிலே சிவயோகி மாந்தருக்கு
மறைத்திட்ட சாத்திரத்தின் மார்க்கமெல்லாம்
மதிப்புடனே புவியோர்க்கு விரித்திட்டேனே. 8

விரித்திட்டேன் மூன்றுலட்சங் கிரந்தந்தன்னை
விவரமுடன் பெருநூலாய்க் குருநூலாக
குரித்திட்டேன் சூத்திரங்கள் கருக்கிடையாவும்
கூறினேன் கெடுக்கிடைக ளனந்தங்கண்டேன்
தரித்திட்டேன் பெருநூல்கள் சிறுநூல்கள்யாவும்
தகமையுடன் ஒன்றுமுதல் பதினாறுமாகும்
முரித்திட்டேன் கோர்வைகளு மனந்தங்கோடி
முசியாமல் பார்த்துமல்லோ மொழிந்திட்டேனே. 9

மொழிந்திட்டேன் யான்செய்த நூலுங்கண்டு
முதன்மையுடன் பதினெண்பேர் நூலும்பார்த்து
வழிந்திட்டேன் நவகோடிரிடிகள் நூலும்
வண்மையுடன் கண்டுமே மிகவாராய்ந்து
வழிந்திட்ட நாற்பத்தி யெட்டுப்பேர்கள்
அன்புடனே செய்ததொரு நூலையெல்லாம்
பழிந்திட்ட சாபமதுவும் நீக்கியல்லோ
பாரினிலே பாடிவிட்டேன் காண்டந்தானே, 10

காண்டமாம் பன்னீராயிரந் தானிந்நூல்
காணாத காட்சியெல்லா மிதற்குள்ளாகும்
வேண்டியதோர் கருமான மிதற்குள்ளுண்டு
விருப்பமுடன் சூட்சாதி சூட்சமெல்லாம்
தாண்டவம்போல் லட்சுமியாள் மனோன்மணித்தாய்
சதாகாலம் வீற்றிருப்பார் பெருநூல்தன்னில்
நீண்டதொரு சாகரமும் இதுவேயாகும்
நிலையான காவியம் பன்னிரண்டுமாமே. 11

ஆமேதான் காவியத்துக்கோராயிரந்தான்
அப்பனே பாடிவைத்தேன் பெருநூலப்பா
தாமேதான் காண்டத்துக் காயிரந்தான்
சாற்றினேன் காவிய மாயிரந்தானாகும்
நாமேதான் சொன்னபடி பனிரெண்டுகாண்டம்
நலமுடனே பன்னிராயிரக் காவியந்தான்
போமேதான் பெருநூலைப் பார்த்தபேர்க்குப்
பொங்கமுடன் பதவிகளுங் கிட்டுந்தானே. 12

தானான சாலோக சாயுச்சியந்தானும்
தகைமையுடன் பதவிகளுக் கிடமுண்டாகும்
வேனான பதவியதுக் கிட்டும்போது
வேகமுடன் மோட்சமென்ற வீடுதானும்
பானான சொர்க்கபதிக் காணியாகும்
பரலோக மென்னாளும் பலிக்கும்பாரு
மானான சாத்திரத்தை மதிப்பிட்டேதான்
மானிலத்தில் பார்த்தவருக்கு மகிமைகேளே. 13

கேளேதான் மடலவிழும் தாமரையாள்தானும்
கிருபையுடன் என்னாளும் வாசமுண்டாம்
நாளேதான் மகிமையுண்டாங் கீர்த்தியுண்டாம்
நலமான வாழ்நாளும் மிகவுண்டாகும்
பாளேதான் போகாமல் இடமுண்டாகும்.
பாரினிலே யெந்நாளும் வெற்றியுண்டாம்
வீளேதான் சின்மயத்தின் வெண்ணீருண்டாம்
வீரமுட னென்போக மிகவுண்டாமே. 14

உண்டான சாத்திரத்தை மிகவும்பார்த்து
உத்தமனே புலஸ்தியனே செப்பக்கேளும்
கண்டுமே யாராய்ந்து பலனூல்பார்த்து
கவனமுடன் பாடிவைத்த பெருநூலப்பா
விண்டதிலை கண்டவர்கள் மகிமையப்பா
விருப்பமுடன் தனையறிந்த பெருநூலப்பா
தெண்டனிட்டுப் பணிவுடனே காத்திருந்து
தொந்தமுட னின்னூலை வாங்கநன்றே. 15

நன்றான வார்த்தையது மிகவேபேசி
நயமான விசுவாசக் காட்சியோடு
பன்றான பழிமுறைகள் விகற்பஞ்சொல்லி
பட்சமுடன் நூலதனைப்பறிக்கவென்று
குன்றான மலையருகே வந்துநின்று
கோடானகோடிமுறைகள் வாதுபேசி
வென்றான முகதாவில் விருப்பஞ்சொல்லி
வேண்டியே சாத்திரத்தைக் கேட்பார்காணே. 16

காணவே புலஸ்தியனே சொல்லக்கேளும்
கருவான நூலிதனைக் கண்டாராய்ந்து
பூணவே மனதுவர நடந்தவர்க்கு
புண்ணியனே இந்நூலைக் கொடுக்கவேண்டும்

வேணவே ஆசாரமது மிகவும்சொல்லி
விருப்பமுடன் புத்திமதி பலவுங்கூறி
தோணவே அவர்தனக்கு நூலைஈய்ந்தால்
தொல்லுலகில் நேர்ந்தகுறை விட்டதென்னே. 17

என்னவே விட்டகுறை நேர்ந்துதானால்
யெழிலான நூல் இதுவும் வாய்க்கும்பாரு
பன்னவே பலநூலைப் பார்த்திட்டாலும்
பாரப்பா எந்தனுக்குப் பலியாதொன்றும்
சொன்னதொரு நூலிதிலே யாவும்காண்பாய்
சுந்தரனே சிவராஜ யோகங்கிட்டும்
மன்னவனே பூலோக மிருந்துவாழ்வாய்
மார்க்கமுடன் அஷ்டசித்தி பெறலாம்பாரே. 18

பாரேதான் புலஸ்தியனே சொல்லக்கேளும்
பட்சமுடன் நூலினது மார்க்கஞ்சொல்வேன்
நேரேதான் வாதமது வயித்தியமார்க்கம்
நிசமான குளிகையது மெழுகுமார்க்கம்
சீரேதான் லேகியங்கள் பற்பமெல்லாம்
சிறப்பான செந்தூரங் கபாடமெந்திரம்
கூரேதான் மாத்திரைகள் குளிகைகள்யாவும்
குறிப்புடனே ஆக்கிராணஞ் செப்பக்கேளே. 19

செப்பவென்றால் சூரணங்கள் எண்ணெய்யாவும்
தெளிவான தயிலமுதல் திராவகங்கள்
ஒப்பமுடன் பிளாஸ்திரிகள் கிஷாயபாகம்
உரிமைபெற அஞ்சனமுந் திலதப்போக்கும்
கொப்பெனவே கற்கங்கள் மெழுகுமார்க்கம்
கொடிதான செயநீர்கள் உருக்குமார்க்கம்
தப்பிதங்கள் நேராமல் தரணியோர்க்கு
சாற்றினேன் இன்னம்வெகு அதீதந்தானே. 20

அதிதமுடன் அஷ்டமா சித்துயாவும்
அப்பனே யாமுரைத்தோம் புலஸ்தியாகேள்
கதிதமுள்ள செகஜால குளிகைமார்க்கம்
கருவான மோகனங்கள் வசியந்தானும்
துதிதமுள்ள செப்பிடுநல் வித்தைதானும்
துறையான பேதனங்கள் உச்சாடனங்கள்
பதிதமுள்ள ஸ்தம்பனங்கள் ———— சைமூலி
பகருவேன் இன்னம்வெகு கோடிதானே. 21

கோடியாம் கற்பமுதல் முப்புமார்க்கம்
கொடிதான விஷமூலி __________ ச்கு
நாடியே மலைவளமும் நதிகள்யாவும்
நலமுடனே பா __________ னட ந்தன்னில்
தேடியே கண்டமது கிடைத்துதானால்
__________ நீயுமொரு சித்தனாவாய்
கூடியே மனோன்மணித்தாய் அருளிருந்தால்
குவலயத்தி லுந்தனுக்கு வாய்க்கும்பாரே. 22

வாய்க்குமே சித்தர்களு முனிவர்தாமும்
வரைகோடி முறைகோடி துறைகள்கோடி
தாய்க்கமலம் வீற்றிருக்கும் தாயார்தாமும்
தகமையுடனுந்தனக்கு முன்னே நிற்பாள்
காய்க்குமே யவரவர்கள் செய்த நூல்கள்
கடலாகுமடா வாதமது கோடாகோடி
சாய்க்கவே சாத்திரங்கள் அனந்தஞ்
சதிரான உட்கருவை மறைத்தார்பாரே. 23

மறைத்தாரே சாத்திரங்கள் மிகவுஞ்செல்லி
மானிலத்தில் சாபம்__தாச்சு
நிறைத்தாரே தங்கள்தங்கள் மனதின்நேர்மை
நினைத்தபடி சாத்திரத்தைப் பாடிப் போட்டார்
குறைத்தாரே நூலதனை மாராட்டங்கள்
குறிப்புடனே பாடிவைத்தா ரனேக நூல்கள்
முறைப்படியே பெருநூலுஞ் சிறு நூல்தன்னை
முயற்சியுடன் பாடிவிட்டா ரனந்தமாமே 24

ஆமேதான் பலரிடிகள் செய்த நூலை
அப்பனே மெய்யென்று சொல்லியேதான்
போமேதான் சுட்டலைந்து கெட்டார்கோடி
பூதலத்தில் பல கோடி மாந்தரப்பா
நாமேதான் சொன்னபடி நீதியில்லை
நலமான இந்நூல்போல் யாருஞ்சொல்லார்
தாமேதான் அவரவர்கள் செய்த நூலில்
தப்பாமல் சாபத்தால் முறைபாழாச்சே. 25

பாழான சாத்திரத்தைச் சாபஞ்சொல்லிப்
பாருலகில் மதிமயங்கிக் கெட்டார்கோடி
வாழலா மென்று சொல்லி யவர் நூல்பார்த்து
வளமை__________ பழிதனக்கு வாளுமாக

சாழவே சாத்திரத்தின் சூட்சங்காணார்
சதகோடி சூரியன்போல் மனதிலெண்ணி
வீழவே சாத்திரத்தைப் பார்த்தாராய்ந்து
விருதாவில் கெட்டலைந்தார் மாண்பர்தாமே. 26

மாண்பான சித்தரெல்லாங் கூட்டங்கூடி
மதிப்புடனே இமயகிரி வந்தாரங்கே
தாண்மையுடன் நாமிருக்குங் குகையைத்தேடி
சட்டமுடனெந்தனையும் ஆராய்ந்தேதான்
ஆண்மையுடன் வந்தெதிரே நின்றுகொண்டு
அப்பனே வசுவனியை வணங்கிப்போற்றி
பாண்மையுடன் தலைமீதிற் கையைவைத்து
பட்சமுடன் அஞ்சலிகை செய்திட்டாரே. 27

செய்திட்ட சித்தர்தமைக் கண்டபோது
செம்மையுடனவர்தனக்காசனங்களிட்டு
வைதிட்ட தேவர்முனி ரிடிகள்தம்மை
வளமையுடன் நாதாந்த சித்துகேளு
பைதிட்ட சுனைமுகமும் விட்டுநீங்கி
பாருலகில் வந்தென்னைக் காணவென்று
துய்திட்ட சித்தர்களே கூட்டங்கூடி
துறைமுகமாய் வந்ததென்ன சொல்லென்றேனே. 28

சொல்லென்ற வேளையிலே முனிவர்தாமும்
சுத்தமுடன் புகலுகிறார் நந்தமக்கு
வெல்லவே வேதாந்தக் குருவேயென்று
விருப்பமுடன் கேள்வியது மிகவுங்கேட்டு
அல்லலுடன் சாத்திரத்தை யுருகியல்லோ
அப்பனே சாகரத்தில் விட்டெறிந்தார்
கல்லுட்டனே ஜலமதிலே மிதந்துகொண்டு
காற்றுடனே கரையோரம் ஒதுக்கலாச்சே. 29

ஒதுக்கியதோர் குருநூல்கள் அழிந்துப்போச்சு
ஓகோகோ நூல்கள் மிதக்கலாச்சு
சதுரான கருமானஞ் சாகரத்தில்
சட்________ந்தியல்லோப் பாழாய்போச்சு
மெதுவாக மிதந்ததோர் சாத்திரங்கள்
வளமையுடன் பாடிவைத்தார் வெகுநூல்தாமும்
ழதுமடையர் ________த் தலைகீழாக
மூர்க்கமுடன் படித்துமல்லோ மொழிசொன்னானே. 30

சொன்னதொரு மொழியெனக்குங் களவேயாகும்
சுருதி- வேதமுதல் மறவேயாகும்
நன்னயம்போல் னூலதனை மெய்றெண்ணி
நாதாந்த சித்துமுதல் காட்டிலுள்ளோர்
பன்னவே பரவி பயன்காணாமல்
பாரினிலே யென்னூலுங் கிட்டாமற்றான்
கன்ன........................ தான் கொடுத்த கொடை யென்றெண்ணி
காசினியிலே மாந்தர் .... மாண்பே. 31

மாண்பான சாத்திரத்தை மதிப்பிட்டோங்கி
மானிலத்தில் வறுமைய்து மிகக்கொண்டாடி
காண்பான சாகரத்தை விட்டொழித்து
கருத்துடனே பெருனூலைத் தேடிக்கொண்டார்
சாண்பாம்பே யானாலும்த டிகல்வேணும்
தப்பாமல் சாத்திரங்கள் அறியாப்பேர்க்கு
வீணான- ம-ருக்கு யென்னூல்வேண்டும்
விருப்பமுடன் பெருனூலும் வேண்டும்பாரே. 32

பாரேதான் புலஸ்தியனே சொல்லக்கேளும்
பாரினிலே சித்தரெமைக் காணவென்று
நேரே தான் யெந்தனிடம் வந்தபோது
நேர்மையுடன் கைதனிலே யிருந்தனூலை
சீரே தான் வாதமதை உபதேசித்து
சிறப்புடனே நூல்கொடுத்து புத்திகூறி
மேரேதான் மேதினியில் பிழைக்கவென்று
மேன்மையுடன் வாக்களித்த துறுதியாமே. 33

உறுதியா மண்டபிண்டங் காணவேண்டும்
வுத்தமனே கோசபீச மறியவேண்டும்
நிறுதியா மாதாரங் கண்டாலெல்லாம்
நீணிலத்தில் நினைத்ததெல்லாஞ் சித்தியாகும்
பருதிபோல் மேலான ஆதாரங்கண்டு
பட்சமுட .... னாயிரத் தண்டங்கண்டு
சுறுதியெனும் கீழ்மேலும் நடுவுங்கண்டு
சூட்சத்தில் வகாரத்தின் வாசிபோற்றே. 34

போற்றவே வாசியைத்தான் காணவேண்டும்
பொங்கமுடன் வழலையுப்பு அறியவேண்டும்
ஏற்றவே பூரகத்தை மனதிலுன்னி
எழிலான தேவியுட பாதங்கண்டு

மாற்றவே குண்டலியின் பொருளைக்கண்டு
மகத்தான வல்லபையை மனதிலுன்னி
தூற்றியே அண்டபிண்ட நிலையைக்கண்டு
துப்புரவாய் சிவகாமி தன்னைக்காணே. 35

காணவென்று மெய்ஞ்ஞானம் வரவேவேண்டும்
கருவான சிவசத்தி காணவேண்டும்
தோணவே மகாரத்தில் குண்டலியைப்போற்று
தொந்தமுடன் மகாரத்தின் பொருளைப்போற்றி
வேணவே யைங்காயப் பொருளேயுன்னி
விண்ணுலகில் சிவபதத்தை மனதிலுன்னி
பூணவே வோங்காரச் சத்தங்கண்டு
புகழான சத்திநீ மாயம்பாரே. 36

பாரேதான் பஞ்சகர்த்தா ளாடுங்கூத்து
பாங்கான வாறாதார_________ கனைநோக்கி
நேரேதான் தொண்ணூற்று வாறுகொச்சம்
நேர்மையுள்ள தத்துவங்கள் காணவேண்டும்
சீரேதான் முப்பூவைக் காணவேண்டும்
சிறப்பான பொதிகைமுனி சொன்னேனப்பா
ஆரேதா னுந்தமக்குச் சொல்வாரப்பா
அப்பனே பட்சம்வைத்துச் சொன்னேன்பாரே. 37

சொன்னேனே சஞ்சீவி முதல்கள்யாவும்
தோற்றமுடன் நாதவிந்தை யறியச்சொன்னேன்
மன்னேகேள் திரிமூர்த்தி யானபேர்கள்
மகத்தான ருத்திரனும் விஷ்ணுபிரம்மா
பன்னவே கமலமென்ற பீடந்தன்னைப்
பாருலகில் அறியாத சித்துயென்ன
அன்னேதான் நடுமூலம் உள்மூலந்தான்
அப்பனெ மேல்மூல மென்னலாமே. 38

என்னவே அமுர்தமென்ற காட்டைக்கண்டு
யெழிலான வாலைதனைப் பூசித்தேதான்
பன்னவே நகாரமுடன் வகாரசித்துப்
பரிவுடனே சிகாரமென்ற அகாரந்தானும்
முன்னவே மகாரமென்று மூலவட்டம்
முப்பாழுக் கப்பாலு மறியவேண்டும்
சொன்னபடி தப்பாது புலஸ்தியாகேள்
சொரூபமென்ற பிண்டமதை யறியவென்றே. 39

அறியவே பிண்டமென்ற நாதவிந்தை
அப்பனே வஷ்டாங்கந் தன்னிற்றானும்
முறியவே யாதியந்த முடிவுகண்டு
முப்பான முப்பூவைக் காணவேண்டும்
குறிபொருளாய் ஆராய்ந்து குவலயத்தில்
கூர்மையுடன்_________ தேகத்தின் நிலையைக்கண்டு
வெறிபடவே உலகநடை காணவேண்டும்
வருமையுட னிருந்தவர்க் கொன்றில்லைதானே. 40

தானான பராபரமு நீயுமாச்சு
சத்த சாகரமுந்தான் நீயுமாச்சு
தேனான சத்திசிவம் நீயுமாச்சு
தெளிவான கோயில்குளம் நீயுமாச்சு
பானான தசவாய்வு நீதானப்பா
பாருலகி லுன்னைவிட வேறொன்றில்லை
மானான பராபரத்தின் நுட்பங்கண்டோர்
மானிலத்தி லுண்டோதான் மன்னாகேளே. 41

கேளேதான் புண்ணியனே புலஸ்தியனேகேளு
பூவுலகில் கர்மிகளு மனேகமுண்டு
நாளேதான் நற்குணத்தோ ரதிலுமுண்டு
நலமான கலைக்கியானங் கற்றோருண்டு
வீளேதான் கலையிரண்டுங் காணவேண்டும்
வடகலையும் பின்கலையு மறியவேண்டும்
சூளேதான் சூரியனின் லக்கம்வேண்டுஞ்
சுந்திரனே சந்திரனில் வசியமாமே. 42

ஆமேதான் ராசனுக்குச் சந்திரனில்நிற்கும்
அப்பனுக்கு ப்புருஷனிட சூரியன்றானும்
தாமேதா னிருகலையு மொடுங்கிப்பாயும்
தாக்கான சூனியத்தி லிருந்துகொண்டு
போமேதான் வாசியைத்தான் வழக்கஞ்செய்து
பொங்கமுடன் மூலமதி லேறவேண்டும்
நாமேதான் சொன்னபடி யஷ்டசித்தி
நலம்பெறவே யெப்போதும் பெருகலாமே. 43

பெறுகலாம் மும்மூர்த்தி யீடுமல்ல
பேரான வாசிசித்தி யோகசித்தி
தறுகவே யகஸ்தியனும் சொல்லிப்போட்டேன்
நயம்பெறவே புலஸ்தியா தெரிந்துகொள்ளு

குறுகியதோர் குருமுனிவர் வாக்குப்பொய்யா (து)
குவலயத்தில் சித்தர்களுக் குண்மையாகும்
நறுமலர்போல் பெருநூலைப் பார்த்தபேர்கள்
நாயகனே யெந்நாளுந் தவங்கொள்வாரே. 44

தவங்கொள்வா ரிந்நூலைப் பார்த்தபேர்கள்
தாரணியில் சதாகாலம் வாழ்ந்திருப்பார்
பவமகற்றிப் பாருலகில் பரிசுத்தவானாய்ப்
பாங்குபெற யெந்நாளும் சிவத்தினின் று
உவமுடனே காயப்ர வேசமாகி
உத்தமனே கூடுவிட்டுக் கூடுபாய்வார்
சவமதுபோல் இருந்தாலும் பிராணவாய்வைத்
தன்னுக்குள் தானடக்கி யிருப்பார்தானே. 45

தானான புலஸ்தியனே சொல்லக்கேளும்
தகைமையுள்ள ஆயுரு வேதந்தன்னை
பானான வடமொழியைப் பிரித்துப்பார்த்து
பன்னிரெண்டு காண்டமதாய்ப் பாடிவைத்தேன்
தேனான பன்னீராயிரந்தான் அப்பா
தெளிவான காவியமு மிதுதானாகும்
கோனான ரிஷிமுனிவர் சித்தர்தாமும்
கோரிக்கை கேட்டதினா லருளினேனே. 46

அருளினேன் புலஸ்தியனே யிந்தநூலும்
ஆருக்குங் கிட்டாது உனக்குக்கிட்டும்
பொருளறிந்த புண்ணியர்கள் விடுவாரோசொல்
புத்தியுள்ள தவயோகி விடமாட்டான்பார்
இருளகற்றி ஞானியர்க ளிந்தநூலை
யெழிலுடனே சதாகாலம் பூசிப்பார்கள்
தெருள்கலைக ளிதிலதிகம் உண்டாம்பாரீர்
தென்னவனே புலஸ்தியனே விரும்புவாரே. 47

விரும்புவா ரிதன்பெருமை சொல்வேன்பாரு
வீரமுடன்............ பல............ சித்தர்தாமும்
கரும்பான நூலனைத்தும் பாடிவிட்டு
கருவான பொருளையெல்லாம் மறைந்துபோட்டார்
சுரும்புலவும் புகுந்துடையா............ ணங்கேளு
சுருதிபொரு ளாராய்ந்து பார்ப்பதற்கு
அரும்பொருளை............ மவருக்கும் வுபயமாக
அன்புடனே பாடிவிட்டார் வீணாய்தானே. 48

வீணாகப் பாடிவிட்டு வியர்ப்பஞ்சொல்லி
வேதாந்த நுட்பமதைக் காட்டாமற்றான்
தோணாத சரக்கெல்லாம் வீணாகச்சொல்லி
தொல்லுலகில் சுட்டலையைப் பாடுதேடி
கோணாமல் முகம்வாழ இருக்காமற்றான்
கொற்றவனே வுட்பொருளை சொல்லவில்லை
சாணான ________ கைக்கண்ட தொருவாதம்போல்
சட்டமுட னொன்றையுந்தான் காட்டார்பாரே. 49

காட்டவில்லை கருவெல்லா மறைத்துப்போட்டார்
காசினியில் சித்துமய மாகுமென்று
நீட்டமுடன் மறைத்துவைத்தப் பொருளையெல்லாம்
நிட்சயமா யென்னூலில் சொல்லிவிட்டேன்
வாட்டமுடன் பாடிவைத்த யிதிகாசத்தை
வண்மைபெற லோகமெல்லாம் அறிவதற்கு
நாட்டமுடன் தழைத்தபெரும் ஆயுள்வேதம்
நவின்றிட்டேன் வுலகத்தோர் பிழைக்கத்தானே. 50

பிழைக்கவே கும்பமுனி சொன்னவாக்கு
பேருலகி லென்னாளுங் கீர்த்தியாகும்
மழைபோன்ற சோனைநீர் தன்னைப்போலும்
மாசற்ற ஞான சாகரமுமாகும்
தழைபோலே படர்ந்திருக்கும் நூல்கட்கெல்லாம்
தாயான நூலிதுதான் குருநூலாகும்
மழைமதக் களிறதைப்போல் இதுவென்பார்கள்
மானிலத்தில் மாந்தரெல்லாந் துதிப்பார்தாமே. 51

துதிப்பாரே யின்னூலைக் கண்டபேர்கள்
துறைகோடி முறைகோடி தொந்தங்கோடி
மதிப்பார்க ளின்னூலிற் சொன்னமார்க்கம்
மானிலத்தில் ராசாதி ராஜரெல்லாம்
கதிப்புடனே முறையனைத்துங் கண்டுதேர்ந்து
காசினியில் செய்துமல்லோ அதிதங்காண்பார்
கொதிப் பகற்றும் காயாதி கற்பந்தன்னை
குறையாமல் முறையோடு காண்பார்பாரே. 52

....
....
....
________________ முறையுஞ் சொன்னேன்

சூரேதான் மருந்துவகை யறியவென்றால்
கொட்டினேன் சதகோடி வழலைமார்க்கம்
சீரேதான் செந்தூரப் பயன்அனைத்தும்
சிறப்புடனே திரட்டிவைத்த துண்மையாமே. 53

உண்மையாம் காயாதி கற்பமுண்டோர்
உலகத்தில் மெத்தவுண்டு கேட்கப்போமோ
தண்மையுடன் வாசியோகந் தனிலிருந்து
சாகரத்.................... யிட்டொழித்த தன்மைபோலும்
நன்மைபெற வாசியைத்தான் மேலேநோக்கி
நலமாகக் கும்பகத்தைக் கீழமர்த்தி
வெண்மையுடன் சமாதியினிலிருந்து கொண்டு
வேகமுடன் வாசியைத்தான் பூட்டிக்கொள்ளே. 54

பூட்டவென்றால் சின்மயத்தின் வாசல்தன்னை
சிறப்புடனே தான்திறந்து பார்க்கும்போது
நீட்டமுடன் பதினாறு கோணந்தன்னில்
நின்றுவிளை யாடுகின்ற பஞ்சகர்த்தாள்
கூட்டமுடன் நவகோணந் தனிலிருந்து
கும்பகத்தின் மேலிருந்து வாசிபூட்டு
வாட்டமுடன் பஞ்சகர்த்தாள் ஆடுங்கூத்து
வளமையுடன் அறுபதுவாங் கோணமாச்சே. 55

ஆச்சப்பா வெவ்வேறு கோணந்தன்னில்
அஷ்டமா சித்திதன்னை யாடலாகும்
மூச்சப்பா தனையடக்கி சமாதிநின்றால்
முனையான வாசிவழி தெறிக்கும்பாரு
பேச்சப்பா யில்லையது பிணம்போல்நிற்பார்
பேருலகில் மவுனமென்ற சித்தனென்பார்
ஏச்சப்பா வாராமல் சமாதிபீடம்
என்னாலு மிருப்பவனே சித்தனாமே. 56

வாசி நிலையறிய

சித்தனாகும் பூரணத்தைக் கும்பகத்தில்வைத்து
சிறப்பான வாசியைத்தான் மனதுமிகநாட்டி
பித்தனாய்க் கும்பகத்தைப் பின்கலையில்வாங்கி
பேரான கண்மணியை யிடைகலையில்வாங்கி
சுத்தமுடன் மையமதில் நடுகலையினின்று
சூரியனை வம்பரத்தில் வகையுடனேதாக்கி
நித்தமே இருகலையில் பூரகத்தைமாட்டி
நேரான பின்கலையில் வடகலையைவாங்கே. 57

வாங்கியே மூவாண்டு வழக்கஞ்செய்து
வாசியைத்தா னெப்போதும் பழக்கம்பண்ணி
தூங்கியே திரியாதே புலஸ்தியாகேள
துப்புறவாய்ப் பழகிவந்தா லெல்லாஞ்சித்தி
ஏங்கியே வாடாதே வாசியோகம்
யென்மகனே செய்துவந்தால் பழக்கமாகும்
ஓங்கியே மகத்தான வாசிதன்னை
உத்தமனே செய்துவந்தால் சித்தியாமே. 58

___ ___ ___ புலஸ்தியாகேள்
அப்பனே லகுவாக நட___
___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___
___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___
___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___
___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___
___ ___ ___ ___ ஞ்செய்தால்
நவதுவாரங் களெல்லா மடையும்பாரே. 59

பாரேதான் நவவாசல் தானுமுண்டு
பாலகனே வொன்பதுமே தானடைக்கும்
சீரேதான் வாசியை நீ நடத்தும்போது
சீறலுட னுந்தனது கனல்தான்மீறும்
வேரேதான் சிந்தனைக ளொடுக்கமாகி
வேதாந்தத் தாயுருவைக் காணவெண்ணி
கூரேதான் சின்மயத்தி லிருந்துகொண்டு
குணமான வாசியைத்தான் மூட்டிப்பாரே 60

மூட்டுகையி லுந்தமக்குப் பழக்கமாகி
முனையான கேசரத்தை மனதிற்பூட்டி
தாட்டிகமாய்க் காயாதி தேகந்தன்னை
தகைமையுடன் நிலைநிறுத்திக் கொள்வதற்கு
பூட்டமுடன் பூவுலகில் வேணகோடிகாலம்
புகழ்ச்சியாய்த் தாமிருந்து சமாதிகாண
வாட்டமுடன் தேகமதைக் கற்றூணாக்க
வளமையுடன் சொல்லுகிறே னின்னங்கேளே, 61

முப்பு அறிய

கேளடா புலஸ்தியனே சொல்லக்கேளாய்
கெவனமுடன் முப்பூவின் மார்க்கஞ்சொல்வேன்
நாளடா கதிரவனால் பூர்க்கும்பூவாம்
நலமான வழலையென்ற முப்புவப்பா
___ ___ ___ ___ ___ ___

கோளடா வாராமல் முப்புதன்னை
குணமுடனே முடிப்பதற்கு குறிகள்சொல்வேன்
மீளடா குருமுடிக்கும் வகையுஞ்சொல்வேன்
மிக்கான வழலையிட மார்க்கம்பாரே. 62

மார்க்கமா முப்புவென்றால் முறைகள் சொல்வேன்
மயங்காதே உழமண்ணு முப்புவாமோ
தீர்க்கமுடன் மூலிகைக ளுப்பாமோசொல்
தீர்மையுள்ள சிற்றண்டம் முப்பாமேசொல்
சேர்க்கவே பேரண்டம் முப்பாமோசொல்
செம்மையுடன் சிங்கியது முப்பாமோசொல்
ஏர்க்கவே சாரமது முப்பாமோசொல்
யெழிலான சவுக்கார முப்பாகாதே. 63

ஆகாது சீனமது முப்பாமோசொல்
அண்டபிண்டஞ் சேர்ந்தாலே முப்பாமோசொல்
வேகாத சுண்ணாம்பு முப்பாமோசொல்
வெடியான மதியுப்பு முப்பாமோசொல்
சாகாத தலைப்பிண்டம் முப்பாமோசொல்
சட்டமுடன் கேசரியு முப்பாமோசொல்
தாகாத வமுரியது முப்பாமோசொல்
தாரணியில் மூன்றுபடை முப்பொண்ணாதே. 64

ஒண்ணாது முப்பினுட பெருமைசொல்வோம்
ஓகோகோ நாதாக்கள் சொல்லவில்லை
அண்ணாந்து சாத்திரத்தை மிகவாராய்ந்து
அலைகடலும் போய்த்திரிந்து முப்பைக்காணார்
சுண்ணாம்பில் தானிருக்குஞ் சூட்சம்போல
சுடுவாதி யறியாமல் சுருண்டுபோனார்
மண்ணாளும் வேந்தரெல்லாம் முப்புவாலே
மதிமயங்கிக் கெட்டதொரு கதையைக்கேளே. 65

கதையென்றால் சத்தியிட னாதமுப்பு
கவிவாணர் கட்டுவித்த வழலைமுப்பு
விதையுடனே பூர்வமுப்பு சொல்வேன்பாரு
எழிலான புலத்தியனே செப்பக்கேளும்
பதையாமல் தலைப்பிண்டந் தன்னின்மேலே
பாங்கான தேவதா முப்புசொல்வேன்
சதையான மேல்வளர்ந்த முப்பூவல்ல
தகைமையுள்ள முப்பூவின் பெருமைபாரே. 66

பாரேதான வனாலுங் கூறப்போமோ
பாருலகி லெவராலுஞ் சொல்லொண்ணாது
நேரேதான் திரிமூர்த்தி யிருந்தமுப்பு
நெடிதாக நடராசர் கூத்தாடுமுப்பு
சீரேதான் நாதத்தால் வந்தமுப்பூ
செழுமையுடன் முப்பூவை யென்னசொல்வேன்
கூரேதான் வாதியிலே வந்தமுப்பூ
கூறுவேன் கண்மணியே புகலக்கேளே. 67

கேளேதான் வகாரத்தில் வளர்ந்தவுப்பு
கெடியான மகாரத்தில் சரிந்தவுப்பு
பாளேதான் போகாத பிரமனுப்பு
பாங்கான ருத்திரனார் கண்டவுப்பு
வீளேதான் ருத்திரனார் கண்டவுப்பு
வியர்வான மூவர்களால் சமைந்தவுப்பு
நாளேதான் வளர்ந்துவரும் மண்கூறுப்பு
மகத்தான பரமனிட வுப்புமாச்சே. 68

ஆச்சப்பா தசவாய்வால் வளர்ந்தவுப்பு
அப்பனே மனோன்மணியாள் நின்றவுப்பு
வாச்சப்பா மணித்தாயாள் சமைந்தவுப்பு
வாகான கமலமதில் வளருமுப்பூ
நீச்சப்பா கோடிவரை காரமான
நெடிதான முப்பூவு மதீதமெத்த
மாச்சலுட னிந்தவுப்பு யார்தான்காண்பார்
மகத்தான சிவயோகி காண்பான்பாரே. 69

எண்ணை வாங்க

காண்பானே முப்பூவைக் கண்டபோது
கசடகற்ற யெண்ணெய்தனை வாங்கமைந்தா
மாண்பான முப்பூவைக் கிளிபோல்கட்டி
மயங்காமல் பாண்டமதில் தொங்கவிட்டு
சாண்பான சத்தசலம் பாண்டமிட்டு
பாலகனே வதிற்போட மருந்துகேளு
நாண்பான யுவருப்பு வளையலுப்பு
மார்க்கமுடன் றான்சேர்த்து அடுப்பிலேற்றே. 70

ஏற்றியே தானெரிப்பாய் சாமம்ரண்டு
யெழிலுடனே யெண்ணையது கக்கிப்போகும்
மாற்றியே முப்புவது தவளம்போலாம்
மகத்தான கைகண்ட முப்பூவாகும்

தேற்றமுடன் முப்பூவைப் பதனம்பண்ணு
        தெளிவான ரேசக பூரகமுஞ்செய்து
போற்றியே யெப்போதும் பூசித்தேதான்
        பூவுலகில் நெடுநாளாம் வாழ்ந்திடாயே. 71

வாழவே முப்பூவைச் சுண்ணமாக்கே
        வகைசொல்வேன் புலஸ்தியனே சொல்லக்கேளு
நீழவே முப்பூவைக் கல்வமிட்டு
        நிலையான விந்துவினால ரைத்துமைந்தா
மாழவே பில்லைசெய்து ரவியுலர்த்தி
        மன்னனே புடம்போடப் பற்பமாகும்
ஆழவே பற்பமதை யென்னசொல்வேன்
        அப்பனே யதற்கீடு நவிலொணாதே. 72

சொல்லவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
        துரைராஜர் சுந்தரவர் செய்யுமார்க்கம்
பல்லவே விதற்கீடு புகலப்போமோ
        புகழான சுண்ணமதை பதனம்பண்ணு
வெல்லவே சுண்ணத்தால் கோடிபாதை
        யேகலாம் குறுக்குவழி யனந்தங்கோடி
நல்லவே பூர்வமுப்பு விதுதானாகும்
        நாயகனே புத்தியுள்ளான் செய்வான்பாரே. 73

விஷக்கல்ச் சுண்ணம்

செய்யவே புலஸ்தியனே செப்பக்கேளும்
        செயலான விஷக்கல்லு யிருக்கும்ஸ்தானம்
உய்யவே கோரையெனும் ஸ்தானமப்பா
        உத்தமனே சிகரமது வளருங்கல்லு
துய்யவே லிங்கமென்ற கல்தானப்பா
        துரைராஜர் கொண்டாடுந் துந்துமிக்கல்
பையவே தானெடுத்துப் பதனம்பண்ணு
        பாருலகில் சித்துவிளை யாட்டுகேளே. 74

கேளவென்றால் வமுர்தமென்னுங் கல்லையப்பா
        கெவனமுடன் சுண்ணமது செய்யக்கேளு
பாளவே பேரண்டம் சுண்ணம்பண்ணிப்
        பட்சமுடன் சுண்ணமதை மூசைசெய்து
தாளவே வமுர்தமென்ற கல்லையப்பா
        தகைமையுடன் மூசைக்கு ளடைத்துபாலா
வாளமுடன் சீலையது வலுவாய்ச்செய்து
        வளமைபெற உலையில்வைத்து வூதிடாயே. 75

ஊதவென்றால் சுண்ணாம்பைப் பதனம்பண்ணு
உத்தமனே யிப்படியே மூன்றுமுறைதானும்
நீதமுடன் சுண்ணமதை ஊதும்போது
நிலையான பேரண்டம் நிலைத்துநின்று
காதமுடன் அமுர்தமென்ற கல்லைத்தானும்
சுசடகற்றி சுண்ணம்பாய் நீற்றும்பாரு
கோதமுடன் சுண்ணம்பை நீற்றிக் கொண்டு
துறையோடு முறையோடுஞ் செப்பக்கேளே. 76

செப்பவென்றா லிப்பூவும் காரமெத்த
செகுத்தி விதற்கீடு சொல்லப்போமோ
ஒப்பமுடன் சுண்ணமதால் வாதமாச்சு
ஓகோகோ நாதாக்க ளதீதவித்தை
செப்பமுடன் செய்வதுவும் லேசேயென்றாகி
தொல்லுலகில் முழுமக்கள் செய்வாறோசொல்
இப்பு — — — குறையிருந்தால்
யெழிலாகச் செய்வார்கள் திண்ணந்தானே. 77

சிவமுப்பு

திண்ணமாம் புலஸ்தியனே செப்பக்கேளு
— — — — யார்தான் காண்பார்
வண்ணமப — — மண்டலத்தில் யெ________
— யுடன் வண்டத்தை யெடுத்துக்கொண்டு
சுண்ணமு________ ட்டும் தான்
சுசடகற்றி யிருப்புலக்கை யாலேகு
— — — ற் சாமமிடித்துத் தீருசட்டமுடன்
— — — — — — — — — — — — — ________ 78

— — — — — — — — — — — — — ________
— — — — — — — — — — — — — ________
— — — — — — — — — — — — — ________
— — — — — — — — — — — — — அண்டமதுமை போலாகி
கானமுடன் காரமது மிகவுண்டாக
கண்டுண்ட பனிநீரால் யெண்ணைகக்கு
பானமுடன் வெண்மைநிற மாகவல்லோ
பார்வைக்கு மெழுகதுபோ லிருக்குந்தானே. 79

தானான வெண்ணையது பில்லைதட்டித்
தகைமையுடன் ரவிதனிலே காயவைத்து
வேனான மூசை தனிலே வைத்துவூத
வென்மகனே சுண்ணமதை புகலப்போமோ

கோனான குருவருளால் சுண்ணமாகி
கொற்றனே காரமது மிகவுண்டாகி
தேனான பற்பமது சொல்லப்போமோ
தெளிவான பற்பமதை பாண்டம்போடே. 80

போடவே பனிநீரை யூத்திமைந்தா
பொங்கமுடன் றானெரிப்பாய் புலஸ்தியாகேள்
நீடவே சுண்ணாம்பு போலேநிற்கும்
நிலையான பூனீறு யென்னசொல்வேன்
கூடவே தான்கலக்கி தெளிவித்துக்
கொற்றவனே மறுபடியுங் காச்சும்போது
மாடவே பூனீறு காரமேறி
மாசற்ற பற்பமது சொல்லொண்ணாதே. 81

ஒண்ணாது பற்பமது யெடுத்துக்கொண்டு
உத்தமனே பரும்பீங்கான் றன்னில்வைக்க
நண்ணமுடன் மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு
நலமான முப்பூவு மென்னசொல்வேன்
சுண்ணமுடன் பற்பத்தைப் பதனம்பண்ணு
காட்டாதே காமிகட்கும் பாவிகட்கும்
திண்ணமுடன் எப்போதும் பராபரியைத்தான்
திருவடியைத் தான்வணங்கி செபத்தில்நில்லே. 82

நிற்கையிலே வாணிவந்து நிர்த்தஞ்செய்வாள்
நீணிலத்தில் நீயுமொரு சித்தனாவாய்
துற்கைமுதல் டாகினியு மிதற்கிடுண்டோ
துரைராஜா பாலகனே புருஷயோகி
அற்பமென்று நினையாதே இந்தவுப்பு
அவனியிலே யாருந்தான் சொல்லார்பாரு
விற்பனமாய்ச் செய்துகொள்வன் யோகியாவான்
வேதாந்தத் தாயினது கிருபைபோற்றே. 83

சத்திமுப்பு

.... மொரு கருமானங்கேள்
பொங்கமுடன் புலஸ்________
மாற்றமுடன் சத்தியுப்பு சொல்வேன்பாரு
_ _ _ _ _ _ _ளார்தான் பண்டார்
சீற்றமுள்ள யுப்பதுவே யார்
_ _ _யாகி காண்பதல்லால் மற்றோர்காணார்
கூற்றனெ _ _ _ _ன் தான் சொன்னார்
குனிப்படவே யாமுனக்குச் ________ 84

....
....
....
....
....

— — —— வழலைக்குக் காரமெத்த
கூரேதான் சிவமுப்பு சொல்லிவிட்டேன்
கொற்றவனே சத்திமுப்பு யின்னங்கேளே. 85

இன்னமுமே யாமுறைப்போம் யெளியவானே
யென்மகனே யுந்தனுக்காய்க் கூறிவிட்டேன்
சொன்னபடி தப்பாது குருவாக்கப்பா
சொற்பமென்று நினையாதே துரைமன்னாகேள்
வின்னமது நேராது சத்திமுப்பு
விபரமுடன் சொல்லுகிறோம் வினையாய்க்கேளு
துன்னியமாய் முதற்பிண்டந் தலச்சனாக
தகைமையுள்ள கல்லுரலில் போட்டுச்சாடே 86

சாடவே கல்லுரலில் போட்டுமேதான்
சாரங்கமுடன் சுத்தசலம் விட்டுமைந்தா
நீடவே யுவர்ப்பூவும் கூடப்போட்டு
நீண்மையுடன் றானிடித்து மைபோலாக்கி
கூடவே பாண்டமதிற் சுத்தசலம் விட்டுக்
துப்புறவாய் யடுப்பேற்றிக் கொதிக்கக்காய்ச்சு
போடவே யெண்ணையது கக்கிப் போகும்
பொங்கமுடன் றானிருக்கு மெடுத்துக்கொள்ளே. 87

கொள்ளவே முப்பூவை யெடுத்துக் கொண்டு
குணமான குடுக்கைதனி லடைப்பாய்மைந்தா
விள்ளவே சிலகாலஞ் சென்றபின்பு
விருப்பமுடன் முப்பூவை யெடுத்துப்பாரு
துள்ளவே முப்பூவுந் தவளம்போலாம்
துப்புறவாய் மலர்ந்துமல்லோ பூத்திருக்கும்
எள்ளளவும் பிசகதுதான் வாராதப்பா
யெழிலான சத்தியென்னும் முப்புதானே. 88

முப்பான முப்பதுவுஞ் சொல்லப்போமோ
மூவுலகந் தான்மதிக்குஞ் சொர்ணமுப்பு
அப்பான முப்பதுவும் முதற்றரந்தான்
அப்பனே துறையான முப்புமாச்சு

செப்பார்கள் சித்தர்முனி ரிடிகள்யாவும்
சிறப்புடனே யுன்தமக்காய்ச் சொன்னேன்யானும்
துப்புரவாய் சிவராஜ ஞானீபோலே
துன்ப சாகரத்தைவிட்டுத் துலைவாய்நில்லே. 89

அண்ட முப்பு

நிற்கையிலே யின்னமொரு கருமானங்கேள்
நேரான புலஸ்தியனே செப்பக்கேளும்
சொற்பமா மின்னமொரு முப்புசொல்வேன்
சொர்ணமென்றே சிற்றண்டங் கொண்டுவந்து
அற்பமா யெண்ணாதே சவ்வுபோக்கி
வப்பனே சவுக்கார காரத்தாலே
கற்பமுடன் செயநீரைப் பாண்டமிட்டு
கருத்துடனே வோடதனைக் கொதிக்கவையே. 90

கொதித்தவுடன் தானிறக்கி யெடுத்துப்பாரு
கொற்றவனே பண் - - - ——————
– – – – – – – – – – – – – ——————
– – – – – – – – – – – – ——————
– – – – – – – – – – – – – ——————
மாசற்ற தவளமது போலேயாகும்
கதிப்படியே பற்பத்தை யெடுத்துக்கொண்டு
சாங்கமுடன் சிமிழ்தனிலே பதனம்பண்ணே. 91

பண்ணவே சிலநாள்சென் றெடுத்துப்பாரு
பாலகனே பற்பமது பூர்க்குங்காலம்
தண்ணமுடன் பற்பமதை யெடுத்துமைந்தா
தகைமையுள்ள சரக்குகளில் கவசஞ்செய்து
உண்மையுடன் கனயெருவில் புடமேபோட்டால்
வுத்தமனே சரக்கனைத்துங் கட்டும்பாரு
நண்மையுடன் சத்துரு மித்துருக்களெல்லாம்
நளினமுடன் வழங்கும் வணங்கும்பாரே. 92

பார்க்கயிலே யின்னமொரு கருமானங்கேள்
பாடுகிறேன் நாதாக்கள் ரிடிகள் வேதை
தீர்க்கமுடன்கருவதனா லெடுக்குமுப்பு
திறமான வேதையிது களுக்குவேதை
ஆர்க்கமுடன் பரிபாஷை முப்புமார்க்கம்
அப்பனே அனேகவழிக்கோடிபாதை
பார்க்கவே பாடிவைத்தார் சித்தர்தாமும்
பண்பாக நாம்சொன்ன படிகாணோமே.

காணோமே சரக்குக்குச் சத்துருகாலன்
கடிதான நரைதிரையும் மாற்றுங்காலன்
தோணவே முப்பூவிற் குன்றுவீதம்
துறையோடும் முறையோடும் கொண்டாயானால்
பூணவே தேகமது கற்றூணாகும்
பொங்குமுடன் வயததுவும் லக்கோயில்லை
வேணபடி யுபசார மிகுநடக்கும்
வேதமுடன் காயசித்திக் கிடங்கொள்வாயே. 94

இடங்கொள்வாய்ப் புலஸ்தியனே மச்சகேந்திரா
யெழிலான முப்பூவா லெல்லாஞ்சித்தி
திடங்கொண்ட காயமதை நிறுத்தலாகும்
திரளான மனுக்களெல்லா முனக்கீடுண்டோ
தடங்கொண்ட சமாதியிலே யிருந்துகொண்டு
தாரணியில் வெகுகோடி காலமப்பா
மடங்கண்டு தேகமதை நிறுத்திக்கொண்டு
மானிலத்தில் சித்தனைப்போல் வாழுவாயே 95

வாழவென்றால் முப்பூவை அறியவேண்டும்
வையகத்தில் முப்பூவை அறியாவிட்டால்
தாழவே சாத்திரங்கள் கற்றுமென்ன
சதகோடி சூரியர்போ லிருந்துமென்ன
வீழவே முப்பூவைக் காணாப்பேர்க்கு
விருதாவாய்ச் சாத்திரங்கள் பொய்யாப்போகும்
ஆழவே முப்பு நூ லறியவேண்டும்
அறியாட்டால் யோகமெல்லாம் பாழாய்ப்போமே. 96

போமேதான் முப்பினிட னூலைப்பார்த்து
பொலிவான முதலேடுங் கடையும்பார்த்து
நாமேதான் சொன்னபடி முப்புமார்க்கம்
நாதாக்கள் செய்தமுறை ப________ பார்த்து
தாமேதான் வைரவர்கள் நூல்கள் சொன்ன
தகைமையுள்ள ___ கருவை__________
வேமேதான் மறைபொருளில் வினயங்
வேதத்__ __ __ __ __ __ ___ __________ 97

நூலின் விவரம்

உன்னவே நூலினுட விவரஞ்சொல்வேன்
உத்தமனே புலஸ்தியனே செப்பக்கேளும்
பன்னவே சதுர்காண்டம் நாலாயிரந்தான்
பாடிவைத்தேன் பற்பமது வைந்நூறாகும்

சொன்னேனே செந்தூரம் முன்னூறாகும்
சொர்ணமென்ற திராவகமு மெண்ணூறாகும்
மன்னேகேள் காவியம் ஆயிரத்தைந்நூற்றாகும்
மகுத்தான நசகாண்டம் முன்னூறாமே. 98

ஆமேதான் அசுவகாண்ட மைநூறாகும்
அப்பனே கலைக்கியான மாயிரந்தானாகும்
தாமேதான் பூரணமும் நா நூறாகும்
தாக்கான கருக்கிடை யிருநூறாகும்
நாமேதான் பூரண காவியந்தானாகும்
நலமான ஆயிரத்துச் சொச்சமப்பா
போமேதான் தைலமது வைநூறாகும்
பொங்கமுடன் சரக்குசுத்தி முந்நூறுதானே. 99

தானான கருமகாண்டம் முந்நூறாகும்
தகைமையுள்ள வல்லாதியை நூறாகும்
கோனான குருசொன்ன பாண்டுவைப்பு
கொற்றவனே அறுநூறு யென்னலாகும்
தேனான ஜெனகருக்கு வுபதேசிக்க
தெளிவான வறுநூறு வொன்றேயாகும்
பானான எட்சணியு மிருனூறாகும்
பாங்கான சூத்திரமும் முந்நூற்பாரே. 100

பாரேதான் லட்சண காவியந்தானாகும்
பாங்கான ஞான காவியந்தானாகும்
தேரேதான் வாத காவியந்தானாகும்
தெளிவான மாந்திரீக காவியந்தானாகும்
சீரேதான் தத்துவ காவியந்தானாகும்
சிறப்புடனே சிறுகாவிய மாயிரமுமாகும்
நேரேதான் காவியங்கள் மார்க்கமெல்லாம்
செப்பினேன் ஆயிரமாம் பாடல்தானே. 101

பாடவே பெருநூல் சௌமியந்தானாகும்
பாங்கான சௌமியமு மைந்நூறாகும்
நீடவே சிமிட்டுரத்தின முந்நூறாகும்
நெடிதான பரிபாஷை ஐநூறாகும்
தேடவே ரத்தினமாஞ் சுருக்கமப்பா
தெளிவான பள்ளு நாடகமுமாகும்
கூடவே மருத்துவ பாரதந்தானாகும்
குறிப்பான ஆயுரு வேதமாமே. 102

வேதமாம் நாற்காண்ட ஜாலமாகும்
வெளியான நாடிநூ லெண்ணாயிரந்தான்
போதமாம் மணி நாலாயிரந்தானாகும்
பொங்கமுடன் நிகண்டது தானிருநூறாகும்
நீதமுடன் சுரசலையும் முந்நூறாகும்
நிலையான வாகடிய மைந்நூறாகும்
தோதமுடன் யமகண்ட மெண்ணூறாகும்
துறையான யேமதத்துவ மெண்ணூர்தாமே. 103

தாமான கருக்கிடையு முன்னூறாகு
— — - — — — - று நூறாகும்
வாமான காவியந்தா னாயிரமுமாகும்
வாகான மதிவெண்பா வாயிரமுமாகும்
காமான பெருநூல்கள் தொண்ணூற்றுச்சொச்சம்
பாடிவைத்தேன் சிறு நூல்க ளாயிரத்துச்சொச்சம்
பூமான்கள் கண்டறிய மாநிலத்தில்
புகழ்ச்சியுட னிகழ்ச்சியதாய் தூர்சொன்னாரே. 104

தூரான மார்க்கமென்றா லேதுவென்னில்
துப்புரவாய் சாத்திரத்தை முழுதுங்காணார்.
தாராள மாகவல்லோ பார்த்தாரானால்
சட்டமுடன் என்பேரிற் குற்றஞ்சொல்வார்
சீரான சாத்திரத்தின் கருவுகாணார்.
சிறப்புடனே தலையேடும் முதலேடுங்காணார்
சூரான சூத்திரத்தின் சூட்சங்காணார்
குவலயத்தின் முழுமக்க ளானோர்பாரே. 105

ஆனாரே நூல்களிலே தர்க்கம்பேசி
அவனியிலே வீணாகக் கெட்டலைந்தார்
போனாரே புது நூல்கள் பழைய நூலும்
பொங்கமுடன் வெகுசொச்சம் லெக்கோயில்லை
நானான படியாலே சொச்சம்சொல்லி
நாட்டினில் பிழைக்கவென்று மனதிறங்கி
தேனான முறைகளெல்லாம் தெரியவென்று
தெளியவென்று செகதலத்தில் செப்பினேனே. 106

செப்பினேன் தசலட்சம் காப்புதன்னை
தெளிவாகப் புலஸ்தியனே சொல்லக்கேளீர்
ஒப்பமுடன் பத்துலட்சம் காப்புசெய்தேன்:
ஒகோகோ நாதாக்கள் செய்ததில்லை

நெப்பமுடன் பத்துலட்சக் கிரந்தந்தன்னை
நேர்மையுடன் பாடிவைத்தேன் கோடிமார்க்கம்
சொற்பமென்று நினையாதே துரைமன்னாகேள்
துறையோடு முறையோடுஞ் சொன்னேன்பாரே. 107

பாரேதான் தசலட்ச கிரந்தந்தன்னை
பாடிவைத்த ஔவையார் கண்டாரப்பா
சீரேதான் சித்தர்முனி ரிடிகள்தாமும்
சிறப்புடனே யவரவர்கள் மனதுபோல
வேரேதான் சாத்திரங் களுண்டுபண்ணி
வெகுமறைப்பு சூதுகளுஞ் செய்துபோட்டார்
நீரேதான் புலஸ்தியனே பிழைக்கவென்று
நீணிலத்தில் பெருநூல்தான் செய்தேன்பாரே. 108

செய்யவென்று யென்மனதி லெண்ணங்கொண்டு
சேனை நாள் காத்திருந்தேன் வரைகோடிகாலம்
பய்யவே சித்தரெல்லாங் கூட்டங்கூடிப்
பட்சமுட னெந்தனிடம் வந்தார்கண்டீர்
துய்யதொரு கடினமுள்ள சித்துதாமும்
துரைராஜ சுந்தரனே வாதுசொன்னார்
மெய்யான பெருநூல்தான் செய்தீரானால்
மேதினி யெல்லாஞ் சித்தாய்ப் போமென்றாரே. 109

போமென்று சொல்லுகையில் சித்தர்தாமும்
பொங்கமுடன் ....
....
....
...... குருக்களுமார் சீஷமார்கள்
குவலயத்தில் மெத்தவுண்டு கூறக்கேளீர்
நாமொன்று சொன்னாலோ அவரொன்று செய்வார்
நாதாக்கள் மறைப்பெல்லாம் வீணாய்ப்போமே. 110

போமென்று விடுகாதே புலஸ்தியாகேள்
புகழுடனே பெருநூல்யான் செய்வேனென்றேன்
தாமேதா னவரவர்கள் செய்த நூற்கள்
தாரணியில் மெத்தவுண்டு யிதுபோல்சொல்வார்
வேமேதான் சூட்சாதி சூட்சம்யாவும்
வெகுவிதமாய்ச் சொல்லிவைத்தேன் பெருநூல்தன்னில்
நாமேதான் சொன்னபடி பெருநூல்தன்னில்
நாட்டிலே யாரேனுஞ் சொல்லார்தானே. 111

சொல்லாத கருகா நூலுக்கெல்லாம்
தோற்றமுட னின்னூல்தான் குருநூலாகும்
வெல்லவே சித்தர் முனி ரிடிகள் தாமும்
வேதாந்தத் தாயினது கடாட்சத்தாலே
புல்லவே போகரது பெருநூல் சாகரந்தான்
பேரான னூற்கெல்லாம் பெருனூலாகும்
அல்லவே சாத்திரத்தைப் பாடினாலும்
அவனியிலே கருவாளி காண்பான்பாரே. 112

காண்பானே சாத்திரத்தை மதியூகிதானுங்
கருவான கருவிகர ணாதியெல்லாம்
ஆண்மையுள்ள சிங்கந்தா னறிவானப்பா
அப்பனே வீண்பிள்ளை அறிவானோசொல்
மாண்பான மாநிலத்தில் மெத்தகோடி
மன்னர்க்ள் குருக்கள்மார் மாந்தர்யாவும்
தாண்பான சாத்திரத்தை யுகந்துப்பார்த்து
தகைமையுள்ள சாத்திரத்தை தோடிப்பாரே. 113

தோடித்தா ரானாலே பாவமெய்தும்
தொல்லுலகில் தெரியாம லவலமென்பார்
தூடித்த பாவிகட்கும் கருமிகட்கும்
தூருடனே இடிபோலே சாபம்நேரும்
பாடியங்கள் தெரியாமல் பலவாறாக
பாரினிலே துடிப்பார் பலனூல்தன்னை
பூடிதமாய் யென்னூலைப் புகழ்ந்தோர்தாமும்
பூதலத்தில் சித்தனைப்போல் வாழ்வார்தானே. 114

வாழவே புலஸ்தியனே சொல்லக்கேளீர்
வாகுடனே திரேதாயி னுகத்திலப்பா
நீழவே வரரிடியாம் சித்துதாமும்
நீடாழி காலம்வரை யுலகிருந்தார்
ஆழவே வெகுகோடி சாத்திரங்கள்
அப்பனே பாடியல்லோ சாகரத்தில்
சாழவே சமுத்திரத்தி லுருவிவிட்டார்
சார்பான னூல்களெல்லாம் மிதந்துதாமே. 115

வரரிடி சாத்திரப் பெருமை

மிதந்திட்ட சாத்திரத்தை முனிவர்தாமும்
மேன்மையுடன் கண்டெடுத்து குகைக்குள்வைத்து
பதமுடனே நமஸ்காரம் பூசைசெய்தே
பட்சமுடன் னூலதனை மிகவாராய்ந்து

மதமுடனே நூற்கருவின் உருவைக்காணார்
மார்க்கமுடன் நூலதனை கவனியாமல்
சதமுடைய சாஸ்திரத்தைப் பொய்யென்றெண்ணி
சட்டமுடன் வரரிடியைத் தூற்றினாரே. 116

வரரிடி சாபம்

தூறினால் நாதாந்த சித்தொளியைக்கண்டு
துப்புறவாய்ச் சாத்திரத்தைப் பொய்யென்றெண்ணி
கூறினதோர் படியாலே யுந்தமக்கு
குவலயத்தில் தலைதெரித்துப் போகுமென்று
தூர்வாச முனிபோலே சாபஞ்சொல்லி
துன்மையுடன் சமாதியிலே போகவென்று
மாறுபா டாகவல்லோ வதிதங்கூறி
மானிலத்தில் வெகுசாப மிட்டார்தாமே. 117

இட்டதோர் சாபத்தால் புலஸ்தியாகேள்
யெழிலான சித்தொளியும் மண்ணாய்ப்போனார்
கெட்டலைந்து வெகுபேர்கள் தோஷஞ்சொல்ல
கீர்த்தியுடன் மண்டலத்தில் மாண்டார்தாமும்
விட்டகுறை தானிருந்து வீம்புபேசி
வெகுபாடு பட்டார்கள் மாந்தர்தாமும்
தொட்டமுறை குணமறிந்து செய்தால்சுத்தி
தேற்றமுடன் செய்யாதார் காணார்பாரே. 118

காணாத சாபத்தை அறியாமற்றான்
கண்கெட்டான் போலிருந்து நூல்கள்தம்மை
வீணாக தோஷங்கள் மிகவுஞ்சொல்லி
விருதாகச் சாபத்துக் காளுமானார்
வேணாத பொருட்கெல்லாம் மிகவும்பாரு
மேன்மையுடன் பட்டுமல்லோக் கெட்டுமாண்டார்
தோணாத சரக்கெல்லா மதிலேதோயும்
தொந்தமிட னறியாமற் கெட்டர்பாரே. 119

கெட்டுமே வரரிடிமேல் தோஷஞ்சொல்லி
கெடுதியுள்ள பாவத்துக் காளுமாகி
பட்டுமே சாபத்தால் முறிந்துஆளாய்
பாருலகில் தீவினைக்கே யாளுமாகி
நட்டாற்றில் விட்ட தொரு கதையைப்போல
நாதாக்கள் நூலதனைப் பாராமற்றான்
சட்டமுடன் பழிபாவந் தலைமேற்கொண்டு
சாங்கமுடன் தலைதெரித்துப் போனார்தாமே. 120

அகஸ்தியர் சாபம்

தாமான புலஸ்தியனே சாற்றக்கேளீர்
தகைமையுள்ள தீவினைக்கு ஆளாகாமல்
நாமேதான் சொன்னதொரு கதையைப்போல
நாட்டினிலே வரரிடியின் சாபத்தாலே
போமேதான் பொல்லாத தீவினைக்கு
பொங்கமுடன் சாபத்தை நிவர்த்திசெய்து
ஆமேதா னப்போது மவனிதன்னில்
அப்பனே யிருப்பதற்கும் யிடமுந்தேடே. 121

தேடையிலே குருவின்மேல் பட்சம்வைத்து
தேற்றமுடன் குருநூலை மெற்யென்றெண்ணி
பாடையிலே போமளவுங் கைவிடாமல்
பாரினிலே சதாகாலம் அர்ச்சித்தேதான்
கூடையிலே வனுபோக நியமந்தன்னை
கொற்றவனே யெப்போதுங் கொண்டணைத்து
மேடையிலே வாதியிடம் நின்றுகொண்டு
மேன்மையுடன் சதாகாலம் பூசிப்பாயே. 122

பூசிக்கும் வேளையிலே பராபரியாள்வந்து
புகமுடனே யுந்தனுக்கு வரமுமீய்வாள்
ஆசித்து யெந்தனையுஞ் சதாகாலந்தான்
அப்பனே வரங்கேட்டு யிருந்துகொண்டு
நேசித்து சித்தர்முனி ரிடிகளோடு
நேசமுடன் தாமிருந்து கேள்விகேட்டு
பாசமது தானகற்றிப் பூலோகத்தில்
பதவிவழி பெறுவதற்கு ஆளாவீரே. 123

ஆளாவீர் புலஸ்தியனே சொல்வேன்பாரீர்
அப்பனே யென்னூலை தோஷம் நீக்கி
பாளதுதான் போகாமல் மனதிலுன்னி
பட்சமுடன் தியானித்து பெருநூல்தன்னை
நாளேதான் சதாகாலத் தவசிருந்து
நன்மைபெற காவியத்தை மனதிலுன்னி
வீளேதான் அசுவனியின் கடாட்சத்தாலே
விருப்பமுடனென்னாளும் வாழ்வீர்தாமே. 124

பண்டிதன் பெருமை

தானான புலஸ்தியனே யின்னங்கேளீர்
சாற்றுகிறேன் பண்டிதாளி லக்கணத்தைக்
கோனான யெனதையர் சொற்பழக்கி
கூறுவேன் மாணாக்கள் பிழைக்கவென்று

மானான பண்டிதற்கு விதிகள்சொல்வேன்
மகத்தான நன்னடத்தை யாவுந்தேர்ந்து
பானான முறைப்படியே நடந்துகொண்டு
பாரினிலே நூல்கேட்க வேண்டும்பாரே. 125

வேண்டுமே குருவணக்கம் மிகவும்வேண்டும்
விருப்பமுடன் மனதுவர நடக்க வேண்டும்
ஆண்டகைபோல் குருபாதந் தானினைத்து
அப்பனே சிரங்குவித்து நமஸ்கரித்து
தூண்டியதோர் கருமான மறிவதற்கு
துறையுடனே முறைபோல நூல்கள்கேட்டு
தாண்டமுடன் நூறாண்டு தானானாலும்
தன்மையுடன் காத்திருந்து நூலைவாங்கே. 126

வாங்கியே யவருக்கு முன்னேனில்லு
வகையுடனே தொண்டுக்கு முதல்வனாக
தூங்கியே திரியாமல் முதலாய்நின்று
துரைமுகத்தில் வூழியனாய்த் தானிருந்து
பாங்கியெனும் பெண்ணாசை விட்டொழித்துப்
பாருலகி விருப்பவனும் சித்தனாகும்
ஏங்கியே போகாமல் தீரவானாய்
யெழிலுடனே யிருப்பவனே சீஷனாமே. 127

சீஷனா யிருந்தாலு மவர்தமக்கு
சீரலுடன் கேள்விகளுங் கேட்கும்போது
பாசமுடன் மனதுவந்து பட்சம்வைத்து
பார்வைக்கு யெதிர்வார்த்தை மிகச்சொல்லாமல்
காஷாயமாம் வேடமதைத் தரித்துக்கொண்டு
கவனசுத்தி கொண்டதொரு ரிடிதமக்கு
தூஷணைக ளில்லாமல் சுகிர்தவானாய்
துரைராஜ சுந்தரர்க்கு முன்னேநில்லே. 128

நிற்கையிலே யெதிர்நின்று வாயாடாதே
யென்மகனே புலஸ்தியனே செப்பக்கேளும்
அற்பமுடன் யென்மனதி லவரையெண்ணி
அலட்சியமா யிருக்காதே மன்னாகேளு
சொற்பமென்று விடுகாதே தானாய்நின்று
சுந்தரனே யவர்மனம்போல் நடந்துகொள்ளு
துற்பரவா வுன்மீதில் மனதுவைத்து
துன்ப சாகரத்தைவிட்டு வாவென்பாரே. 129

வாகவென்ற போதினிலே யுந்தனக்கு
வாகான வரமுனக்கு வகுக்கலாச்சு
கோவென்ற ராஜனுந்தா னுனக்கீடுண்டோ
கொப்பெனவே லோகமது வற்பவாழ்வில்
மாவெனவே அஷ்டாங்கம் யோகம்பெற்று
மகத்தான பதவிகளும் உனக்குண்டாகும்
சாவென்ற நமனுமுன் கிட்டேவாரான்
சதாகாலம் சமாதிதனி லிருக்கலாமே. 130

பொய் ஞானி

இருக்கலாம் புலஸ்தியா யின்னங்கேளு
யெழிலான மார்க்கமொன்று சொல்வேன்யானும்
வருக்கமுடன் மானிலத்தில் ஞானிபோல
வாறுடனே சகலநூல் கற்றோன்போலும்
திருத்தமுடன் தத்துவத்தில் கடந்தோனென்றும்
தெளிவான பிரமலபி யறிந்தோன்போலும்
பொருத்தமுடன் பூமிதனி லாசைவிட்டுப்
பூதலத்தில் முன்றாசை வெறுத்தோனாமே. 131

ஆமேதான் பொய்வேட மிகவுமுண்டு
அப்பனே சர்வக்கியானி போலேதானும்
தாமேதான் சர்வநூல் கற்றோன்போலும்
சட்டமுடன் வாய்பினத்த லதிகம்பேசி
நாமேதா னுலகத்தில் கடந்தஞானி
நாட்டிலே யாரேனு மொருவருண்டோ
போமேதான் மெய்ஞானி போலேயப்பா
பொங்கமுடன் வெகுபேச்சு பேசுவானே. 132

பேசுவான் ஞானவழி காட்டுவான்போல
பேரான மாய்கைதனை யவித்தோன்போலும்
கூசுதலு மிகப்படைத்த புத்திவான்போல்
குவலயத்தில் கீர்த்திபெற்ற பூபாலன்போல்
காசுபண மாசையது மற்றோன்போலும்
காசினியில் பற்றாசை யில்லான்போலும்
மாசுமறு வில்லாத புண்ணியன்போல்
மகத்தான ஞானிபோல் பினத்துவானே. 133

பினத்தியே வாயாட்ட மிகவுங்கொண்டு
பிரியமுடன் சீஷர்க ளனேகமுண்டு
கனத்துடனே கதைமிகவும் பேசியல்லோ
கைலாச கிரிதனையே கண்டோன்போலும்

மனத்துயர மற்றவன்போ லுறுதிபேசி
மகத்தான சின்மயத்தின் வெளிகண்டோன்போல்
சினத்துமே சீஷவர்க்கந் தர்க்கம்பேசி
தினகாலம் வாசியைத்தான் மீட்டுவானே. 134

மீட்டியே தத்துவத்தை மிகவும்பேசி
மேன்மையுடன் ஞானிபோல் வாதுகூறி
தாட்டிகமாய்ப் பூரணத்தின் பெருமைபேசி
தகைமையுள்ள வாசியை மாசறச்சொல்லி
பூட்டகங்கள் காட்டுகின்ற சித்தன்போலும்
பொலிவான ரேசக பூரகத்தைநாட்டி
நீட்டமுடன் பரிபோகஞ் செய்துமேதான்
– – – – வழி கூறுவானே. 135

கூறுவான் வாய்ஞான மிகவும்பேசி
குவலயத்தில் காவி காஷாயம்பூண்டு
தூறுவான் மூடரிட வித்தைபேசி
துடியான வார்த்தையது மிகவுங்கூறி
சீறியே பேச்சுகளா லடித்துருட்டி
சிறப்பான தத்துவ வழிபோலேதானும்
மீறியே வரங்கடந்து யதிகம்பேசி
மிக்காகி கலையில் நின்று வழிசொல்வானே. 136

சொல்லவே அவரிட சீஷவர்க்கம்
துறையான வழிபாடு யிதுதானென்று
வெல்லவே காவி காஷாயம்பூண்டு
வேகமுடன் லக்கோடா ய்த்தானணிந்து
புல்லவே பதாம்புயத்தை மிகவும்நண்ணி
புகழான வட்சரத்தைக் கற்றோர்போலும்
நல்லதொரு கியானிபோல் இருந்துகொண்டு
நவமான வட்சரத்தை யோதுவானே. 137

ஓதுவான் திரிமூர்த்தி சொருபன்போலும்
ஓகோகோ நாதாக்கள் தன்மைபோலும்
நீதமுடன் லபிகடந்த சித்துபோலும்
நிலையான தம்பனத்தின் சித்துபோலும்
தீதமுடன் ஞானவா னாகவேதான்
திறமான குளிகைகொண்ட சித்துபோலும்
சாதமது நீக்கினதோர் சற்குருவைப்போலும்
சட்டமது வெகுநெடுவாய்ப் பேசுவானே. 138

பேசுவான் குவலயத்தில் ஆசைதன்னை
 பேருலகில் மறந்தவன்போல் வாதுகூறி
மாசுடைய மூச்சதனை வுள்ளடக்கி
 மகத்தான வனாகுதத்தை கீழேநோக்கி
மாசுடைய பற்றதுவும் நீங்கியேதான்
 மகத்தான சற்குருவின் பாதம்போற்றி
ஆசுடைய சீடவர்க்கம் நீதானென்று
 அப்பனே யுபதேசம் செய்வான்பாரே. 139

பாரேதான் சண்முகத்தின் பூசையப்பா
 பாருலகி லெப்போதுஞ் செய்யவேண்டும்
நேரேதான் திரிபுரைதான் பூசையப்பா
 நெடிதான பராபரியாள் பூசைவேண்டும்
சீரேதான் அஷ்டமா சித்துவேண்டும்
 சிறப்பான சோடசமு மறியவேண்டும்
கூரேதான் அஷ்டவர்க்கந் தன்னைக்கண்டு
 கொற்றவனு முபதேசங் கூறுவானே. 140

கூறுவான் நீதானே நற்சீஷனப்பா
 குவலயத்தி லுன்னைவிட சீஷனுண்டோ
மாறுடைய மாண்பர்களுக் கன்னமிட்டால்
 வன்கொடுமை மிகச்செய்வா னென்னல்போலும்
ஆறுகுளம் நதிமுதலும் தீர்த்தமாடி
 அப்பனே சமாதிதனி லிருந்துகொண்டு
கூறுமுனி யகஸ்தியன்போல் வுருவம்கொண்டு
 குவலயத்தில் ஞானிக்ன்போ லிருப்பான்தானே. 141

மெய்ஞானி

தானான புலஸ்தியனே சொல்லக்கேளும்
 சாற்றுகிறேன் மாணாக்கள் பிழைக்குந்தன்மை
கோனான யென்தேவர் தலைவணங்கி
 கொற்றவனே கூறுகிறேன் வேடமார்க்கம்
பானான பாருலகில் சிலதுமாண்பர்
 பகல்வேடம் போட்டதொரு கதையுங்கண்டேன்
தேனான மெய்யான சித்துசெய்கைத்
 திறமுடனே யானுரைப்பேன் திண்ணம்பாரே. 142

திண்ணமாம் மெய்ஞானி மார்க்கம்சொல்வேன்
 திறமுடனே நாதாக்கள் தம்மைப்போல
வண்ணமுடன் சகலநூல் எல்லாங்கற்று
 வளமுடனே மாயா சம்பந்தம்நீக்கி

எண்ணமுடன் தொல்லை சாகரத்தைவிட்டு
எழிலான சின்மயத்தின் சோதிகண்டு
நண்ணமுடன் ஞான சாகரத்தினேர்மை
நாட்டமுடன் தானறிந்து நவில்வார்தாமே. 143

நவிலவே வெகுநூல்கள் பார்த்துமேதான்
நலமான தத்துவத்தின் நேர்மைபூண்டு
குவியவே ஞான சாகரத்தைக்கண்டு
குவலயத்தில் பாசமென்ற கயிறைநீக்கி
தவிலமுடன் பெரியோர்கள் ரிடிகள்தேவர்
தகைமையுடன் கண்டறிந்து கேள்விகேட்டு
புவிலமுன் காயாதி கற்பமுண்டு
பூதலத்தி லென்னாளு மிருந்தார்தாமே. 144

இருந்தாரே கோடியுகம் சமாதியில்தானும்
யெழிலாக சரிதைகிரி யோகமெல்லாம்
திருந்தமுடன் கற்றுணர்ந்து சிவயோகிபோலும்
திறமான ஞானமுள்ளான் தீரன்போலும்
பொருந்தவே அட்சரமா ஞானிபோலும்
பொங்கமுடன் தத்துவக் கியானிபோலும்
அருந்தவத்தி லுற்றவித்து வண்ணலார்போல்
அவனியிலே பேருண்டா யிருப்பார்காணே. 145

காணவே சிவயோகம் வேடம்பூண்டு
கனமான யோகத்தில் வுறுதிபூண்டு
பூணவே சிவயோக வேஷ்டிதண்டு
புகழான மாத்திரைக்கோல் பிரம்புதானும்
வேணபடி ருத்திராட்ச மாலைகையில்
விருப்பமுடன் றானணிந்து லாடமிதில்
தோணவே தளமாக பூசிக்கொண்டு
தொல்லுலகில் பாசமற்று இருப்பார்தாமே. 146

இருப்பாரே லோகபரி பூரணராக
எழிலாகத் தானிருந்து நிர்த்தமாகி
பொருப்புடனே தபயோகிக் குறுதியாகிப்
பொங்கமுடன் தட்சணா மூர்த்தியாக
வெருப்பகவு மகத்துவராய் யோகவானாய்
மிக்கான சிவயோகி வேடம்கண்டு
துருப்புநிகர் தனைநிகர்த்த மெய்யனாகி
துன்ப சாகரத்தைவிட்டு துயில்வார்தாமே. 147

தானான பண்டிதற்கு நிறையேதென்றால்
சாற்றுகிறேன் மாணாக்கள் பிழைக்கவென்று
நாமான புலஸ்தியனே மைந்தாபாரு
நலமான பண்டிதனும் யோகவானாய்
காமான பரிசுத்த வாளனாகக்
காசினியி லிருந்துமேயோகம் பார்த்து
பாமான மானதொரு கருமானத்தைப்
பட்சமுடன் கண்டறிந்து பாலிப்பானே. 148

பாலிப்பான் சிவயோகம் பூண்டுகொண்டு
பாரினிலே வயித்தியங்கள் செய்வதற்கு
வாலிபமு மூப்பகற்றிப் புத்திவானாய்
வல்லமையில்.............. டியினா லறியவானாய்
மூலியுட வளமைகளுங் கண்டாராய்ந்து
மூப்பகற்றும் மருந்துவகை தெளியவல்ல
சாலியனா யிருந்தாலுங் குற்றமில்லை
சாற்புடனே புத்திவான் வயித்தியனாமே. 149

வயித்தியனில் சிறந்ததோர் பேரும்பெற்று
வானுலகத் தேவர்கட்கும் வயித்தியவானாய்
சைத்திய நோயதனை யகற்றும் புனிதனாக
சர்வத்திராள் மெய்ச்சுவதற்கு பான்மைவானாய்
பைத்திய ரோகங்கள் தனை தரணிமீது
பறப்பதற்கு வுறுதியுள்ள பாலனாக
நைத்தியமும் பூசையுட மார்க்கவானாய்
நானிலத்தி லிருப்பவனே வயித்தியனாமே. 150

கல்வத்தின் அளவு

ஆமேதான் பண்டிதற்குக் கல்வம்சொல்வேன்
அப்பனே புலஸ்தியனே புத்திவானே
தாமேதான் நீளமது சொல்லக்கேளும்
சாற்றுகிறேன் அங்குலந்தான் பதினாறாகும்
நாமேதான் அகலமது வாறதாகும்
வலமான .... யாமது வாழஞ்சொல்வேன்
போமே தான் வங்குலமு மிரண்டதாகும்
பொலிவான நன்னியென்ற கல்லுமாமே. 151

கல்லான கல்லதுதான் சொல்லக்கேளும்
கருக்குருந்தை செங்குருத்தை நன்னியாகும்
சொல்லுவேன் சாற்றோரம் வரம்புகம்பி
திரண்ட வங்குலமதுதான் வொன்றேயாகும்

வல்லசித்தர் சொற்படியே புலிமுகமும் வைத்து
வளமையுடன் சித்தரித்து வண்மையாக
புல்லறிவால் கல்லமைத்துச் செய்யும்யோகம்
பூதலத்தில் தேவவயித் தியனாம்பாரே. 152

பண்டிதன் லட்சணம்

பாரேதான் வயித்தியனும் யோகவானாய்
....
யோசனைக ளுள்ள ....
....
சீரேதான் .... க்கவல்லான்
சிறப்பான சீஷனுக்கு கந்தவல்லான்
கூரே ....
குவலயத்தில் கீர்த்தியுள்ளோன் வயித்தியவானே. 153

வானான தேவதா வயித்தியனாயும்
வண்மையுள்ள சாத்திரத்தில் சித்தனாயும்
கோனான குருவணக்கம் பெற்றோனாயும்
குவலயத்தில் ரிடிகளின்மேல் இரக்கவானாய்
தேனான கற்பமது கொண்டவானாய்
தேசத்தில் மாய்கைதனை விட்டவானாய்
பானான பராபரத்தை நினைக்கும்வானாய்
பட்சமுட னிருப்பவனே வயித்தியனாமே. 154

ஆமேதான் புலஸ்தியனே இன்னஞ்சொல்வேன்
அப்பனே பண்டிதவான் திறமைகேளும்
தாமேதா வைரவர்கள் மனதின்பாகம்
தக்கபடி யறிவதற்கு மதியும்வேண்டும்
நாமேதான் சொன்னபடி யுலகுதன்னில்
நன்மையுள்ள புண்ணியரும் பாவியுண்டு
வேமேதான் கருவிகளு மெத்தவுண்டு
வேகமுள்ள யின்னம்வெகு மாந்தருண்டே 155

உண்டான மாந்தர்களில் நிதிகள்கோடி
வுத்தமனே சொல்வதற்கு லக்கோயில்லை
பண்டான பாக்கியமு மிகுதியுண்டு
பண்புடனே சொல்வதற்கு முடியாதப்பா
திண்டான பொருளிருந்து மறைத்துச்சொல்வார்
திறமுடனே கருமிகட்கு நோயும்போகா
சண்டாள மானதொரு பாவிகட்கு
சட்டமுடன் மருந்ததுவும் பலியாதென்னே. 156

என்னவே பண்டிதற்குப் பொய்யைக்கூறி
யென்னிடத்தில் திரவியங்க ளில்லையென்று
உன்னவே மெய்மொழிபோல் தாமுறைத்து
உத்தமனே சத்தியங்கள் மிகவேசெய்து
சொன்னதொரு சத்தியமு மெய்யென்றேதான்
சுந்தரனே யுண்மையுள்ளா னென்றுசொல்லி
நன்னயமாய்க் குளிர்ந்தமுகம் வார்த்தைகூறி
நாட்டினிலே கருமிகளு மிருப்பார்தானே. 157

இருப்பாரே வெகுகோடி கருமியப்பா
எழிலான கருமிகளின் மனத்தைத்தானும்
பொறுப்பான மனதுடனே யறியவேண்டும்
பொலிவாக.......... மருமிகளும் தருமியுண்டு
வெறுப்பகல யவர்மனதை யறிந்துநன்றாய்
விருப்பமுடன் வயித்தியங்கள் செய்யவேண்டும்
கருப்புலவும் பூந்துமையாய்ப் புலஸ்தியாகேள்
கண்மணியே யின்னமுனக் கறைவேன்பாரே. 158

அறையவே பண்டிதங்க ளின்னஞ்சொல்வேன்
அப்பனே மருந்தினது வேகங்கண்டு
நிறையவே நாடியின்றன் பலமுங்கண்டு
நிறையான வயததுவும் லக்குகண்டு
குறையவே மருந்தினது சுறுக்குகண்டு
குற்றமறப் பத்தியங்கள்_ ________
முறைபோலப் பண்டிதங்கள்_ _ பேர்க்
_ _ _ _ _ _ _ யென்னலாமே. 159

என்னவே பலநூலும் பார்க்கவேண்டும்
யெழிலான நாடிகண் டுணரவேண்டும்
சொன்னமொழி தவறாது நடக்கவேண்டும்
சுந்தரனே வார்த்தையது கூறவேண்டும்
நன்னயமா யிதம்பெறவே வார்த்தைவேண்டும்
நலம்பெறவே பண்டிதங்கள் சொல்லவேண்டும்
தன்னலமாம் சாகரத்தை யொழிக்கவேண்டும்
துலையாத பாவத்தை நீக்கநன்றே. 160

நன்றான குருமொழியைக் கொள்ளவேண்டும்
நலமில்லாப் பலவழியைத் தள்ளவேண்டும்
அன்றாடங் குருபூசை செய்யவேண்டும்
அப்பனே மறுபூசைக் கொள்ளலாகா

பன்றான நதிக்கரையில் முழுகவேண்டும்
பாலான வபிஷேகஞ் செய்யவேண்டும்
வென்றிடவே வினையகற்றி நீங்கவேண்டும்
வேதாந்தச் சற்குருவை நண்ணவொப்பே. 161

ஒப்பான பிராணாயன் தன்னினின் று
வோங்கார முள்ளடக்கி முனையில்நின் று
தப்பாமல் ரேசக பூரகத்தைக் கொண்டு
தகைமையுடன் வாசிதனை நடத்தவேண்டும்
செப்பமுடன் பூரணத்திலிருந்து கொண்டு
ஜெபமாலைக் கைதனிலே பூண்டுகொண்டு
எப்போதுஞ் சதாநிஷ்டை தனிலிருந்து
யெழிலான குடும்பத்தி லிருக்கநன்றே. 162

இருக்கவே யனாகுதத்தை வாசியிலேமாட்டி
யெழிலான ரேசகத் தைசுழித்தியிலேகொண்டு
பெருக்கமுடன் சதாகாலஞ் சிவயோகந்தான்
பேரான வெட்டவெளி காண்பதற்கு
விருப்பமுடன் செகஜோதி தன்னைக்கண்டு
வீரான சுவாசமதை மடக்கிக்கொண்டு
சுருக்கமுடன் லாடமதில் விபூதிபூண்டு
துப்புறவா யிருப்பவனே சித்தனாமே. 163

சித்தருடன் மொழிதனையே மனதிலெண்ணி
சிதாபாசத் தன்னுடனே யிருக்கவேண்டும்
மெத்தநல்ல வேதாந்தி பெரியோர்போலே
மேன்மையுடன் செகதலத்தி லிருக்கவேண்டும்
செத்தாலுங் கீர்த்தியது கொள்ளவேண்டும்
செம்மையுடன் பலபேரும் துதிக்கவேதான்
வெத்திபெற வுலகமதில் யிருப்பவன்றான்
வேதாந்த சிவத்தொளிவு யென்னலாமே. 164

நூல் பார்க்காத பண்டிதற்கு நரகம்

ஆமேதான் புலஸ்தியனே யின்னங்கேளு
அப்பனே யுலகமதில் பண்டிதங்கள்
தாமேதான் செய்வதற்கு வினயங்கொண்டு
தண்மையுட——னுமந்த வயித்தியோர்க்கு
நாமேதான் சொன்னபடி பல நூல்கற்று
நலமுடனே பரிகாரஞ் செய்யவேண்டும்
போமேதான் சிவயோகஞ் செய்யாராகில்
பூதலத்தில் நரகமதுக் கெய்துவாரே. 16

எய்யவே நரகத்துக் கேதுவாகி
யெழிலான கோத்திரங்கள்.................. வேம்
நய்யவே ரோகத்துக்காளு மாகி
.... போகும்
செய்யவே மதியூகி பண்டிதங்கள்
செகதலத்தில் ... ... புண்ணியவானாய்
மெய்வருந்த பாடுதனைப் பட்டானாகில்
வே ... ...லியது மேவுந்தானே. 166

மேவுமே மோட்சமென்ற கூலிதானும்
மேன்மையுடன் கிடைக்குமது தப்பேயில்லை
தாவுமது மோட்சமென்ற வீடுதானும்
சதாகாலம் காணிக்கை யென்னலாகும்
சாவுமென்ற மரணமது வெகுநாட்செல்லும்
சாவுமில்லை கோடிவரை யிருப்பான்பாரு
பாவுமென்ற புராணங்களிதிகாச மெல்லாம்
பாடிவைத்தார் லோகத்து சித்தர்தானே. 167

தானான சித்தர்முனி ரிடிகள்போலே
தகைமையுட னெப்போதும் இருக்கலாகும்
மானான மானிலத்தி லிருந்துகொண்டு
மதிப்புடனே வளைந்து சிவராஜயோகம்
வேனான விதிப்படியே முறைகள்பார்த்து
விபரமுடன் செய்பவனே யோகவானாம்
கோனான குருசொன்ன வாக்குபோல
குவலயத்தில் பண்டிதங்கள் செய்யநன்றே. 168

செய்யவே முழுமக்கள் பண்டிதற்கு
செயலான பாக்கியமும் பெருகலாகும்
மெய்யாக மோட்சமென்ற வீடுதானும்
மேன்மையுட னெப்போதுங் காணியாகும்
பையவே பரிகாரஞ் செய்யாதாற்கு
பாரினிலே யாதொரு பலனுமில்லை
துய்யவே துன்ப சாகரத்தைவிட்டு
துறையோடு முறையோடு மிருப்பார்தானே. 169

பண்டிதன் குரு முடிக்க

இருப்பாரே புலஸ்தியனே யின்னங்கேளும்
யெழிலான பண்டிதத்திற் குருமுடிக்க
பொருப்பான தேசங்கள் நதிகள்தேடி
பொலிவான காடுமலை வனாந்திரங்கள்

குருப்பான யிடமெல்லா மாராய்ந்தேதான்
குவலயத்தில் பூனீ றுயெடுக்கவல்லோ
விருப்பான பூமிதனைக் கண்டாராய்ந்து
வேகமுடன் வழலைதனை முடிக்கக்கேளே. 170

கேளே நீ புலஸ்தியனே கெணிதவானே
கெவனமுடன் பூநீறு எடுக்கவேதான்
தாளான பூமிவளந் தன்னைக்காண
தார்ணியில் .... தலத்தைக்காண
பாளான பூமியது அள றுபூமி
பாங்கான பூமியினி லுண்டாமல்லோ
நாளான மல்லிக்கார்ச் சுனையின்பக்கல்
நாத .... ருக்குந் தலங்கண்டாரே 171

கண்டாரே சுனையோர மளர்பூமிதன்னை
காவணத் ....
கொண்டாரே சமாதியிடம் வெகுகாலம்
....
....
.... வெகுகால மிருப்பாரங்கே
வண்டுடனே கூட்டமதுக் கதண்டுக்கூட்டம்
வகுப்பான யானைபோல் கதண்டுதானே. 172

தானான கதண்டுகளு மெத்தவுண்டு
தாக்கான புலிகரடி சிங்கம்யாளி
கோனான மிருகவகைக் கூட்டமெல்லாம்
குன்றருகே சுனையோரம் மெத்தவுண்டு
தேனான கதண்டுகளும் தேனையுண்டு
தெளிமையுடன் வனாந்தரத்தை சுற்றிருக்கும்
பானான மனோன்மணித்தாய்ப் பூர்க்குங்காலம்
பாங்கான இடம்பதவி நல்லிடமுமாமே. 173

நல்லான இடமதுவும் வஞ்சிநாடு
நலமான பூனீறு விளையும்நாடு
தல்லான பூனீறு விளையுமார்க்கம்
கானகத்தில் ஆளுயர மாகப்பூர்க்கும்
புல்லான பூவெடுக்க நாள்தான் சொல்வோம்
புத்தியுள்ள புலஸ்தியனே சொல்லக்கேளும்
சொல்லாதே யொருவருக்கு மிந்ததேசம்
சொன்னாலே தலைதறித்துப் போகும்பாரே. 174

பாரேதான் பாவமது மெய்தும்பாரு
பாங்கான பூநீறு கோட்டைதன்னை
நேரான தலைவாசல் காட்டவேண்டாம்
நேர்மையுடன் கண்டாலே மோசமோசம்
தூரான பழிபாவந் தலைமேற்கொள்ளும்
துன்பமென்ற சாகரத்தில் அழிந்துபோவாய்
சீரான இருப்பிடத்தைச் சொல்லவேண்டாம்
சொல்லாமல் மவுனமதா யிருப்பீர்காணே. 175

பண்டிதனுக்கு விட்ட குறையறிய

காணவே புலஸ்தியா யின்னங்கேளு
காசினியில் பண்டிதற்கு நேரானசூர்மை
தோணவே விட்டகுறை யிருக்குமானால்
தோன்றுமே யவருக்கு யிந்தபூமி
வீணான வீணனுக்கு வாய்க்குமோசொல்
விட்டகுறை யிருந்தாலே வாய்க்கும்பாரு
பூணவே பிடகனுக்கு வாய்க்காதப்பா
பொலிவான புண்ணியர்க்கு வாய்க்கும்பாரே. 176

பூனீறெடுக்க விதி

வாய்க்கவே பூனீறு யெடுக்குங்காலம்
வளமையுடன் மாதமது சொல்லக்கேளும்
மேய்க்கவே பங்குனியாம் பருவமாகும்
மேன்மையுள்ள________ எல்லாம் பருவந்தன்னில்
தாய்க்கமலம் வீற்றிருக்கும் மனோன்மணியாள்தாமும்
சற்பனையா ய்வந்துறையும் பூநீறப்பா
காய்க்கவே பூநீறு________ வளறுமார்க்கம்
காணவே தெரிவித்தார் சித்தர்தாமே. 177

தாமான பூநீறு யெடுக்குங்காலஞ்
சாற்றுகிறேன் நடுச்சாம வேளைதன்னில்
நாமான நமதையர் அசுவனிதேவர்
நாதரவர் தானுரைத்த முறைபோல்தாமும்
போமேதான் முறைதனையே புகல்வேன்கேளு
புலஸ்தியனே யொருவருக்கும் புகலவேண்டாம்
வேமேதான் பள்ளமது ஆள் ________ டு
விருப்பமுடன் றானெடுக்க விபரங்கேளே. 178

கேளேதான் பள்ளமது மிகவாய்ச்செய்து
கெவனமுடன் மண்தனை சலித்துக்கொண்டு
நாளேதான் சுனையருகின் தன்னிற்சென்று
நளினமுடன் ஜலமதனைக் கொண்டுவந்து

பாளேதான் போகாமல் மண்ணைத்தானும்
பக்குவமாய்ப் பிசறியல்லோப் பள்ளந்தன்னில்
தாளேதான் கெட்டணைகள் மிகவுஞ்செய்து
தண்மையுடன் வரவுகோல் மேலேதூவே. 179

தூவியே மூன்றுநாள் பொறுத்தபின்பு
தூரமதாய்த் தானிருந்து பார்க்கும்போது
ஆவிபோல் புகையெழும்பிச் சுடருண்டாகும்
அப்பனே கண்கொள்ளா வேகம்பாரு
காவியத்தில் சொன்னபடி கணக்கதாக
கருவாகப் பூசைநை வேத்தியங்கள்
மேவியே பராபரியைப் பூசித்தேதான்
மேன்மையுடன் முப்பூவி னருகிற்செல்லே. 180

செல்லுகையில் மனோன்மணியாள் முன்னேநிற்பாள்
சுந்தரம் போலுந்தனுக்கு உருவந்தோன்றும்
வெல்லவே யம்பாளின் பாதம்தொட்டு
விருப்பமுட னஞ்சலிகள் மிகவுஞ்செய்து
கொல்லவே யமனுக்கு விடங்கொடாமல்
கொப்பெனவே முப்பூவைக் கண்டுதேறு
புல்லவே முப்பூவைக் கண்டபோது
புகழான வஷ்டசித்தி கைக்குள்ளாச்சே. 181

ஆச்சப்பா புலஸ்தியனே யின்னங்கேளு
ஆகாகா நாதாக்கள் மார்க்கஞ்சொல்வேன்
பேச்சுமுன்னே முப்பூவைப் சொல்லிசொல்லி
__________ காட்டகத்தைக் கொண்டுசென்று
மாச்சலுடன் முப்பூவைப் __________ சொல்லி
மறையநின்று பட்சமுடன் வார்த்தைபேசி
ஏச்சியே மு__________ன் கதிரையெல்லாம்
யெழிலாக வாரியல்லோ போவார்தாமே. 182

போவாரே சித்தர்முனி ரிடிகள்தாமும்
பொங்கமுட னுந்தனுடன் நேசஞ்செய்து
சாவார்போல் தாமிருந்து வேடம்பூண்டு
தாரணி வொன்றறியாச் சித்தன்போல
ஆவலுடன் காத்திருந்து கதைகள்பேசி
அன்பாக யேவலுக்கு ஆளதாக்கி
நாவதனில் பிசகாத வார்த்தைகூறி
__________ நன்மையுடன் வழிபேசி யேகுவாரே. 183

ஏகவே சித்தருட மோசங்கண்டு
யெழிலுடனே யவர்வலையிற் சிக்கவேண்டாம்
பாகமுடன் முன்சொன்ன பதத்தைப்போல
பட்சமுடன் தானெடுத்து விதியறிந்து
சோகமுடன் வழலையது பூர்க்கும்போது
சுத்தமுடன் நடுச்சாம வேளைதன்னில்
ஆகமங்கள் சொன்னபடி முறைதப்பாமல்
அப்பனே முப்பூவை யெடுக்கநன்றே. 184

நன்றான முப்பூவை யெடுக்கும்போது
நாதாந்த சித்தர்களு________
— — — — — மனதிற்பூண்டு
பட்சமுடன் ________ யெடுக்கும்போது
தன்றான சித்தர்களு மொதிங்கிநிற்பார்
சார்பான வழலைதனை யெடுத்துக்கொண்டு
பன்றான சீசாவில் பதனம்பண்ணு
பக்குவமாய்ச் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளே. 185

பண்பான நாதாந்த வழலையப்பா
பாங்கான சித்தர்முனி செய்யும்வேதை
நண்பான நாதாக்கள் செய்யுமார்க்கம்
நாட்டினிலே யுந்தனுக்காய்ச் சொன்னேன்யானும்
திண்டான வழலைதனை யெடுத்துக்கொண்டு
தேற்றமுடன் மண்பாண்டந் தன்னிற்கொட்டி
கண்டான பனிசலத்தை அதிலேகொட்டி
கரைத்துநன்றாய்த் தெளிவிருக்க வளமைகேளே. 186

கேளப்பா தெளிவிருத்து மறுபாண்டத்தில்
கெட்டியாய் யுவருப்பு பூர்க்குமட்டும்
தாளப்பா காச்சியெடு கம்பியுப்பு
தண்மையுடன் கசடதுவும் நீங்கியேதான்.
வேளப்பா வுப்பதுவுந் தவளமாகும்
வேனமென்ற காரமது மிகவேயூறும்
தூளப்பா வுப்பதனை சுரண்டியேதான்
துப்புரவாய் மறுபாண்டந் தன்னீற்போடே 187

போடையிலே பின்னுமே பனினீர்வாரு
புகமுடனே தான்கலக்கி மறுபாண்டத்தில்
நீடவே சீலையது வேடுகட்டி
நீதியுடன் மேற்பாண்டந் தன்னைமூடி

கூடவே தாமெரிப்பாய் சாமமட்டும்
கொப்பெனவே தீயாறி சுண்டியேதான்.
தேடவே தீயாறிப் பார்க்கும்போது
தெளிவான வெண்மைநிற வுப்புமாச்சே. 188

ஆச்சப்பா உப்பதனை இந்தபாகம்
அப்பனே முப்பத்திரண்டு பாகமாக
காச்சப்பா கைமுறையாய் செய்வீரானால்
பாலகனே யுப்பதுவுங் கெட்டியாகும்
காச்சலென்ற வுப்பதுவும் அரக்குபோலாம்
கரிதனிலே உருக்கையிலே கண்விட்டாடும்
நீச்சடங்கி வுப்பதுவுந் தவளம்போலாம்
நெடிதான வுப்பதனை பதனம்பண்ணே. 189

அண்டக் கல்லெடுக்க

பண்ணவே முன்சொன்ன முப்புமார்க்கம்
பதிவான யிடந்தனிலே யளவுசொல்வேன்
திண்ணமுடனோராளின் மத்திபத்தில்
திறமுடனே மண்தோண்டிப் பார்க்கும்போது
சுண்ணமென்ற அண்டக்கல் நடுப்பிண்டந்தான்
சுத்தமுடன் தானிருக்கு மதையெடுத்து
வண்ணமுடன் ______ பாக்குவகை சொல்வேன்கேளு
வளமையுடன் முன்சொன்ன பூநீரைவாங்கே. 190

வாங்கியே பூனீ றுமொன்றேயாகும்
மகத்தான சீனமது வொன்றேயாகும்
ஏங்கியே திரியாதே மதியுப்புதானும்
யெழிலான கரியுப்பு இந்துப்பாகும்
தூங்கியே திரியாம லிதுவெல்லாந்தான்
துறையோடும் முறையோடுந் தூய்மைகண்டு
சாங்கமுடன் வெண்கருவா லரைத்துமைந்தா
சட்டமுடன் அண்டக்கல் கவசஞ்செய்யே. 191

செய்யவே அண்டமென்ற சுண்ணக்கல்மேல்
செம்மையுடன் கவசமது செய்துகொண்டு
வெய்யலெனும் ரவிதனிலே காயவைத்து
வேகமுடன் சுண்ணாம்புச் சீலைசெய்து
துய்யமுடன் கனயெருவில் புடத்தைப்போடு
துடியான புடமதுவு மாறிப்பாரு
பையவே சுண்ணமதை யென்னசொல்வேன்
பாரினிலே கண்கொள்ளா வேதையாமே. 192

வேதையா மின்னமொரு வித்தைகேளு
வேதாந்தத் தாயினது அருளினாலே
பேதையாம் வெகுகோடி முனிவர்தாமும்
பிரியமுடன் செய்ததொரு வித்தையாகும்
காதையுடன் பற்பமது யென்னசொல்வேன்
கடுங்கார மானதொரு வழலையாச்சு
பாதையாம் பற்பமது போக்குச்சொல்வேன்
பாரினிலே சித்தருட மகிமைதானே. 193

தானான பற்பமதைத் தானெடுத்துப்
பாகமுடன் வேதைமுகம் சொல்வேன்பாரு
கோனான குருநாதர் சொற்படிக்கு
குறிப்புடனே சரக்குக்குச் சத்துருவுமாச்சு
வேனான சரக்குகளைக் கொல்லுங்காலன்
மிக்கான வழலையுட கூர்மையப்பா
தேனான பற்பமதை சரக்குபேரில்
தேற்றமுடன் வுமிநீரால் மத்திப்பாயே. 194

மத்தித்துக் கலசமது செய்துகொண்டு
மயங்காமல் ரவிதனிலே காயவைத்து
சத்தியுடன் பூசையது மிகவாய்ச்செய்து
சாற்புடனே ள.......யென்ற புடத்தைப்போடு
புத்தியிட னாறியபின் னெடுத்துப்பார்க்க
புகழான சரக்கதுவு நீறிப்போகும்
புத்தியுடன் சீசாவில் பதனம்பண்ணி
பாரினிலே சித்தர்களுக் காட்டாதென்னே. 195

என்னவே பற்பமது குன்றியுண்ணு
யெழிலான தேகமது கற்றூணாகும்
சொன்னபடி தப்பாமல் வனுபானத்தில்
சுந்தரனே மண்டலந்தான் கொண்டாயானால்
நன்னயமாய் தேகமது யிறுகும்பாரு
நலமான ரோகமெல்லா மகன்றுபோகும்
வின்னமில்லை ரோகமது பிணிகள்போகும்
விருப்பமுடன் மண்டலந்தான் கொண்டுபாரே. 196

கொள்ளவே காயாதி கற்பமாச்சு
கோடிவரை யிருப்பதற்கு யிடமுமுண்டு
விள்ளவே பத்தியமு மொன் றுமில்லை
விருப்பமுடன் யாதெதுங் கொள்ளலாகும்

எள்ளளவும் பிசகதுவும் நேராதப்பா
யென்மகனே புலத்தியனே செப்பக்கேளும்
மெள்ளவே வாசியது கீழ்நோக்காகும்
மேன்மையுடன் சின்னமயத்தி லிருக்கலாமே. 197

இருக்கலாங் கோடிவரை யுகாந்தகாலம்
எழிலான பூரணத்தி லிருந்துகொண்டு
பொருக்கவே முன்சொன்ன குருவைத்தானும்
பொங்கமுடன் வேதையுஞ் சொல்வேன்பாரு
வருக்கமுடன் வெள்ளியது கழஞ்சியேழு
வண்மையுள்ள செம்பதுங் களஞ்சிமூன்று
வருக்கியே குருவொன்று களஞ்சியாக
உத்தமனே தான்கொடுத்து யெடுத்திடாயே. 198

எடுத்துமே மூசைதனை உடைத்துப்பாரு
எழிலான வெள்ளியது களங்குபோலாம்
தொடுத்ததொரு களங்குதனை எடுத்துமைந்தா
துப்புரவாய் ஒட்டிலிட்டு ஊதிப்போடு
கொடுத்ததொரு செம்பதுவும் யேகிப்போகும்
கெடியான வெள்ளியது மாற்றுகாணும்
விடுத்துமே வெள்ளியது பசுமையாகி
விருப்பமுடன் மாற்றதுவு மெட்டதாமே. 199

எட்டான வெள்ளியது யெடுத்துமைந்தா
எழிலான மதிதனிலே நூற்றுக்கொன்று
திட்டமுடன் தானுருக்கிக் கொடுத்துப்பாரு
திறமான வேதைமுகம் பரிசைவேதை
வட்டமுடன் சிவயோகிக் கானவேதை
வளமையுடன் நாதாக்கள் செய்யும்வேதை
நட்டமென்ன சமுசாரிக் கானவேதை
நயமுடனே இவ்வேதை சுருக்கம்பாரே. 200

பாரேதான் வேதைமுகம் இன்னஞ்சொல்வேன்
பாலகனே புலஸ்தியா சொல்லக்கேளீர்
நேரேதான் முன்சொன்ன குருவாமுப்பை
நெடிதான ரவிதனிலே பத்துக்கொன்று
சீரேதான் கொடுத்துருக்கக் களங்கமாகும்
சிறப்பான களங்கமதை எடுத்துக்கொண்டு
தீரேதான் செப்புதனை ஊதிப்போடு
திறமான செம்பதும் ஏமமாமே. 201

எமமென்ற செம்பதுவுந் தங்கச்செம்பாம்
எளிதான பொன்னதனை எடுத்துக்கொண்டு
வாமமென்ற பொன்னதனை ஆறுமாற்று
வகையுடனே தானுருக்கி குருவொன்றிய
நேமமென்ற பொன்னதுவு மெட்டேகாலாம்
நேர்மையுடன் ஆணிக்குக் குறையாதப்பா
ஏமமென்ற பொன்னதுவும் மாற்றுமெத்த
எழிலான பசுமையது சொல்லொண்ணாதே. 202

சொல்லவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
துரைராஜ சுந்தரர்க்கு வாய்க்கும்பாரு
வெல்லவே வறுமைவருங் காலத்தன்னில்
மேதினியில் மாறியுண்ண வேதையாச்சு
புல்லவே இவ்வேதை பூதலத்தில்
புகழுடனே யார்செய்வாள் சித்தர்தாமும்
நல்லதொரு நாதாக்கள் முனிவர்தாமும்
நயம்பெறவே தாமுறைத்த வேதையாமே. 203

வேதையா மின்னதொரு மார்க்கம்பாரு
வேதாந்தத் தாயினது அருளினாலே
போதையாம் அசுவனியின் கடாட்சத்தாலும்
பொலிவான சித்தர்முனி கிருபையாலும்
பாதையாஞ் சமுசாரிக் கானபாதை
பாரினிலே சொல்லுகிறேன் பண்பாய்க்கேளும்
சூதையாம் கவுனமென்ற சூதந்தன்னை
துப்புரவாய் மூசையிலே, களஞ்சிவாரே. 204

வாரேதான் களஞ்சிரசந் தன்னைத்தானும்
வண்மையுடன் முன்சொன்ன முப்புதன்னை
நேரேதான் சூதமிடை களஞ்சிசுண்ணம்
நேர்புடனே தான்போட்டுக் கரிதான்கொட்டி
சீரேதான் நெருப்பென்ற அனல்தான்தாக்க
சிறப்பான சூதமது வெண்மையாகும்
கூரேதான் வெண்ணையது பதனம்பண்ணு
கொற்றவனே மேல்போக்குக் கூறுவேனே. 205

கூறுவேன் தாம்பரமாந் தகடுதானுங்
குறிப்பாகத் தானெடுத்துக் கொண்டுவந்து
சீறுடைய தாம்பரமுஞ் சேர்தான்பத்து
சிறப்புடனே தகடதனை நெருப்பில்காச்சி

மாறுபடாத் தகடதனில் சூதந்தன்னை
மயங்காமல் களஞ்சிதனை விட்டுப்பாரு
சேறுபோல் சூதமது வோடிப்பாயும்
செம்மையுள்ள செம்பொன்னு சொல்லொண்ணாதே. 206

ஒண்ணாது இவ்வேதை தாம்பிரவேதை
ஒகோகோ நாதாக்கள் செய்யும்வேதை
அண்ணலார் ராஜாதி ராஜர்தாமும்
ஆகாகா இவ்வேதை செய்வாரேபார்
நண்ணமுடன் மாணாக்கள் பிழைக்கவென்று
நவின்றிட்டேன் புலஸ்தியனே உந்தனுக்காய்
வண்ணமுடன் யோதிவித்து வேதையாகும்
மகத்தான வேதையிது தாம்பிரமாமே. 207

தாம்பிரமாம் வேதையிது சொன்னேன்பாரு
சுத்தமுடன் நாதாக்கள் செய்யும்வேதை
தாம்பரமாம் நவலோகந் தன்னிலீய
தகைமையுள்ள லோகமெல்லாம் ஏமமாகும்
வேம்புடனே தயிலமது எடுத்துமைந்தா
விருப்பமுடன் முப்பூவைக் கூடச்சேர்த்து
பாம்புடனே சூதமதைத் தாக்கினாக்கால்
பார்த்திபனே சீறலது அற்றுப்போமே. 208

நாக ரசவேதை

அற்றதொரு நாகத்தை எடுத்துக்கொண்டு
அப்பனே தங்கமது பத்துக்கொன்று
உற்றதொரு கெந்தியது நாலத்தொன்று
வுகமையுடன் தான்சேர்த்து மைந்தாகேளு
கற்றபடி பொற்றலையின் சாற்றினாலே
கருத்துடனே தானரைப்பாய் நாலுசாமம்
வெற்றிபெற பில்லையது லகுவாய்ச்செய்து
வெயில்தனிலே காயவைத்து செப்பக்கேளே. 209

கேளப்பா ஒட்டிவிட்டுச் சீலைசெய்து
கெவனமுடன் பத்தெருவிற் புடத்தைபோடு
நாளப்பா போகாமல் மற்றநாள்தான்
நலமுடனே தானெடுத்துப் பிரித்துப்பார்த்து
மீளப்பா பீங்கானில் பதனம்பண்ணு
மேன்மையுள்ள செந்தூரம் பூக்கும்பாரு
வீளப்பா செந்தூரந் தனையெடுத்து
விருப்பமுடன் வெண்ணைதனில் கொண்டிடாயே. 210

கொண்டபின்பு காயாதி கற்பமாச்சு
கோடான கோடிவரை யிருக்கலாகும்
கண்டவர்கள் யிப்பாகஞ் சொல்லமாட்டார்
காசினியில் வெகுகோடி மாந்தரப்பா
விண்டபடி யாமுரைத்த நூலையெல்லாம்
விருப்பமுடன் தான்மறைத்து குகைக்குள்வைத்து
மண்டலத்தில் நூலில்லை யென்றுசொல்லி
மறைத்தாரே நாதாக்கள் சித்துதாமே. 211

சித்தான யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
சீரான புலஸ்தியனே சொல்லக்கேளும்
குத்தான செம்பதுவுஞ் சேர்தானொன்று
குணமான செந்தூரங் களஞ்சியொன்று
வித்தான தங்கமது களஞ்சியொன்று
விபரமுடன் றானுருக்கிக் குருவொன்றிய
முத்தான மணிபோலே யுருகியல்லோ
முன்னூறு மாற்றதுவும் யிருக்கும்பாரே. 212

பாரேதான் தங்கமது பிரிதீவாகும்
பாரினிலே பிறவியென்ற தங்கமாச்சு
நேரேதான் தங்கமது மாற்றோமெத்த
நெடிதான சுயத்தங்க மிதற்கொவ்வாது
சீரேதான் சிவயோகந் தனக்குதந்த
சீர்மையுள்ள தங்கமது யிதுதானப்பா
கூரேதான் நாதாக்கள் சொன்னமார்க்கம்
குறிப்பறிந்து பாடிவைத்த காண்டமாமே. 213

காண்டமாம் பனிரெண்டு காண்டந்தன்னில்
கருத்துடனே பாடிவைத்தேன் முதற்காண்டத்தில்
தூண்டியதோர் கருமான முப்புமார்க்கம்
சூட்சாதி சூட்சமெல்லா மிதிலடக்கம்
பூண்டதொரு காயாதி கற்பஞ்சொன்னேன்
புகழான முப்பூவை யெடுக்குமார்க்கம்
வேண்டியே வகைமான மிதிலேசொன்னேன்
விருப்பமுடன் பாடிவைத்த காவியந்தானே. 214

தூனான காவியம் பன்னீராயிரத்தை
தன்மையுடன் மாணாக்கள் பிழைக்கவென்று
கோனான வைகவனி தேவர்நானும்
சொற்றவனார் கடாட்சத்தி னருளினாலே

தேனான காவியமாய்த் திரட்டியேதான்
திறமான பனிரெண்டு காண்டஞ்சொன்னேன்
பானான பராபரியாள் மெச்சியேதான்
பரலோகங் காணவது வரந்தந்தாளே. 215

அகஸ்தியர் புலஸ்தியருக்கு தன்னிருப்பிடங் கூறல்

தந்தாளே யின்னமொரு மார்க்கம்பாரு
தாடாண்மை யாகவல்லோ காத்துறேன்கேள்
சிந்தனையாய் அகஸ்தியரும் புலஸ்தியருக்கு
திறமுடனே தானிருந்த ஸ்தானபாரம்
சொந்தமுடன் தானுரைக்கும் வளமையாவும்
சுந்தரருந் தான்கேட்டு மகிட்சிகொண்டு
தொந்தமுடன் நாதாக்கள் கூட்டத்தோடு
துரையான அகஸ்தியரும் மலைசொன்னாரே. 216

சொன்னாரே அகஸ்தியரும் மலைதானப்பா
தோற்றமுடன் அதிசயங்கள் மெத்தவுண்டு
நன்னயமாய் அகஸ்தியனார் மலையோரத்தில்
நடுவான மத்தியத்தில் சுனையொன் றுண்டு
மன்னவர்கள் தேவாதி ரிடிகள்தாமும்
வருகுவதும் போகுவதும் மெத்தவுண்டு
பன்னயமாய் வுதகமொன்ற தங்கேயுண்டு
பாரினிலே வெகுகோடி சித்தருண்டே 217

உண்டான வாயக்கால் மண்டபத்தில்
உத்தமனே வெகுகோடி சித்தரப்பா
அண்டாத சேனையுடன் ரிடிக்கூட்டங்கள்
அப்பனே தான்வருவார் மெத்தவுண்டு
திண்டான அசுவனியாந் தேவர்தன்னால்
தீரமுடன் அகஸ்தியனார் சமாதியுண்டு
கண்டாரே புலஸ்தியரும் சமாதிகண்டு
களிப்புடனே சிலகால மிருந்தார்காணே. 218

இருந்தாரே சிலகாலம் புலஸ்தியருமப்பா
யெழிலான சமாதியது பக்கல்தன்னில்
பொருந்தமுடன் சிவபூசை நமஸ்காரங்கள்
புகழாக செய்துமல்லோ இருக்குங்காலம்
வருந்தியே சித்தரிடம் வருவாரப்பா
வளம்பெரிய வாயக்கால் மண்டபத்தில்
குருந்தமென்னு மரமதிலே அகஸ்தியர்தாமும்
கூட்டமுடன் எந்நேர மிருப்பார்தாமே. 219

தாமான சித்தருடன் கூட்டத்தோடும்
சாங்கமுடன் அகஸ்தியரு மிருப்பார்கண்டீர்
நாமான குகைக்குள்ளே முனிவர்தாமும்
நாட்டமுடன் யோகஞ் செய்யும்போது
பாமான ரிடிக்கூட்டம் முனிவர்தாமும்
பக்கலிலே வந்து அஞ்சலிகள் செய்வார்
வேமான வேதரிடிபோதரிடிதானும்
வெகுக்கூட்ட மாகவேதான் இருந்தார்தானே. 220

அகஸ்தியருக்கும் பதினெண் சித்தர்களுக்கும் நடந்த தர்க்கத்தை புலஸ்தியருக்குச் சொல்லல்

தானான புலஸ்தியரே சொல்லக்கேளும்
தலைமையுள்ள பதினெண்பேர் சித்தர்தாமும்
கோனான சிந்துமுனி கூட்டத்தோடு
கொற்றேவ யென்முன்னே வாதுபேச
தேனான வவரவர்கள் செய்த நூலை
திரட்டியே யான்செய்த நூலுக்காக
பானான காவியம் பன்னீராயிரத்தை
பாரினிலே செய்ததொரு கற்பம்பாரே. 221

பாரேதான் மடைக்கூட்டம் ரிடிகளோடு
பாலகன வென்முன்னே யெதிர்த்துவந்து
நேரேதான் நானிருக்குஞ் சமாதிமுன்னே
நேரான கல்லாலின் மரத்தின்கீழே
கூரேதான் கூட்டமிட்டு வாயிரம்பேர்
குடித்தனமாம் பதினெண்பேர் வர்க்கத்தோர்கள்.
சீரேதான் நூல்தனையே பெயத்துக்காட்டி
சிறப்புடனே வாதுமுகங் கூறினாரே. 222

கூறினார் அகஸ்தியனார் முன்னதாக
குறிப்பான சாத்திரத்தின் தொகுப்பையெல்லாம்
மீறியதோர் கருமான முட்கருவையெல்லாம்
மிக்கான மாணாக்க னறியவென்று
தூறியே மறைபொருளை வெளிதாக்கிய
துப்புரவாய் செய்ததொரு தன்மையாலே
கோறியே நாங்களெல்லாங் கூட்டமிட்டு
குருமுனியே நாங்களெல்லாம் வந்தோம்பாரே. 223

வந்தோமே யென்றுசொல்ல சித்தர்தாமும்
வளமையுள்ள கல்லாலின் மரத்தின்கீழே
அந்தமுடன் புஷ்கரணி தீர்த்தமுன்னே
அகஸ்தியரும் யெல்லவர்க்கும் வரவுசொல்லி

சொந்தமுடன் வாதுமிகப் பேசிவெல்ல
சுந்தரரைத் தானழைத்து வதிதம்பூண்டு
இந்ததொரு கல்லாலின் மரத்தின்கீழே
இன்பமுடன் பேசியல்லோ கெலிப்போம்தாமே. 224

ரோமரிடி தர்க்கம்

கெலிக்கவே அகஸ்தியரும் வாதுபேசி
கெடியான நூலெல்லாங் கேட்கும்போது
சொலிக்கவே ரோமரிடி யாரெழுந்து
சொரூபமென்னும் அகஸ்தியர்முன் னெதிரதாக
கலிப்பான பரிபாஷை யானுஞ்செய்தேன்
கருவான பரிபாஷைத் தாமுஞ்செய்தீர்
வலிப்பான வழலையென்ற வண்டந்தன்னை
வாகுடனே மாறாட்டம் மிகச்சொன்னீரோ 225

சொன்னதொரு வழலைக்குக் கருமானத்தை
சூட்சமுடன் சொல்லாமல் மறைத்துப்போட்டீர்
வின்னமுடன் அண்டமென்னும் விஷக்கல்தன்னை
வெட்டவெளி யாகவல்லோ சொல்லாமல்தான்
நன்னயமாய் நாதாக்கள்மறைப்பைப்போல
நலமாகத் தானுமல்லோ சொல்லிவிட்டீர்
சின்னமுள்ள பரிபாஷை வைநூறுந்தான்
சிறப்பில்லை காசினியில் வியர்த்தந்தானே. 226

வியர்த்தமாம் பரிபாஷை நூலையெல்லாம்
விருதாவாய்த் துறைசொல்லி முறைசொல்லாமல்
நியர்த்தமுடன் சாத்திரத்தில் சாபஞ் சொல்லி
நிலையான வழிதனையே காணாமற்றான்
தயர்த்தமுடன் நூலாதி நூல்களெல்லாம்
சாங்கமுடன் பரிபாஷை மரவுசொல்லி
சுயர்த்தமுடன் அண்டமென்னும் விஷக்கல்தன்னை
சூட்டியே போக்குவழி மறைத்தீர்தாமே. 227

மறைத்ததொரு வண்மையெல்லாஞ் சொன்னார்பாரு
மகத்தான சாத்திரத்தின் முப்புமார்க்கம்
குறைத்துமே தன்மனதின் போலேதானும்
கூரான விஷக்கல்லு பிறந்தமார்க்கம்
நிறைத்ததெரு வேதைநெறி சாத்திரங்கள்
நீடாழி யுலகத்தி லுறதிப்போக்கு
பறைத்ததொரு அண்டக்கல் விஷக்கல்லப்பா
பாருலகில் சித்தருக்குள் பான்மையாமே. 228

பான்மையாஞ் சித்தருட விஷக்கல்தன்னை
பாரினிலே மறைத்துவைத்த தோஷத்தாலே
மேன்மையுடன் விஷக்கல்லு போக்குமார்க்கம்
மெய்யான சித்தரெல்லாம் மறைத்துப்பேசி
கான்மையா மிருக்குமிட ஸ்தானங்கண்டு
கருத்துடனே யறியாத படியினாலே
வான்மையுடன் யுகந்து பரிபாஷைதன்னில்
வளமாகச் சொல்லாத தர்க்கம்பாரே. 229

பாரேதான் கண்டவிட மார்க்கமெல்லாம்
பரிவாகப் பூர்த்திருக்கும் பூவைக்கண்டீர்
நேரேதான் பூவல்ல வென்றுசொன்னீர்
நிலையான இடந்தோரு மிருக்கும்பாரு
ஊரேதான் பூபூர்த்தா லுலகழியும்
வப்பல்லால் வேறொன்றுந் தப்போயில்லை
சீரான முப்பாலே வப்பூவாகும்
சிறப்பான வப்பாலே முப்பூவாமே. 230

முப்பாலே வந்ததொரு வப்பூவாச்சு
முதன்மையாம் பனிநீருஞ் சென்னீராச்சு
தப்பாமல் மழையினால் வந்தநீராம்
தண்மையுள்ள குளிர்ச்சியினால் பனிநீராச்சு
ஒப்பான மேகமது தானழிந்து
வுற்பனமாங் கெர்ச்சையுடன் வழலைதன்னில்
வெப்பமுடன் மழைசொரியும்போ துவல்லோ
வேகமுடன் காற்றதுவும் மேவுங்காணே. 231

காணவே சித்திரையாம் பருவந்தன்னில்
களிப்புடனே மேகமது கர்ச்சித்தேதான்
தோணவே காற்றெழும்பி சுடர்போல்வீசி
துப்புரவாய்ப் பூமிதனில் விழுகும்போது
ஈணவே மதியுப்பு காரசாரம்
இயலான வுவருப்பு வதிலுண்டாச்சு
வேணவே பரிபாஷைத் திரட்டையெல்லாம்
விருப்பமுடன் தான்படித்து மறைத்தீர்தாமே. 232

மறைத்தொரு பூநீரைக் காரசாரம்
மானிலத்தில் காட்டாத வண்மையெல்லாம்
திறைப்புடனே கண்டறிந்து திறலும்பார்த்து
திறமான வழலையுட கணிதம்பார்த்து

புறையகற்றி வண்டக்கல் லிருக்கும்ஸ்தானம்
புகலாத காரணத்தால் பாபமாச்சு
குறைப்படியே சாத்திரத்தைப் பிரட்டிப்பாடி
கூர்மையுள்ளான் கண்டறிவா னென்றிட்டீரே. 233

என்றீரே மேகத்தா லுற்பவித்த
யெழிலான பனியதுவால் விளைந்தவுப்பு
வென்றீரே கதிரோனால் விளைந்தவுப்பு
வேகமுள்ள வளர்தனிலே விளைந்தவுப்பு
தின்றதொரு வுப்பெல்லா மிதற்குள்ளாச்சு
தீர்த்தகரை யாடிவந்த வுப்புமாச்சு
தென்றிசையின் கன்னியா குமரிதன்னில்
தேர்ந்தெடுத்த வுப்பதுவுந் தெளிமைபாரே. 234

பார்க்கையிலே வண்டபிண்ட மென்றுஞ்சொன்னீர்
பாருலகில் நடுப்பிண்ட மிதுவுமாச்சு
தீர்க்கமுடன் தலைப்பிண்ட மிதுவுமாகும்
திகழான கடைப்பிண்ட மிதுவுமென்றீர்
நீர்க்கமுடன் பிண்டக்கல் லென்றுசொல்லி
நெடுநாளாய் வளர்ந்ததொரு கல்லுமென்றும்
மூர்க்கமுடன் வளர்ந்ததொரு கல்லுமென்று
முக்கியமாய்த் தானுரைத்தீர் முதன்மைதானே. 235

தானேதான் விளைந்ததொரு சுக்கான்கல்லு
தகைமையுள்ள கல்லதுவும் பிரமக்கல்லு
வேனேதான் குடுகுடுக்கல் சுக்கானாச்சு
வேகமுடன் தான்வளர்ந்த மட்டிக்கல்லு
மானேதான் வூமையென்ற ரத்தினக்கல்
மகத்தான விஷபீசக் கல்லென்றும்பேர்
கோனேதான் குருசொன்ன கல்லுமாகும்
கொடிதான ரோமமென்ற கல்லுமாமே. 236

கல்லான கல்லதுவும் கோரைக்கல்லு
கருவான மட்டியென்ற கோரைக்கல்லு
புல்லான பாலைநிலம் தன்னில்மேவும்
புகழான கல்லதுவும் பொருமல்கல்லாம்
கொல்லான சிவந்தக்கல் நாமக்கல்லாம்
கத்தமுள்ள சிவந்தநிறக் கல்லுமாகும்
வில்லான கல்லுமப்பா மேதினிக்குள்
மேன்மையுடன் தான்வளர்ந்த பிண்டமாமே. 237

பிண்டமாம் கல்லென்ற நாமமாச்சு
பேறான பனியினால் விளைந்தக்கல்லாம்
அண்டமதில் விழுந்ததொரு கங்கையாலே
அதிற்பிறந்த கல்லாச்சு யென் றுசொன்னீர்
தண்டமென்னும் பிரிதிவினால் விளைந்தகல்லு
தன்மையுள்ள சூட்சமது மறைத்துப்போட்டீர்
கொண்டபடி மனக்குறைக ளதிகம்வைத்து
கோளா று வாகவேதான் பாடீனீரே. 238

பாடியே பரிபாஷை தியக்கமாகப்
பாருலகில் யாரேனுங் காண்பாருண்டோ
தேடியே கெட்டலைந்து சுட்டுமாண்டு
தேசத்தில் சமுசாரி மாண்டாரப்பா
வாடியே முகம்வாடி நிதியும்போய்
வண்மையுள்ள வுத்தியது மிகவுங்கெட்டு
கூடியே கும்பல்கும்ப லாகக்கூடி
குவலயத்தில் கெட்டார்கள் கோடியாமே. 239

கோடிபேர் பரிபாஷைப் பார்த்துமல்லோ
குவலயத்தில் மாண்டார்கள் லக்கோயில்லை
நீடியே மறைத்துவைத்த வண்மையாலே
நிலையான பொருளென் று நிர்ணயித்து
நாடியே சித்திராப் பருவந்தன்னில்
நாட்டமுடன் பூவழலை யெடுப்பதற்கு
தேடியே காவனத்திற் சென் றுமல்லோ
தேசத்தில் வெகுபேர்கள் விழலானாரே. 240

விழலானார் பரிபாஷை பார்த்துமல்லோ
விருதாவாய்த் தெரியாமல் மாண்டார்கோடி
வழலைமுகம் தானறியார் மாணாக்காளே
வகண்டபரி பூரணத்தை மெய்யென்றெண்ணி
சுழலவே யென்னூலில் ரோமபாஷை
பரிவாகச் சொல்லிவிட்டேன் வை நூறுக்குள்
சுழலவே கண்டறிந்து காண்பானாகில்
சுத்தமுள்ள சித்தனென்னும் பேருமாச்சே. 241

ஆச்சப்பா ரோமரிடி பரிபாஷையப்பா
வாச்சரிய லோகமதி லாருங்காணார்
பேச்சப்பா பேசுதற்கு இடமுமில்லை
பேரான கைமறைப்பு யாதொன்றில்லை

வாச்சப்பா வழலையிட மார்க்குந்தன்னை
வாகுடனே பாடிவைத்தேன் ரெண்டாங்காண்டம்
ஓச்சப்பா யாருந்தான் சொல்லக்கூடா
யெழிலான தென்வாக்கு வுறுதியாமே. 242

உறுதியா மிந்தபரி பாஷைதானும்
வுத்தமனே சிவயோகி அறிவானப்பா
நிறுதிமொழி வார்த்தையினால் நிட்சயித்து
நீடுழி காலம்வரை யென்னூல்பார்த்து
குறுதியுள்ள சூத்திரமும் பதினாறுபார்த்துக்
குறிப்புடனே சோடசமு மிரண்டும்பார்த்து
அறுதியுடன் பரிபாஷை யறிந்துமேதான்
அப்பனே முப்பூவை முடிப்பாய்தானே. 243

முடிப்பதற்கு நாளுமது யெட்டில்பாரு
முனையான கதிரோனும் சரியாய்நிற்பான்
துடிப்புடனே காவனத்திற் செல்லும்போது
துறைபோல முறைபோல நீயுஞ்சென்று
குடிப்பழுது நேராமல் ரேசகத்தைப் பார்த்து
குறிப்புடனே வேளையது யென்னூல்பார்த்து
அடிப்பறையில் பிரதிவியில் மண்ணைத்தோண்டி
அப்பனே ரவி, னிலே காயப்போடே 244

போடையிலே மண்ணுமது கசுவுவாங்கி
பொங்கமுடன் காற்றாறி யிருக்கும்போது
நீடமுடன் சல்லாவை மேலேபோட்டு
நிஷ்களமாய் பனியதுவும் மேற்படாமல்
மூடவே மூன்று நாள்சென்றபின்பு
முறைபோலென் பரிபாடை கையிலேந்தி
கூடயிலே கேணிநீர் கொண்டுவந்து
குமுறவே சலமதனால் பிசைந்திடாயே. 245

பிசைந்துமே மூன்றுநாள் ரவியிற்போடு
பிசகாமல் நான்காம்நாள் பின்னுமப்பா
இசைந்ததொரு பள்ளமதை சுத்தித்தேதான்
யெழிலான சல்லாவை கீழேவைத்து
திசைமுகமுங் காணாமல் பிசைந்தமண்ணை
திகழவே ரவைசல்லா மேலேகொட்டி
நசைந்ததொரு பிரிதீவா மண்ணுதன்னை
நாட்டமுடன் போட்டுமல்லோ மூடிடாயே. 246

மூடவே மூன்றாம் நாள் கதிரோன்முன்பு
முனையான பரிபாஷை விதியதாக
சாடவே நீபோய் பார்க்கும்போது
சட்டமுடன் பூநீறு சாண்தானப்பா
நீடவே பூமிதனில் வளர்ந்திருக்கும்
நீசமான பூநீரை யெடுத்துபாலா
கூடவே மறுபடியுங் குழிதான்வெட்டி
கொப்பெனவே பூனீறைபோடக் கேளே. 247

கேளேதான் பூனீரை யெடுத்துமைந்தா
கெணிதமுடன் குழிதனிலே பின்னும்போடு
தாளவே யதின்மேலே சல்லாவைத்தான்
தகைமையுடன் மேல்பரப்பி மண்ணை மூடி
ஆளவே கெட்டணைகள் மிகவுஞ்செய்து
அப்பனே மூன்றுதிங்கள் பொறுத்தபின்பு
மீளவே மண்ணதனைத் தோண்டிப்பார்க்க
மிக்கான மண்ணதுவுங் கெட்டியாமே. 248

கெட்டியாம் மண்ணதனை யுடைத்துப்பார்க்க
கெடியான அண்டமென்னுங் கல்லுதானும்
கட்டியாய் யுருண்டுமல்லோ திரண்டுமேதான்
கருவான பிண்டம்போ லிருக்கும்பாரு
மட்டியென்ற ஆனைக்கல் லென்றும்பேரு
மகத்தான காரசார மானகல்லு
வட்டமுட னடுமைய மிருகடுங்கல்லு
வளமான கல்லினது வேகம்பாரே. 249

பாரேதான் அண்டமென்ற பிண்டக்கல்லை
பாருலகில் யாரறிவார் சிவயோகிகாண்பான்
நேரேதான் புத்திவா னறிவான்பாரு
நேர்மையுடன் விட்டகுறை யிருக்குமானால்
சீரேதான் வழலையென்ற மார்க்கமப்பா
திறமுடனே லபிக்குமடா புண்ணியோர்க்கு
வேரேதான் பிண்டமென்ற கல்லைத்தானும்
விருப்பமுடன் செய்யும்வகை செப்பக்கேளே. 250

செப்பவென்றால் அண்டமென்ற கல்லைத்தானும்
தெளிவுடனே நாதாக்கள் சொற்படிக்கி
ஒப்பமுடன் அண்டமென்ற கல்லைத்தானும்
வுத்தமனே காரமென்ற செயநீர்தன்னால்

சிப்பியுட செயநீர்தான் கடுங்காரமாச்சு
யிப்புவியி லாரறிவார் அண்டப்போக்கு
தப்பாமல் அண்டக்கல் காரமேற்றி
தகைமையுடன் கெஜபுடத்தில் போட்டிடாயே. 251

போடவே யண்டக்கல் சுண்ணாம்பாகி
பொங்கமுடன் சுண்ணமென்ற நெடிதான்வீசும்
நீடவே சரக்குக்குக் காலனாகும்
நெடிதான சத்துருவைக் கொல்லுமித்திரன்
சாடவே பாஷாண முப்பத்திரெண்டும்
சாங்கமுடன் பொருமியது
தேடவே வழலையென்ற வண்டமுப்பை
தெளிவுடனே சீசாவிற் பதனம்பண்ணே. 252

பண்ணவே சுண்ணமதை கடுகளவுதானும்
கருவான வெண்ணைதனில் கொண்டாயானால்
நண்ணமுடன் காயாதி கற்பமாகும்
நாதாக்க ளுந்தனையும் நவிலுவார்கள்
எண்ணமுடன் நாதாக்க ளும்மைத்தானும்
யெழிலாக முப்பூவைக் கேட்டபோது
வண்ணமுடன் முப்பூவைக் கொடுக்கவேண்டாம்
வளஞ்சொல்லி சித்தர்களுங் கேட்பார்தாமே. 253

கேட்டவுடன் மனமகிழ்ந்து கொடுக்கவேண்டாம்
கெடியான வார்த்தைக்கு அஞ்சவேண்டாம்
நீட்டமுடன் முப்பூவைக் கண்டபோது
நீயுமொரு சித்தனாய் ஆகிவிட்டாய்
நாட்டமுடன் வழலைதனை அறிந்ததாலே
நலமான அஷ்டசித்து மாடலாகும்
தாட்டிகமாய் பற்பமதை தேனிலுண்ண
தாரணியில் வெகுகால மிருக்கலாமே. 254

இருக்கலாம் கோடிவரை யுகாந்தகாலம்
யெழிலுடனே நாலுயுகங் காணலாகும்
பொருக்கவே தேகமது கற்றூணாகும்
பொங்கமுடன் சட்டையது தள்ளும்பாரு
வகுக்கவே தேகமது பொன்போல்வீசும்
வளமான வாசியது கீழ்நோக்காகும்
இருக்கவே கோடியுகம் சமாதிதன்னில்
யெழிலாக தேகமது அழியாதென்றே. 255

அழியாது முப்பூவின் அருமையப்பா
அதிதமாம் வழலையது காரத்தாலே
குழிதனிலே நெடுங்கால மிருந்திட்டாலும்
குற்றமொன்றும் வாராது தேகம்பொன்னாம்
வழியோடே காயத்தை நிறுத்தலாகும்
நிறுத்தாலும் ஆவியது நிலைநில்லாது
பழியான சடலமது பாரில்மண்ணாம்
பலகால மிருந்தாலு மழியுந்தானே. 256

தானான வழலையது காரசாரம்
தாக்கான சரக்கெல்லாம் நீற்றும்பாரு
கோனான யெனதையர் கிருபையாலே
கொற்றவனே பற்பத்தின் போக்குசொல்வேன்
பானான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
பாச்சடா நவலோகந் தன்னிற்றானும்
வேனான பற்பமது யேமமாகும்
மிக்கான மாற்றதுவுஞ் சொல்லொண்ணாதே. 257

அகஸ்தியர் சுப்பிரமணியரிடம் உபதேசம் பெற்றதைப் புலஸ்தியர்க்குக் கூறல்

ஒண்ணாது யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
வுத்தமனே புலஸ்தியரே சொல்லக்கேளும்
நண்ணமுடன் வடிவேலர் தம்மிடத்தில்
நாட்டமுடன் வெகுகால மடுத்திருந்தேன்
கண்ணபிரான் பெற்றதுபோ லடியேன்றானும்
காசினியி லுபதேசம் பெறவேவந்தேன்
வண்ணமுடன் நாதாந்த சித்துதாமும்
வணக்கமுடன் வேலவரை கேட்டார்தாமே. 258

கேட்டவுட னடியேன்மேல் மனதுவந்து
கேள்வியின் வுத்தாரச் சொற்படிக்கி
நீட்டமுடன் ஞானோப தேசந்தன்னை
நெடுங்காலம் போதிப்பே னென்றுசொல்லி
வாட்டமுடன் வடிவேலர் சந்தோடித்து
வாகுடனே அகஸ்தியர்க்கு வுபதேசங்கள்
கூட்டமுட னந்தீசர் முன்னதாக
கூறுவார் வுபதேசங் கூறுவாரே. 259

கூறவே வடிவேலர் அகஸ்தியர்க்கு
குறிப்புடனே அகஸ்தியரும் மனதுவந்து
ஆறவே சகலகலைக் கியானமெல்லாம்
அவனிதனி லறிவதற்கு குருவுமாகி

மீறவே சகல நூல் கியானவானாய்
மிக்கான நூல்களுக்கு முதல்வனாக
மாறவே அட்சரத்துக் குடையோனாக
மகத்தான அகஸ்தியரு முன்னின்றாரே. 260

முன்னின்ற வகஸ்தியரை வேலர்பார்த்து
மோனமென்ற ஞானவுப தேசந்தன்னை
தன்மனையில் தேடிவந்த அகஸ்தியர்க்குத்
தாஷ்டிகமாய் தானுரைப்பார் வேலர்தாமும்
சுன்மவினை முன்னகற்றி கர்த்தாதானும்
கைலகிரி நாதரைத் தொழுதுபோற்றி
தன்மனது யெந்நாளும் பூணவேதான்
சட்டமுடன் வாக்கதுவு மளித்தார்தாமே. 261

சுப்பிரமணியர் ஞான நுட்பங்கூறல்

தாமான வடிவேலர் முருகன்றானும்
சாற்றலுற்றா ரகஸ்தியர்க்கு மின்னஞ்சொல்வேன்
நாமான யிதிகாச புராணமெல்லாம்
நலமுடனே கற்றறிந்த வகஸ்தியர்க்கு
கோமான்போல் தென்பொதிகை வீற்றிருந்த
குருபரனாம் அகஸ்தியனார் முனிவருக்கு
பூமாது மனோன்மணியாள் கடாட்சத்தாலே
புகழுடனே உபதேசஞ் சொன்னார்பாரே. 262

பாரேதான் நாலுயுக அதிசயங்கள்
பாலகனே எந்தனுக்குச் சொன்னாரப்பா
நேரேதான் துவாபர யுகத்தில்தானும்
நேரான யெந்தனுக்குச் சமைந்தசாபம்
சூராகத் தீர்த்தத்தின் கரையினோரம்
குறிப்பாக சடாயுவென்ற பட்சிதன்னால்
வீரமுடன் நேரிட்ட சாபந்தன்னை
விருப்பமுட னெந்தனுக்கு தீர்த்தார்காணே. 263

காணவே சடாயுவின்றன் சாபந்தன்னை
காசினியில் தீர்த்ததொரு கதைகள்தன்னை
பூணவே கலியுகத்தில் சித்துதாமும்
புகழாகச் சாத்திரத்தில் சொல்லவில்லை
வேணவே யான்றானும் யிந்த நூலில்
விபரமுடன் சொல்லிவிட்டே னுந்தனுக்காய்
வாணர்முதல் யின்னூலைக் கண்டிட்டாலும்
வளமான சாபமதை யறியார்தாமே. 264

அறியாதே யிந் நூலில் தோஷஞ்சொல்லி
வப்பனே யநேகம்பேர் வரமும்பெற்றார்
குறிபோலே வடிவேலர் உபதேசத்தைக்
கொற்றவனே புலஸ்தியனே அடியேன்றானும்
முறிபடவே ஞானோப தேசந்தன்னை
முதன்மையாய் எந்தனுக்கு உபதேசித்தார்
நெறியுடனே யானுமுப தேசம்பெற்று
நேர்மையுடன் வெகுகால மிருந்தேன்தாமே. 265

இருந்தேனே வடிவேல ருபதேசங்கள்
யெழிலுடனே பெற்றுமல்லோ பொதிகைசென்றேன்
திருத்தமுடன் பொதிகைதனில் கோடிசித்தர்
திறமுடனே யெந்தனையும் எதிர்தான்கொண்டு
வருந்தியே வணக்கமது மிகவுஞ்செய்து
வளமுடனே யாசீர்மங் கொண்டுசென்றார்
பொருந்தவே குகைக்குள்ளே வடியேன்றானும்
பொங்கமுடன் சமாதிதனி லிருந்தேன்பாரே. 266

அகஸ்தியர் பொதிகைச் சிறப்பை புலஸ்தியருக்குக் கூறல்

பாரப்பா சமாதிதனி லிருந்தேன்யானும்
பாங்குடனே பதினெண்பேர் சித்தர்தாமும்
நேருடனே யவரவர்கள் செய்த நூலை
நேர்மையுட னெந்தனது குகையின்முன்னே
சீருடனே மூன்றுபத்து லட்சநூலை
சிறப்புடனே பாடிவைத்தார் பதினெண்பேர்கள்
ஆருடைய நூல்பார்த்து வறிந்திட்டாலும்
அப்பனே வெளிப்படைதா னொன்றுங்காணே. 267

காணவே யித்தாதி நூல்களெல்லாம்
கைலாச பொதிகையின் குகைமுன்னாக
வேணபடி சித்தரெல்லாங் கூட்டமிட்டு
விருப்பமுடன் நூலதனையே கொண்டுசென்றார்
பூணவே நூலெல்லாம் பார்த்துமேதான்
புகழாகத் தோஷமது சொல்லியல்லோ
மாணவே சித்தமுனி ரிடிகள்தாமும்
மானிலத்தில் மதிப்பதற்கு நூல்செய்தேனே. 268

செய்தேனே பதினெண்பேர் நூல்கள்தன்னை
செப்பவே பெருநூலாங் காண்டமாக
உய்யதொரு காண்டமது பனிரெண்டுமாகும்
உத்தமனே வாயிரத்துக் கொருகாண்டந்தான்

நையவே காவியம் பன்னீராயிரந்தான்
நலமுடனே பாடிவைத்தேன் மாந்தர்க்காக
பையவே பாடியதோர் காவியத்தை
பார்த்துமே பதினெண்பேர் கோபித்தாரே. 269

கோபித்து யென்பேரில் சீறல்கொண்டு
கொப்பெனவே சாத்திரத்தில் தர்க்கஞ்சொல்லி
சாபித்து குகைக்குள்ளே வைத்துமேதான்
சட்டமுடன் குகைதனிலே வைத்துப்பின்பு
தூபிதங்க ளர்ச்சனைகள் மிகவுஞ்செய்து
துறையோடும் முறையோடு மஞ்சலித்து
நேவித்து அஷ்டாங்க வர்ச்சனைகள்செய்து
நிலையான சமாதியிடம் நூல்வைத்தாரே. 270

பிரளயத்தில் நூல் மிதந்தது

வைத்தாரே நூல்களின்மேல் தோஷஞ்சொல்லி
வளமையுடன் யென்னூலைக் குருநூலென்று
கைத்ததொரு சிஷாக்கள் நூலைத்தானும்
கடினமுடன் குகைமுன்னே வைத்தபோது
வைத்ததொரு நூலெல்லாம் பிரளயத்தில்
தாரணியில் மிதந்துவிடக் கண்டோர்தாமும்
தைத்ததொரு பெருநூல்கள் கருவியெல்லாம்
நலமாக மிதந்துவிடக் கண்டிட்டோமே. 271

கண்டிட்ட நூல்களெல்லாம் பார்த்தாராய்ந்து
கருவான காண்டமது பனிரெண்டாய்ச் சொன்னேன்
பண்டிதங்கள் பொய்யாமல் மெய்யாய்த்தானும்
பாருலகில் பெருநூலாய்ச் சொல்லிவிட்டேன்
துண்டிதமாய் சில நூல்கள் சாகரத்தில்
சுருதிசொரு ளானதுவும் மறைந்துபோச்சு
அண்டியே கடலோர மிதந்த நூல்கள்
வகப்பட்ட மட்டுமல்லோ வறிந்தோம்யாமே. 272

அறிந்ததொரு நூலையெல்லாஞ் சித்தர்தாமும்
அன்புடனே மாறாட்ட மிகவுஞ்செய்து
செறிந்ததொரு குகைக்குள்ளே கொண்டுசென்று
சிறப்புடனே தான்மறைந்தார் ரிடிகள்தாமும்
வறிந்ததொரு நூல்களிலே வுட்கருவையெல்லாம்
மறைப்புடனே காட்டாமல் வொளித்தார்தாமும்
குறிந்ததொரு மூலமுத லனைத்தும்யாவும்
கொப்பெனவே வெளியிட்டார் சித்துதாமே. 27

நூல் பார்க்கத் தொகுப்பு விவரம்

சித்தான சித்துமுனி புலஸ்தியாகேள்
　　சிருடனே நூல்பார்க்க விதியுஞ்சொன்னேன்
பத்தியுடன் மாணாக்கள் பிழைக்கவென்று
　　பாலித்தேன் நூல்விபரம் பண்பதாக
முத்திபெற வழிநூலாங் கண்டாராய்ந்து
　　முனையான நூல்தொகுப்பு விபரஞ்சொல்வேன்
சத்தியென்ற மனோன்மணியாள் காமரூபி
　　சட்டமுட னுரைத்தபடி சாற்றுவேனே. 274

சாற்றுவேன் முந்நூல்தான் சிமிட்டுரத்தினம்
　　சார்பான பின்னூல்தான் பூரணந்தானாகும்
போற்றுவேன் பின்னூல்தான் பூரணந்தானாகும்
　　பொங்கமுடன் பின்னூல்தான் திருமந்திரமாகும்
ஆற்றவே வறுநூறும் பார்க்கவேண்டும்
　　அப்பனே யெண்ணூறில் பெருநூலப்பா
சீற்றமுடன் முந்நூறில் சதுர்காண்டமப்பா
　　சிறப்பான நசகாண்டம் முன்னூர்தாமே. 275

தாமான நசகாண்டங் கண்டபின்பு
　　சார்பான அசுவகாண்ட மறியவேண்டும்
வாமென்ற பூரண சூத்திரந்தா நூறு
　　வண்மையுள்ள யிருநூறு மறியவேண்டும்
தாமென்ற பெருநூ லாயிரந்தானப்பா
　　தாக்கான கருக்கிடையு மைநூறுமாகும்
மேமென்ற கரிசலையு முன்னூறுவேண்டும்
　　வியர்வான சொந்தூர முன்னூறும்பாரே. 276

பாரேதான் கருக்கிடையா மைநூறுமாகும்
　　பாங்கான பாண்டுவைப்பு வறுநூறும்பார்
நேரேதான் செனகாறு நூறும்பாரு
　　நேரான கமலம் ஆயிரம்பார்
கூரேதான் சட்டமுனி யெண்ணூறும்பார்
　　குறிப்பான கபிலரது காவியம்பார்
சீரேதான் சிந்தாமணி ஆயிரம்பார்
　　சிறப்பான யந்நூலாம் வேதமாமே. 277

வேதமாம் ஆயுறு வேதந்தானும்
　　வீணாக வாயிரத்தி யிருநூறுபார்
போதமாம் போதரிடி பெரு நூலப்பா
　　பொங்கமுடன் காவியமா யிரந்தான்பாரு

நீதமென்ற கற்பமது வெண்ணூறும்பார்
நிலையான கருக்கிடையு மைநூறும்பார்
வாதமென்ற காவியமா யிரந்தான்பாரு
வளமையுள்ள திராவகமு மெண்ணூர்தானே. 278

தானான வெண்ணூறு பார்த்தபின்பு
தகைமையுள்ள பற்பமது வெண்ணூறும்பார்
தேனான மணிநாலா யிரந்தான்பாரு
தெளிவான திருமந்திர மாயிரம்பார்
பானான கருக்கிடையும் முன்னூறும்பார்
பாங்கான பள்ளு நாடகமும்பாரு
மானான பிறையோக காரமென்னும்
மகத்தான காவிய மாயிரந்தான்காணே. 279

காணவே செயகண்டி வாயிரம்பார்
கருவான வாகடிய மைநூறும்பார்
பூணவே பெருனூ லாயிரத்தைன்னூறு
புகழான காவியமும் பார்க்கவேண்டும்
தோணவே யூகிமுனி பெருங்காவியந்தான்
துப்புரவாய்ப் பார்த்தபின்பு சொச்சம்பாரு
வேணவே பெருந்திரட்டு குறுந்திரட்டுதானும்
மிக்கான மாந்திரிய காவியந்தானாமே. 280

ஆமேதான் மாந்திரிய காவியந்தான்பாரு
அப்பனே ஞான காவியந்தான்பாரு
நாமேதான் சொன்னபடி யெழுநூறும்பார்
நயமுடன் வதிற்சேர்ந்த வெண்ணூறும்பார்
போமேதான் காயசித்தி வெண்ணூறும்பார்
பொங்கமுடன் வறுநூறு நொண்டிபாரு
வேமேதா னுபதேசம் ஆயிரம்பார்
வெளியான பரிபாஷை பாருபாரே. 281

பார்க்கையிலே பதினெண்பேர் பாடிவைத்த
பாகமுடன் பரிபாஷை யறியவேண்டும்
சேர்க்கையிலே சௌமிய மாயிரந்தான்பாரு
சிறப்பான கருக்கிடையு மைநூறும்பார்
ஏர்க்கவே யெழுனூறுத் திரட்டுபாரு
யெழிலான வைநூறு சுருக்கம்பாரு
வார்க்கவே நந்தீசர் ஆயிரம்பார்
வளமுடனே கருக்கிடையு முன்னூறுபாரே. 282

முன்னூறாம் நந்தீசர் பெருநூல்பாரு
முயலான நந்திமுன்னூற் நிகண்டுபாரு
நன்னூலாம் பஞ்ச காவியந்தான்பாரு
நலமான திருமூல ரறு நூறுபாரு
பன்னூலில் சிறந்ததோர் நூல்தானாகும்
பளிங்கான கடைக்காண்டம் பார்க்கவேண்டும்
துன்னூலாம் தீட்சைவிதி வாயிரம்பார்
துறையான நிகண்டு வாயிரந்தான்பாரே. 283

பாரான நந்திமுன்னூறு நிகண்டும்பாரு
பாங்கான போகரது நிகண்டும்பாரு
காரான திருமூல ராயிரம்பார்
கருவான கருக்கிடயு மறு நூறும்பார்
தூரான பெருநூலாம் பாலகாண்டாம்
துறையான பாலவாகடம் முன்னூறு
தாரான லக்க செளமியந்தான்பாரு
தகைமையுள்ள செகஜால மாயிரந்தான்காணே. 284

காணவென்றால் மச்சமுனி யெண்ணூறும்பார்
கருவான பெருனுலா யிரந்தான்பாரு
பூணவென்றால் கருவூரா ராயிரம்பார்
புகழான முன்னூற்றுச் சொச்சம் பாரு
ஆணவே ராமதேவ ராயிரம்பார்
அப்பனே கருக்கிடையு மைனூறும்பார்
தோணவே சட்டமுனி ஆயிரம்பார்
சொச்சமுடன் இரு நூறும் பார்க்கநன்றே. 285

நன்றான புலஸ்தியனே இன்னங்கேளு
நாதாந்த சித்தொளிவின் நூல்களெல்லாம்
குன்றான மலைபோலே இருக்குதப்பா
கூறவுந்தான் என்னாலு முடியாதல்லோ
என்றாலும் எந்தனால் அறிந்தமட்டும்
எழிலாக எடுத்துரைப்பேன் இன்னங்கேளு
பன்றான பலகோடி சாத்திரங்கள்
பாலித்தார் பாரினிலே உண்மையாமே. 286

உண்மையாம் கொங்கணவர் காண்டம்பார்
உத்தமனே ஐநூறு தானும்பாரு
நண்மையாம் செகசால மெண்ணூறும்பார்
நலமான நாற்காண்ட சாலம்பாரு

திண்மையாற் தன்வந்திரி ஆயிரம்பாரு
திறமான நிகண்டு முன்னூறும்பாரு
வண்மையாம் புலிப்பாணி ஐநூம்பாரு
வாகான சாலமது முன்னூறுபாரே. 287

பார்ப்பதற்கு சிவஜால முன்னூறும்பார்
பாங்கான பூரணம் ஆயிரந்தான்பாரு
சேர்க்கவே வொட்டியமா யிரந்தான்பாரு
சிறப்பான சல்லியமுங் கூடப்பாரு
ஏர்க்கவே பஞ்சகாவியந்தான் பாரு
எழிலான சம்பூர்ண காவியம்பார்
மார்க்கமுடன் பிரணவமாம் லட்சணகாவியந்தான்
மயங்காமல் சிறுகாவிய முழுதும்பாரே. 288

முழுதுமே பார்க்கையிலே மோசமில்லை
மூதுலகி லின்னம்வெகு நூல்கள்சொல்வேன்
பழுதுபடாப் பெருநூல்கள் பார்த்தபின்பு
பாகமுடன் சிறு நூல்கள் பார்க்கவேண்டும்
வழுதுறவே சிறு நூலில் அனந்தஞ்சொல்வேன்
வாகான சூத்திரங்கள் மிகவுஞ்சொல்வேன்
தொழுகைபட சூத்திரங்கள் கோடாகோடி
தொல்லுலகில் கண்டமட்டுஞ் சொல்வேனே. 289

சொல்லுவேன் சுப்பிரமணியர் முப்பத்திரெண்டு
சொச்சமாங் கொங்கணவர் எட்டும்பாரு
வெல்லவே ராமதேவர் பத்தும்பாரு
வேதாந்த வழலை சூத்திரந்தான்பாரு
கொல்லவே சுடலை சூத்திரந்தான்பாரு
கொற்றவனே சஞ்சீவி யெண்ணைபாரு
புல்லவே நந்தி பதினாறும்பாரு
புகழான சித்தாதி யெண்ணைபாரே. 290

எண்ணையாம் பதினாறு சூத்திரம்பாரு
யெழிலான கருணை வாகடமும்பாரு
திண்ணமுடன் பால வாகடந்தானப்பா
சூத்திரமாம் இருபதும் முன்னேபாரு
தண்ணமுடன் காவியமாஞ் சுருக்கந்தானும்
தகைமையுடன் பதினாறும் பார்க்கவேண்டும்
வண்ணமுடன் சோதிமணிக் குளிகையெட்டு
வாகான திருமந்திர மெட்டுமாமே. 291

எட்டான திருமந்திர மஞ்சும்பாரு
யெழிலான ரோமரிடி பதினாறுபார்
கட்டான யென் நூலில் பதினாறுதன்னில்
கருவான கெந்தகத்தின் தைலம்பாரு
திட்டான சரக்குசுத்தி முழுதும்பாரு
திறமான ராசாங்க நாடிபாரு
வட்டான அகஸ்தியர் ஞானமப்பா
வளமுடனே பதினாறு பார்ப்பாய்தானே. 292

பார்க்கவே சூதமுனி நாடிபாரு
பாங்கான ஞானமது எட்டும்பாரு
ஏர்க்கவே சுருக்கம் பன்னிரண்டும்பாரு
எழிலான வாத சூத்திரந்தான்பாரு
ஆர்க்கவே திருமூலர் இருபதப்பா
அப்பனே உபதேசம் பாருபாரு
ஊக்கமுடன் அகஸ்தியனார் முப்புபாரு
முப்பதிலே முப்பூவின் வழிசொன்னேனே. 293

சொன்னேனே தட்சணா மூர்த்தியைப்பார்
சுத்தமுள்ள வகாரமது பத்தும்பாரு
முன்றான தீட்சையது பதினாறும்பார்
முதலான சுருக்கமது வொன்றும்பாரு
பன்னவே கொங்கணவர் முக்காண்டந்தான்
பாகமுடன் கண்டறிவாய் புலத்தியா நீ
வின்னமில்லா முக்காண்டத் திருமந்திரந்தான்
வேகமுடன் பார்ப்பதுதான் மெத்தநன்றே. 294

நன்றான பதினைந்து சூத்திரந்தான்
நலமுடனே பூசாவிதி பார்க்கவேண்டும்
குன்றான் ரோமரிடி சூத்திரந்தான்
குறையாம லிருபதுதான் பார்க்கவேண்டும்
நன்றுள்ள பதினாறு வகாரசூத்திரம்
தாக்குடனே கொங்கணவர் குளிகையப்பா
வென்றிடவே யெட்டுமது பார்க்கவேண்டும்
வேதாந்த நந்தீசர் குளிகையெட்டே 295

எட்ட ரன குளிகையது அறியவேண்டும்
எழிலான என்னூலில் ஞானமப்பா
திட்டமுடன் பதினாறு ஞானந்தானும்
தீரமுடன் யானுறைத்தேன் புலஸ்தியாகேள்

வட்டமுடன் வான்மீகர் பத்தும்பாரு
வாகன சிவயோகம் பதினாறும்பார்
சட்டமுடன் யென்னூலாஞ் சுத்தஞானம்
சதுரான நவநீதம் ஒன்பதாமே. 296

ஒன்பதாம் வயித்தியக் கும்மிதானும்
ஒப்பான அண்டக்கல் சுண்ணம்பத்து
அன்பதாம் மச்சமுனி சொச்சம்பாரு
அப்பனே சூத்திரமும் எட்டும்பாரு
துன்பகற்றுந் திருமூலர் கிரந்தியெண்ணை
துப்புரவாய் எட்டுடனே ரெண்டும்பாரு
இன்பமுடன் ரோமரிடி கருமானந்தான்
எழிலாக அன்பத்தி யொன்றும்பாரே. 297

பாரேதான் கௌபால சித்தரப்பா
பண்புடனே ஆணியென்ற கோர்வைதானும்
நேரேதான் அன்பத்தி யொன்றுதானும்
நேர்மையுடன் சூத்திரத்தைப் பார்க்கவேண்டும்
சீரேதான் சட்டமுனி நாதர் தாமும்
சிறப்பான கற்பவிதி நூறும்பாரு
கூரேதான் கேசரி நூல் அன்பத்தொன்றும்
குற்றமில்லா சூத்திரமும் பத்தும்பாரே. 298

பத்தான குளிகையது எட்டும்பாரு
பாங்கான குருக்கிடை சூத்திரந்தான்சொச்சம்
முத்தான சூத்திரமும் முப்பத்தாறு
முடிவாள பச்சைவெட்டு பதினாறும்பார்
சித்தான வாதமது ஆறும்பாரு
சிறப்பான பதஞ்சலியார் இருபதும்பார்
மத்தான யென்னூல்முன் னெண்பதும்பார்
மகத்தான பின்னூல் எண்பதுதான்பாரே. 299

எண்ணான சுந்தரா நந்தர்தானும்
யெழிலாகத் தானுரைத்த நூல்தானப்பா
கண்ணான பூஜாவிதி முன்பின்பாரு
கருவான வென்னூல் பட்சணிதான்பாரு
குண்ணான ஞான முப்பதுவும்பாரு
கூறான வூத்துமுறை தன்னைப்பாரு
தண்ணமுடன் வள்ளுவனார் நூறும்பாரு
தாக்கான குறு நூல் எண்பதுதான்பாரே. 300

பாரப்பா என்சூத்திரம் பத்தும்பாரு
பாங்கான கொங்கணவர் முப்புபாரு
சீரப்பா மதிவெண்பா வகாரம்பாரு
சிறப்பான மதிவெண்பா நூறும்பாரு
கூரப்பா மூலவர்க்கம் பத்தும்பாரு
குறிப்பான கக்கிஷமும் பத்தும்பாரு
சேரப்பா யெந்தனது சூத்திரந்தான்
திறமான அன்பதுதான் பார்க்கநன்றே. 301

நன்றான வேதாந்த சூத்திரந்தான்
நலமான பெருங்குழம்பு யிருபத்தைந்து
குன்றான சொச்ச சூத்திரந்தானப்பா
கொற்றவனே அன்பத்தி ஒன் றும்பாரு
தன்றான பதினாறு காரசாரம்
தகைமையுடன் பார்ப்பதுவே மெத்தநன் று
பன்றான வாசமுனி சூத்திரந்தான்
பாங்குபெற எழுபதுந்தான் பார்த்திடாயே 302

பார்த்திடவே போதமென்ற சூத்திரந்தான்
பளிங்குபோல் முப்பதி ரெண்டும்பாரு
சேர்த்திடவே ஞான முப்பத்திரெண்டும்
செவ்வையுடன் பார்ப்பதுவே மெத்தநன் று
பூர்த்தியாய்க் கொங்கணவர் சூத்திரந்தான்
புகழாக முப்பத்தி ரெண்டும்பாரு
நேர்த்தியாய்க் கொங்கணவர் சரக்குவைப்பு
நேர்மையுடன் நூறுகவி பார்க்கநன்றே. 303

நன்றான கொங்கணவர் காயகற்பம்
நலமுடனே இருபத்தி யைந்தும்பாரு
குன்றான கருவூரார் நொண்டியப்பா
கொற்றவனேழ் நூறுமது பார்க்கவேண்டும்
சென்றதொரு சுத்தரா நந்தர்தாமும்
சிறப்பான நூறுகவி பின்னும்பாரு
வென்றிடவென் சூத்திரமு மைம்பதுபார்
வெற்றியுடன் செயகண்டி நூறும்பாரே. 304

நூறான சிவவாக்கியர் நொண்டிபத்து
நுட்பமுள்ள நந்திபதி னாறும்பாரு
கூறான யென்தன்னூல் பதினாறும்பார்
குறிப்புடனே வாசியது யெட்டும்பாரு

தேறவே யூர்வசி பதினா றும்பார்
தெளிவான வாசமுனி யெட்டும்பாரு
மீறவே கொங்கணவ ரிருபத்தைந்து
மேன்மையுள்ள முப்பூவும் பதினா றுதானே. 305

தானான சூதமுனி அன்பத்தொன் று
தாக்கான பிரம்மமுனி இருபத்தொன் று
கோனான கமலமுனி எண்பத்தொன் று
கொற்றவனே அஷ்ட சூத்திரந்தான்பாரு
வேணான சட்டமுனி பதினா றும்பார்
வேகமுடன் தன்வந்திரி பதினா றும்பார்
பானான புலிப்பாணி இருபத்தைந்து
பாங்குடனே பார்ப்ப துவே மெத்த நன்றே. 306

நன்றான புலிப்பாணித் திலர்தமப்பா
நலமாக விருபத்தி யைந்தும்பாரு
குன்றான சோதிட மைம்ப தும்பார்
குறிப்பான புலிப்பாணி பதினா றும்பார்
தன்றான கோரக்க ரெண்ப தும்பார்
தகையுள்ள வால்மீகர் முப்பத்திரெண்டு
அன்றான வரரிடி அன்ப தும்பார்
அழகான யென்னூலு நூ றும்பாரே. 307

நூறான சிவராஜ யோகமப்பா
நுணுக்கமுள்ள கருவிகர ணாதிதோன் றும்
கூறான மச்சமுனி பாரிசாதங்
கொப்பெனவே முப்பத்தி ரெண்டுமேபார்
நேரான யென்னூலாம் பதினா றும்பார்
நேர்மையுடன் உட்கருவு வெளியாய்த்தோன் றும்
பாரான கொங்கணவர் சூத்திரந்தான்
பாங்குபெற முப்பத்தி ரெண்டும்பாரே. 308

ரெண்டான கமலமுனி சூத்திரந்தான்
எழிலான பதினா று சுருக்கமேபார்
துண்டான சூத்திரமாம் நூறுமேபார்
துப்புரவாய் சட்டமுனி சூத்திரந்தான்
பண்டான அறுபத்து நாலுமேபார்
பாங்குபெற தேரையர் நூ றும்பாரு
உண்டான அன்பத்தி ரெண்டுசூத்திரம்
உத்தமனே பார்ப்ப துவும் நன்மையாமே. 309

ஆமேதான் போகர் பஞ்சாட்சரந்தான்
அப்பனே அன்பது சூத்திரம்பார்
தாமேதான் பிரம்மமுனி சிவராஜமப்பா
தாக்கான அறுபத்து நாலுமேபார்
நாமேதான் சொன்னபடி எந்தன்னூலு
நலமான எமகாண்டம் பதினாறும்பார்
போமேதான் யூகிமுனி சூத்திரந்தான்
பொங்குமுடனன்பதுமே பார்த்திடாயே. 310

பார்க்கவே கருவூரார் பரிசனந்தான்
பாண்மைபெற எண்பதுவும் பண்பாய்நோக்கு
தீர்க்கமுடன் என்னூலு பதினாறப்பா
திறமான பரிசனத்தைப் பாருபாரு
ஏர்க்கவே தூம்பிரமாம் யெந்தன்னூலு
எழிலான அன்பதுவும் பார்க்கநன்று
சேர்க்கவே யெட்சணியா மைம்பதும்பார்
சிறப்பான ரோமரிடி கூறும்வாறே. 311

வாறான பட்சணியும் பார்த்தபின்பு
வகுப்பான யெட்சணியும் பாருபாரு
கூறான தன்வந்திரி கியாழம் நூறு
கொற்றவனே பார்த்தாலே சித்தனாவாய்
தேறான நந்தீசர் பூசாவிதிதானும்
தேற்றமுடன் பார்ப்பதுவு மெத்தநன்று
வேறான சட்டமுனி கியாழம் நூறு
விருப்பமுடன் பார்த்தாக்கால் காயசித்தி
சாரான தட்சணா மூர்த்திநாயன்
சட்டமுடனன்பதுதான் பார்ப்பாய்தானே. 312

தானான புலஸ்தியனே சொல்லக்கேளுஞ்
சார்பான வுன்மந்திரந் திருமந்திரந்தான்
தேனான அன்பதுவும் பார்த்தபின்பு
தெளிவாக சோதிமா முனிவர்சொன்ன
பானான போகருட சடாட்சரந்தான்
பட்சமுடன் எண்பதுவும் பார்க்க வேண்டும்
கோனான எண்பதுவும் பார்க்க வேண்டும்
கொப்பெனவே காவியமாஞ் சுருக்கம் நூறே. 313

நூறான போகருட மறப்புசூத்திரம்
நுட்பமுடன் முப்பத்தி ரெண்டும்பாரு
வானான போகரது குளிகைமார்க்கம்
வகுப்பணியாய் முப்பத்தி ரெண்டும்பாரு

தேனான போகரது மூலிகைவேதை
தெளிவாக வறுபத்து நாலுபாரு
மீறான பெரு நூல் காவியந்தானப்பா
மிக்கான சுருக்கம் பதினஞ்சும்பாரே. 314

அஞ்சான வேதமுனி சொன்ன நூலாம்
அழகான காவியமா யிரந்தானாகும்
துஞ்சாத சுருக்கமப்பா இருபதாகும்
துறைவான சூத்திரமு நூறதாகும்
கஞ்சமுனி தானுரைத்த பெருநூலப்பா
காசினியி லாயிரமாங் காவியந்தான்
மிஞ்சான சூத்திரந்தான் காவியத்தின்சொச்சம்
மிக்கான அன்பத்தி யொன்றும்பாரே. 315

ஒன்றுடனே வியாசமுனி சொன்ன நூலாம்
உத்தமனே வாயிரத்துச் சொச்சநூலாம்
வென்றிடவே சொச்ச சூத்திரந்தான் நூறு
வேதமுனி தானுரைத்த வாக்கியம்பார்
தென்றிசையில் தட்சணா மூர்த்தினாயன்
தேசத்தில் மாந்தர்கள் பிழைக்கவென்று
முன்னுரைத்த பெருநூலாங் காவியந்தான்
உத்தமனே ஆயிரத்து சொச்சம்பாரே. 316

சொச்சமாய் சுருக்கமது நூறும்பாரு
சோராமல் சூத்திரமாய் பத்தும்பாரு
மிச்சமாம் கைலாச சட்ட நாதர்
மீண்டுரைத்த நிகண்டுக்குச் சுருக்கமப்பா
அச்சமில்லா எண்பதுவும் பதினாறும்பார்
அப்பனே சிவவாக்கியர் குளிகைபாரு
கச்சலன்றி கருவூரார் சொன்னநீதி
காசினியி லாராலும் பார்க்கொண்ணாதே. 317

ஒண்ணாது மச்சமுனி யெண்ணூறுக்கு
வுத்தமனே பதினாறு சுருக்கம்பாரு
எண்ணாது போகருக்கு சுருக்கம்பாரு
யெழிலாகப் பாடிவைத்தேன் நூறதாகும்
நண்ணான வேதமுனி நூலுக்கப்பா
நலமான ரெண் நூலும் பார்க்கவேண்டும்
விண்ணவே காவியம் பன்னீராயிரத்தில்
விருப்பமுடன் பாடிவைத்த சூத்திரம் நூறுபாரே. 318

சூத்திரமாம் வேதரிடி சொன்ன நூலில்
சுருதியுடன் குருக்கிடையுந் தன்னைப்பாரு
நேந்தியுடன் சிவானந்தர் சொன்ன நூலில்
நேர்மையுடன் தீட்சாவிதி முன்பின் பாரு
பூர்த்தியாய் காவியமா யிரந்தான்பாரு
புகழான சூத்திரமும் பத்தும்பாரு
சாத்திரங்கள் தப்பாமல் விதியணியாய்ப்பாரு
சட்டமுடன் பார்த்தவர்கள் சித்தராமே. 319

சித்தராஞ் சிவஜால மாயிரத்தில்
தேர்ந்தெடுத்த சூத்திரமும் நூறும்பாரு
வித்தகனாய்ப் பிறந்தாலும் லாபமென்ன
விதியறியான் முறையறியான் வீணாள்போக்கன்
சுத்தமுடன் சுப்பிரமணியர் சொன்னநீதி
சூட்சமடா வாதாரக் கருவிபத்து
நித்தமுடன் பார்த்துமல்லோ வழியறிந்து
நியமத்தில் நிற்பவனே முத்தனாமே. 320

ஆமேதான் கொங்கணவர் காவியத்தில்
அப்பனே சுருக்கமது நூறும்பாரு
நாமேதான் சொன்னபடி வாயிரந்தான்
நலமான பூரண காவியத்துக்கப்பா
வேமேதான் சுருக்கமது நூறும்பாரு
மிக்கான ஜெயகண்டி வாயிரந்தான்
தாமேதான் சுருக்கமது நூறும்பாரு
தாக்கான சூத்திரமும் பத்தும்பாரே. 321

பாரப்பா போகரது கருமானந்தான்
பாங்கான வெண்பதுவம் பாருபாரு
நேரப்பா கொங்கணவர் புடபாகந்தான்
நெருக்கமுட னன்பதுவும் பார்க்கவேண்டும்
சேரப்பா கொங்கணவர் கண்டசுத்தி
சீரான வன்பதுவும் பார்த்தால்நன்று
கூரப்பா புசண்டரது வன்பதுந்தான்
கொப்பெனவே பார்த்தாக்கால் சுத்தியாமே. 322

சுத்தியாம் காயசுத்தி பெறவேண்டுஞ்
சூட்சாதி பிரணவத்தை அறியவேண்டும்
நித்தியமாம் சரக்குசுத்தி யறியவேண்டும்
நீயான சத்துருமித்துரு பார்க்கவேண்டும்

புத்தியாய் கும்பமுனி வன்பதப்பா
புகமுடனே பார்த்தாலே யெல்லாஞ்சித்தி
சித்திபெற தட்சணா மூர்த்திநாயன்
சிறப்பான லோக மாரணத்தைப்பாரே. 323

பார்க்கவென்றால் யெந்தனது கருமானந்தான்
பரிவான திருக்கூத்து யறுபத்துநாலு
தீர்க்தமுட னகஸ்தியர் அட்சர ஞானம்
திறமுடனே முப்பதுவும் பார்க்க வேண்டும்
ஏர்க்கவே வசுவனிப் பிரயோகுந்தான்
எழிலான பாணமது நாற்பத்திரண்டு
மார்க்கமுடன் ஞான காவியச்சுருக்கம்
மதிப்புடனே யிருபதுந்தான் பார்த்திடாயே. 324

மதிப்பான போகர்பல திரட்டுத்தானும்
மகத்தான வன்பதுவும் பார்க்கவேண்டும்
துதியான இடைக்காடார் வல்லாதியப்பா
துப்புரவாம் முப்பதுவும் பார்க்கவேண்டும்
விதியான சண்டமா ருதந்தானப்பா
விருப்பமுடன் பதினா றுங் காணவேண்டும்
பதியான கருவூரார் அஞ்சனந்தான்
பாண்மையுடன் பதினா று பார்த்திடாயே 325

பதினா று பார்க்கையிலே யெல்லாஞ்சித்தி
பார்லோகம் வசியமதாய் கைக்குள்ளாகும்
மதியான பூரணமாம் கும்பமப்பா
மகத்தான பதினா றும் பார்க்கவேண்டும்
விதியான கொங்கணவர் திருமந்திரந்தான்
விட்டகுறை முப்பத்திரண்டு மறியவேண்டும்
சதியில்லா கருவூரார் சாலமப்பா
சட்டமுடன் அறுபத்து நாலுங்காணே. 326

காணவே நாலுகாண்டஞ் சுருக்கமப்பா
கருவாக வறுபத்து நாலும்பாரு
தோணவே திருமூலர் யெட்டும்பாரு
தோற்றமுடன் தேவிபூசை பதினா றும்பார்
வேணபடி சண்முகத்தின் பூசையப்பா
விருப்பமுடன் பதினா று பார்க்க வேண்டும்
பாணமுடன் ரோமரிடி சுருக்கமப்பா
பாகமுடன் வறுபத்து நாலும்பாரே. 327

நாலான ரோமரிடிக் கண்டசுத்தி
நலமான சூத்திரமும் பதினாறும்பார்
காலான ரோமரிடி நாலும்பாரு
கருவான வென்ஞானம் பதினாறும்பார்
சேலான போகருட வாதசூத்திரம்
செம்மையுடன் பதினாறும் பார்க்கவேண்டும்
நூலான ராமதேவர் சூத்திரந்தான்
நுணுக்கமுடன் நூல்பார்க்க வேண்டுந்தானே. 328

தானான கொங்கணவர் பெருநூலப்பா
தாக்கான காவியமாஞ் சுருக்கம்பாரு
வேனான கண்டசுத்தி நூறும்பாரு
விருப்பமுடன் சுருக்கமது பத்தும்பாரு
கோனான பெருநூ லாயிரந்தானப்பா
கொற்றவனே சுருக்கிடையும் இருநூறும்பார்
தேனான புடபாக மைம்பதும்பார்
தெளிவாக சுருக்கமது பத்தும்பாரே. 329

பத்தான சுருக்கமென்ற கற்பம்நூறு
பாங்கான சட்டமுனி நாதர்கற்பம்;
சித்தான யாக்கோபு வன்பதும்பார்
சிறப்பான ஞானமது பதினாறும்பார்
முத்தான ஆராதாரச் சுருக்கம்
முனையான பூஜாவிதி யிருபதும்பார்
சத்தான சட்டமுனி ஞானம்பத்து
சதுரான போகரது சுருக்கம்பாரே. 330

சுருக்கமாம் பஞ்சரகசியஞ் சுருக்கமப்பா
சொரூபமென்ற ஞானமது முப்பத்திரண்டு
சுருக்கமாஞ் சட்டமுனி முன்ஞானம்பார்
சதுரான சட்டமுனி பின்ஞானம்பார்
பொருக்கமுடன் ஞானமது வைன்பதாகும்
போகருட யிருதலைக் கொள்ளியப்பா
பெருக்கமுடன் நடன சாத்திரந்தான்பத்து
பேரான தீட்சாவிதி பத்தும்பாரே. 331

பாரப்பா புண்ணாக்கர் சுருக்கம்பத்து
பாங்குடனே மச்சமுனிக் காயகற்பம்
நேரப்பா வன்பதுமே பாருபாரு
நிலையர்ன சாத்திரமு மாறும்பாரு

ஆரப்பா மச்சமுனி சொன்னாற்போல
அப்பனே காயகற்பஞ் சொன்னதில்லை
பேரப்பா பெருநூல்தான் வால்மீகர்தானும்
பெருமையுள்ள சுருக்கமது முப்பதுவும்பாரே. 332

பார்த்திடவே கமலமுனி நொண்டியப்பா
கருவான யெண்பதுமே பாருபாரு
சேர்த்திடவே சிவவாக்கியர் நொண்டிதானும்
சிறப்புடனே யெண்பதுவும் பாருபாரு
கோர்த்திடவே கொங்கணவர் நொண்டியப்பா
கொற்றவனே நாற்பதுவும் பார்க்கவேண்டும்
ஏர்த்திடவே புண்ணாக்கர் நொண்டிதானும்
எழிலாக வன்பதுமே கண்டிடாயே. 333

கண்டிடவே ராமதேவர் நொண்டியப்பா
கருவான செயகண்டி முப்பதுவும்பாரு
பண்டிதவான் பலமுனிவர் நொண்டிபார்க்க
பாரிலே கண்டவனே யோகவானாம்
துண்டரிக மானதொரு தீட்சையப்பா
துரையான யாக்கோபு சொன்னார்பாரு
கொண்டபடி வேதமுனி சொன்னவாக்கு
குவலயத்தில் கூறவுந்தான் முடியாதன்றே. 334

அன்றான பிரம்மமுனி நொண்டிதானும்
அப்பனே யெண்பதுவும் பாருபாரு
நன்றான யிடைக்காடார் நொண்டிதானும்
தாக்கான வறுபதுவும் பார்க்கநன்று
குன்றான ரோமரிடி தீட்சையப்பா
குறிப்புடனே பார்ப்பதுவும் மெத்தநன்று
பன்றான புண்ணாக்கர் தீட்சையப்பா
பதமுடனே பார்த்தவர்க்கு காட்சியெட்டே 335

எட்டான சோடசமாம் பதினாறும்பார்
யெழிலான நந்தியது பதினாறும்பாரு
மட்டான சோடசமாம் ரெண்டுபாரு
மகத்தான கலைகள் பதினாறும்பாரு
திட்டமுடன் நந்திபதி னாறும்பாரு
திறமான வழலையது முப்பத்திரெண்டு
சட்டமுடன் பார்த்தவர்க்குச் சிவயோகங்கிட்டும்
சதாகாலஞ் சாயுச்சிய மெட்டுந்தானே. 336

தானான சிவயோகம் பதினாறும்பார்
தாக்கான சோடசமு முப்பத்திரெண்டு
வேனான தன்வந்திரி யிருபத்தினாலு
மிக்கான கக்கிஷமு மொன்பதும்பார்
பானான பரம ரகசியந்தானெட்டு
பாரினிலே பார்த்தவனுஞ் சித்தனாவான்
மோனான மோட்சவழி யறியலாகும்
மூதுலகில் துறைகண்ட சித்தனாமே. 337

ஆமேதான் தன்வந்திரிக் காவியத்துக்
காயிரத்துச் சுருக்கமது யிருபதாகும்
நாமேதான் சொன்னபடி யாராதாரம்
அப்பனே சுருக்கமது பார்க்கவேண்டும்
தாமேதா னவரவர்கள் சொன்னவாக்கு
தப்பாது ஒவ்வொரு கோர்வைதானும்
மோமேதான் வீண்காலம் போக்காமாற்றான்
பொங்கமுடன் பார்ப்பவனே சொருபனாமே. 338

சொருபமாங் கமலர்சொன்ன தீட்சையப்பா
சுத்தமுட னறுபத்து நாலும்பாரு
அருபமென்ற தன்வந்திரி கலைதான்பாரு
அப்பனே பதினாறுக் குள்ளடக்கம்
உருபமாம் நடராசர் சொன்னநீதி
உகந்த தொரு தீட்சையது யெட்டும்பாரு
நிருபமென்ற காயாதி கற்பந்தானும்
நிட்சையுடன் பார்த்தவனே புனிதனாமே. 339

புனிதனாம் சுப்பிரமணியர் தீட்சையப்பா
புகழான மார்க்கமது பதினாறும்பார்
வனிதமுடன் கௌதம ரிடியார்தாமும்
வாக்குறைத்த காயகற்ப மெட்டும்பாரு
கனிவுடனே யேகாந்தம் பதினாறும்பார்
காட்சியுடன் மாட்சிமைகள் பெறவேயாகும்
துணிதமுள்ள சுந்தரனார் தீட்சையப்பா
சுத்தமுடன் முப்பத்தி ரெண்டும்பாரே. 340

ரெண்டான டமரகனார் தீட்சையப்பா
யெழிலுடனே பதினாறும் பார்க்கவேண்டும்
கண்டுமே சிவயோகம் யெட்டும்பார்த்து
கருவான வுட்கருவை யறியவேண்டும்

வண்டுறைந்து மதுவையுண்ணுங் கதையைப்போல
மானிலத்தில் நூலதனை யறியவேண்டும்
உண்டான வுட்கருவை யறியாவிட்டால்
உத்தமனே சாத்திரம் பார்த்தொன் றுங்காணே. 341

காணார்க ளசுவனியாந் தீட்சையப்பா
கருவான வறுபத்து நாலும்பாரு
தோணாத கருவெல்லா மதற்குள்தோணும்
தொல்லுலகில் நூல்பார்க்க வொன்றுமில்லை
வேணபடி நசகாண்ட மாயிரந்தான்
விருப்பமுடன் சுருக்கமது நூறும்பாரு
ஊணாத கருவெல்லா மதிலேதோற்றும்
உத்தமனே பஞ்சகர்த்தா ளாடுங்கூத்தே. 342

கூத்தான பஞ்சகர்த்தா ளொடுங்குமார்க்கம்
குறிப்பான நசகாண்டச் சாத்திரத்தில்
மாத்தானக் கிடமில்லா காயகற்பம்
மகத்தான ஆருநூறு சொன்னாரப்பா
தீத்தமுடன் காயாதிக் கொண்டோர்தாமும்
திறமுடனே வெகுகால மிருப்பாரென்று
சாத்தமுனி யாழ்வாரும் பிரபந்தத்தில்
சாற்றினார் காயத்திரி நூலில்தாமே. 343

தாமான சௌமிய மாயிரந்தான்
தாக்கான சுருக்கமது நூறும்பாரு
நாமேதான் சொன்னபடி பத்தும்பாரு
நலமான சுருக்கம் பதினாறும்பாரு
போமேதான் சோடசமும் முப்பத்திரெண்டு
பொங்கமுடன் கைமறைப்பு யிருபத்தினாலு
ஆமோதான் பஞ்சபூத ரகசியங்கள்
அப்பனே பதினாறில் யெட்டில்பாரே. 344

எட்டான பஞ்ச காவியந்தானப்பா
யெழிலான யேமதத்துவ மெண்ணூறாகும்
கட்டான காவியத்துச் சுருக்கமப்பா
கருவான யெண்பதும் பாருபாரு
திட்டமுள்ள முப்பூவின் வழலைமார்க்கம்
சிறப்புடனே கூட்டிவைத்தார் பெருமைமெத்த
மட்டியென்னு முழுமக்க ளறிவாரோசொல்
மகிழ்ச்சியுடன் விதியாளி யறிவான்றானே. 345

தானேதான் சௌமியந்தான் சுருக்கமப்பா
தகைமையுள்ள பதினாறும் பாருபாரு
மானேதான் சோடசமாந் தன்னைப்பாரு
மகத்தான யெட்டுடனே நாலுமேபார்
நானேதான் சொன்னபடி கருவுமேபார்
நாயகனே வாதார மெட்டுமேபார்
மோனேதான் முப்பத்தி ரெண்டுமேபார்
உத்தமனே கோசபீசம் பத்துதானே. 346

பத்தான வேதமுனி யெட்டுமேபார்
பாகமுடன் சோடசமும் பதினாறும்பார்
முத்தான கலைக ளிருபதுவுமேபார்
முனையான தீட்சையது சுருக்கமேபார்
சித்தான காயகற்ப மைன்பதும்பார்
சிறப்பான வுடற்கூறு யெட்டுமேபார்
சுத்தமுடன் ஞானமது முப்பதுவும்பார்
சுருக்கமாய் ஞானமது யெட்டுதாமே. 347

எட்டான திலர்தமது ரெண்டுமேபார்
யெழிலான வஞ்சனமு முப்புபத்து
கட்டான சமாதியது சுருக்கம்பத்து
கருவான மாற்றமது பத்தும்பார்
திட்டமுடன் சகாதேவன் காவியந்தான்
திறமான வழகான சுருக்கமப்பா
வட்டமுடன் பதினாறு பார்த்தபின்பு
வளமான தீட்சையது பாருபாரே. 348

பாரேதான் ஞானமது நூறும்பாரு
பாங்கான காயகற்பம் பத்துபாரு
நேரான முக்காண்டம் பார்க்கவேண்டும்
நேர்மையுடன் காண்டமது சுருக்கந்தானும்
சிரேதா னன்பதுமே பார்க்கவேண்டும்
திறமான தருக்க நூல் பதினாறும்பார்
தீரேதான் முப்பூவின் தீட்சைமார்க்கம்
திறமுடனே பதினாறும் பார்க்கநன்றே. 349

நன்றான தருமநூல் பதினாறும்பார்
நலமான சித்தருட மரபுநூலாம்
குன்றான காவியந்தா னாயிரமப்பா
குருவான நந்திசொன்ன நூல்தானாகும்

தென்றிசையாம் பொதிகைதனில் யானுரைத்த
திறமான மரபு நூ லாயிரந்தான்
சென்றிடவே பாடிவைத்த சுருக்கமப்பா
செவ்வையுடன் நூறதுவும் பார்க்கநன்றே. 350

பார்த்தபின்பு திருமூல வர்க்கத்தார்கள்
பாடிவைத்த மரபு நூ லாயிரந்தான்
நேர்த்தியுடன் ஆயிரத்துச் சொச்சமப்பா
நேரான சுருக்கமது நூறும்பாரு
பூர்த்தியாய்ப் பதினெண்பேர் ஜாதிவர்க்கம்
பூட்டினார் திருமூல வர்க்கத்தார்கள்
சாத்திரங்கள் பல நூலுங் கண்டாராய்ந்து
சட்டமுடன் நூல்தனையே பாடினாரே. 351

பாடினார் பதினெண்பேர் சித்தர்தாமும்
பாருலகில் சமாதியது பூண்டவண்ணம்
தேடியே பார்க்குமந்தக் காலந்தன்னில்
தெளிவாக போகரே ழாயிரத்தில்
கூடியே பதினெண்பேர் சமாதியெல்லாம்
கொப்பெனவே போக ரேழாயிரத்தில்
நாடியே காலாங்கி நாதர்தம்மால்
நயமுடனே பாடிவைத்தார் போகர்தாமே. 352

தாமான போகரே ழாயிரந்தான்
தாரணியில் பெருநூலாம் மற்றொன்றில்லை
பூமான மானதொரு காலாங்கிநாதர்
புண்ணியனார் வரம்பெற்ற போகநாதர்
நேமமுடன் தானுரைத்த சத்தகாண்டம்
நேர்மையுடன் வையகத்தில் பெருநூலப்பா
ஆமெனவே கண்டவர்கள் யோகவானாம்
அவனியிலே யவனுமொரு சித்தனாமே. 353

சித்தனா மவர் நூல்போல் மறு நூலில்லை
செகதலத்தில் பதினெண்பேர் சொன்னதில்லை
சத்தமுடன் காண்டமது யேழாயிரத்தில்
சாற்றினார் லோக வதிசயங்களெல்லாம்
புத்தியுடன் போகரிடி யனேகநூல்கள்
புகழாகப் பாடிவைத்தார் சீஷருக்கு
முத்தியுடன் பெருநூ லேழாயிரந்தான்
முதன்மையாம் நூலென் று சொல்லலாமே. 354

சொல்லலாம் அந்நூலுக் கெந்நூலப்பா
தோறாத பெருநூல் காவியந்தானாகும்
வெல்லவே பனிரெண்டு காண்டமப்பா
விருப்பமுடன் பாடிவைத்தே னின்னூல்தானும்
பல்லவே பன்னீராயிரக் காவியந்தான்
புகட்டினேன் லோகத்தின் மார்க்கமெல்லாம்
நல்லதொரு சிவராச யோகிமார்கள்
நண்புபெற யென்னூலைப் போற்றுவாரே. 355

போற்றுவார் பதினெண்பேர் சிவராசயோகி
பொங்கமுடன் பாடிவைத்த நூலையெல்லாம்
மார்க்கமுடன் கண்டுமிக வாராய்ந்தேதான்
மானிலத்தில் மயக்கமது தெளியாமற்றான்
தீர்க்கமுடன் யென்னூலைப் பார்த்தபேர்கள்
திறமான நூலிதுதான் பெருநூலென்பார்
ஆர்க்கமுடன் யெனதைய்ய ரசுவனியாந்தேவர்
அவருடைய புசபலத்தா லறைந்திட்டேன். 356

அறையவே பெருநூல் காவியத்திலப்பா
அப்பனே யான்சொன்ன முறைகளெல்லாம்
குறையாமல் செய்துமல்லோ முடிப்பாரானால்
குவலயத்தி லவருமொரு சித்தனாவார்
முறைபோல செய்பவனே சிவராசயோகி
மூதுலகில் கறைகண்ட சித்தனப்பா
திறைகடலுஞ் சத்த சாகரமுமான
திறமான காண்டமிது பெருநூலாமே. 357

ஆமேதா னின்னூலி லடக்கஞ்சொல்வோம்
அப்பனே யஷ்டசித்து மிதிலடக்கம்
நாமேதான் சொன்னபடி கருவனந்தம்
நாதாக்கள் கைமறைப்பு யனந்தமுண்டு
போமெனவே கூடுவிட்டுக் கூடுபாய்தல்
பொருங்கமுடன் கருவிகர ணாதியெல்லாம்
தாமேதான் சிவயோக மிதிலேதோன்றும்
சட்டமுடன் அஷ்டமா சித்துபாரே. 358

பார்க்கையிலே மோகனமு மிதிலடக்கம்
பாங்கான பேதனமு மிதிலேதோயும்
ஏர்க்கவே வித்வேஷணம் இதிலேகாட்டும்
யெழிலான வுச்சாடன மிதிலடக்கம்

தீர்க்கவே வசியமுத லாக்குருஷணமாகும்
திறமான மாரணமும் ஸ்தம்பனமுமாகும்
மார்க்கமுடன் ஞானமுதல் யோகமிதுபாரும்
மகத்தனா கிரியையெல்லா மிதற்குள்ளாச்சே. 359

ஆச்சப்பா வாதமுதல் வயித்தியபாகம்
அருமையுள்ள சாலமுதல் சிமிட்டுப்போக்கு
நீச்சப்பா கருவித்தை யனேகங்கோடி
நிலையான கைமசக்கு மா துதந்திரம்
காச்சப்பா சொக்குபொடி பிரணவமந்திரம்
கருவான நோக்குவித்தை குறளிசாலம்
மாச்சலென்ற மூலியிட வசியப்போக்கு
மகத்தான டமகரங்கள் காணலாமே. 360

காணலா மின்னூலி லனந்தங்கோடி
கடிதான சூரணமும் ரசாயனங்கள்
தோணவே லேகியங்கள் கிருதமார்க்கம்
தொகுப்பான யெண்ணையுடன் தயிலம்யாவும்
பூணவே செந்தூரம் பற்பம்யாவும்
புகழான கட்டுவகை மெழுகுதானும்
வேணவே மாத்திரைகள் கபாடந்தானும்
மிக்கான புகையுடனே வஞ்சனமுமாமே. 361

அஞ்சான சற்பத்து பிளாஸ்திரிமார்க்கம்
அப்பனே கப்புவகை யாவுந்தானும்
தஞ்சமுடன் சற்பத்து திராவகங்கள்
தகைமையுடன் செயநீர்க ளனந்தம்போக்கு
கஞ்சமலர் மனோன்மணியாள் திலர்தப்போக்கும்
கருவான மையினிட யெட்சணிமார்க்கம்
துஞ்சான வஷ்டாங்க யோகமார்க்கம்
துறையான செகசால முழுதும்பாரே. 362

பாரேதான் சாலமுட னிந்திரசாலம்
பாங்கான மயேந்திரமாஞ் சாலத்தோடு
நேரேதான் விபூதியின் மார்க்கந்தானும்
நிலையான கோட்டை முதல்காணலாகும்
வேரேதான் மசானத்தின் கிரியையெல்லாம்
மேதினியி லிதிலடக்கஞ் சொல்லப்போமோ
சீரேதான் காயாதி கற்பம்யாவும்
சிறப்புடனே பாடிவைத்தே னின்னுல்தானே. 363

தானான சாத்திரங்க ளிதிலடக்கம்
தகைமையுள்ள வேதமது யிதிலடக்கம்
பானான மனோன்மணியா ளுபதேசங்கள்
பாடிவைத்தேன் இந்நூலி லடக்கமப்பா
கோனான புலஸ்தியனே யின்னஞ்சொல்வேன்
குவலயத்தி னதிசயங்கள் மிகவாய்க்கேளும்
தேனான சித்தர்முனி ரிடிகள்தாமும்
தேடிவைத்த திரவியங்கள் செப்புவேனே. 364

செப்புவேன் சித்தருட மரபுமார்க்கம்
செயலாக சமாதியிட மார்க்கந்தானும்
ஒப்பமுடன் சீடவர்க்கக் கூட்டத்தார்கள்
ஓகோகோ நாதாக்கள் பெருமைசொல்வேன்
இப்புவியி லிருந்தசித்து கோடியுண்டு
யெழிலான விவரவர்கள் செய்தமார்க்கம்
தப்பிதங்க ளில்லாம லின்நூலிற்றான்
தகைமையுடன் யானுரைப்பேன் தண்மைபாரே. 365

தண்மையா மவரவர்கள் செய்தபாகம்
தகைமையுடன் இன்நூலில் காணலாகும்
பண்மையாம் பண்டிதங்கள் மெத்தவுண்டு
பாரினிலே செய்ததொரு மகிமையாவும்
உண்மையாம் பலநூலுங் கண்டாராய்ந்து
உத்தமனே யானுரைத்தேன் காவியந்தான்
வண்மையாம் ரிடிமுனிவர் சொன்னனூலில்
வளமையுடன் பெருமருந்து யில்லைதானே 366

அசுவினிதேவர் குருநூல் சிறப்பு

தானான யென்னூல்போ லனேகஞ்சித்தர்
தாட்சியுடன் பாடிவைத்தார் சிலநூல்கள்
கோனான வசுவனியாந்தேவர்தானும்
கூறினார் துவாபர யுகத்திலப்பா
பானான பராபரியாள் மனோன்மணித்தாய்
பாங்குடன் தானுரைத்த குருநூல்தன்னை
மானான வையகத்தி லெந்தனுக்காய்
மனதுவந்து சொன்னதொரு குருநூலாமே. 367

குருநூலாம் அசுவனியாந் தேவர்தானும்
குறிப்புடனே தானுரைத்த வடநூல்தன்னை
சிறுநூலா யெந்தனுக்கு தேவர்தாமும்
சிறப்புடனே உபதேசஞ் சொன்னார்பாரு

பெருநூலா யடியேனுங் காவியமாய்ப்
பிரியமுடன் பாடிவைத்த காண்டமப்பா
ஒருநூலும் பன்னீரா யிரத்துக்கொப்பாய்
உலகுதனி லுவமைசொல்ல முடியாதன்றே. 368

அன்றான சாத்திரத்தைப் பிரித்துப்பார்த்து
அருமையுள்ள பனிரெண்டு காண்டஞ்சொன்னேன்
குன்றான மலைபோன்ற காண்டந்தன்னை
குருவான ரிடிமுனிவர் சித்தர்தாமும்
தென்றிசையில் வாழுகின்ற ரிடிமுனிவர்தாமும்
தேர்ந்தெடுத்துக் கொண்டதொரு குருநூலாகும்
பன்றான காவியத்தை முனிவர்மெச்சி
பட்சமுள்ள காவியத்தை வையென்றாரே. 369

வையென்றார் குகைதனிலே ரிடியார்தாமும்
வையமெல்லாஞ் சித்தாகிப் போகுமென்றார்
கைதவமாய் மீறுகின்ற கர்மிதாமும்
காசினியில் வெகுகோடி மாண்பருண்டு
மெய்பேசி நூலதனை வாங்கிக்கொண்டு
மேதினியில் வெகுசித்து ஆடுவார்கள்
பொய்யான தோடிகட்கு யிந்தநாலு
பொருக்குமோ பூமிதனில் பொருக்காதாமே. 370

ஆமென்ற சித்துமுனி சொல்லும்போது
அங்ஙனவே மனதுவந்து சந்தோடித்து
நேமமுடன் முனிசொன்ன வார்த்தைதன்னை
நிட்களமாய் மெய்யென்று மனதிலுன்னி
தாமெனவே நூலதனைக் குகைக்குள்வைத்தேன்
தாரணியில் சிலசித்தர் பின்னதாக
ஓமமுடன் பெருநூலை வெளியிற்காட்ட
உத்தமனே வெகுகோடி மனுசெய்தாரே. 371

மனுசெய்த படியாலே புலஸ்தியாகேள்
வையகத்தில் மானிடர்கள் பிழைக்கவென்று
கனுவுடனே யின்னூலை வெளியேவிட்டேன்
கண்டறிவான் விதியாளி சொல்வான்பாரு
அணுவளவு பாகமது பிசகாவண்ணம்
அப்பனே யானுரைத்தபெரு நூலப்பா
தணுவுடனே சதுருகத்தி லிருந்தநூலை
சாற்றினேன் புலஸ்தியர்க்காய்ப் பெருநூல்தானே. 372

பெருநூலாங் காவியமாம் பன்னிரெண்டு
பேரான வொவ்வொரு காண்டந்தன்னில்
அருமையாய் வொவ்வொரு முறைகளப்பா
அனந்தம்வகை சொல்லிவிட்டேன் லக்கோயில்லை
குருவான யெனதையர் சொற்படிக்கு
கோடான கோடிமுறை சொற்படிக்கு
திருவான மனோன்மணித்தாய் கடாட்சத்தாலே
தீரமுடன் பாடிவைத்த பெருனூலாமே. 373

சித்தர்களிருந்த ஸ்தலவிசேஷ மகத்துவம்

நூலான யின்னமொரு மார்க்கங்கேளு
நுணுக்கமுடன் புலஸ்தியனே சொல்வேனப்பா
தாலமாம் பதினெண்பேர் சித்தர்தாமும்
தகைமையுட னவரவர்க ளிருந்தநாடு
கோலமாஞ் சமாதிகள் பூண்டநாடு
கொற்றவனே நூல்பாடி வைத்ததேசம்
சீலமாம் அவரவர்கள் சீடவர்க்கம்
சிறப்புடனே ஆராய்ந்து சொல்வேன்பாரே, 374

காசிக்கு மேற்கே

பாரேதான் காசிக்கு மேற்கேயப்பா
பாங்கான காயத்திரி பிரம்மநாடு
நேரேதான் டில்லிக்குக் கிழக்கேயப்பா
நேர்மையுடன் பனிமூடி யிருக்கும்நாடு
ஆரான வசுவனியாம் நதியொன்றுண்டு
அன்னதிக்கு நடுமையந் திட்டொன்றுண்டு
நூறான காதவழி யகலமுண்டு
நுணுக்கமுடன் சதுர மவ்வளவுதானே. 375

அசுவினிநதியில் சதுரகிரிவளப்பம்

தானான சதுரமது கோட்டையுண்டு
தருவான ராட்சதர்க ளிருக்குங்கோட்டை
கானாறு குகையுண்டு மலைவளங்கள்
கடிதான ராட்சதர்கள் தூங்குங்காடு
வேனான வெளிக்காடு மண்டபங்கள்
வேதமுனி ரிடிக்கூட்ட மனேகமுண்டு
தேனான மணிபோன்ற சித்துதாமும்
சிறப்புடனே தானிருக்கும் பதியுமாமே. 376

நர்மதாவிற்கு தெற்கே

பதியான நர்மதா நதிக்குத்தெற்கே
　　பாங்கான வக்கினியா றொன் றுவுண்டு
மதியான சூரியரும் காணாநாடு
　　மகத்தான வெள்ளானை யிருக்கும்நாடு
துதியான சிவலிங்கம் வளருநாடு
　　துப்புரவாய் வசிலமெல்லாம். லிங்கப்பிரேஷ்டை
நிதிவிளையும் காஞ்சனமா மென்னுநாடு
　　நிலையான சித்தர்முனி யிருக்கும்நாடே. 377

டில்லிக்கு வடக்கே

நாடான டில்லிக்கு வடக்கேயப்பா
　　நலமான புலஸ்தியனே சொல்வேன்பாரீர்
காடான காடுவாயிரங் காதந்தான்
　　கதீதமுள்ள் சிங்கமது உறங்குங்காடு
நீடான வேங்கையது வடர்ந்தகாட்டில்
　　நேர்மையுடன் நடுமைய மத்திபத்தில்
கோடான கோடிமுனி ரிடிகள்தாமும்
　　குறிப்புடனே வீற்றிருக்கும் விடுதியாமே. 378

விடுதியாம் ஆயக்கால் மண்டபந்தான்
　　விண்ணுலகை யெட்டுகின்ற கோபுரந்தான்
படுநிலையில் ஒவ்வொரு பீடந்தன்னில்
　　பாங்குடனே வீற்றிருப்பார் முனிவர்தாமும்
அடுநிலையில் சிகரம்வரை முடிவுமட்டும்
　　அணியணியாய் வீற்றிருப்பார் ரிடிகள்தாமும்
முடியோடே முடிநெருங்கும் நாதர்கூட்டம்
　　மூதுலகில் சொல்வதற்கு நாவொண்ணாதே. 379

ஒண்ணாது கோபுரத்தை யளவுசொல்ல
　　உத்தமனே யாதிசேட னாலுமாகா
அண்ணாந்து பார்த்தாலும் முடிதான்போகும்
　　ஆகாகா சித்தருட கோபுரந்தான்
கண்ணாலே பார்ப்பதற்கு முடியாதப்பா
　　கைலங்கிரி வாசலது யிதற்கீடுண்டோ
குண்ணான மகம்மேரு விதற்கீடுண்டோ
　　கொற்றவனே கோபுரத்தின் பெருமைகாணே. 380

காணவென்றால் கைலாயங் காணவேண்டும்
　　காணாட்டால் கோபுரத்தைக் காணவேண்டும்
பூணவே சித்தொளிவு முனிதானப்பா
　　பொங்கமுடன் றானிருக்குங் கோபரங்கான்

வேணபடி சித்தர்கள்தான் யிருக்கும்ஸ்தானம்
விருப்பமுடன் யானுரைத்தேன் மைந்தாகேளு
தோணவே தடாகமொன்று அதிலேயுண்டு
தோற்றமுடன் மஞ்சள் தாமரையுண்டாமே. 381

பொய்கைச் சிறப்பு

உண்டர்மே மனோன்மணியா ளிருக்கும்பொய்கை
ஓகோகோ நாதாக்கள் வணங்கும்பொய்கை
அண்டர்முனி ராட்சதர்கள் நடுங்கும்பொய்கை
அழகான மண்டபந்தான் மத்திபத்தில்
குண்டலம்போல் வயிரக்கல் லிங்கமுண்டு
கூறான வஞ்சுதலை நாகமுண்டு
சண்டமா ருதம்போல தொனிகள்கேட்கும்
சட்டமுள்ள தேவாதி ஸ்தலமென்பாரே. 382

அயோத்திக்கு வடக்கே

என்பாரே வயோத்திக்கு வடக்கேயப்பா
எழிலான நதியொன்று மலையொன்றுண்டு
குன்றான மலைதனிலே சுனையொன்றுண்டு
குருக்களாஞ் சித்துவர்க்க சேனையுண்டு
வென்றிடுவார் ராட்சதாள் கூட்டமப்பா
வீரமுனி லாடமுனி கறுப்பன்சாமி
நன்றான பிடாரிமுதல் தேவதைகள்கூட்டம்
நலமான மலையோரம் நிற்பார்பாரே. 383

டில்லிக்கு மேற்கே

பாரேதான் டில்லிக்கு மேற்கேயப்பா
பாங்கான வளர்நாடு சித்துநாடு
நேரேதான் பூமிக்குள் சுரங்கமப்பா
நெடுந்தூர மாயிரமாங் காதங்காணும்
சூரமுனி சித்துகளும் ரிடிகள்கூட்டம்
சொற்பெரிய வகிலமென்ற கோட்டைதன்னில்
ஊரேதான் பாதாள பூமியாகும்
உத்தமனே சித்தர்முனி வாசம்பாரே. 384

வாசமாங் கோட்டைக்குப் பூதங்காவல்
வளம்பெரிய கோட்டை நக ரெல்லாஞ்சுத்தி
பாசமுடன் கிடாரங்கள் கோடாகோடி
பார்தீர்ந்து வைத்ததுபோல் நிற்கும்பாரு

நேசமுடன் யார்சென்று யெடுத்தாலுந்தான்
நேர்மையுடன் பூதங்க ளறைந்துகொல்லும்
மோசமது வருகுமல்லோ முனிவர்தாமும்
முசியாமல் காத்திருந்தார் கோடியாமே. 385

கோடியாம் பூதங்கள் சூழும்நாடு
கொற்றவனே வாசமுனி யிருக்கும்நாடு
நீடியே வண்ட ரறியாதநாடு
நித்திலங்குஞ் சித்தொளிவு யிருக்கும்நாடு
தேடியே சித்தர்முனி ரிடிகள்தாமும்
திறமுடனே கண்டறிந்த நாடுவாகும்
ஆடியே புலஸ்தியனே யப்பாகேளு
ஆதி கைலாச நாடென்னலாமே. 386

டில்லிக்கு தெற்கே

என்னலாம் புலஸ்தியனே யின்னங்கேளு
எழிலான சித்தர்முனி யிருக்கும்ஸ்தானம்
பன்னவே டில்லிக்கு தெற்கேயப்பா
பாங்கான சோழவள நாடொன் றுண்டு
முன்னேதான் பெரியோர்கள் சொன்னாப்போல
மூதுலகோ ரறியாத ஸ்தலமொன் றுண்டு
பொன்னேகேள் மன்னவனே ராஜயோகா
பொங்கமுடன் சித்தர்களுக் குகந்தநாடே. 387

ஜெனகமுனி சுரங்கம்

நாடான சோழவள நாடப்பாகேள்
நலமான நடுமையந் தன்னிலப்பா
கூடான குன்றதுபோல் மலையொன் றுண்டு
குறிப்பான யேழு யோசனைதானுண்டு
பாடான மலைக்குள்ளே சுனையொன் றுண்டு
பாங்கான வாயிரம் படிதானுண்டு
தாடாண்மை யுள்ளதொரு செனகரப்பா
தண்மையுடன் சுரங்கமதி லிருப்பார்தாமே. 388

இருப்பாரே வெகுகோடி சித்தரப்பா
எழிலான சுரங்கத்தின் படியின்மேலே
பொருப்பான ஒவ்வொரு சித்துதாமும்
பொங்கமுடன் படிதோ றுந் தவசிருப்பார்
விருப்பகலுங் கோட்டையது யெழுநூறுகாதம்
வீருள்ள சூரியனைக் கண்டதில்லை
துருப்பான பொ றுப்பளவு திரவியங்கள்
துப்புரவாய்க் கொட்டிருக்கக் காணலாமே. 389

காணலாம் வெகுகோடி செம்பொன்னப்பா
கருத்துடனே சித்தர்முனி ரிடிகள்தாமும்
தோணவே தேடிவைத்த திரவியங்கள்
தொல்லுலகை விலைமதிக்குங் கோடாகோடி
நாணவே நவரத்தின கசிதமெல்லாம்
நாதாக்கள் தேடிவைத்த நெடுங்காலவைப்பு
பூணவே பொன்னி னாபரணமெல்லாம்
புகழாகக் குவிந்திருக்கப் பார்க்கலாமே. 390

பார்க்கலாங் கன்னிடைய சித்தரப்பா
பாருள்ள நிதிகளுக்குக் காவலுண்டு
தீர்க்கமுடன் கிங்கிலிய ராயிரம்பேர்
தீரமுட னணியணியாய்க் காவலுண்டு
ஏர்க்கவே சித்தர்முனி ரிடிகள்தாமும்
எழிலுடனே போவதும் வருவதுண்டு
மார்க்கமுடன் தலைவாசல் காளிகாவல்
மகத்தான யிடமெல்லாம் வயிரவனாமே. 391

ஆமேதான் அரண்வாசல் கோட்டைதன்னில்
ஆயிரம் பெருங்காதம் வழிகள்தோறும்
நாமேதான் சொன்னபடி சித்தர்கூட்டம்
நாதாந்த சீடவர்க்கங் கூறப்போமோ
போமேதான் செனகமுனி கோட்டையப்பா
பொங்கமுடன் சொல்வதற்கு நாவுண்டோசொல்
தாமேதான் பொன்னகர மிதற்கீடுண்டோ
தாரணியில் சேடனவன் சொல்லொண்ணாதே. 392

அயோத்திக்கு மேற்கே

சொல்லவென்றா லின்னமொரு மார்க்கம்பாரு
துரைராச சுந்தரனே சொல்லக்கேளும்
நல்லதொரு அயோத்திக்கு மேற்கேயப்பா
நலமான புல்லா ணி தீர்த்தமுண்டு
வெல்லவே தீர்த்தமது நடுமையத்தில்
வேதாந்தக் கூடமென்னும் மாளியுண்டு
புல்லவே திருமூலக் கூட்டத்தார்கள்
புகழான கோட்டைக்கு ளிருப்பார்தாமே. 393

இருப்பாரே திருமூல வர்க்கத்தார்கள்
எழிலாக யெண்ணாயிரம் மாந்தரப்பா
பொறுப்பான யவர்மரபு மெத்தவுண்டு
புகழான திருமாலிக் கோட்டைக்குள்ளே

குருக்கள்மார் சிலதுபேர் முன்னேநிற்பார்
குருவானத் திருமூலத் தீசர்முன்னே
திருப்புலவும் பொங்கனயி னார்களப்பா
திருவாசல் கோட்டைக்குக் காவலுண்டே 394

காவலுடன் சீடவர்க்க மாயிரம்பேர்
கனமான திருமூல வருக்கர்முன்னே
ஆவலுடன் ஞானோப தேயம்பெற்று
அன்புடனே யவர்பாதந் தொழுதுபோற்றி
பாவமது தனையகற்றித் தவசியோர்கள்
பான்மையுட னணியணியாய்த் தவமிருப்பார்
சாவதுவு மெப்போது மில்லையப்பா
சட்டமுடன் கற்பங்கொண் டிருப்பார்தாமே. 395

தாமான கற்பமது கொண்டபோது
தாரணியில் கோடிவரை யிருக்கலாகும்
போமேதான் காயாதிக் கொண்டவர்க்கு
பொங்கமுட னரைதிரையு மற்றுப்போகும்
நாமேதான் சித்தருட வைப்புதன்னை
நாதாந்த முனிகளுமே செய்மாட்டார்
வேமேதான் கோட்டைக்குள் அதிசயங்கள்
விதவிதமாய் இருப்பதுவுங் காணலாமே. 396

காணலாம் அயோத்திக்குக் கீழ்பாகத்தில்
கடிதான நதியொன் று கானா றுண்டு
பூணவே கானா று நடுமையத்தில்
பொங்கமுடன் ஆயக்கால் மண்டபந்தான்
வாணமுடன் அளர்பூமி தன்னைச்சுற்றி
வாகுடனே கதிர்போல சூழ்ந்திருக்கும்
நீணமுடன் நூறு யோசனையுந்தானும்
நிலையான உவர்ப்பூவு சவுக்காரமாமே. 397

காரமாஞ் சீனபதிக் கொப்பதாகும்
கருவான சித்தர்முனி ஸ்தலமென்பார்கள்
தூரமுடன் கோட்டையது காணார்தானும்
துப்புரவாய்க் கண்ணிற்குத் தோன்றாதாகும்
வீரமுடன் நவதாது பாஷாணங்கள்
விளைகின்ற சத்துள்ள பிரிதிபாகம்
தீரமுடன் சித்தர்முனி நாதர்தாமும்
சிறப்புடனே வீற்றிருக்கும் பூமிபாரே. 398

பாரேதான் நர்மதா கிழக்கேயப்பா
பாங்கான ராமகிரி தேசமுண்டு
ஊரேதான் ஒருநூற்றுக் காதமப்பா
உத்தமனே நர்மதா கிழக்குபாகம்
சீரேதான் நடுநாடு மத்திபத்தில்
சிறப்புடனே திட்டான மேடையுண்டு
நேரான மேடையில் நடுபாகத்தில்
நெருக்கமுள்ள குன்றொன்று யிருக்குந்தானே. 399

தானேதான் சமைந்திருக்கு மண்டபத்தில்
சதகோடி சூரியர்போல் சித்தருண்டு
வானவர்கள் முதலான தேவர்தாமும்
வந்திறங்கும் பொய்கையது சுனையொன்றுண்டு
தேனான சித்தர்முனி ரிடிகள்தாமும்
தேர்வேந்தர் ராஜாதி மண்டபத்தில்
மானான மதிலோரஞ் சுற்றோரத்தில்
மார்க்கமுடன் தவசுமிகச் செய்வார்காணே. 400

காணவென்றால் வெகுகோடி மகிமையுண்டு
காசினியில் கண்டவர்க ளாருமில்லை
பூணவே சிங்கமது வுரங்குங்காடு
புகழான சிறுபுலிகள் உலாவுங்காடு
ஈணவே பலமிருக்ம் யிருக்குங்காடு
எழிலான மாண்ப ரறியாதகாடு
தோணவே கண்ணுக்குத் தோற்றாகாடு
தொல்லுலகோ ரறியாத வனமுமாச்சே. 401

குத்துக்கல் அதிசயம்

ஆச்சப்பா அவ்வனத்தில் கல்லொன்றுண்டு
அப்பனே நூறு யோசனைதானப்பா
பேச்சப்பா சொல்லுதற்கு நாவுமில்லை
பேரான வகலமது யெண்பதாகும்
காச்சலென்ற பரிதியது காணலாகா
பாங்குடனே பனிமூடுங் குத்துக்கல்தான்
பாச்சலுடன் மேற்பாகஞ் செல்வதற்கு
பாங்கான படியுண்டு சொல்லொண்ணாதே. 402

உண்டான படியல்லோ லக்கோயில்லை
உத்தமனே படிதோறுஞ் சித்துதாமும்
அண்டமது முகத்தளவாய் வரைகள்தோறும்
அணியணியாய் சித்தர்முனி வீற்றிருப்பார்

கண்டாலே யின்னாட்டு மாண்பர்தன்மை
கல்லாகச் சமைத்திடுவார் சித்துதாமும்
தண்டவனம் யாரேனுஞ் செல்லமாட்டார்
தரணிதனில் சிவயோகி செல்வான்கேளே. 403

கேளேதான் சித்தர்முனி ரிடிகள்தாம்
கெவனமுடன் குளிகையது கொண்டுமல்லோ
நாளேதா னவ்வழியே போவாருண்டு
நலமுடனே யவ்வழியில் வருவதுண்டு
வீளேதான் நாதாக்கள் குடியிருப்பு
விண்ணுலக மிதற்கீடு சொல்லப்போமோ
ஆளோதான் அவ்வனத்தில் யாருஞ்செல்வ.ர்
அப்பனே மாய்கையென்ற சித்துதாமே. 404

சித்தான நவகோடி ரிஷிகள்தாமும்
சீரான மண்டபத்தில் வீற்றிருப்பார்
குத்தான மேற்கல்லி லதிசயங்கள்
கொப்பெனவே மிகவுண்டு சொல்லொண்ணாது
முத்தான ஜோதியென்ற விருட்சந்தானும்
முனையான சிகரமதி லிருக்கும்பாரு
சத்தான நகரமெல்லாஞ் சோதிகாட்டும்
சதாசிவத்தின் பெருமையது சொல்லொண்ணாதே. 405

சொல்லவே டில்லிக்குக் குடபாகத்தில்
சொற்பெரிய தேவதாஸ் தலமொன் றுண்டு
புல்லவே தடாகமென்ற பொய்கையுண்டு
புகழான மஞ்சள் தாமரையுமுண்டு
மல்லான மனவரஞ் சிதமுமுண்டு
மகத்தான தேவதா புட்பமுண்டு
கல்லான கடகமது பொய்கைதன்னில்
கண்டவர்க ளாயிருந்தான் யில்லைதானே. 406

சூத்திரத்தில் குண்டுக்கல் பாணம்

இல்லையே தேவதாஸ் தலத்திலப்பா
எழிலான புலஸ்தியனே சொல்வேன்பாரு
கல்லையே கணியாக்கி கவுண்டுசெய்து
கடிதான வாலயமாம் நடுமையத்தில்
வில்லைப்போல் நாணியது பூட்டியேதான்
வீரான சூத்திரமாந் தானமைத்து
எல்லைக்குக் காவலாய் மதியம்பூண்டு
எழிலாகத் தான்சமைந்து யிருக்கும்பாரே. 407

பாரப்பா சித்தருள்ள தேவஸ்தானம்
பளிங்கான குண்டுக்கல் பாணமுண்டு
மேரப்பா நடுமையந் தன்னிலப்பா
மேலான சித்தருடை கைமறைப்பு
ஆரப்பா யறிவார்க ளிந்தப்போக்கு
அப்பனே சத்துரு சங்காரப்போக்கு
சேரப்பா ராஜாதி ராஜர்தம்மை
செயிக்கின்ற குண்டுக்கல் பாணமாமே. 408

பாணமாங் கோட்டைக்குள் ளிருக்குங்குண்டு
பாங்கான தேவதாஸ் தலத்தின்குண்டு
மாணவே வையகத்து மாண்பர்தாமும்
மகத்தான தேவதாஸ் தலத்தின்நேர்மை
காணவே வந்தவரைக் கொல்லுங்குண்டு
கருவான சித்தரென்றா லழைக்குங்குண்டு
தோணவே சித்தாதி முனிவர்தாமும்
தோற்றமுடன் தானிருக்குங் கோயிலாமே. 409

கோயிலாம் தேவதாஸ் தலமுமாகும்
குறிப்பான கோட்டையது சொல்லொண்ணாது
வாயிலாம் ராஜாஜி ராஜர்மெச்சும்
வகுப்பான கோயிலுள்ளே சித்தர்கூட்டம்
பேயான ராட்சத பூதம்யாவும்
பேரான கோட்டைக்குக் காவலுண்டு
தாயான மனோன்மணியாள் வீற்றிருக்கும்
தகைமையுள்ள கோட்டையென்று செப்பலாமே. 410

நர்மதா தெற்கு

செப்பலாம் யின்னம்வெகு வதிசயங்கள்
தேற்றமுடன் சொல்லுகிறேன் புலஸ்தியாகேள்
ஒப்பமுடன் நர்மதா நதிக்குத்தெற்கே
ஓகோகோ நாதாக்க ளிருப்பிடந்தான்
எப்போதும் வீற்றிருக்கும் பதியொன்றுண்டு
எழிலான சிங்கள தேசமப்பா
அப்பெரிய பதிதனிலே விருட்சமப்பா
அழகான தேவதா விருட்சமாமே. 411

ஆமேதான் விருட்சமது கோடியுண்டு
அழகான தோப்புண்டு பொய்கையுண்டு
நாமேதான் சொன்னபடி பொய்கைதன்னில்
நடுவான மத்திபத்தில் மண்டபந்தான்

வேமேதான் யேமமென்ற மண்டபந்தான்
வெளியரங்க மானதொரு விசித்திரரூபம்
தாமேதான் தேவாதி மண்டபந்தான்
தகைமையுடன் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளே. 412

பண்பான நீராழி மண்டபத்தில்;
பாங்கான தேவதச்சா விசுவகர்மர்
நண்பான தங்கமென்ற பாளந்தன்னால்
நலமான விசுவரூப சுதந்தரங்கள்
கண்புடனே ரூபமென்ற ரேகையோடு
கைலங்கிரி பர்வதம்போல் தானமைத்து
தண்மையுடன் சித்தர்முனி யிருக்கவேதான்
தடாகமதிற் செய்துவைத்தார் விசுவர்தானே. 413

தானான தேவதா விசுவரப்பா
தரணியில் சித்தர்முனி யிருக்கவேதான்
கோனான குருபீட மண்டபந்தான்
கொற்றவனே கைலங்கிரி யென்னலாகும்
தேனான புலஸ்தியனே நண்பாகேளு
தெய்வபுர மிதற்கீடு சொல்லப்போமோ
பானான மனோன்மணியாள் வாசஞ்செய்யும்
பாங்கான தேவ மண்டபந்தானாமே. 414

மண்டபத்தை சுத்தியல்லோ மாமுனிவர்சித்தர்
மதிப்புடனே ஒவ்வொரு படிகள்தோறும்
அண்டமுடி ராட்சதாள் பூதம்யாவும்
அங்கணங்க ளொவ்வொன்றில் பாதுகாப்பார்
தண்டக ரிடிவனத்து சித்தர்தாமும்
தகமையுட னொவ்வொரு படியில்நிற்பார்
கண்டிடவே நடுமையந் தன்னிலப்பா
கைலாச ரிடியொருவ ரிருப்பார்தாமே. 415

சிங்களதேசத்தில் சித்தர்கள் கைலங்கிரீ தங்க மண்டபம்

இருப்பாரே கைலங்கிரி ரிடிதானப்பா
எழிலான நடுமையம் படியந்தன்னில்
பொருப்பான நவரத்தின கசிதமான
பொன்னான திருக்கூட மண்டபந்தான்
தருப்புகல வாராட்சி மணிதானப்பா
தாரணியில் நூறு யோசனைதான்கேட்கும்
துருப்புநிகர் சிங்களத்தா ராயிரம்பேர்
தோறாமல் யேவல்பணி முன்னிற்பாரே. 41·

நிற்பாரே சிங்கள தேசத்தார்கள்
நிலையான சித்தர்முனிக் கேவலாக
சொற்படியே கோட்டைதனைச் சுற்றியேதான்
சோரமது போகாமல் காவலுண்டு
விற்படித்த மன்னவர்கள் காணானாடு
வேதாந்த பீடமென்ற சித்தர்நாடு
அற்பமென்று நினையாதே புலஸ்தியாகேள்
அழகான சிங்களவர் நாடுதானே. 417

நாடான ரிடிமுனிவ ரிருக்கும்நாடு
நாதாந்தத் தங்கமென்ற மண்டபந்தான்
காடான யேகாந்த மண்டபத்தில்
கைலங்கிரி ரிடியான பெரியோரப்பா
தாடாண்மைக் கொண்டதொரு சித்துதாமும்
தாரணியில் நாலுயுகங் கொண்டசித்து
நீடான மயேஸ்வரத்தின் சித்துவப்பா
நீணிலத்தி ரிடியாக வுதித்தார்பாரே. 418

உதித்தாரே முன்யுகத்தில் பிரம்மர்சாபம்
ஓகோகோ தேவரிடி யானவர்க்கு
கதிப்புடனே சாபமது நேர்ந்ததாலே
கைலங்கிரி தன்னைவிட்டு வெளியில் வந்தார்
மதிப்புடனே வையகத்து சித்தரெல்லாம்
மாட்சியோடு தேவதா ரிடியைத்தானும்
துதியோடு தேவதா மண்டபத்தில்
துப்புறவாய்க் கொண்டுசென்று துதித்தார்பரே. 419

தேவரிடி நாலுயுக வதிசயங்களை சித்தர்களுக்குக் கூறல்

பாரப்பா சித்தர்முனி ரிடியார் தாமும்
பட்சமுடன் தேவதா ரிடியைப்பார்த்து
ஆரையா யென்சாமி யெந்தன்நாதா
அவனியிலே யிருந்தவசி யாயுதித்தீர்
பேரான பிரபஞ்ச மாய்கைதன்னை
பேரின்பக் கடல்தனிலே தான்மறந்த
தீரமுடன் சித்தொளிவு ரிடியார்தம்மை
தீர்க்கமுடன் கேட்கலுற்றார் முனிவர்தாமே. 420

முனியான யென்தேவா லோகநாதா
மூதுல கைகரைகண்ட சித்தேசாமி
தனியாக தங்க மண்டபத்திலேதான்
தகமையுடன் கொலுவிருக்கும் மெந்தன்நாதா

கனிவுடனே கைலங்கிரி சேதிதன்னை
களிப்புடனே யெங்களுக்குக் கூழர வேண்டும்
இனிதான பவமகற்றி யெங்களுக்கு
எழிலான வுபதேசஞ் சொல்லொண்ணாதோ. 421

ஒண்ணாது காயாதி கற்பங்கொண்டு
உத்தமனே வெகுகால மிருக்கவென்று
கண்ணபிரான் தன்பக்க லடியோம்சென்று
காலடிகள் நமஸ்கார மிகவுஞ்செய்து
நண்ணவே நாதாந்த சித்துருபம்
நாட்டிலே யொருவரால் சொல்லப்போமோ
வண்ணமுடன் நாதாந்த சித்துதாமும்
வளமையுடன் யெங்களுக்கு விடைசொல்வீரே. 422

விடையென்று கேட்கையிலே ரிடியார்தாமும்
வேதாந்த சித்தருக்கு வினயஞ்சொல்வார்
தடையில்லா நாலுயுக வதிசயத்தை
தாரணியில் சித்தருக்கும் சொல்வார்பாரு
கடையான பிரம்மாவு மெந்தன்மீதில்
கருணைதனை நீக்கியல்லோ சாபந்தந்து
சடைபோன்ற பிரம்மாவும் சண்டையிட்டு
தாரணியில் போகவென்று சபித்திட்டாரே. 423

இட்டாரே சாபமது தீர்வதற்கு
எழிலுடனே தாரணியில் வந்தேனென்றார்
சட்டமுடன் பிரம்மாவு மெந்தனுக்கு
சாங்கமுடன் வுபதேசம் சொன்னதாலே
திட்டமுடன் வுபதேசம் வேண்டேனென்று
தீர்க்கமுடன் தேவபுரம் அடுத்துயானும்
வட்டமுடன் தேவேந்திர பகவான்தன்னை
வாதித்து சிலகேள்வி கேட்டேன்யானே. 424

கேட்டேனே பிரம்மாவி னுபதேசங்கள்
கெடியான யென்செவியிற் கேளாதென்றோ
மாட்டானே யுந்தனிட வுபதேசங்கள்
மானிலத்தில் நீயுமொரு மனிதனல்லோ
பாட்டனார் வுந்தனிட பாட்டன்தானும்
பாரினிலே யென்மரபுக் குறியோரல்லோ
மாட்டிமையாய் நீயுமொரு மாண்பனல்லோ
மானிலத்தில் சென்மமென்று தள்ளிட்டேனே. 425

தள்ளிட்டேன் மாந்தரிட செனனமெல்லாந்
தாரணியில் யிப்படியே பொய்வாழ்வப்பா
உள்ளிட்ட சித்தர்முனி ரிடிகள்தாமும்
உகந்ததோர் தேவதா ரிடியைத்தானும்
சுள்ளிட்ட தேகமது மண்ணாய்ப்போகும்
சுந்தரனே வுலகமது பொய்வாழ்வாகும்
விள்ளவே யுலகமெல்லாம் பொய்யேயாகும்
வேதாந்த சித்தருட வாக்குதாமே. 426

தென்பொதிகைக்கு கிழக்குபாகம்

வாக்கான யின்னம்வெகு மார்க்கஞ்சொல்வேன்
மகத்தான தென்பொதிகை கிழக்கேயப்பா
நோக்கான வன்பது காதந்தானும்
நுணுக்கமுள்ள நகரமது வொன்றுகாணும்
தேக்கான நாடதுதான் சொல்லலாகும்
தேசத்தில் வினோதமுள்ள சித்துநாடு
தூக்கான சித்துமுனி ரிடிகள்தாமும்
துறையான கூட்டமது சேர்வார்பாரே. 427

பாரேதான் காடதனில் மண்டபந்தான்
பாங்கான தென்பொதிகைச் சார்பிலுண்டு
நேரேதான் மண்டபமாங் கோட்டைமண்ணாம்
நெடுங்காலஞ் சென்றதொரு யீசர்கோட்டை
ஊரேதான் பூனீறு விளையும்நாடு
உத்தமனே நாதாக்க ளிருக்குந்தேசம்
வேரேதான் தேசமது யிதற்கிடுண்டோ
வேதாந்த சித்தர்முனி யிருக்கும்நாடே 428

நாடான கோட்டையது யீசர்கோட்டை
நலமான தோப்பெல்லாந் தேக்கேயாகும்
கோடான கோடிசித்து சமாதியுண்டு
கொற்றவர்கள் குவலயத்தில் மாண்டமாண்பர்
நீடான காயகற்பங் கொண்டமாண்பர்
நிலையான சமாதியது கணக்கோயில்லை
தாடான தேகமது வழியாமற்றான்
தகமையுடன் பூமிதனி விருக்கும்பாரே. 429

வேதவியாசர் சமாதி

பாரேதான் கோட்டைக்குள் சுதண்டுதானும்
பாங்கான மாந்தர்களைச் சேரவொட்டா
நேரேதான் சுரங்கமது நீணிலத்தில்
நேர்மையுடன் பதிங்காத வழிதான்செல்லும்

சேரேதான் சுரங்கமது நடுமையத்தில்
சிறப்பான வேதமுனி வியாசர்தாமும்
கூரேதான் சமாதியது யிருக்கும்பாரு
குவலயத்தி லதிதமிது யென்னலாமே. 430

என்னலாம் புலஸ்தியனே யின்னங்கேளு
எழிலான வதிசயங்கள் கூறுவேன்பார்
பன்னவே வியாசமுனி சமாதிபக்கல்
பாங்கான சித்தர்முனி வாயிரம்பேர்
சொன்னபடி ரிடியாரைச் சுத்தியல்லோ
சுத்தமுடன் சமாதிதனைப் பாதுகாத்து
நன்னயமாய் வுலாகொடுத்து நிற்பார்தாமும்
நலமான ரிடிக்கூட்ட மெத்தவாமே. 431

மெத்தவே சித்துமுனி ரிடிகள்கூட்டம்
மேதினியி லங்குண்டு சொல்லொண்ணாது
சத்தமா ரிடிகளெல்லாந் தவசிருப்பார்
சதகோடி சூரியர்போல் தோற்றும்பாரு
நித்தமுடன் வேதமுனி வியாசர்தாமும்
நேரான காவியங்களோதுவார்பார்
சுத்தமுடன் ஞானோபதேசநூலை
சுருதிபொருள் கருவியுடன் சொல்லுவாரே. 432

வேதவியாசர் நூல் மகத்துவம்

சொல்லவே வேதமுனி வியாசர்தாமும்
தொல்லுலகில் பாசமற்று வினையகற்றி
எல்லோருந் தீவினையை யகற்றியல்லோ
ஏகாந்தக் காவியத்தைக் கேட்டுமேதான்
நல்லவழி நற்பொருளை வுணர்ந்தாராய்ந்து
நலமான மெய்ப்பொருளைக் காணவென்று
புல்லவே யெண்ணாயிரங் காவியந்தான்
புகழாகப் பாடிவைத்தா ருண்மையாமே. 433

உண்மையாம் ஞான காவியமதாக
உத்தமனே யெண்ணாயிரங் காவியந்தான்
வண்மையாய் வுலகத்தின் நீதியெல்லாம்
வளப்பமுடன் கண்டல்லோ மிகவாராய்ந்து
திண்மையாம் யிருளதனைக் கதிரோன்தானும்
தீர்க்கமுடன் நீக்குகின்ற தன்மைபோல
கண்மையுடன் யிருளகத்தி வேதநூலைக்
காசினியில் தாமுரைத்தார் பெருமைபாரே. 434

தென்பொதிகைக்கு மேற்கே

மாண்பான புலஸ்தியனே யின்னங்கேளு
மகத்தான தேசமது யனேகமுண்டு
காண்பான பொதிகைமலைக் கடலோரந்தான்
கண்காணாத் தேசமதுக் குறும்பனாடு
ஆண்பானக் காடதுதான் குங்குமந்தான்
அடர்பாக தழைந்திருக்குந் தரணிமீதில்
தாண்பான தோப்புக்கு நடுமையத்தில்
தடாகமொன்று சமைந்திருக்குந் தன்மைபாரே. 444

பாரப்பா தடாகமது நடுமையத்தில்
பாங்கான நீராழி மண்டபந்தான்
நேரப்பா சந்தனமாந் தோப்புமுண்டு
நேர்மையுடன் செங்குவளை கருங்குவளைதானும்
ஆரப்பா வப்பொய்கை பூத்திருக்கும்
அடவான மண்டபந்தான் தெய்வப்பொய்கை
சீரப்பா தாருகா ரிடியார்தானும்
சிறப்பாக வீற்றிருக்கும் பொய்கையாமே. 445

ஆமேதான் தாருவன ரிடியார்தாமும்
அப்பனே வீற்றிருந்த மண்டபந்தான்
போமேதான் பொதிகைமலைச் சார்புதன்னை
பொங்கமுடன் சித்தர்முனி ரிடியார்தாமும்
தாமேதான் பொய்கைக்குப் போவதுண்டு
தாருகாவன ரிடியைக் காண்பதுண்டு
நேமமுடன் அஷ்டாங்கப் பூசையுண்டு
நேர்மையுடன் ரிடிமுனிவர் சித்தர்க்காமே. 446

சித்தான சித்தர்களும் பொய்கைதன்னை
சிறப்புடனே வருவதுவும் போவதுண்டு
முத்தான மண்டபத்தில் ரிடியார்தாமும்
முனையான கோபுரத்தி னுச்சிதன்னை
சத்தமுடன் தேவதா கோஷ்டத்தோடு
சதுரான ஆரிய சித்தரோடு
சுத்தனையே சதாகாலம் நினைத்துகொண்டு
கண்மூடி மேலிருந்து தவஞ்செய்வாரே. 447

தவமுடனே ரிடியாரு மிருந்துகொண்டு
தன்மையுள்ள சித்தருக்கு வாசீர்மிப்பார்
பவமற்றி ரிடியார்க்கு சாபம்நீக்கி
பாரினிலே யெப்போதும் வரமுந்தந்து

நவகோண மண்டபத்தி லிருக்கவென்று
நாதாந்த ரிடியாரும் மனதுவந்து
புவனமதில் ஞானோப தேசந்தன்னை
புகழுடனே எப்போதும் புகலுவாரே. 448

புகலுவார் புலஸ்தியரே யின்னஞ்சொல்வேன்
புகழான தாருகா ரிடியின்பொய்கை
அகலமது சொல்வதெவ ராலாகும்
அப்பனே அவனிதனில் மிகுந்தபொய்கை
நிலகவே மாமுனிவர் சித்தர்தாமும்
நீட்சியுட னென்னாலும் பாதுகாத்தார்
சகலமுனி ரிடியாரு மிருக்கும் ஸ்தானம்
சட்டமுடன் தேவதா நாடுமாமே. 449

நாடான தாருகா வனத்தினாடு
நலமான சித்தர்க ளிருக்கும்நாடு
காடான முனிவரிடி யிருக்கும்நாடு
கதிப்பான செந்நாய்கள் தூங்கும்நாடு
பாடான சுனைமுதலு முள்ளநாடு
பாங்கான காட்டானை யுறங்கும்நாடு
தாடாண்மை யுள்ளதொரு மிகுந்தநாடு
தகைமையுடன் வாழ்முனிவர் வழங்கும்நாடே 450

வழங்கவே தாருகா வனத்துசித்து
வளமையுடன் தவயோகஞ் செய்யும்போது
தழங்கவே யாகமங்கள் விதிப்படிக்கு
தகைமையுடன் யாகங்கள் செய்யும்போது
கழங்கவே தாருவன ரிடியார்தாமும்
தண்மையுடன் சித்தர்களுக் கருமைசொல்லி
பழங்கமுடன் உபதேசம் பெற்றுமல்லோ
பாரினிலே வெகுகால மிருந்தார்தாமே. 451

பொதிகைக்குச் சித்தர்கள் வந்தது

இருந்தாரே தாருகா வ. னத்துசித்து
எழிலான பொதிகைக்கு வந்துமல்லோ
பொருந்தமுடன் எந்தனுக்கு விடைகள்சொன்னார்
பொங்கமுடன் பதினெண்பேர் சித்தர்தாமும்
திருந்தவே சுரங்கமது யிருக்கக்கண்டோம்
திறமான சுரங்கத்தின் அதிசயங்கள்
குருத்தமுடன் செந்தூரக் காடுஅப்பா
கூரான சித்தர்முனி நெடுங்காலமாச்சு. 452

ஆச்சப்பா செந்தூரக் காடுதானும்
அப்பனே யாம்கண்டு வந்தோமென்றார்
பாச்சலுடன் நெடுங்கால வைப்புதானும்
பாருலகில் தாருகா வனத்தில்வைப்பு
மாச்சலுடன் அவர்குருவாம் வைத்தவைப்பு
வளமான செந்தூரக் குடோரிதானும்
நாச்சலுடன் சித்தர்முனி சொன்னபோது
நலமான அகஸ்தியரு முறைசொன்னாரே. 453

முறையான செந்தூர வைப்புதானும்
முன்னான யுகமப்பா கிரேதாயிதன்னில்
திறையான தாருகா ரிடியார்தாமும்
திறமான குருபாதம் வைத்தப்போக்கு
குறையான செந்தூரங் குன்றியுண்டால்
கோடான கோடிவரை யிருக்கலாகும்
நிறையான செந்தூர முண்டபேர்க்கு
நீணிலத்தில் வயததுவுஞ் சொல்லொண்ணாதே. 454

தென் பொதிகைக்கு கீழ்பாரிசம்

ஒண்ணாது யின்னமொரு மார்க்கங்கேளு
உத்தமனே புலஸ்தியரே சொல்வேன்பாரு
நண்ணான தென்பொதிகைக் கீழ்பாகத்தில்
நலமான சம்புவென்ற தீவுதானும்
எண்ணவே நதியொன் று அங்கேயுண்டு
எழிலான நடுமேடை மண்டபந்தான்
திண்ணமுடன் மயிலி ராவணன்தன்பீடம்
திறமான வாசன மண்டபந்தானாமே. 455

மயிலிராவணன் சதுர்முகமண்டபம்

ஆமேதான் சதுர்முகமாம் மண்டபத்தில்
அப்பனே பராசரிடி யிருக்கும்ஸ்தானம்
தாமேதான் தவசிருக்கு மண்டபந்தான்
சதகோடி சூரியர்போல் பிரகாசிக்கும்
நாமேதான் சொன்னபடி சித்தர்கூட்டம்
நலமான நாதாக்க ளிருக்குந்தானம்
போமேதான் புல்லாணி தீர்த்தமுண்டு
புகழான நடுவட்டம் பாறையாமே. 456

பாறையின் மேல்நவகோடி ரிடிகளப்பா
பான்மையுடன் தவசுமுறை செய்துநிற்பார்
தாறையாம் மண்டோதரி கௌசபீடம்
தகைமையுள்ள கற்பாறை கீழ்பாகத்தில்

வேறையாம் இடமாக மத்திபத்தில்
வீரான சத்தகன்னி யிருக்கும்ஸ்தானம்
நேறையுடன் சத்தமா ரிடிகள்தாமும்
நேர்மையாய்ப் பாறைசுத்தி யிருப்பார்தாமே. 457

இருப்பான பூமிவளர் சித்தனாடு
எழிலான காயாதி கற்பமுண்டு
பொருப்பான பாறையங்கள் மகிமைமெத்த
புகழான ராமருட கிடாரவைப்பு
நெருப்பான நவரத்தின கசிதந்தன்னால்
நேரான வாபரண மெத்தவுண்டு
தெருப்பான நவரத்தின பூஷணங்கள்
தேற்றமுட னாதிசேடன் சொல்லொண்ணாதே. 458

சொல்லவென்றால் நாவில்லைப் பாவுமில்ல
செகஜோதிக் கோடிசூரியப் பிரகாசந்தான்
வெல்லவே தங்கமென்ற பணிதிதானும்
வெகுகோடி திரவியங்கள் மெத்தவுண்டு
புல்லவே பூதமது காவலுண்டு
புகழான சத்தகன்னி பாறைதன்னில்
அல்லவென்று மாண்பர்களுஞ் செல்வாரானால்
அப்பனே ரங்கனவே மடிவார்தானே. 459

மடிவாரே பூதங்க ளறைத்துக்கொல்லும்
மகத்தான சத்தகன்னி சுரங்கந்தன்னில்
இடிபோலே பூதங்க ளார்ப்பறித்து
எழிலாக யாரையுந்தா னண்டொண்ணாது
படிகம்போல் லிங்கமது தலைவாசல் தன்னில்
பாறையில் வளர்ந்திருக்கக் காணலாகும்
அடிதனிலே குகைவாசல் தாள்கொண்டிருக்கும்
அப்பனே பூட்டையது திறக்கலாமே. 460

திறக்கவே புலஸ்தியனே சொல்வேன்பாரு
தீர்க்கமுடன் சித்தர்முனி தன்னாலாகும்
இறக்கவே மற்றவரா லாகுமோசொல்
எழிலான லிங்கமது வர்சல்காண
சிறக்கவே விட்டகுறை நேருமானால்
சீரான வாசலது திறக்கும்பாரு
முறக்கமுடன் கருவாளி காண்பான்பாரு
முனையான லிங்கமது வாசல்தானே. 461

தானான வாசலது திறக்கவேதான்
தகைமையுள்ள சித்துமுனி ரிடிகள்தாமும்
கோனான குருவினுட கடாட்சத்தாலே
கொப்பெனவே வாசல்வழி தன்னைக்காண்பார்
மானான தாளதுதான் திறக்கும்பாரு
மகத்தான நதிகளெல்லாங் காணலாகும்
பானான லட்மியு மங்கிருப்பாள்
பாங்கான தீபவொளி காணலாமே. 462

காணலா மன்னமென்ற வூஞ்சல்தன்னில்
கண்காணா கோடிவரை திரவியங்கள்
தோணவே கண்ணுக்குத் தோற்றாதப்பா
தொல்லுலகி லாரேனுங் கண்டதுண்டோ
வேணபடி ரிடிமுனிவர் சித்தர்கூட்டம்
வேகமுடன் திரவியத்தை யெடுக்கலாகும்
மாணவே திரவியங்கள் தானெடுத்து
மடாலயங்கள் சத்திரமுங் கட்டலாமே. 463

கட்டலாம் நவகோடி திரவியத்தால்
காசினியில் மண்டபங்கள் சத்திரங்கள்
வெட்டலாங் குளமடுக்கள் கேணிதானும்
வெகுசான யாக மண்டபங்கள்தானும்
நட்டமில்லா தேவஸ் தானகூடம்
நலமான குருக்கள் மண்டபங்கள்தானும்
திட்டமுள்ள தரும சாலைகளமைத்து
தீர்க்கமுடன் தானமது செய்குவீரே. 464

செய்யவென்றால் முப்பத்தி ரெண்டுதானும்
சிறப்புடனே செய்வதற்கு ஐயமில்லை
உய்யவே நவகோடி திரவியங்கள்
உலகுதனில் தானமது செய்யலாகும்
பையவே பூசைமுகம் நடத்தலாகும்
பாங்கான தேவதா வர்ச்சனையுமாகும்
துய்யவே பெண்ணார்கள் வேசிக்கல்லோ
துறையான செம்பொன்னை யெடுக்கொண்ணாதே. 465

எடுக்கவே அப்பொருளை மனமகற்றி
எழிலான சன்மார்க்க வலையினின்று
தொடுக்கவே தீவினைக்கு ஆளாகாமல்
தொல்லுலகில் பவக்கடலை நீக்கியேதான்

தடுக்கவே மாய்கைதனில் மனஞ்செல்லாமல்
தாரணியில் சதுர்கால மிருந்துகொண்டு
நடுக்கமுடன் செம்பொன்னைச் சிலவுசெய்து
நாதாக்கள் பெயர்போகா விருக்குநன்றே. 466

நன்றான நெடுங்கால வைப்புதன்னை
நலமான சித்தர்முனி ரிடிகள்தாமும்
குன்றான மலைபோலே குவிந்திருக்க
கொற்றவர்கள் சித்தர்முனி சொன்னதுண்டு
தன்றான தாமரையாள் வாசமுண்டு
தாரணியி லன்னகரம் போலேயுண்டோ
தென்றிசையில் பொதிகைதனிற் சார்பிலப்பா
தேர்வேந்த சித்தரெல்லா மிருப்பார்தாமே. 467

தென்பொதிகை வடபாகம்

தாமான யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
தகைமையுள்ள புலஸ்தியனே நன்றாய்க்கேளும்
நாமான தென்பொதிகை வடபாகத்தில்
நலமான கடலருகில் சித்தருண்டு
நேமமுடன் சித்தாதி வர்க்கமெல்லாம்
நெருங்கியே வாற்றோரம் வருவாருண்டு
வாமமுடன் கரையோரம் மண்டபந்தான்
வாகான சித்ரகூட ளினமாமே. 468

நளினமாம் ஆயக்கால் மண்டபத்தில்
நலமான திருமூல ரிடியார்தாமும்
தளிரான ரோமமது முன்னூர்பாகம்
சடையுடனே தம்பிரான் போலிருப்பார்
வளியான மண்டபத்தி னடுமையத்தில்
வண்மையுள்ள திருமூல ரிடியார்கூட்டம்
பளியான ரிடியாரும் படிகம்போலே
பாங்குடனே வீற்றிருக்கக் காணலாமே. 469

திருமூலரிடி யாசீர்மம்

காணலாம் திருமூல ரிடியார்தம்மை
கைலங்கிரி வாசனைப்போல் வீற்றிருப்பார்
பூணவே சடைமுடியுந் தம்பிரான்போல்
புகழான மண்டபத்தி லிருப்பார்கண்டார்
வேணபடி ரிடியார்கள் கூட்டத்தோடு
வேதாந்த சித்தாளிவைக் காணலாகும்
தூணதுதா னாயிரமாங் கம்பமுண்டு
சுடியான வயிரக்கல் கம்பந்தானே. 470

தானான வொவ்வொரு கம்பந்தன்னை
தகைமையுள்ள சித்துமுனி சொருபரப்பா
பானான வயிரக்கல் தூணின்சார்பில்
பாங்குடனே தவனிலையி லிருப்பார்கண்டீர்
கோனான திருமூல ரிடிதானங்கே
கூறான சித்தொளிவு சொருபருக்கு
தேனான மனோன்மணியா ளுபதேசத்தை
தெளிவுபெற செப்புவார் மூலர்தாமே. 471

திருமூலரிடி சீஷருக்கு காலனுபதேசங்கூறல்

மூலராந் திருமூல ரிடியார்தாமும்
முனையான சீஷவர்க்க மானபேர்க்கு
காலனது வுபதேசஞ் சொல்லுவார்பார்
கருத்தாக வவர்வலையிற் சிக்காமற்றான்
பாலன்னம் நீரையது பகுந்துவுண்ணும்
பாங்கான கதைபோல சீஷவர்க்கம்
சீலமுட னுபதேசம் பெறவேவேண்டும்
சிறப்பான சீடவர்க்க மதிதந்தானே. 472

அதிதமாம் ஞானோப தேசம்பெற்று
வவனிதனி லிருப்பவரே சித்தராகும்
துதிதமுள்ள வேதாந்த சித்துதாமும்
துணையான மூலவர்க்க ரனேகருண்டு
கதிதமாம் மண்டபத்தை சுற்றியல்லோ
காட்சியுடன் வீற்றிருப்பார் சித்தர்வர்க்கம்
பதிதமாந் திருமூல வர்க்கத்தார்கள்
பாரினிலே யிருப்பார்கள் கோடியாமே. 473

திருமூலரிடியின் நூல்தொகுப்பு

கோடியாம் புலஸ்தியனே யின்னங்கேளு
கூறுவேன் திருமூல வர்க்க நூல்கள்
நாடியாங் கிரந்தமது யெண்ணாயிரந்தான்
நலமான சிற்ப நூ லாயிரந்தான்
ஆடியே ஜோசியமு முன்னூறாகும்
அப்பனே மாந்திரீக மறு நூறாகும்
தேடியே சல்லியங்க ளாயிரந்தான்
தெளிவான காவியமுங் கருக்கிடையுமாமே. 474

கருக்கிடையா மறு நூறு சொன்னார்பாரு
கருவான திருமூல ராயிரந்தான்
சுருக்கமது யிருநூறு நான்குகோவை
சூட்சமாம் ஞானமது நூறுமாகும்

பெருக்கமுள்ள காவிய மாயிரத்தைந் நூறு
பேரான தீட்சைவிதி நூறுமாகும்
வருக்கமுடன் கோர்வைபதி னாறுமாகும்
வாகான கோர்வையது வெவ்வேறாமே. 475

வேறான தீட்சைவிதி யெட்டுமாகும்
வெவ்வேறாய் தீட்சைவிதி பதினெட்டுமாகும்
கூறான சன்மார்க்க யோகஞானம்
குறிப்பான சோடசமும் பதினாறாகும்
ஆறான வீரிநூலா மிருபத்திநான்கு
அடவான சாத்திரத்தின் தொகுப்பேழாகும்
தீறான வாராதார மறுபத்துநான்கு
திறமான பச்சை நூ விருபத்தினான்கே. 476

நான்கான திருமூலர் மூவாயிரந்தான்
நலமான திருமந்திரம் பெருநூலாகும்
பான்மையாம் வேத நூ லறுபத்தினாலு
பாங்கான வாகமங்கள் நூற்றியெட்டு
மான்மையுள்ள யிதிகாசப் புராணமப்பா
மகத்தான சிரேடையது வாயிரந்தான்
மேன்மையாம் பதினண்பேர் தர்க்க நூலாகும்
மேதினியில் திருமூலர் நூலுமாமே. 477

நூலான திருமூல ரிடியார்தாமும்
நுணுக்கமுடன் பாடிவைத்தார் மேதினிக்குள்
காலான முறைகோடி தொந்தங்கோடி
கண்கொள்ளா வேதைமுகஞ் சொல்லொண்ணாது
பாலான மொழிபோலு முமையாள்வாக்குப்
பாரினிலே சொல்லவென்றால் நாவோயில்லை
மேலான சாத்திரங்க ளனேகங்கோடி
மேன்மையுடன் பாடிவைத்தார் ரிடியார்காணே. 478

காணவே சித்தாதி நூல்களெல்லாங்
காசினியில் காண்பதற்கு யிடமோயில்லை
தோணவே வேத நூல் தொகுப்பையெல்லாந்
தொல்லுலகில் யாரேனுங் காணாமற்றான்
வேணபடி குகைதனிலே வைத்தார்தாமும்
வேதாந்தத் திருமூல ரிடியார்தாமும்
நீணவே சமாதியென்னு மண்டபத்தில்
நேர்மையுடன் பதனமதாய் வைத்தார்தாமே. 479

வைத்ததுமே சிலகாலஞ் சென்றபின்பு
வண்மையுள்ள திருமூல ரிடியார்தாமும்
கைத்தவங்கள் குறையாமல் சீடவர்க்கம்
கருத்துடனே வுபதேசஞ் செய்துமல்லோ
பொய்த்தவத்துக் காளாகிப் போகாமற்றான்
பொன்னரங்கத் தானையவர் மனதுவந்து
மெய்த்தவங்கள் குறையாமல் வையகத்தில்
மேதினயி லுபதேசஞ் செய்திட்டாரே. 480

திருமூலரிடியார்கள் வேதநூலை சித்தர்கள் அகஸ்தியர்க்குச் சொல்லல்

இட்டாரே சித்தர்முனி ரிடிகள்தாமும்
யெந்தனுக்குத் திருமூல ரிடியார்தன்தன்
சட்டமுடன் மகதேவர் செய்தநூலை
சார்பான தொடர் நூலாம் ஞானமார்க்கம்
திட்டமுடன் குகைதனிலே யிருக்குஞ்சேதி
தீர்க்கமுட னெந்தனுக்குச் சொன்னார்பாரு
அட்டதிசை சித்தரெல்லா மென்னைநாடி
அன்புடனே தாமுறைத்தார் வண்மைபாரே. 481

பாரேதான் புலஸ்தியனே செப்பக்கேளு
பாங்கான சாத்திரத்தின் தொகுப்பையெல்லாம்
நேரேதா னெந்தனிடங் கொண்டுவந்து
நேர்மையுடன் முகதாவில் காண்பித்தார்கள்
சீரேதான் திருமூலர் நூலனைத்தும்
சிறப்புடனே யான்கண்டு மனதுகூர்ந்து
வேரேதான் பெருநூலாங் காவியந்தான்
விருப்பமுடன் பாடிவைத்தேன் மாண்பர்க்காமே. 482

மாண்பான பனிரெண்டு காவியந்தான்
மார்க்கமுடன் பாடிவைத்தேன் புலஸ்தியாகேள்
வீண்பான சாத்திரங்க ளிதற்கீடல்ல
விண்ணுலகு தேவரெல்லாந் துதிப்பார்கண்டீர்
ஆண்மையுள்ள சித்தர்முனி ரிடிகள்தாமும்
அவனிதனி லெந்நூலைக் கண்டபோதே
சாண்பாம்பை பெருந்தடி கொண் டடித்தாப்போலே
சாற்றினேன் காவியமாம் பெருநூலாமே. 483

பொதிகைக்கு தென்மேற்கே

நூலான மார்க்கமது யின்னஞ்சொல்வேன்
நுணுக்கமுள்ள பொதிகைக்குத் தென்மேற்கப்பா
காலான வைரவனார் ஸ்தலமொன்றுண்டு
கருவான வோடையது குகைதானுண்டு
பாலான குகையருகே மலைதானுண்டு
பாங்கான மண்டபந்தான் விருட்சமுண்டு
மாலான வைரவனார் தலத்தின்நேரே
மகத்தான நளராசன் பதிதானுண்டே 484

உண்டான தேவதா பதிதானுண்டு
வுத்தமனே பதிநேரே கோட்டையுண்டு
கண்டதொரு திருவாசல் நான்குபக்கம்
கடிதான வாயக்கால் மண்டபந்தான்
திண்டான மண்டபத்தில் நளராசயோகி
தீர்க்கமுள்ள குருராஜன் என்னலாகும்
அண்டர்முனி ராட்சதர்கள் முனிகள்கூட்டம்
அப்பனே சூழ்ந்திருக்கக் காணலாமே. 485

காணலாம் வெகுகோடி முனிகளப்பா
காசினியி லிருந்தார்கள் வதீதம்பாரு
தோணவே கோட்டைவழி கண்டதில்லை
துரைராச சுந்தரனே கேள்வியுண்டு
நாணவே நளராஜ பதியார்தாமும்
நளினமுடன் வீற்றிருக்கும் வாசீர்மந்தான்
பாணமுடன் கண்டார்கள் சித்துதாமும்
காலான கோட்டைவழி கண்டிட்டாரே. 486

இட்டாரே நளராச பதியைக்கண்டோம்
எழிலான கோட்டைவழி தன்னைக்கண்டோம்
சட்டமுடன் சித்தர்முனி ரிடிகள்கூட்டம்
சதாகாலம் பூசையது மீகவாய்ச்செய்து
திட்டமுடன் நளராச குருபதிக்கு
தீர்க்கமுடன் நேமநிஷ்டை செய்துகொண்டு
வட்டமுள்ள கிணற்றருகே செல்லும்போது
வண்மையுள்ள பூதமகா ரிடிகண்டாரே. 487

பூதமகாரிடி கண்டது

கண்டாரே யின்னமொரு மார்க்கம்பாரு
காசினியில் வதீதமென்ற மகிமையப்பா
விண்டவர்க ளுலகில்லை யெவரானாலும்
விருப்பமுடன் பார்த்ததில்லை வையகத்தில்

சண்டமா ருதம்போல ரிடியார்தாமும்
சலதாரை கேணிக்குள் வீற்றிருப்பார்
திண்டான சடைமுடியுந் தம்பிரான்போல்
திறளுடனே கண்டதுவாய் செப்பினாரே. 488

செப்பினார் புலத்தியனே சித்துதாமும்
செம்மையுடன் பூதமென்ற ரிடியார்தாமும்
ஒப்பமுடன் துவாபர யுகத்திலப்பா
உத்தமனார் கேணிதனி லிறங்கினாராம்
இப்புவியில் அதிசயங்கள் மெத்தக்கூறி
எழிலான மகிமதனி லுபதேசித்து
துப்புறவாய் யோகத்தி லிருந்துகொண்டு
துறைராச சுந்தரரு மிருந்தார்தாமே. 489

தாமான ரிடியாருஞ் சதுர்பாகத்தில்
சட்டமுடன் நாலுயுக வதிசயங்கள்
கோமான்க ளிருந்ததொரு பூர்வவற்கம்
கொற்றவனார் குருபதியுங் கண்டசித்து
நாமான பேர்களுமே காணாசித்து
நளினமுடன் லோகாதி அதிசயங்கள்
காமான மாகவல்லோ கண்டசித்து
கடவுளுக் கொப்பான ரிடியார்பாரே. 490

பாரேதான் வாசியோயகஞ் செய்து கொண்டு
பாங்கான சத்தலோகங் கண்டசித்து
நேரேதான் பாதாளங் கண்டசித்து
நெடிதான யோகரிடி யென்பார்தாமும்
சீரேதான் யுகமுடிவு கடந்தசித்து
சிற்பரனார் காலாங்கி யறிந்தசித்து
வீரேதா னவர்பெருமை மெத்தவுண்டு
மேதினியில் கண்டவரு மில்லைதானே. 491

தானான யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
தகைமையுள்ள புலத்தியனே கேளுகேளு
கோனான காலாங்கி யறிந்தசித்து
குவலயத்தின் முடிவுதனைக் கடந்தசித்து
வேனான சித்துவின்றன் மகிமைதானும்
விண்ணுலகில் கண்டவர்க ளாருமில்லை
தேனான யீஸ்வரியா ளறிந்தசித்து
தேர்வேந்த பூதரிடி யிருந்தார்பாரே. 492

பாரேதான் பொதிகைமலை சித்துதாமும்
பாங்கான கோட்டைதனைச் சுற்றியல்லோ
கூரேதான் காவலது மிகவுமாகி
குவலயத்தில் காத்திருப்பார் கோடிகாலம்
நேரேதான் சமாதிதனில் சிலதுகாலம்
நேர்ப்புடனே இருந்ததொரு சித்துதம்மை
தேரேதான் நூல்கேட்கப் போனபோது
தேர்வேந்த பூதரிடி சொன்னார்பாரே. 493

சொன்னாரே பூதரிடி மொழிந்தவாக்கு
சுத்தமுடன் சித்தர்முனி யாவருக்கும்
வின்னமிலாப் பரிசனங்கள் மிகவுஞ்சொல்லி
வேதாந்த நுட்பமெல்லா முபதேசித்து
நன்னயமாய் நூலதனை யிருக்குந்தானம்
நளினமுடன் காண்பித்து பதியுங்கூறி
இன்னபடி நடப்பதற்கு விதியுஞ்சொல்லி
எழிலாகத் தாமுரைத்தார் ரிடியார்தானே. 494

கானேதான் சுரங்கமது யிருக்குந்தானம்
தகைமையுள்ள இடமதுவும் வினையஞ்சொல்லி
மானேதான் நூலுக்கு விதிகள்கூறி
மார்க்கமுடன் யுகாந்தவரை அதிசயங்கள்
தேனமிர்தங் கொண்டதொரு சித்துகட்கு
தெளிவாகத் தானுரைத்தா நிதிகாசங்கள்
ஊனமிலா காயாதி கற்பஞ்சொல்லி
உத்தமர்க்கு விடைதந்தார் ரிடியார்தாமே. 495

தந்தாரே ஆசீர்மஞ் சொல்லியல்லோ
சாங்கமுடன் தபோதனரும் விடையுந்தந்து
அந்தமுடன் குறுபரரு மிதவுகூறி
அவனிதனில் வெகுநாளா யிருப்பதற்கு
சொந்தமுடன் காயாதி கற்பந்தந்து
சொருபமுடன் தான்மறைத்தார் ரிடியாருந்தான்
வந்ததொரு சித்தரெல்லாம் மகிழ்ச்சிகொண்டு
வையகத்தில் நூல்தேடப் போனார்தாமே. 496

போனாரே சித்துமுனி ரிடியார்தாமும்
பொங்கமுடன் குகைதேடி வனங்கள்தேடி
கானாறு பூமிவளந் தான்கடந்து
கடிதான வாயக்கால் மண்டபத்தில்

தேனான சித்துமுனி குடியிருப்பு
தெள்ளமுர்த மானதொரு தடாகமுண்டு
வானுலகு தேவர்களும் வணங்கும்பொய்கை
வளமான பூதரிடி ஸ்தலங்கண்டாரே. 497

கண்டாரே பூமிவள நாடுதன்னை
கடிதான நூலிருக்கும் இடமுங்கண்டார்
தொண்டர்களெலாங்கூடி சித்தவைத்த
தொல்லுலகில் மறைப்பான் சாத்திரங்கள்
பண்டான மனோன்மணியாட் குபதேசித்த
பாங்கான மரபுநூல் சாத்திரங்கள்
செண்டான செந்தூரக் கிடாரவைப்பு
சேனைதிறள் முனிக்கூட்டங் கண்டோம்தாமே. 498

தாமான நூலிருக்கு மிடமுங்கண்டார்
தாக்கான நூலதனைக் கேட்டார்தாமே
பூமான்கள் சித்துமுனி சொரூபர்தாமும்
புகழான நூலதனைக் கேட்கும்போது
ஆமான மென்றதொரு கருவி நூலும்
அரும்பொருளாங் கோர்வைமுத லனைத்துந்தந்து
நாமான மாகவல்லோ யிதவுகூறி
நவின்றிட்டார் புத்திமதி யனேகந்தானே. 499

தானான சாத்திரத்தைக் கைகொடுத்து
தண்மையுடன் போவெனவே விடையுந்தந்து
கோனான குருபரனா ரன்புகூர்ந்து
கொடுத்தாரே வெகுநூல்க ளனந்தங்கோடி
தேனான சாத்திரங்கள் தேவிசொல்ல
தெளிவான உபதேசம் மிகத்தந்தாரே
பானான பராபரியாள் மனதுவந்து
பாடிவைத்த சாத்திரமுங் கொடுத்தார்தாமே. 500

கொடுத்துமே நூலுக்குப் பதனஞ்சொல்லி
குவலயத்தில் கருமிகட்குக் காட்டவேண்டாம்
அடுத்துமே குருபரனான சித்துதம்மை
அன்பான வேதரிடிமுனிகள் பக்கம்
தொடுத்ததொரு சாத்திரங்க ளிதிகாசங்கள்
தோற்றமுடன் கண்டறிந்து வுளவாராய்ந்து
தடுத்துமே விடைதனக்கு பதில்கூறாமல்
தண்மையுடன் இருந்துமல்லோ வாழ்குவீரே.

தாமிரபரணி

வாழவென்றா லின்னமொரு மார்க்கங்கேளு
வாகான புலஸ்தியனே சொல்வேன்பாரு
வேழமையாய் சோழனுட பாண்டிநாடு
மேலான தாம்பரபரணி நதியொன் றுண்டு
சூழவே தாம்பரபரணி கடையோரத்தில்
சுத்தமுள்ள கேணியது யிருக்கும்பாரு
மாழவே கேணியது சலந்தானப்பா
மகத்தான ரெத்தவர்ண தளமுமாகும்
தாழவே தண்ணீருந் தடிப்புமாகும்
தாரணியில் மகிமையது சொல்வேன்பாரே. 502

பாரப்பா தாம்பரபரணி மகிமைமெத்த
பாருலகில் கருவாளி காண்பான்பாரு
நேரப்பா கேணியிட பக்கல்தன்னை
நெடிதான வாயக்கால் மண்டபந்தான்
தூரேதான் பூமிக்கு ளடக்கமப்பா
தொல்லுலகில் தாமறியார் சித்துதாமும்
சீரப்பா நாற்பக்கம் பாறைதன்னால்
சிறப்பான மண்மூடி யிருக்குந்தானே. 503

தானேதான் மண்ணதனைத் தோண்டினாக்கால்
தலைவாசல் நந்தீசர் காவலுண்டு
சோனேதான் பூமிவள மெத்தவுண்டு
சுத்தமுடன் தலைவாசல் நின் றுகொண்டு
வானேதான் வயிரவனைப் பூசித்தாக்கால்
வாசலது பாறையல்லோ திறக்கும்பாரு
கோனேபோல் ரிடியொருவ ரங்கொன் றுண்டு
குவலயத்தில் நான்குயுகங் கண்டசித்தே. 504

வருணமகாரிடி

சித்தான வருணமகா ரிடியார்தாமும்
சிறப்புடனே வாயக்கால் மண்டபத்தில்
முத்தான மழைகளுக்கு வரங்கொடுக்கும்
மூதுலகில் கீர்த்திபெற்ற ரிடியாரப்பா
சத்தமகா ரிடிகளிலே பெரியோரப்பா
தாரணியி லவர்போலுஞ் சித்துவுண்டோ
வெத்தியது மிகக்கொண்ட சொருபர்தாமும்
வேதாந்த வருணமகா ரிடியார்தாமே. 505

வருணனா ரிடியாரு முள்ளிருக்க
வண்மையுடன் பூதங்கள் பணிகள்செய்யும்
அருணனைக் காணாத முனிவர்தாமும்
அருந்தவசி நாலுயுகங் கண்டசித்து
தருணமுடன் யிதிகாசப் புராணமெல்லாம்
தாரணியில் முனிவருக்கு வுபதேசிக்க
முருணமுடன் பூமிதனி லொடுங்குஞ்சித்து
மூப்பகற்றி வாழுகின்ற ரிடியார்காணே. 506

காணவே பூதங்கள் பணிகள்செய்ய
கைலாச முனிவருக் கொப்பதாகும்
தோணவே ஜோதியுட பிரகாசம்போல்
தோற்றவே பிரகாச மானஜோதி
வேணவே தவசிதனி லிருக்கும்போது
வேதாந்த சித்தரெல்லாங் கண்டாராய்ந்து
பாணம்போல் கண்திறந்து பார்த்தபோது
பாரினிலே முனிவரெல்லாம் நடுங்கிவிட்டாரே. 507

நடுங்கவே சித்தாதி சித்தரெல்லாம்
நாட்டமுடன் அஞ்சலிகள் மிகவுஞ்செய்து
ஒடுங்கியே ரிடிக்கூட்டு மடிவணங்கி
உத்தமர்க்குத் தொண்டதுவு மிகவாய்ச்செய்து
கடுஞ்சினங்கள் நேராமல் சித்துதாமும்
கருவாக நூலதனைக் கேட்டார்தானும்
படுமுன்னே வானனூல் சாத்திரங்கள்
பட்சமுடன் தருகவென பணிந்திட்டாரே. 508

வருணரிடியை சித்தர்கள் வானசாத்திரங் கேட்பது

பணியவே வானனூல் சாத்திரங்கள்
பாரினிலே மாணாக்க ளறியவென்று
துணியவே வருந்துதியி னளவுதானும்
சூரியனார் சந்திரனார் குறிப்புமார்க்கம்
கணிதமுடனேழுவரை மண்டலங்கள்
கருவான சத்த மேகத்தினேர்மை
மணியெனவே அண்டத்தின் அளவுதானும்
மார்க்கமுடன் வானனூல் வேண்டும்பாரே. 509

வேண்டுமே நாள்கிழமை யறிவதற்கு
வெட்டவெளி யாகாச கணக்குதானும்
நாண்டவம்போல் கிராணத்தின் கணக்குதானும்
தகைமையுடன் பூமியுட நேர்மைதானும்

ஆண்டுலகை யளவெடுக்குஞ் சூட்சவேதம்
அப்பனே கருவிகர ணாதியந்தம்
தூண்டியதோர் கருமான மின்னுஞ்சொல்வோம்
சூட்சாதி சூட்சமதைச் சொல்லுவீரே. 510

சொல்லவென்றால் பூமியிட சாத்திரங்கள்
தோற்றமுடன் சத்த சாகரத்திநேர்மை
வெல்லவே வுலகுநூல் முடிவாதிந்தம்
வேதமுதல் கவன சூத்திரங்கள்யாவும்
புல்லவே நட்சத்திர மாலைதானும்
புகழான கணித நூல் சாஸ்திரபேதம்
நல்லவே பஞ்சாங்க கணிதவேதம்
நலமான பணித பரிகாரமாமே. 511

பரிவான செவுடநூ லாயிரந்தான்
பாங்கான சமுத்திர நூலெண்ணூறுந்தான்
சரியான கணிதசிந்தாமணி யாயிரந்தான்
தாக்கான மலை நூலா மெண்ணூறுந்தான்
வரியான சந்திர நூ லறுனூறுந்தான்
வாகான மேகநூல் முன்னூறுந்தான்
தெரியவே சத்தமண்டலந் தானூறு
தெளிவான வானநூல் சுருக்கம்பத்தே. 512

பத்தான பூமிநூ லாயிரந்தான்
பண்பான சோதிடமு மெண்ணாயிரந்தான்
சித்தான பரிசித்துக் குபதேசித்த
சிறப்பான சுகர்பதி னெண்ணாயிரந்தான்
முத்தான சுக்கிரனார் யெண்ணாயிரந்தான்
மூதுலகில் சிறப்பான நூல்கள்யாவும்
நித்தமுந்தா னுரைக்கும் பஞ்சபட்சி
நீடான வினாடியென்ற கிரந்தமாமே. 513

ஆமேதான் யித்தாதி நூல்களெல்லாம்
வன்பான வருணரிடி குகைதானுள்ளே
நாமேதான் சொன்னபடி சாத்திரங்கள்
நலமாகப் பாடிவைத்த வண்ணம்யாவும்
போமேதான் வீணாக்கிப் போக்கில்லாமல்
பொங்கமுடன் சமாதிதனி லிருக்குனூலை
தாமேதான் பிழைக்கும்வழி யிதுதானென்று
சட்டமுடன் கொடுப்பதுவுந் திண்ணமாமே. 514

திண்ணமா மின்னமொரு பாகஞ்சொல்வேன்
திறமான புலஸ்தியனே சொல்லக்கேளு
வண்ணமுடன் வானனூல் சாத்திரத்தை
வகுப்புடனே சித்தர்முனி வாங்கியல்லோ
எண்ணவே சில நூலை வெளிகாண்பித்தார்
எழிலான நூலெல்லா மறைத்துப்போட்டார்
நண்ணமுடன் நாதாக்கள் மறைத்தனூல்கள்
நாட்டிலே யாரேனுங் காணார்தாம். 515

காணார்கள் பெருனூல்க ளருமைகாணார்
காசினியில் சில நூலார் சிலதுகண்டார்
தோணாத பொருளெல்லாங் காணவில்லை
தொல்லுலகில்சிலதுவரைக் கண்டார்தாமும்
பூணாத சில நூல்கள் வெளியிற்கண்டார்
புகழான நூலதனைக் காணவில்லை
வீணாக நாள்கழித்து மாண்டார்மாண்பர்
விண்ணுலகி லிப்படியே போனார்தாமே. 516

போனாரே சித்தர்முனி மாண்பர்யாவும்
பொங்கமுடன் புத்தியது மயங்கியல்லோ
வானோர்கள் செய்ததொரு நூலைக்காணார்
வகைமோச மாகியல்லோ மாண்டுபோனார்
தேனொடு தான்கலந்த தினைமாப்போல
தேற்றமுடன் பாடிவைத்தார் ரிடியார்தாமும்
ஞானோப தேசமது மறியாமாண்பர்
மாநிலத்தி லிப்படியே கெட்டார்தாமே. 517

கெட்டாரே நூலினது பெருமைமெத்த
கேள்விகளால் மற்றதோர் சாத்திரங்கள்
இட்டபடி நேராது புலஸ்தியாகேள்
இயலான நூலதனைப் பதனம்பண்ணி
சுட்டலைந்து கெட்டவர்க்கு நூல்களீய்ந்தார்
சூட்சாதி சூட்சமெல்லாந் தெரியச்சொன்னார்
பட்டமரந் தழைந்ததுபோல் நூல்கள்தந்து
பட்சமுட னாசீர்மஞ் செய்தார்பாரே. 518

காவிரிக்கு வடமேற்கு

பாரேதான் யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
பாங்கான புலஸ்தியனே கேளுகேளு
நேரேதான் காவேரி வடக்கேயப்பா
நெடுந்தூர மாகவொரு காவணந்தான்

சீரேதான் சித்தர்முனி யிருக்கும்ஸ்தானம்
சிறப்பான மண்கோட்டை யீசர்கோட்டை
ஊரேதான் சுத்தியல்லோ காடுமாகும்
உச்சிதமாய் காளியென்ற வனமுந்தானே. 519

வனமான காளியது கோயில்தானும்
வகுப்பான மண்டபமும் விருட்சமுண்டு
தினகரன்தன் ஜோதியது போலேவீசும்
திகழான முனியீசு வரனும்வந்தான்
கனமான சித்தர்முனி ரிடிகள்கூட்டம்
காளிகா தேவியுட கோட்டைவாசல்
அனலான நெருப்புடனே கொள்ளிபூதம்
அங்கனவே காவலது வுண்டாம்பாரே. 520

காளிவன சேர்வை

உண்டான காளியுட பக்கவாசல்
உத்தமனே சத்தகன்னி மாருவுண்டு
அண்டர்முனி ராட்சதன்போல் கறுப்பான்றானும்
அவர்பக்கல் காத்தவனார் வீரியன்றான்
தொண்டுடனே யேவல்பணி காவற்காரர்
திற .... பூதங்களுண்டு
சண்டமுடன் காளியது சேர்வைசொல்வேன்
சட்டமுடன் பல்லாக்கு பச்சையாமே. 521

பச்சையென்ற பல்லாக்கு வூஞ்சல்தன்னை
பட்சமுடன் சத்தகன்னி மார்கள்தானும்
அச்சமின்றி பத்திர காளிதன்னை
அன்புடனே தானெடுத்து வருவதுண்டு
இச்சையுடன் கானகத்தே தான்திரிந்து
எழிலாக வீற்றிருப்பாள் பத்திரகாளி
வச்சிரமாம் பல்லாக்கை பா துகாத்து
வளமையுடன் தானிருப்பார் கன்னியாமே. 522

கன்னியாம் சத்தபெண்க ளேழுபேர்கள்
காசினியில் மகத்துவங்கள் மெத்தவுண்டு
சொன்னபடி அரசாட்சி மிகவுஞ்செய்து
சுத்தமுடன் காளிக்கு யேவல்பூண்டு
நன்னயமாய்க் காளியுட பக்கல்சென்று
நாட்டமுடன் யேவலுக்கு முன்னேநின்று
அன்னமுடன் பண்டுபலா திகளனந்தம்
அன்புடனே தான்பொசித்து இருப்பார்தாமே. 523

இருப்பாரே யின்னம்வெகு வினோதமுண்டு
எழிலான புலஸ்தியனே இயம்பக்கேளும்
பொருப்பான தவமுனியாஞ் சித்துதாமும்
பொங்கமுடன் வீற்றிருக்கு மாசீர்மந்தான்
குருப்பான கோட்டையது யீசர்கோட்டை
குவலயத்தில் மாண்பர்களுங் காணமாட்டார்
மருப்பான பூமிக்குள் சுரங்கமான
மகத்தான கோட்டையது என்னலாமே. 524

தவமுனி பிரசன்னம்

என்னவே தவமுனியை சுற்றியல்லோ
எழிலாக சீடவர்க்கங் காவலுண்டு
பன்னவே பலகாலு முபதேசங்கள்
பட்சமுடன் போதித்தார் சீஷருக்கு
துன்னவே கிடாரமது நெடுங்காலவைப்பு
துறையான ஜாடிகளுஞ் சொல்லப்போமோ
சொன்னதொரு ஸ்ரீராமர் வைப்புதானும்
தோற்றமுடன் நிதிகளல்லோ சொல்லொண்ணாதே 525

ஒண்ணாது திரவியங்கள் தானெடுக்க
உத்தமனே விட்டகுறை யிருந்துமல்லோ
நண்ணமுடன் விதியாளி வருவானானால்
நலமுடனே திரவியங்கள் மெத்தவுண்டு
கண்ணபிரான் திரவியங்கள் மெத்தவுண்டு
காசினியில் கிடைத்தவனும் யோகவானாம்
வண்ணமுட னஞ்சனங்கள் கொண்டுமல்லோ
வாகுடனே திரவியங்க ளெடுக்கலாமே. 526

எடுக்கலாம் ஸ்ரீராமர் வைப்புதன்னை
என்முன்னே எடுப்பதற்குத் தடையுமில்லை
அடுத்துமே எந்தனிடம் வந்தாயானால்
அப்பனே திரவியங்கள் தருவேனென்றும்
தொடுத்ததொரு தவமுனியும் பலகைநாட்டி
தோற்றமுட னாசீர்மந் தன்னிற்கட்டி
படுத்துவே தவமுனியுங் காவலுண்டு
பாரினிலே யதிதமிது சொல்லொண்ணாதே. 527

சொல்லவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
துரைராஜ தவமுனிவர் வலிமைகேளீர்
வல்லதொரு திரவியத்தை யெடுக்கவல்லோ
வாகுடனே கொடிநாட்டி ஸ்தம்பித்தேதான்

புல்லவே காவேரி வடபாகத்தில்
புகழாக வெகுமாண்பர் சித்துபோலே
கொல்லவே பூதமதை யடித்துத்தள்ளி
கொண்டுபோக திரவியத்தை வந்தார்தாமே. 528

வந்தாரே வஷ்டமா சித்திகொண்டு
வளமாக திரவியத்தைக் கொண்டுபோக
அந்தமுடன் பிரணவத்தை யோதிக்கொண்டு
அருந்தவசி முனியிடத்தில் சொன்னாரங்கே
இந்ததொரு மானிலத்தில் வசியசித்து
யேற்றதொரு வல்லபிரான் நீயுமானால்
சொந்தமுடன் கிடாரமதைத் தாள்திறந்து
சுந்தரரைக் கொண்டுபோ வென்றிட்டாரே. 529

இட்டமுடன் கட்டளைகள் மிகவுங்கூறி
எழிலான கிடாரமது முன்னேசெல்ல
துட்டனெனும் பூதங்கள் சித்துதன்னை
துரத்தியே தானடித்து மடியக்கொல்லும்
சட்டமுடன் விட்டகுறை சித்துதாமும்
சாங்கமுட னோடியல்லோ பதறிவீழ்கும்
கிட்டவே பூதமது சேர்ந்தொண்ணாது
கெடியான ராமருட வைப்புதானே. 530

தானான வைப்பதனை யாருங்காணார்
தகைமையுடன் ஸ்ரீராமர் வைப்புமல்லோ
கோனான தவமுனியும் நெடுங்காலந்தான்
கொப்பெனவே நிதியருகே காவலுண்டு
பானான வெகுகோடி சித்துதாமும்
பாரினிலே திரவியத்தை யெடுக்கொண்ணாது
தேனான மனோன்மணியாள் காளிதன்னை
தேற்றமுடன் வசியமது செய்வோர்க்குண்டே 531

காளிவசியத்தால் திரவியமெடுக்க

உண்டான யின்னமொரு மார்க்கங்கேளு
ஓகோகோ புலஸ்தியனே புதுமையப்பா
கண்டாலும் விடுகார்கள் சித்துதாமும்
காளிதனை வசியமது செய்தோர்க்குண்டு
திண்டமுட னாயக்கால் மண்டபத்தில்
தீர்க்கமுடன் பாறைதனை யெழுதியேதான்
மண்டலங்கள் தானறிய மந்திரத்தை
மார்க்கமுடன் யெழுதியல்லோ யிருக்கும்பாரே. 532

பாரேதான் காளிதனை வசியஞ்செய்ய
பாரினிலே வெகுகோடி மாண்பரப்பா
நேரேதான் கூட்டமது கும்பலாக
நெடுங்கால நடுச்சாம வேளைதன்னில்
சீரேதான் காளிகா தேவிதன்னை
சிறப்புடனே வெகுகோடி மாண்பரப்பா
பேரேதான் வுச்சாடனஞ் செய்துமல்லோ
பேரின்ப நிலையில்நின்று சாதிப்பாரே. 533

சாதித்த மாண்பருக்குக் கிட்டுங்கிட்டும்
தாரணியில் மற்றோர்க்கு கிட்டாதப்பா
ஆதித்தன் சுடரொளியாங் காளிதேவி
அம்பாளின் கிருபைதன்னால் வாய்க்கும்பாரே
வாதித்த சித்துமுனி சொரூபருக்கும்
வளமான மாண்பருக்கும் வாய்க்கும்பாரு
போதித்த பிரணவத்தை யறிந்துமேதான்
பொங்கமுடன் காளிக்கு வுறுதிபோற்றே. 534

காளிவுச்சாடனம்

போற்றேயங் மங் சிங் கென்றுசொல்லி
பொலிவான பிரணவத்தை மாறல்செய்து
தூற்றவே சிவயநம கொண்டுமாறி
துறையான ரீங்கார ஓங்காரங்கொண்டு
மாற்றவே உச்சாடனம் லட்சமோதி
மகத்தான ரீங்கார முள்ளடக்கி
ஏற்றவே பிராணாயந் தன்னிற்சென்று
யெழிலான லட்சமுறு வோதுவாரே. 535

ஓதுவார் காளியுட பிரணவங்கள்
ஒகோகோ நாதாக்க ளறியாரப்பா
மாதுமையாள் காளிகா தேவியம்பாள்
மகத்தான பிரணவத்தை யாருங்காணார்
தூதுரையுங் காலனா ரஞ்சிநிற்பார்
துறையான பிரணவ உச்சாடனந்தான்
சாதுரியமாய் திரிந்தால் வாய்க்குமோசொல்
தாரணியில் புண்ணியர்க்கு வாய்க்குங்காணே. 536

கெங்காநதிக்கு மேற்றிசையில் நரசிங்க ஸ்தலம்

காணவே யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
காசினியில் கெங்கைநதி மேற்கேயப்பா
தேணாவே தொலைதூர மெழுநூறுகாதம்
தோற்றமுடன் தேவதாஸ் தலமொன்றுண்டு

ஆணவே நரசிங்க ரிடியார்தாமும்
வன்பாகத் தானிருக்கும் மாசீர்மந்தான்
பூணவே மானிலத்தில் வெகுகோடிமாண்பர்
புகழாகக் காணவரும் பொய்கையாமே. 537

பொய்கையாம் தேவதா நதிதானாகும்
பொலிவான நரசிங்க ராசீர்மந்தான்
மெய்யான படைவீரர் சித்தரப்பா
மேதினியி லாசீர்மந் தன்னைச் சுற்றி
துய்யவே நரசிங்க ரிடியார்தம்மை
துறையோடும் முறையோடுந் தொழுதுநிற்பார்
வெய்யலென்ற சூரியனைக் காணாரங்கே
வெட்டவெளி யிருளடைந்த காடுமாமே. 538

காடான கொங்கைநதி தேவஸ்தானம்
கடியதொரு தவரிடிகள் முழுகும்பொய்கை
நீடான நெடியமா விருக்கும்பொய்கை
நேரான சப்தரிடி வருகும்பொய்கை
தாடாண்மை கொண்டதொரு தலமுமாகும்
தாக்கான தேவரத மிருக்கும்பொய்கை
வீடான கைலாய மென்னும்பொய்கை
விண்ணுலகி லின்னதிபோ லில்லைதானே. 539

தானேதான் தேவதாஸ் தலத்திலப்பா
தண்மையுள்ள சித்துமுனி மனேகருண்டு
மானேகேள் சித்தர்வளர் யிருப்புநாடு
மகத்தான கெடிஸ்தலமு மிதற்கிடல்ல
தேனமிர்த மானதொரு சலமுமாகும்
தேசத்தி லிதுபோல நதியுமுண்டோ
வானவர்கள் தேவர்களும் மதிக்கும்பொய்கை
மகத்தான தேவதா நதியுமாமே. 540

நதியான யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
நாதாந்த புலஸ்தியனே சொல்லக்கேளும்
பதியான கெங்கைக்குக் கிழக்கேயப்பா
பாங்கான ஆறொன் று பொய்கையுண்டு
மதிபோன்ற சந்திரனார் கோயிலுண்டு
மகத்தான பீடமது தேவபீடம்
ததியான பீடமதில் சிற்பராசன்
தாரணியில் மண்டபமு மிருக்கும்பாரே. 541

பாரேதான் பொய்கைதனைச் சுற்றியல்லோ
பாங்கான நீராழி மண்டபந்தான்
நேரேதான் தோப்புண்டு குளமுமுண்டு
நெடிதாக நான்குபுரங் கோபுரந்தான்
சீரேதான் கோபுரமும் பொன்தானப்பா
சிறப்பான பிரகார மதிலுமாகும்
கூரேதான் தங்கவர்ண மேனிதோன்றுங்
குறிப்பான தவரிடிக ளிருப்பார்தானே. 542

இருப்பாரே வெகுகோடி ரிடிகளப்பா
எழிலான தங்கமதில் கோபுரத்தில்
பொருப்பான நவகண்ட ரிடிகள்தாமும்
பொங்கமுடன் கொலுவிருப்பார் கோபுரத்தில்
தெருப்பான வச்சிரமாம் வைடூரியந்தான்
தெளிவான நவரத்தின கசிதநேர்மை
அருப்பான ரிடிக்கூட்டம் அதிகந்தோன்றும்
அவனியிலே சற்பராசன் வதிதம்பாரே. 543

பாரேதான் புலஸ்தியனே சற்பராசன்
பாரினிலே வரைகோடி காலமல்லோ
சீரேதான் தானிருந்தா ராசீர்மத்தில்
சிறப்புடனே கோடிவரை நெடுங்காலந்தான்
கூறவே முடியாது சற்பராசன்
கொடிதான தவசுதனில் மிகுந்ததீரன்
தீரமுடன் சதுர்யுகத்தி லிருந்தசித்து
திறமான மகிமைகளு மெத்தவுண்டே 544

உண்டான சாத்திரங் ளதிதமுண்டு
உத்தமனே வெகுகோடி வித்தைக்காரன்
கண்டமுனி ராட்சதரை செயிக்கும்வீரன்
கருவான விடங்கொண்ட சற்பராசன்
திண்டமுட னாள்தோறு விடத்தையுண்பார்
திறமான பாஷாண மதிதங்கொள்வார்
துண்டரிக முள்ளதொரு விடராசன்றான்
தொல்லுலகில் சித்துவென்ற ராசனாமே. 545

இராஜாதி ராஜனவர் காயகற்பம்
நாள்தோறும் ____________கொள்வார்
தராதலம் புகழுகின்ற சற்பராஜன்
தாரணி ____________ண்டமன்னன்

பராசரிடி முதலானோ ரிவர்க்குச்சீஷன்
.................................போலுஞ் சித்துவுண்டோ
துராவுடனே ஜடாமுடியுங் கொண்டதீரன்
துரையறிந்த சற்பராஜ னென்னலாமே. 546

என்னவே சித்தினுட சீடவர்க்கம்
எழிலான முனிவர்களு மனேகமுண்டு
பன்னவே லாடமுனி தவசுமுனியாகும்
பாங்கான மரத்துமுனி கட்டுமுனியாகும்
துன்னவே கோயில்முனி வாயல்முனியாகும்
துறையான புரங்காடு சுடர்முனியுமாகும்
சொன்னதொரு முனியெல்லா மிவர்க்குச்சீஷர்
தொல்லுலகி லிவர்போலுஞ் சித்துகாணே. 547

கெங்காநதிக்குக் கீழ்த்திசை

காணவே கெங்கைநதிக் கிழக்கேயப்பா
கருத்துடனே யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
தோணவே சித்தாதி மூலவர்க்கம்
தோற்றமுடன் வெகுகூட்டஞ் சொல்லப்போமோ
மாணவே வதிதமொன்று அங்கேயுண்டு
மகத்தான நூறு யோசனைதானப்பா
ஊணவே யடிவாரம் பூமிதன்னில்
உத்தமனே கிடாரமென்ற வுஞ்சல்தானே. 548

தானான வுஞ்சலது அடிவாரத்தில்
தகைமையுள்ள உதகமென்ற கிணர்தானுண்டு
கோனான ஜெமதக்கினி முனிவர்தானும்
குடியிருக்குங் குகைவாசல் மாளியப்பா
தேனான மாணாக்கள் நாற்பத்தெண்பேர்
தெளிவான சங்கத்துப் புலவரப்பா
வேனான வெகுகோடி காலந்தானும்
விண்ணுலகி லிருந்ததொரு சித்துதாமே. 549

சித்தான ரிடிமுனிவர் புலவர்கூட்டம்
சிறப்பான ஜெமதக்கினி முனிவர்பக்கல்
முத்தான உபதேசம் மிகவும்பெற்று
மூதுலகில் கீர்த்திபெற்ற மாண்பரப்பா
நித்தமுமே ஜெமதக்கினி ரிடியார்தாமும்
நீட்சியுட னுபதேசஞ் செய்தார்பாரு
சுத்தமுள்ள கவிவாணர் சித்தரப்பா
சூட்சமுடன் ரிடிதமக்கு விதிசொல்வாரே. 550

விதியான முனிவரும் நாற்பத்தெண்பேர்
வேதமுத லாகமங்கள் மிகவுஞ்செய்தார்
துதியான சாத்திரங்கள் அனேகஞ்செய்தார்
துறையான கருவிகர ணாதியெல்லாம்
பதியோடே சமாதிதனில் வைத்துமேதான்
பாலகனே நூலதனை மறைத்தார்பாரு
ததியான நூல்களெல்லாம் கிட்டவில்லை
தண்மையில்லா நூலதுவுங் கிட்டலாச்சே. 551

சங்கப்புலவர் நூல்களறிய

———————— நூலாதி சங்க நூல்கள்
அளவில்லா நூல்விவரஞ் சொல்
———— ச்சலென்ற கல்லாடம் பனுவலாகும்
மகத்தான தேரைய ————————
வீச்சுடனே காக்கை பாடினியமாகும்
விரைவான ———————— சிறப்புமாகும்
வாச்சென்ற தருக்கசங் கிரகமாகும்
வாகான ———————— வெண்பாவாமே. 552

வெண்டாவா மறனெறிச் சாரமாகும்
வெடியான குவலை ஆனந்தமாகும்
கண்பான மாரன லங்காரமாகும்
கருவான காரிகைதா னுரையுமாகும்
நண்பான யீசான முனிவர்தாமும்
நலமான யிலக்கணக் கொத்துமாகும்
திண்பான தண்டியலங் காரமாகுஞ்
சிறப்பான நன்னூலுங் கூறலாச்சே. 553

கூறவே தொன்னூலும் விளம்பலாச்சு
குறிப்பான இலக்கண விளக்கமப்பா
ஆறவே காக்கையென்ற பாடியந்தான்
அருளான சூராவளி தானுமாகும்
மாறவே வச்ணந்தி மாலையாகும்
மகத்தான யாப்பெருங் கலமுமாகும்
கோறவே மணிமேகலைத் தானுமாகும்
குறிப்பான வளையாபதி நூலுமாமே. 554

நூலான தொல்காப்பியந் தானுமாகும்
நுணுக்கமாஞ் சிதம்பரப் பாட்டியல்தான்
காலான வரும்பதக் கொத்துமாகும்
கருவான குமாரசா மியந்தானாகும்

பாலான சித்தசுத்தி யந்தானாகும்
பாங்கான யின்னும்வெகு நூல்களெல்லாம்
சேலான சங்கவை யெல்லா நூலும்
தோற்றமுடன் பாடிவைத்தார் தெளிவதாமே. 555

தெளிவான நூலனைத்துஞ் சித்தர்தாமும்
தேற்றமுட னெந்தனது பொதிகைதன்னில்
தெளிவாக நூலெல்லாங் கொண்டுசென்று
நேர்த்தியுட னரங்கேற்றஞ் செய்தார் பாரு
வளியான நூலெல்லாம் வையகத்தில்
வழக்குமிகச் செய்தார்கள் சித்தரெல்லாம்
ஒளிபோலே சங்கத்தார் நூல்களெல்லாம்
உலகுதனில் மாண்பருக்குப் பகரலாச்சே. 556

அகஸ்தியர் புலஸ்தியருக்கு ஞானோபதேசங்கூறல்

பகரவே யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
பாங்கான புலஸ்தியனே மைந்தாகேளு
நிகரவே நாலுயுக சித்தரெல்லாம்
நீடான ஞானோப மார்க்கந்தன்னை
தகரவே யுந்தனுக்குப் போதித்தல்லோ
சாங்கமுட னுபதேசம் பெறுவதற்கு
சகரமுடன் ஆசனம் விதிகள் சொல்வேன்
சட்டமுடன் மைந்தாநீ கேளுகேளே. 557

கேளப்பா யெந்தனது ஞானோபதேசங்
கெடியான நாலுயுக அதிசயங்கள்
ஆளவே யெந்தனைப்போ லுந்தனுக்கு
அப்பனே யார்சொல்லப் போராரப்பா
மாளவே நீதியுப தேசந்தன்னை
மார்க்கமுடன் தானுரைப்பேன் மகிமைமெத்த
கோளொன்றும் நேராது மன்னாகேளு
கொற்றவனே யானுமல்லோ விதிசொல்வேனே. 558

ஆசனவிதி கூறுகின்றார்

விதியான ஆசனத்துக் குவமைசொல்வேன்
வேதாந்தம னோன்மணித்தாய் யெனக்குரைத்த
பதியான மேடையது பதுமைபீடம்
பாங்கான அறுபத்து நான்குவாசல்
துதியான வாசலுக்கு நடுமையத்தில்
துப்புரவாய் கெர்ப்பாசனந் தன்னின்மீதில்
மதிபோன்ற மான்தோ லாசனந்தானப்பா
மயங்காமல் நடுமையந் தன்னிற்போடே 559

போடவே அறுபத்து நான்குவாசல்
புகழான புலித்தோ லாசனந்தானப்பா
நீடவே ஒவ்வொரு வாசல்தன்னில்
நிஷ்களமாய் வறுபத்து நான்குசித்து
கூடவே நடுமையம் மான்தோல்மீதில்
கொப்பெனவே புலஸ்தியரு மமர்ந்திருக்க
பாடவே அகஸ்தியரும் பத்மாசனத்தில்
பட்சமுடன் தானுரைப்பார் தேசந்தானே. 560

தேசமாம் ஞானோப தேசந்தன்னை
சிறப்புடனே புலஸ்தியர்க்குத் தானுரைப்பேன்
மோசமது வாராமல் மன்னாகேளு
மூதுலகில் சித்தரெல்லாஞ் சூழ்ந்திருக்க
நேசமுட னுந்தனுக்குக் காட்சிசொல்லி
நேர்மையுடன் ஞானோப தேசஞ்சொல்வேன்
பாசமுடன் சர்வகலைக் கியானமெல்லாம்
பகருவே னுந்தனுக்குப் பகருவேனே. 561

பகரவே யென்மைந்தா யின்னங்கேளு
பாங்கான புலஸ்தியனே புத்திவானே
நிகரமுட னிதிகாசம் புராணமெல்லாம்
நேர்மையுட னுன்மனதி லறிவதற்கு
சகரமுடன் ஞானோபத் தத்துவங்கள்
சாங்கமுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு
வகரமுடன் ஞானமுதல் யாவுஞ்சொல்வேன்
வளமான பிரணவத்தைக் கூறுவேனே. 562

கூறுவேன் மந்திரங்கள் தந்திரங்கள்
குவலயத்தில் சித்தருட வுபதேசங்கள்
மாறுபடா பேதனங்கள் வசியமார்க்கம்
மகத்தான அஷ்டமா கருவியாவும்
தூறுபடா வஞ்சனங்கள் பேதனங்கள்
துறையான பகவத்து கீதையாவும்
வாறுடைய வஷ்டவித தந்திரங்கள்
மகத்தான சல்லியங்கள் கழறுவேனே. 563

சல்லியங்கள் வொட்டியங்கள் சாதூர்கற்பம்
சதுரான வேதாந்த ரகசியங்கள்
வல்லதொரு பாடியங்கள் கர்ணமந்திரம்
மனத்தான நாகார்ச்சுன வேததந்திரம்

புல்லவே தீர்வாணம் திரவிடங்கள்
புகழான வட மொழிக ளனந்தங்கோடி
சொல்லவே புலஸ்தியா மைந்தாகேளு
தோற்றமுடன் யானுரைப்பேன் புத்திவானே. 564

புத்தியா மின்னமொரு மார்க்கங்கேளு
புகழான சின்மயத்தி லிருந்துகொண்டு
தத்துவங்கள் தப்பாமல் புலஸ்தியாகேள்
சட்டமுடன் தாரணியிலிருந்து கொண்டு
முத்திபெற நல்வழிக்கி பாத்திரவானாய்
மூதுலகில் கீர்த்திபெற்று வாழ்கவென்று
நித்தியமும் பராபரத்தின் பதாம்புயதத்தை
நேர்மையுடன் பூசித்து நிலையில்நில்லே. 565

நிலையான பதிதனிலே நின்றுகொண்டு
நிஷ்களங்க மாகவல்லோ மதியம்பூண்டு
கலையான வறுபத்து நான்குசித்து
காசினியி லாடியல்லோ காட்சிபெற்று
வலைபோன்ற மாய்கைதனை விட்டகற்றி
வையகத்தில் சின்மயத்தி லிருந்துகொண்டு
முலைமாதர் சமுசார வாழ்க்கையற்று
மூதுலகி லிருப்பவனே யோகவானே. 566

யோகமென்றால் யோகமது ஞானம்வேண்டும்
ஒளிவான பூட்டகங்க ளறியவேண்டும்
சாகமுடன் தவநிலையை யறியவேண்டும்
தாரணியில் சதாகாலம் நிற்கவேண்டும்
பாகமுடன் வமுந்தசா கரத்தையல்லோ
பட்சமுடன் மனந்தனிலே யூட்டவேண்டும்
வேகமுடன் வேதாந்த நுட்பசாரம்
விருப்பமுடன் கொள்ளுதுந் திண்ணந்தானே. 567

திண்ணமுட னயபோக சுகபோகத்தை
தீர்க்கமுடன் சுட்டறுத்து நீக்கவேண்டும்
வண்ணமுடன் காயாதி கற்பங்கொண்டு
வையகத்தை மறந்தவன்போ லிருக்கவேண்டும்
எண்ணமுடன் மனதுறுதி கொள்ளவேண்டும்
எழிலான சிற்பரத்தை யறியவேண்டும்
நண்ணமுடன் நாதாக்கள் நடைநொடிப்பு
நாட்டிலே யறிந்தவனே சித்தனாமே. 568

அறிந்தாலுங் காயுமில்லைப் பூவுமில்லை
அப்பனே காயாதிக் கொள்ளவேண்டும்
முறிந்துமே தூலமதைத் தூசகற்றி
முச்சுடரைக் காண்பதற்கு முதல்வனாக்கி
சிறிந்துமே காயாதிக் கற்பங்கொண்டு
தேசத்தில் வெகுகால மிருக்கவென்று
குறிந்துமே நடராச சேர்வையோடு
குவலயத்தி லிருப்பவனே புத்திவானே. 569

யோக நிஷ்டை

இருக்கவென்றா லின்னம்வெகு கேள்வியுண்டு
எழிலான மவுனமதை வுற்றுப்பாரு
பொருக்கமுடன் பிறந்தாலும் யிறந்தாலென்ன
பொய்யென்ற வார்த்தையது கூறவேண்டாம்.
திருக்கமுடன் சத்திய ________ மேரப்பா
தீராத வினையகற்றுஞ் சாகரந்தான்
சுருக்கமுடன் வே________க கருவுதானும்
சுட்டறுத்த சூட்சாதி மனமுந்தானே. 570

மனமான மனமுறுக சித்தியாச்சு
மகத்தான சிவயோகந் தன்னில்நிற்கும்
சினமான கடலதனை விட்டகற்றி
தீட்சையென்ற சத்தியது தீட்சைகொள்ளு
தினமான சிவநிலையை மனதிலுன்னி
தேறுதற்கு யின்னமொரு கருவிகேளு
அனலான தீயகற்றி அருந்துவதில்நின்று
அப்பனே யிடகலையும் பிங்கலையுமாறே. 571

மாறான யிடைகலைதான் சித்திமுத்தி
மகத்தான மவுனமுத்திப் பூண்டுகொள்ளு
கூறான மூலத்தீ விட்டகற்றி
குறிப்பான வொளிகோடி சூரியன்போல்
தூறான மேல்நோக்கிக் கொண்டுசெல்லு
துப்புரவாய் மதியமுர்தங் கண்ணிற்றோற்றும்
ஆறான ரெண்டுக்குங் கலைதான்சித்தி
அப்பனே யதைவிட்டா லொன்றுங்காணே. 572

காணவே மவுனமது கொள்வாயப்பா
கட்டறுந்த நாய்போல தேட வேண்டாம்
பூணவே லோகாதி விசாரந்தள்ளு
பொங்கமுடன் விசாரமது பொல்லாதப்பா

கோணவே வெட்டவெளி பாழுபாழு
தொல்லுலகி லுற்றுப்பா ரொன்றுமில்லை
நீணவே தோற்றுகின்ற ரூபமெல்லாம்
நிலையான சர்வசித்தி யாகும்பாரே. 573

பாரப்பா ரூபமென்ற சத்தியாச்சு
பண்பான சுருதிமுடி விதனாலாகும்
நேரப்பா பஞ்சகர்த்தா ளாடுங்கூத்து
நேர்மையுட னதன்கூறு சொல்வேன்கேளீர்
தீரப்பா லோகமது பொய்யேவாழ்வு
திட்டமுடன் வெறுத்தவனே யோகவானாம்
சீரப்பா பஞ்சகர்த்தா ளொடுக்கத்தாலே
சிறப்பான கூத்துகளுங் காணலாச்சே. 574

தேக வாழ்க்கை

ஆச்சப்பா பஞ்சகர்த்தா ளாடுங்கூத்து
அப்பனே யுன்னுக்குள் ளுற்றுப்பாரு
பேச்சப்பா பிரிதிவிதா னப்புதனிலொடுங்கி
பேரான அப்பதுவும் தேய்வினிலொடுங்கி
தேச்சப்பா தேய்வது வாய்வினிலொடுங்கி
தெளிவான வாய்வது விண்டினிலொடுங்கி
ஆச்சப்பா வொன்றுக்குள் ளொன்றோடொன்று
அப்பனே வுற்பனத்தா லறியலாச்சே. 575

அறியவென்றால் பஞ்சபூத மிதிலடக்கம்
அப்பனே வேதமுத லிதினாலாகும்
முறியவே தத்துவங்க ளிதினாலாகும்
மூதுலகைக் காணுவது மிதனாலாகும்
நெறியான வழியதுவு மிதனாலாகும்
நேர்மையுடன் காயசித்தி யிதனாலாகும்
குறிபோன்ற சமாதியது யிதனாலாகும்
கொப்பெனவே .... மிஷந்தானாமே. 576

ஆமேதான் ரோமமது மச்சந்தானும்
அப்பனே யெலும்பு நரம்பிதனாலாகும்
தாமேதான் தோலதுவு மிதனாலாகும்
தாக்கான கருவிகர ணாதியெல்லாம்
நாமேதான் உடல்பொருள்க ளாவியோடு
நலமான சடவாழ்க்கை யிதனாலாச்சு
போமேதான் புவனமெலா மிதிலடக்கம்
பொங்கமுடன் பூமிதனில் வாழ்க்கையாச்சே. 577

வாழ்க்கையுடன் மக்களென்றும் மனைவியென்றும்
வையகத்தில் தனைப்பெற்ற மாதாவென்றும்
நீட்கமல வுலகமதில் வேதமில்லா
நிலையான தொன்றில்லை பஞ்சபூதம்
வேட்கமுடன் மாள்வதற்கும் பிறப்பதற்கும்
மேதினியில் தானமைத்தார் யீசன்றானும்
தாட்கமுடன் திரோதியென்ற தீயில்வீழ்ந்தால்
தாரணியி லொருநாளும் யீடேராயே. 578

ஈடான வழிதனிலே செல்லவேண்டாம்
யீடழிந்து கெட்டழிந்து போகவேண்டாம்
மாடான சேடமது மழிந்துபோகும்
மகத்தான தூலமது போகும்போது
கோடான கோடியுப தேசமெங்கே
கொற்றவனே ஞானமெங்கே பானமெங்கே
நாடான தேகமது வழியும்போது
நாயகனே ஒன்றதுவுங் காணார்தாமே. 579

காணாரே வையகத்து மகிமைபோச்சு
காசியினில் வாழ்க்கையெல்லாம் யிதுபோலாகும்
தோணாத வினைகளெல்லாந் தீட்சையாலே
கட்டறுத்துக் கற்பமது கொள்ளுகொள்ளு
வீணாகத் தீவழியிற் செல்லவேண்டாம்
விட்டகுறை யிருந்தாலே லபிக்கும்பாரு
கோணாமல் முகமலர்ந்து வுறுதிகொண்டு
குவலயத்தி லுபதேசம் பெறுவாய்தானே. 580

உபதேச வுண்மை

தேசமென்றால் தேசமது ஞானோபதேசம்
சேடமதுக் குபதேசங் கூறுவேன்பார்
பாசமுட னுலகமதி லிருக்கும்போது
பாரினிலே யெல்லவர்க்கும் யோக்கியவானாய்
கேசமுட னசடருடன் கூடவேண்டாம்
நேர்மையுட னாணவங்கள் சொல்லவேண்டாம்
வாசமுடன் பவக்கடலை விட்டகற்றி
வண்மையுடன் சிவக்கடலின் நிலையில்நில்லே. 581

நிலையான கடல்தனிலே நிற்கவேண்டும்
நீடான ஞானசா கரத்தையப்பா
கலையான வமுர்த சாகரத்தைத்தானும்
கண்டறிந்தால் லோகசித்தி வஷ்டசித்தி

விலைகொண்ட ஞானசா கரத்தைத்தானும்
விருப்பமுடன் மனோலயத்திற் கொண்டுசென்று
துலையாத பொய்க்கடலை விட்டகற்றி
துப்புரவாய் யெப்போதும் மதியம்பூணே. 582

பூணவே லோகமதி லிருக்கும்போது
பொல்லாத கருமவினைக் காளாகாமல்
நாணவே யுலகத்தில் நடக்கலாகா
நடந்தாலும் மவுனநிலை நில்லுநில்லு
வீணபடி திரியாதே தூங்குதூங்கு
விட்டகுறை யிருந்தாலே நேருநேரும்
தோணவே மவுனத்தை விட்டாயானால்
தொல்லுலகில் நீயுமொரு பொய்யனாமே. 583

பொய்யனா யிருக்காமல் புண்ணியாகேள்
பொங்கமுடன் மூச்சென்ற யோகந்தன்னில்
மெய்யனாய்ச் சமாதியிடஞ் சென்றுநீயும்
மேதினியில் சித்தனைப்போல் ரூபங்கொண்டு
துய்யவே மதியமுர்தம் பூண்டுகொண்டு
துப்புரவாய் யோக சாதனையில்நின்று
பையவே யிருக்கவென்றால் மைந்தாநீயும்
பாங்கான குகைதனையே தேடிக்கொள்ளே. 584

கொள்ளவென்றால் புலி யாசனந்தான்பூண்டு
குவலயத்தில் கண்காணா பூமிதன்னில்
விள்ளவே குகைவாசல் நின்றுகொண்டு
விட்டகுறை தனையகற்றி மதியங்கொண்டு
உள்ளபடி சாத்திரத்தை யுணராமற்றான்
ஓகோகோ நாதாக்கள் மறைப்புதன்னை
எள்ளளவும் பிசகன்றி நேராவண்ணம்
யென்மகனே யிருந்துகொண்டு யோகம்பாரே. 585

பார்க்கவென்றால் பூரணத்தைப் பார்க்க வேண்டும்
பாங்கான சின்மயத்தைக் கார்க்கவேண்டும்
ஏர்க்கவென்றால் புருவமையத் திருக்கவேண்டும்
எழிலான வாசனையை நீக்கவேண்டும்
தீர்க்கவென்றால் ஜெகமதிலே யொன்றுமில்லை
திரளான ஆறடனத்துக் கழிவுமில்லை
நாற்பதுக்குள் கற்பமுண்ட நாதனாகி
நானிலத்தி லிருப்பவளே யோகியாமே. 586

யோகியென்றால் சித்தனென்ற வாண்மைவேண்டும்
நொடிக்குள்ளே யாணுவத்தை நீக்கவேண்டும்
போகியென்றால் கற்பமுண்டு பொருக்கவேண்டும்
பொல்லாத வாசனைதனை யொழிக்க வேண்டும்.
ஏகியே சாகரத்தை விட்டொழித்து
எழிலான காட்டகத்தே நின் றுகொண்டு
தூகியே போகாமல் தொலைவாய்நின் று
துப்புறவாய் குனைதனையே காருகாரே. 587

கார்க்கையிலே வருடமது வதிகமானால்
காலாதிக் காலனென்ற சித்தனென்பார்
தீர்க்கமுடன் வெகுகோடி காலமப்பா
திறமையுடன் காத்திருந்த சித்துவென்பார்
ஏர்க்கவே காயசித்தி யோகசித்தி
எழிலான வட்டமா சித்தியோடு
சேர்க்கவே கெவனசித்தி ஞானசித்தி
தெளிவான சட்டைதள்ளுஞ் சித்தியாமே. 588

சட்டைமார்க்க விதி

சித்தியாங் காயமது கொண்டபோது
சிறப்பான தேகமது கற்றூணாகும்
முத்திபெற நல்வழிக்கி யிதமுங்காட்டும்
மோசமில்லை தத்துவங்கள் தொண்ணூற்றா றும்
வெத்திபெற சட்டைதனை யுரிந்துதானால்
வெட்டவெளிப் பிறவியெல்லாம் நீங்கிப்போகும்
சுத்தியுள்ள சாயுச்சிய பதவிதானும்
சூட்சமுடன் கருவியெல்லாந் தோணுந்தானே. 589

தானான வேதாந்தம் பாழாய்ப்போகும்
தாக்கான பூரணந்தான் தனியாய்நிற்கும்
தேனான பதவியிலே சார்ந்துகொண்டு
தெளிவான வாதமதைக் கருவாய்ககேளு
கோனான காண்டம் பன்னீரா யிரத்தில்
கொட்டினேன் சகலகலை மார்க்கமெல்லாம்
பானான பராபரியை மனதிலெண்ணி
பாடினேன் பன்னீரா யிரந்தானாமே. 590

ஆமேதான் பனிரெண்டு காண்டத்துள்ளே
அப்பனே யஷ்டாங்க யோகஞ்சொன்னேன்
தாமேதான் சமாதிகற்பம் ரெண்டாங்காண்டம்
தாக்கான யோககற்பம் மூன்றாங்காண்டம்

வேமேதான் சவுக்காரப் போக்குதன்னை
விருப்பமுடன் சொல்லிவிட்டேன் நாலாங்காண்டம்
போமேதான் முப்பூவின் தீட்சைமார்க்கம்
பொங்கமுடன் சொல்லிவிட்டே னுண்மையாமே. 591

உண்மையாங் கடுங்கார செயநீர்போக்கை
உத்தமனே யானுரைத்தே னாறாங்காண்டம்
திண்மைபெற கருக்குருவுங் கல்லுஞ்சொன்னேன்
திறமான சுன்னத்தின் செயநீர்சொன்னேன்
வண்மைபெற களங்குமுதல் செந்தூரங்கள்
வகுப்பான திராவகமு மனந்துஞ்சொன்னேன்
கண்மையாம் கருவோடு சரக்குவைப்பும்
கடினமாங் கைபாகஞ் செய்பாகமாமே. 592

பாகமாம் ஞானமொடு மூலிவேதை
பாங்கான கைபாக மெல்லாஞ்சொன்னேன்
யூகமாம் நிகண்டதுவும் மருவிப்பாரு
நுணுக்கமுள்ள பொருளெல்லா மதிலேதோயும்
சாகமது வாராது மறைப்போயில்லை
தாரணியில் கருவாளி யறிவான்பாரு
வேகமுடன் சாத்திரத்தில் மறைப்புபார்த்து
வெளியான பொருளெல்லாங் காட்டினேனே. 593

காட்டினேன் வெட்டவெளி தன்னிற்சென்று
கருவான மறைபொருளை விரித்துச்சொன்னேன்
தாட்டிகமாய்ப் புலஸ்தியனே யுந்தனுக்கு
தாரணியில் மற்றவரால் சொல்லப்போமோ
மாட்டமென்று வறியாட்டா லென்னசெய்வோம்
மகத்தான நாதாக்கள் சூளுக்குசூட்சம்
நீட்டமுடன் பாட்டுநய மறிந்தாலல்லோ
நீணிலத்தில் சித்தனா யாவீர்தானே. 594

சித்தனென்று பேர்படைத்தா லென்னலாபம்
சிதாபாசத் துகளதனை யறியவேண்டும்
பித்தனென்று பொய்சொல்லி யிருப்பாயானால்
பலியாது சகலசித்து முந்தனுக்கு
புத்தியுடன் பாவிகளே யெடுத்துரைப்பார்
பூதலத்தி லுந்தனுக்கு யாரும்விள்ளார்
வெத்திபெற வெள்ளாட்டிப் பயல்கள்தானும்
வீணுரைப்பார் மெய்யென்று நம்பிடாதே. 595

நம்பாதே புலஸ்தியனே மைந்தாகேளு
நலம்பெறவே ஞானமது வாய்க்குமானால்
அம்பாளின் கிருபையது உனக்குக்கிட்டும்
அப்பாழும் முப்பாழும் வெளியில்காண்பாய்
நம்பினது மேலிருந்த துவளைநீக்கி
கடினமுட னாய்ந்துண்ணுங் கதையைப்போலும்
வெம்பியே திரியாதே வீண்மைந்தாகேள்
விருப்பமுட னென்னாளுந் தீட்சைபோற்றே 596

மனோன்மணி துதி

போற்றவே மனோண்மணியைத் துதிக்கவேண்டும்
பொங்குமுடன் கமலா சனத்திருந்து
நாற்றிசையும் மெச்சுதற்கு நல்லபாலா
நாதாந்த சித்தொளிபோல் ரூபங்கொண்டு
ஏற்றவே பீடமென்ற கமலந்தன்னில்
எழிலாகச் சின்மயத்தைப் பணிந்துபோற்றி
ஆற்றவே யடிவணங்கித் தூபதீபம்
அம்பாளின் பதாம்புயத்தை மனதிலுன்னே. 597

உன்னவே யென்னாளுந் துதியுங்கொண்டு
உத்தமனே மனதுறுதி பூண்டுமேதான்
என்னவே பிரகாச ஒளியினின்று
எளிதான வறுபத்து நான்குபீடம்
பன்னவே பரவொளியைக் காணவென்று
பட்சமுடன் சதாகால மர்ச்சித்தேங்கி
நன்னவே சடாட்சரப் பொருளைநோக்கி
நாதாந்தக் கண்ரூபங் காணுவாயே. 598

காணவே தங்கமென்ற சொரூபம்போலே
கண்ணுக்குத் தோற்றாது கடினமெத்த
நீணவே சொரூபநிலைக் காணும்போது
நீடான மாய்கையது யற்றுப்போகும்
வேணவே யுபசாரம் பின்னகற்றி
வேட்கமுடன் தானிருந்து வுத்தாரித்து
சாணளவு குழிதனிலே காலையூன்றி
சட்டமுடன் அம்மென்று கும்பிடாயே. 599

கும்பிட்டுக் காலூன்றி கும்பித்தேதான்
கொடிதான பவக்கடலை விட்டுநீங்கி
தம்பித்து சோடசோ பாரத்தோடு
தாரணியில் சின்மயத்தி லிருந்துகொண்டு

வெம்பியே முகம்வாடி மனஞ்சோராமல்
வேதாந்தத் தாயினது சொருபங்காண
அம்பொன்னின் பாதமதைப் பணிந்துபோற்றி
ஆத்தாளை யென்னாளும் பூசிப்பாயே. 600

பூசித்து நிற்கையிலே வம்பாள்தானும்
புகழான வாசீர்மம் மிகவுங்கூறி
பாசிபோல் படர்ந்திருக்கும் யிருளகற்றி
பாலகனே யுந்தனுக்கு நிர்த்தஞ்செய்வாள்
தேசியென்னுங் குதிரைதனை யுள்ளடக்கி
தெள்ளமுர்த மானதொரு ஞானப்பாலை
வாசியென்னுஞ் சுழிமுனையி லேரோட்டாமல்
வையகத்தி லிருப்பவனே சித்துவாமே. 601

சித்தான சித்துமுனி சொருபராக
சிறப்புடனே சமாதிதனி லிருந்துகொண்டு
சுத்தனெனுங் கைலாச நாதர்தம்மை
கருத்துடனே தன்மனதி லுள்ளடக்கிப்
பத்தியுடன் மனோன்மணியை தியானித்தேதான்
பட்சமுட னிருப்பவனே சித்துவாகும்
சுத்தமுடன் மனோன்மணியைத் தொழுதுபோற்றி
துரைராச சுந்தரனே மதியம்பூணே. 602

விராலிமலை சித்தர் மகத்துவத்தை அகஸ்தியர் புலஸ்தியர்க்குக் கூறல்

பூணவே யின்னமொரு மார்க்கங்கேளு
புகழான புலஸ்தியனே சொல்வேன்பாரு
தோணவே விராலியென்ற மலைதானுண்டு
தொல்லுலகில் சித்தர்முனி குடியிருப்பு
காணவே விராலியென்ற மலையிலப்பா
கண்காணா சுனையுண்டு வுதகமுண்டு
நாணவே வெகுகோடி காலமப்பா
நாதாக்கள் வாசமதுசெய்வார்பாரே. 603

பாரேதான் விராலிமலை யுச்சியப்பா
பாங்கான கணேசரென்ற கோவிலுண்டு
நேரேதான் வடக்குமுகந் தன்னிலப்பா
நிலையான கல்லாலை மரமுமுமண்டு

சீரேதா னோட்டை மண்டபந்தானப்பா
சிறப்புடனே புலியுறங்கும் வாயக்கால்தான்
கூரேதா னாயக்கால் மண்டபத்தில்
குறிப்பான கருநெல்லி யிருக்குந்தானே. 604

பரஞ்சோதி முனிவர் தவநிலை

தானான நெல்லியது விருட்சந்தன்னில்
தண்மையுள்ள தென்பாண்டி சித்தரப்பா
கோனான பாண்டியா ளாயிரம்பேர்
குவலயத்தை யாளுகிற காலந்தன்னில்
பானான பாண்டிவள நாட்டைத்தானும்
பண்புடனே யாளுகிற காலமப்பா
மானான மடபதிகள் தேர்ந்தசித்து
மகுத்துடனே வாயிரம்பேர் தேறினாரே. 605

தேறினா ராயிரம்பேர் சித்துதாமும்
தேற்றமுடன் விராலிமலைச் சார்பில்தானும்
மீறியே தவநிலைக்கு வுறுதியாகி
மிக்கான சுனையருகே வந்துசென்று
கோறியதோர் தவநிலையை நிறுத்தவென்று
கொப்பெனவே பரஞ்சோதி முனியார்பக்கல்
தூறியே சுவாமிதனைச் சுற்றியல்லோ
சுத்தமுடனாயிரம்பேர் சூழ்ந்தார்பாரே. 606

பாண்டியநாட்டு சித்தர் பரஞ்சோதியாரிடம் உபதேசம் பெற்றது

பாரேதா னுபதேசம் பெற்றுமல்லோ
பாங்குபெற பரஞ்சோதித் தன்னைநோக்கி
சாரேதான் தவநிலையில் சார்ந்துகொண்டு
சட்டமுடனாசிர்மம் மிகவுஞ்செய்து
நேரேதான் பரஞ்சோதி தன்னைநோக்கி
நிஷ்களங்க மானதொரு ஞானோபத்தை
தீரேதான் ஞானோப தேசநூலை
தீர்க்கமுடன் கேட்டார்கள் சித்துதாமே. 607

சித்தான பாண்டிவள மாண்பரப்பா
சிறப்பான ஞானோப தேசநூலை
முத்தான நூலதனைப் பாடியல்லோ
ஈமதுலகி லறியாமல் குகையில்வைத்தீர்

வெத்திபெற யெங்களுக்கு ஞானந்தோன்றி
வேதமென்ற பாதைக்கி யிடமுமாகி
சத்தியுட னடியேன்கள் யீடேறத்தான்
சட்டமுடன் நூலதனைக் கொடுமென்றாரே. 608

பரஞ்சோதி முனிவர் ஞான நூலெண்ணாயிரம்

கொடுவென்று சொல்லுகையில் தவசிமார்க்கு
கொப்பெனவே பரஞ்சோதி முனியார்தாமும்
விடுபெறவெண் ணாயிரமும் பாடிவைத்தே
மேதினியி லெவர்தானுங் காணப்போமோ
கொடுக்காத ஞான நூல் பெரு நூலப்பா
தொல்லுலகி லாரேனு மறியப்போமோ
அடுக்குடனே பாடியல்லோ குகையில்வைத்தார்
அவனிதனில் கண்டாக்கால் சித்தாய்ப்போமே. 609

போமென்று சொல்லியே பரஞ்சோதியாரும்
பொங்கமுடன் நூலதனைக் குகையில்வைத்தார்
வேமெனவே நூலதனை வேண்டுமென்று
வேட்டமுடன் பாண்டிவள சித்துகேட்க
நாமெனவே ஞானோப நூலையப்பா
நாட்டினிலே கண்டாக்கால் சித்தாய்ப்போகும்
தாமெனவே நூல்பாடி குகையில்வைத்தார்
தப்பாது சாபமது சொல்லிட்டாரே. 610

சொல்லவே பரஞ்சோதி சித்துதாமும்
சொற்சொரூப மானதொரு பாண்டிமார்க்கு
வெல்லவே நூல்பாடி குகையில்வைத்தேன்
வேதாந்தத் தாயினது கடாட்சத்தாலே
புல்லவே குரு நூலா மெண்ணாயிரந்தான்
புகழான பெரு நூலாம் ஞான நூலாம்
நல்லதொரு நூலதனைப் பாடியல்லோ
நாதாக்க ளறியாமற் குகைவைத்தேனே. 611

வைத்தேனே பாண்டிவள சித்துகேளும்
வளமான நூல்கொடுக்கத் தடைதானில்லை
செத்ததொரு மாண்பர்களை யெழுப்புமார்க்கம்
சீரான மூலிகையின் கருவுஞ்சொன்னேன்
மத்ததொரு நூல்போலே யெண்ணவேண்டாம்
மகத்தான பெரு நூலாம் ரகசியந்தான்
வெத்திபெற சிவஞான சித்தருக்கு
கேள்வியுடன் நாமுரைத்த பெரு நூலாமே. 612

பெருநூலா மென்றுசொல்லி பிரியத்தோடு
பேரான பாண்டிவள சித்தருக்கு
கருவான உளவெல்லா மிதிலேதோயும்
காசினியில் நாதாக்க ளறிவாரோசொல்
பருவமுடன் கற்பம் யானுண்ணும்போது
பொங்கமுடன் ஞான நூல் பாடியல்லோ
ஒருவரு மறியாமல் குகையில்வைத்தேன்
ஓகோகோ நாதாக்க ளறிந்திட்டாரே. 613

நூல் கொடுத்தது

அறிந்ததொரு நூலதனைப் பரஞ்சோதியாரும்
அடியார்கள் மீதினிலே தயவுகூர்ந்து
செறிந்துமே நூல்கொடுத்துப் பதனஞ்சொல்லி
திட்டமுடன் சாபமது நிவர்த்திசெய்து
குறிந்துமே உடல்பொருள்க ளாவியெல்லாங்
குணமுடனே சீடர்க்குத் தத்தஞ்செய்து
முறிந்ததொரு தன்மனதை வுறுதிகொண்டு
மூர்க்கமது தானகற்றி கொடுத்திட்டாரே. 614

கொடுத்ததொரு நூலதனைப் பாண்டிசித்து
கொப்பெனவே பொதிகைமலைக் கொண்டுசென்று
அடுத்துமே தென்பொதிகை மீதிலப்பா
அப்பனே புலஸ்தியனே கொண்டுவந்தார்
தொடுத்துமே தேவாதி தேவர்மெச்ச
துறையான செனகமுனி சங்கந்தன்னில்
விடுத்துமே ஞானோப சாரந்தன்னை
விருப்பமுட னரங்கேற்றல் செய்யலாச்சே. 615

பொதிகையில் செனகர் சங்கத்தில் நூல் அரங்கேற்றல்

ஆச்சப்பா நூலதனைப் பெற்றுக்கொண்டு
அடவாகப் பொதிகையரங் கேற்றல்செய்து
வீச்சலுடன் சாபமதை நிவர்த்திசெய்து
விருப்பமுடன் செனகமுனி சங்கந்தன்னில்
பாச்சலுட னாயிரம்பே ரொன்றாய்க்கூடி
பாங்கான சமூகமதி லேற்றல்செய்து
மாச்சலுடன் பரஞ்சோதி ரிடியார்பேரை
மகத்தான சித்தர் கொண்டாடினாரே. 616

ஆடினா ரங்குள்ள முனிவர்சித்தர்
அன்புடனே தவரிடிக ளாசீர்மித்தார்
கூடினார் வரைகோடி சித்தரெல்லாங்
குவலயத்தி லின்னூல்போ லொருநூலில்லை
தேடியே யலைந்தா லுங்கிட்டாதப்பா
தெளிவான ஞான நூலெண்ணாயிரந்தான்
பாடியரங் கேற்றியதோர் ணூல்தானப்பா
பாங்கான ஞான நூல் சொல்லொண்ணாதே. 617

ஒண்ணாது ஞான காவியந்தானப்பா
ஓகோகோ சாத்திரங்க ளிதற்கீடோ
சொல்திண்மையாம் இருளதனைக் கதிரோன்தானும்
திறமையுடன் நீக்குகின்ற தன்மைபோல
உண்மையா மெய்ப்பொருள்க ளிதிலடக்கம்
உத்தமர்கள் நாதாக்கள் சொல்லார்விள்ளார்
தண்மையுள்ள பொருளெல்லா மதிலேதோயும்
சண்டாள கருமிகட்கு வாய்க்காதாமே. 618

வாய்க்காத ஞான நூல் வாய்க்குமானால்
வானுலகு சித்தரென்று செப்பலாகும்
தாய்க்கமலம் வீற்றிருக்கு மனோன்மணியாள்தாமும்
தாயான பராபரியு முன்னேநிற்பாள்
தூய்மொழிகள் பரிபாஷை யெல்லாங்கண்டு
துப்புரவாய் செய்துவைத்த ஞான நூலாகும்
நோய்முதலாம் பண்டிதற்கு உகந்தனூலாம்
நோக்கமுடன் பாடிவைத்த துண்மைதானே. 619

அகஸ்தியர் புலஸ்தியருக்கு ஞான நூலெண்ணாயிரத்தை பன்னீராயிர காவியத்தில் எட்டாவது காண்டத்தில் கூறுதல்

தானான யின்னமொரு மார்க்கங்கேளு
தகைமையுள்ள புலஸ்தியனே சொல்வேன்பாரு
கோனான யெனதையர் அசுவனியாந்தேவர்
குவலயத்தில் சொன்னதொரு நீதிபோல
தேனான தென்பொதிகை கைலையிலப்பா
திரளான சித்தர்முனிக் கூட்டங்கூடி
பானான யெந்தனிடங் குகைதான்கிட்டி
பாலகனே உத்தாரங் கேட்டார்தானே. 620

கேட்டாரே அசுவனியாந் தேவர்தாமும்
கெடியான பெருநூல்தா னாயிரந்தான்
நீட்டமுடன் பாடிவைத்த சேதியாவும்
நீடான என்குருவே கும்பயோனி
வாட்டமுடன் அசுவனியாந் தேவர்சொன்ன
வகுப்பான நீதிமொழி நூல்களையா
தாட்டிகமாய் எங்களுக்குத் தருகவென்று
தாள்பணிந்து முடிவணங்கி தொழுதிட்டாரே. 621

தொழுதாரே சித்தர்முனி ரிடிகள்யாவும்
தோற்றமுடன் எந்தனையும் நூல்தான்கேட்டார்
பழுதுபடா வசுவனியாந் தேவர்சொன்ன
பாங்குபெறும் வயித்தியமாம் நீதிசாரம்
விழுதிடனே எங்களுக்கு நூல்கொடுத்தால்
விருப்பமுட னென்னாளும் புத்திவானாய்
அழுக்கற நீதிமொழி சார நூலை
அன்புடனே யெப்போதும் மறக்கோம்பாரே. 622

பாரேதான் பொதிகைமலைக் குருவேகேளும்
பாங்குபெற எங்களுக்கு நூல்தான்வேண்டும்
சீரேதான் சித்தறிவு பாலருக்கு
சிறப்பான நூல்கொடுத்து மருமஞ்சொல்லி
நேரேதான் நாதாக்கள் செய்தனூலை
நேர்மையுடன் நாங்கள்கண் டறிவதற்கு
தீரேதான் மனதுவந்து கொடுக்கவென்று
சிற்பரனை மனதிலுண்ணி வணங்கினாரே. 623

அகஸ்தியர் அசுவினிதேவர் நூல் கொடுத்தது

வணங்கியே கேழ்க்கையில் அன்பாய்க்கேளு
வாகான புலஸ்தியனே சொல்வேனப்பா
இணங்கியே அசுவனியார் செய்தனூலை
இரக்கமுடன் சித்தர்முனி ரிடியாருக்கு
சுணங்கமது வாராமல் யானுந்தந்தேன்
சுத்தமுடன் மெய்ஞ்ஞான சாரந்தன்னை
தணங்கமுடன் ஞானோபஞ் செய்தேன்பாரு
தண்மையுடன் புலஸ்தியனே யென்றிட்டாரே. 624

என்றிட்ட போதையிலே சித்தர்தாமும்
எழிலான ஞானோப முகந்தபின்பு
தென்றிசையில் விட்டுமல்லோ முனிவர்தாமும்
தெளிவுடனே னூல்வாங்கி யென்முன்வந்தார்

வென்றிட்ட சித்தர்முனி ரிடியார்தாமும்
விருப்பமுட னென்முன் னஞ்சலிகள்செய்து
பன்றிட்ட நீதினூல் சாத்திரத்தைப்
பதாம்புயத்தில் வைத்துமல்லோ பணிந்திட்டாரே 625

பணிந்ததொரு சித்தர்களும் நூல்தான்கொண்டு
பட்சமுடன் பாரினிலே வெகுகாலந்தான்
துணிவுடனே வெகுகோடி தேசந்தானும்
துப்புரவாய்த் தான்திரிந்து சித்தர்தம்மை
மணிபோன்ற நூலதனை யிவர்க்குக்காட்டி
மனதுவரப் பின்னடத்தி மதியம்பூண்டு
அணியான வசுவனியாந் தேவர் நூலாம்
அன்புடனே காண்பித்து சொல்வார்பாரே. 626

பாரேதான் சித்தர்முனி சொல்லக்கேளும்
பாங்கான வசுவனியாந் தேவர்னூலை
நேரேதான் அகஸ்தியரை யானுங்கண்டேன்
நெடிதான பெருநூலை வாங்கினோம்யாம்
சீரான குருநூலை வாங்கிதேவா
சிறப்புடனே தங்களிடங் கொண்டுவந்தோம்
சூரான உங்களிடம் பெருநூலென்று
குறிப்புடனே யிருக்கும்வகை கேட்டிட்டோமே. 627

கேட்டதொரு நூலதனை சித்தர்தாமும்
கிருபையுடன் பாண்டிவள சித்துக்கப்பா
நீட்டமுடன் பெருநூலாங் காவியந்தான்
நிலையான தன்வந்திரி பகவான்றானும்
வாட்டமுடன் காண்டம் பன்னீராயிரந்தான்
வகுப்பான கருமகாண்டமென்னலாகும்
தேட்டமுடன் பாடியல்லோ குகையில்வைத்து
தீர்க்கமுடன் முத்திரை தாளிட்டார்பாரே. 628

தன்வந்திரியாரைப் பாண்டிவள சித்து கருமகாண்டம் பன்னீராயிரத்தைக் கேட்டது

இட்டதொரு கருமகாண்டக் காவியத்தை
எழிலான பாண்டிவள சித்துதாமும்
திட்டமுடன் சீஷவர்க்கந் தன்னைக்கொண்டு
தீரமுடன் நூலதனை வாங்குதற்கு
சட்டமுடன் சீடவர்க்கங் கூட்டிக்கொண்டு
சதுரமான பாண்டிவள சித்துதாமும்
கிட்டியே தன்வந்திரி குகைதான்பக்கல்
கீர்த்தியுடன் சென்றார்கள் சித்தர்தாமே. 629

தாமான சித்தர்முனி ரிடிகள்யாவும்
தன்வந்திரி பகவானை வினயங்கேட்க
கோமானாம் வெகுகோடி மாண்பரப்பா
குருக்களென் றுஞ் சீஷனென் று மனேகம்பேர்கள்
நாமமென்ற பேர்படைத்த சித்துதாமும்
நாதாக்க ளாசீர்மந் தன்னைக்கொண்டு
போமெனவே தன்வந்திரி பகவான்முன்னில்
பொன்னடிக்குத் தெண்டனிட்டார் கோடிபேரே. 630

கோடியாம் தன்வந்திரி பகவான்பாதங்
கொப்பெனவே அஞ்சலிகள் மிகவுஞ்செய்து
நாடியே சமாதியிடந் தன்னிற்சென் று
நாட்டமுடன் கர்ம காவியந்தா நூலாம்
தேடியே காண்டமது வேண்டுமென் று
தெளிவுபெற தங்களிடம் வந்தோமையா
பாடியதோர் சாத்திரத்தை யெங்களுக்கு
பட்சமுடன் தருகவென் று பணிந்திட்டாரே. 631

தன்வந்திரி கருமகாண்டங் கொடுத்தது

பணிந்துமே சாத்திரத்தைக் கேட்கும்போது
பட்சமுடன் பகவானும் மனதுவந்து
துணிந்துமே சாத்திரத்தின் சாபம்நீக்கி
துப்புரவாய் மேதினியில் பிழைக்கவென் று
அணிபெறவே பாடிவைத்த வேதந்தானும்
அறிஞர்முன் விழியில்லான் தன்னைப்போல
கனிவுடனே மணிநோட்டஞ் சொன்னாப்போல
காசினி யிலிக்கோர்வை வைத்துக்கொள்ளே. 632

கொள்ளவே அவையடக்க மிகவுங்கூறி
கொடுத்தாரே கோர்வையது கருமகாண்டம்
எள்ளளவும் வாராது கருமகாண்டம்
எழிலான மாண்பருக்குக் கருமகாண்டம்
உள்ளபடி தாமுரைத்தார் கருமகாண்டம்
ஒகோகோ நாதாக்கள் கண்டதில்லை
வள்ளல்பெறும் ஆகாகா யிந்தகோர்வை
மகத்தான கோர்வையது மகிமைபாரே. 633

பார்க்கையிலே நூல்கொடுத்தார் பகவான்றானும்
பாங்குடனே சாத்திரத்தை யேந்திக்கொண்டு
தீர்க்கமுட னாசீர்மம் பொதிகைதன்னில்
திரளுடனே யெந்தனது பக்கல்வந்து

ஏர்க்கவே கருமகாண்டந் தன்னிலப்பா
என்முன்னே சங்கமதில் வைத்தாரங்கே
சீர்புகழுஞ் சாத்திரத்தை யானுங்கண்டு
சிறப்புடனே வாசீர்மங் கூறினேனே. 634

கூறினேன் கோர்வைபோ லொன்றுங்காணேன்
குவலயத்தில் கருமகாண்டம் மிகுத்தகோர்வை
மாறியே யிக்கோர்வை முன்னொன்றுங்காணார்
மகத்தான கோர்வையிது முதநூலப்பா
தேறியதோ ராறுலட்சங் கிரந்தத்துள்ளே
தேற்றமுடன் சாத்திரந்தான் பெருநூல்காண்டம்
ஆறிடமு மில்லாத கருநூலப்பா
அப்பனே யான்கண்ட வளமைபாரே. 635

தன்வந்தரி கருமகாண்டம் பன்னீராயிரத்துக்கு அகஸ்தியர் தருமகாண்டம் ஆயிரம்

வளமான சாத்திரத்தைக் கண்டபோது
வாகான சாத்திரத்துக் கெதிர்நூலப்பா
உளவான கருமவினை யெல்லாங்கண்டு
உத்தமனே முன்பிறப்பு செய்திபார்த்து
களவான வளவறிந்து தருமகாண்டம்
கருத்துடனே பாடிவைத்தேன் ஆயிரந்தான்
அளவுடனே யவரவர்கட் குகந்தவண்ணம்
அப்பனே பாடிவைத்தேன் காண்டமாமே. 636

காண்டமா மாயிரமாம் தருமகாண்டம்
கருத்துடனே பாடிவைத்தேன் புலஸ்தியாகேள்
தூண்டியதோர் கருமான மதிலேதோயும்
துப்புரவாய் சாத்திரத்தை யெதிராகத்தான்
வேண்டியதோர் நோயினது சாரந்தன்னை
விட்டகற்றி வினைதீர தருமகாண்டம்
கூண்டதுபோநீ லாயிரமாஞ் சிமிழ்வேதந்தான்
கூறினேன் குவலயத்து மாண்பருக்கே. 637

மாண்பான தரும சாத்திரமாயிரந்தான்
மகத்தான சித்துமுனி சொரூபருக்கு
ஆண்மையுடன் சாத்திரங்கள் பேதாபேதம்
ஆகமுடன் கண்டறிந்து பிணியின்பேதம்
தாண்பான கருமத்தை நிவர்த்திசெய்ய
தகமையுள்ள சாத்திரங்கள் மிகப்பொருந்தி
வேண்மையுடன் சாத்திரத்தைத் தானமைத்து
விருப்பமுடன் தான்கொடுத்தேன் சித்தர்:

சித்தான சித்துமுனி ரிடியார்தாமும்
சீருடனே சாத்திரத்தை யுகந்துகொண்டு
பத்தியுடன் சாத்திரத்தை வாங்கியல்லோ
பாங்குடனே தேவதா பொதிகைதன்னில்
சத்தியென்ற மனோன்மணியாள் தியானத்தோடு
சதுரான தரும சாத்திரத்தைத்தானும்
வெத்தியுட னரங்கேற்றல் செய்துமேதான்
விருப்பமுடன் நூல்கொடுத்தார் முனிவர்தாமே. 639

முனியான சித்துமுனி ரிடியார்தாமும்
முனையான தருமநூல் சாத்திரத்தை
கனிபோன்ற மாண்பருக்கு மிகவுரைத்து
கருவான வேதந்தான் முதநூலென்றும்
தனியான வேதநூல் முதல்நூலென்றும்
தாக்கான மற்றநூல் கடைநூலென்றும்
தொனியான வேதநூ லாயுள்வேதம்
தொல்லுலகில் பாடிவைத்த துறையிதமே. 640

தென்பொதிகை நவகோடி சித்தர்கள் மகிமை கூறல்

துறையான முறைகோடி தொந்தங்கோடி
துணிவுடனே சொல்லுகிறேன் புலஸ்தியாகேள்
முறையான தென்பொதிகை தன்னில்வாழும்
மூதுலகைத் தான்கடந்த சித்தரப்பா
கறைபோன்ற கடலேழுஞ் சுத்திவந்த
கடிதான நவகோடி சித்தருண்டு
மறைவான சித்தர்முனி ரிடியார்தாமும்
மகத்தான வளப்பமது வுரைப்போம்கேளே. 641

கேழ்க்கவென்றா லின்னம்வெகு வதிசயங்கள்
கெடியான மும்மூர்த்தி சொரூபரான
நீழ்க்கமுடன் பொதிகைதனில் வரைமேலப்பா
நீடான பாறையொன்று சுனைதானுண்டு
வேழ்க்கமல மனோன்மணியாள் வீற்றிருக்கும்
வேதாந்தத் தாயினது பீடந்தானும்
வாழ்க்கமுடன் பீடமது சார்புதன்னில்
வகுப்பான வாயக்கால் கோட்டையுண்டே 642

உண்டான கோட்டையது பதிதானப்பா
உத்தமனே நாதாக்கள் இருக்கும்பீடம்
திண்டான வாயக்கால் கோட்டைதன்னில்
திடமான குகைதனிலே வாசலுண்டு

பண்டான வாசல்வழி தன்னிலப்பா
பாங்கான சுனையொன்று தடாகமுண்டு
செண்டான வெண்டாமரை தானிருக்கும்
சிறப்பான தடாகமது காணலாச்சே. 643

பொதிகை மலை மத்திமத்தில் வெண்டாமரைத் தடாகங்காண்பது

காணவென்றால் நவகோடி சித்துதாமும்
காசினியில் பொதிகைதனில் காணலாகும்
வேணபடி நவகோடி சித்துதம்மை
விருப்பமுடன் காண்பதற்கு மாண்பர்கோடி
நீணவே யுபதேசம் பெறுவதற்கு
நீடான வெகுகோடி மாண்பர்தாமும்
தோணவே யாசீர்மம் மிகவுஞ்செய்து
தோறாம லஞ்சலிகள் செய்வார்தாமே. 644

செய்வார்கள் நவகோடி சித்தருக்கு
திறமான வஞ்சலிகள் மிகவுஞ்செய்து
உய்யவே சித்தரிடங் கிட்டிவந்து
உற்றதொரு கருவிகர ணாதியெல்லாம்
பெய்யவே சின்மயத்தி லிருந்துகொண்டு
பேரான சமுசார வாழ்க்கையற்று
எப்பவே பதாம்புயத்தை மிகவுநண்ணி
எழிலான பதவிதனைத் தேடினாரே. 645

தேடினார் யின்னமொரு மார்க்கம்பாரு
தெளிவான புலஸ்தியனே செப்பக்கேளு
நாடியே பொதிகைமலை தன்னிலப்பா
நாயகனே நவகோடி சித்தரப்பா
கூடியே கும்பல்கும்ப லாகவேதான்
குண்ண துவைத்தான் கடந்து வருவாரப்பா
நீடியே வெண்டாமரைப் பொய்கைதன்னில்
நீட்டமுடன் ஸ்நானமது செய்வார்பாரே. 646

பாரேதான் செபதபங்கள் முடித்தக்கொண்டு
பாகமுடன் குகைவாசல் நின்றுகொண்டு
நேரேதான் மனோன்மணியை தியானித்தேதான்
நிஷ்களங்க மாகவல்லே। மதியம்பூண்டு
சீரேதான் திட்டென்ற வாசல்தனனில்
சிறப்புடனே சித்தர்களு மிருந்துகொண்டு
ஊரேதான் பதிவழியை நோக்காமற்றான்
உத்தமர்கள் சேவைக்கு யிடமாவாரே. 647

ஆவாரே மாண்பர்கள்தான் காணும்போது
அப்பனே புலஸ்தியா மகிமைசொல்வார்
சாவாமல் வெகுகோடி வரைதானப்பா
சட்டமுடன் தாரணியி லிருந்துகொண்டு
வேவாத தலைதனையே கண்டுகொண்டு
வேட்கமுடன் சோதனைக்குச் சொரூபனாகி
நோகாமல் கற்பமது வுண்டுமேதான்
நெடுங்கால மிருந்துமே நேசிப்பாரே. 648

நேசிப்பார் மாண்பர்தமை விருப்பங்கொண்டு
நேர்மையுடன் ஞானோப தேசஞ்சொல்வார்
பூசித்து யவர்மனதை மிகவாராய்ந்து
புகழுடனே மாராட்ட மிகவுஞ்செய்து
ஆசியென்னு மாசீர்மம் புகலாமற்றான்
அப்பனே மாறாட்ட மிகவுஞ்செய்து
ஊசியென்னுங் காந்தமது யிரும்பைத்தானும்
உத்தமனே யிழுக்கின்ற பான்மையாமே. 649

பான்மையுட னிரும்பதனைக் காந்தந்தானும்
பட்சமுட னிழுக்கின்ற கதையைப்போல
மேன்மையுடன் தனையடுத்த சீடர்மாற்கு
மேலான கருவிகர ணாதியெல்லாம்
வான்மையுடன் போதனைக்கு வாளதாக்கி
வகுப்பான காயத்துக் குறுதிகூறி
தோன்மையுடன் காயகற்ப மெடுத்துரைத்து
துப்புரவாய் உபதேசங் கூறுவாரே. 650

கூறுவார் ஞானோப தேசப்பாலை
குறிப்புடனே தனக்குகந்த சீடனுக்கு
மாறுபடா வுண்மையினால் மதியகற்றி
மகிமையுள்ள சித்தனென்று மதிப்பிட்டேங்கி
ஏறுவார் மனங்கண்டு திடமுங்கண்டு
எழிலான வுவமைகளுந் தானறிந்து
வீறுடைய சித்தனென்று தியானங்கொண்டு
மேலான பதவிக்கு யிதஞ்சொல்வாரே. 651

சொல்லவே மலைதனிலே யிட்டுக்கொண்டு
சொரூபமென்ற குகைவாசல் தனைக்கடந்து
வெல்லவே மேற்சகரம் தன்னிலேறி
மேலான கற்பமென்ற மதிப்பூண்டைத்தா

கொல்லவே வந்ததொரு யேமனுக்கு
கோபமது நேராத மூலியப்பா
புல்லவே மூலியது தான்கொடுத்துப்
புகமுடனே கைமசக்கு செய்வார்தாமே. 652

தாமான யின்னமொரு கருமானங்கேள்
தாக்கான புலஸ்தியனே சொல்லக்கேளீர்
கோமான மென்றதொரு சித்தர்தாமும்
கொடிதான கோபமதை மிகவேதள்ளி
வேமான மாகவல்லோ குகையைவிட்டு
வேதாந்த மாண்பர்களைக் காணவென்று
நாமான மாகவல்லோ சொரூபர்தாமும்
நயமுடனே கூப்பிட்டு மொழிசொல்வாரே. 653

சித்தர்கள் கைமசக்கு கருவுதடவியது

மொழியான வார்த்தைக்கு முன்னேநின்று
மோசமது வாராமல் மாண்பர்தாமும்
வழிபோன்ற வாசல்முன்னே நின்றுகொண்டு
வலக்கரத்தை நீட்டவென்று காட்டச்சொல்லி
சுழியான கருவென்ற மையைத்தானும்
சூட்சமுடன் கைதனிலே தடவுவார்கள்
பழியாமல் மாண்பர்களும் வசியமாவார்
பாருலகின் வாழ்க்கைதனை மறப்பார்பாரே. 654

பார்க்கவென்றால் உள்வாசல் தனையழைத்து
பாண்மையுட னாசீர்மந் தன்னிற்சென்று
தீர்க்கமுடன் புலியா சனத்தின்மீது
திறமுடனே நிஷ்டையிலே யிருக்கச்செய்து
ஏர்க்கவே ஞானமென்ற வட்சரத்தை
எழிலாகத் தானமைத்து ரிடியார்தாமும்
நார்க்கமலம் வீற்றிருக்கும் மனோன்மணியைத்தானும்
நற்சோதிப் பிரகாசங் காண்பிப்பாரே. 655

காணவென்றால் செகசோதி தன்னிற்றோன்றுங்
கனமான மனோன்மணியைக் காண்பதில்லை
பூணவே சின்மயத்தைப் பூண்டுகொண்டு
புகழான மோனநிலை பற்றிநின்று
வேணவே பிரணவத்தை யுச்சரித்து
வேகமுடன் ரேசகத்தை மனதிலுன்னி
தோணவே பிரகாச மானஜோதி
தோன்றினால் சகலசித்து கைக்குள்ளாச்சே. 656

ஆச்சப்பா சிலகால மிருக்கச்செய்வார்
அப்பனே புலஸ்தியனே யின்னங்கேளு
மூச்சுடனே வுடல்பொருள்க ளாவியெல்லாம்
முழுதுமே யுந்தனுக்கு தத்தமீவார்
பேச்சடங்கி யிருப்பதற்கு வாசியோகம்
பிராணாய மனநிலையை நிறுத்துதற்கு
மாச்சலுடன் நிலைநிறுத்தி காயகற்பம்
மார்க்கமுட னுண்ணுதற்கு வழிசொல்வாரே. 657

சொல்லவென்றால் மவுனநிலை தன்னிற்றோன்றும்
சுடரான முச்சுடரைக் காணலாகும்
வெல்லவே பூரணத்தை மனதிருத்தி
வெட்டவெளி வாசலுக்குள் அங்கென்றோதி
புல்லவே புருவநிலை நடுமையத்தில்
புகழான நாசிநிலை தனைநிறுத்தி
அல்லலெனும் பொய்வாழ்வை விட்டகற்றி
அம்பரத்தின் மகிமைதனைக் காணுவாரே. 658

மகிமையென்றால் மகிமையது சொல்லப்போமோ
மகத்தான நாதாக்கள் மகிமையப்பா
தகிமையென்ற பிரணவத்தை யுச்சரித்து
தாக்கான தவநிலையி லிருந்துகொண்டு
சகிக்கவே முடியாமல் நாதர்தாமும்
சட்டமுடன் ரிடியொளிவை பின்னுங்கேட்டு
முகிக்கவே தவநிலையை யுறுதிகொண்ட
முன்பின்னாய் மாறாட்டங் கேழ்ப்பார்பாரே. 659

மாறாட்ட மிருந்தாலும் மறவுநீக்கி
மகத்தான ஞானோப தேசஞ்சொல்வார்
கூரான யோகவித்தை யறிந்தபின்பு
குவலயத்தி லாசைதனை மறக்கச்செய்து
தூரான துன்மார்க்க வலையைநீக்கி
துப்புரவாய் சன்மார்க்க வலையிற்சென்று
சேரான பவக்கடலை விட்டகற்றி
சின்மயத்தை யென்னாளு மோதுவாரே. 660

ஓதுவார் கலைக்கியான மனைத்துமேதான்
ஓகோகோ நாதாக்கள் மகிமைதேடி
தீதுறவே யென்னாளுஞ் சித்தர்பக்கல்
தீரமுடன் தாமிருப்பார் மாண்பர்தாமும்

வா துறவே வையகத்தின் வாழ்க்கையற்று
வாகுடனே சித்தொளிவை குருவாயெண்ணி
தா துப்புகழ் சமாதியிலே கோடிகாலம்
தாரணியி லிருப்பவர்கள் கோடியாமே. 661

கோடியாஞ் சமாதிமுத லறிந்துகொண்டு
கோடான கோடிவரை யிருக்கவென்றும்
நீடியே வெகுகால சித்தனென்றும்
நீடான வுலகுதனி லிருப்போனென்றும்
கூடியே குருபதத்தை மனதிலுன்னி
குவலயத்தில் சித்தொளிவாய்ப் பேர்தான்கொண்டு
தேடியே சதாகாலங் குகையில்நின்று
தெளிவுடனே குருவணக்கம் நடப்பார்பாரே. 662

நவசித்தாதியிடம் சீடர்கள் உபதேசம் பெற்றது

நடக்கவே யின்னமொரு மார்க்கங்கேளு
நலமான புலஸ்தியனே சொல்வேன்பாரு
அடக்கமுடன் நவதா து சித்தர்முன்னே
அன்போடு தாள்பணிந்து வணக்கஞ்செய்து
முடக்கமில்லா தேவலுக்கு முன்னேநின்று
முனியான சித்தர்கட்கு பணிகள்செய்து
திடமுடனே யேவலுக்கு முன்னேநின்று
தீரமுட னிருப்பார்கள் சீடர்தாமே. 663

சீடராம் வெகுகோடி மாண்பரப்பா
சிறப்புடனே யேவலுக்கு முன்னேநிற்க
நாடவே சித்தாதி ரிடிகள்தாமும்
நன்மைபெற வவர்களுக்கு விடையஞ்சொல்வார்
தேடவே குகைதனிலே வெகுகாலந்தான்
தேற்றமுடன் யிருந்தீர்கள் சீடமாரே
ஓடவே யெமைவிட்டு நீங்கியல்லோ
உத்தமரே போவென்று விடைசொல்வாரே. 664

விடையென்று சொல்லியல்லோ சித்துதாமும்
விருப்பமுடன் சமுசார வாழ்க்கைபூண
தடையின்றி காசினியில் செல்வதற்கு
சட்டமுட னுத்தாரம் தாமேசொல்வார்
குடையான நவகோடி திரவியந்தான்
கோடான கோடிபொருள் தாமுமீவார்
சடைபோன்ற கேஷயத்தை தானுமாற்றி
சட்டமுடன் மாய்கைவழி செல்லென்பாரே. 665

செல்லென்ற போதினியிலே சிலதுசீடர்
சிறப்புடனே வையகத்தை யாமறந்தோம்
சொல்லென்ற வார்த்தைக்கு புத்தியோடு
சொரூபநிலை தாமறிந்த மாண்பர்தாமும்
புல்லென்ற சமுசார வாழ்க்கைவேண்டாம்
பூவுலகி லென்னபலன் கண்டதுண்டோ
அல்லல்படும் துயரமது மிகுதியாகும்
அப்பனே வாழ்க்கையது வேண்டாம்பாரே. 666

பாரேதான் சிவமாண்ப ரிந்தமார்க்கம்
பட்சமுடன் தாமுறைப்பா ரிந்தவண்ணம்
நேரேதான் சிவமாண்பர் வாழ்க்கைகொண்டு
நிலையான மகிமைவித்தை யறிந்துகொண்டு
சீரேதான் சமுசார வாழ்க்கைநின்று
சிறப்புடனே குளிகையது பெருகவென்று
போரேதா னென்றுரைத்து பேதலித்து
பெருமையுடன் விடைகேட்கத் துணிந்திட்டாரே. 667

துணிந்ததொரு மாண்பருக்கு சித்தர்தாமும்
சிறப்புடனே மனதுவந்து யெல்லாமீய்ந்து
கணிதமுடன் யவரவர்க்குத் தக்கதாக
காணிக்கை தந்துமல்லோ வரமுமீவார்
பணிந்ததொரு மாண்பராஞ் சீடருக்கு
பான்மையுடன் கைமசக்கு முறித்துமேதான்
அணியுடனே லோகபதி வாழ்கவென்று
அப்பனே வுத்தாரம் தருவார்தானே. 668

சித்தர்கள் சில சீடரை சமுசார வாழ்க்கைக்கு அனுப்பியது

தானேதான் சீடவர்க்க மாண்பரெல்லாந்
தகைமையுள்ள சித்தர்களும் விடையும்பெற்று
மானமுடன் வையகத்தில் வாழ்கவென்று
மார்க்கமுடன் விடைபெற்றுப் பதியில்வந்து
தேனமிர்த மென்ற சிற்றின்பந்தன்னில்
தெள்ளமுர்தக் கடல்தனிலே மிகவுமுழ்கி
வானுலகுக் கிடையூறு மிகவேதேடி
மண்டலத்தில் மறந்தவர்கள் கோடியாமே. 669

கோடியாம் சமுசார வாழ்க்கைதன்னில்
குணமுடனே மறந்தவர்கள் கோடிபேராம்
நாடியே சமுசார வாழ்க்கைநின்று
நலமுடனே வெகுகால மிருந்துகொண்டு

தேடியே வாண்டுக்கோர் பூசைதானும்
சிறப்புடனே குருபூசை செய்வார்பாரு
நீடியே தனக்குவரும் இடையூர்க்கெல்லாம்
நித்திலங்கும் குருபரனை நினைப்பார்தாமே. 670

நினைக்கையிலே குருவான சித்தர்தாமும்
நீடூழிக் காலம்வரை இருந்தசீடன்
தினக்கிரம வலங்காரப் படியேதானும்
திகழான சீடனென்ற சொரூபன்றானும்
மனப்படியே வுறுதிகொண்டு வதீதந்தானும்
மகதேவ னென்றுரைத்த மொழியினாலே
வனப்புடனே நினைத்ததொரு காரியங்கள்
வளமுடனே சித்தியா மென்பார்பாரே. 671

என்னவே சித்துமுனி சொரூபர்தாமே
எழிலான மனோலயங் கொண்டபோது
துன்னவே சீடருட மார்க்கமெல்லாம்
துறையோடு முறையோடுஞ் சித்தியாகும்
பன்னவே பெரியோர்க ளாசீர்மத்தால்
படுமுன்னே யவர்களுரை பலிக்கும்பாரு
வின்னமது வாராது அவர்கள்வாக்கு
விண்ணுலகில் சித்திபெற்ற சித்தராமே. 672

சதுரகிரி வடபாக சித்தர்

சித்தான சித்துமுனி சொரூபரப்பா
சிறப்புடனே யின்னமுண்டு வுரைப்போம்பாலா
முத்தான புலஸ்தியனே முடிமன்னாகேள்
மூவுலகி லின்னமுண்டு சித்தர்வர்க்கம்
வெத்தியுள்ள சதுரகிரி வடபாகத்தில்
வீற்றிருப்பா ரனேகம்பேர் நாதர்தாமும்
பத்தியுடன் நாதாக்கள் தன்னைக்காண
பாருலகில் வெகுமாண்பர் போவர்தாமே. 673

போவாரே யம்மலையி லதிசயங்கள்
பொங்கமுட னுரைப்பதற்கு நாவுமில்லை
சாவாத மூலியுண்டு கற்பமுண்டு
சதகோடி சூரியர்போல் சித்தருண்டு
வேவாத சுருமூலி விடமூலிதானும்
வேண்டியதோர் கருமான மனேகமுண்டு
கோவான ரோசனையு மங்கேயுண்டு
குணமான கஸ்தூரி யுண்டுபாரே. 674

பாரேதான் குங்குமப்பூ விளைவுமுண்டு
பாங்கனா சாதிக்காய் விருட்சமுண்டு
நேரேதான் யேலக்காய் விளைவுமுண்டு
நெடிதான செங்கொடி வேலியுண்டு
போரேதான் போஸ்தக்காய் விளைவுமுண்டு
பொங்கமுடன் ரேவல்சின்னி விளையும்பாரு
தீரேதான் செங்கடுக்காய் விருட்சமுண்டு
சீரான கருமத்தை செடியுமாமே. 675

செடியான ஆள்வணங்கி யங்கேயுண்டு
செவ்வகத்தில் பேய் நுணா அங்கேயுண்டு
கடியான அரவத்தின் சிரியானங்கை
காட்டானைத் தான்வணங்கும் மூலியுண்டு
பிடியான மான்வணங்கி மூலியப்பா
பேரான கரும்பசளை கருவணாத்தி
கொடியான தகரையப்பா கள்ளிதானும்
கோடான கோடிமூலி யனேகமுண்டே 676

சதுரகிரி மூலிகைசித்தர்வளப்பம்
சண்டீசுவராசீர்மம்

உண்டான வின்னம்வெகு வதிசயங்கள்
உத்தமனே யாமுரைப்போம் புலஸ்தியாகேள்
அண்டர்முனி சித்தர்கள்தான் இருக்குங்காடு
அடவிகள் மெத்தவுண்டு சொல்லப்போமோ
திண்டான வடபாகம் திட்டொன்றுண்டு
திகழான திட்டுக்கு கீழ்பாகத்தில்
சண்டீசுவர் முனிவ ராசீர்மந்தான்
சாற்றவொண்ணா மகிமையது மெத்தவுண்டே 677

மெத்தவென்றால் வாயக்கால் மண்டபந்தான்
மேதினியில் யாருந்தான் கண்டதில்லை
சத்தமகா ரிடியாரும் போனதில்லை
சதாநித்தம் சண்டீசு வரரையப்பா
நித்தமுமே யாசீர்மந் தன்னில்தானும்
நிகரான முனிவரை யெல்லோருந்தான்
கத்தனென்று கைதொழுது போற்றிசெய்து
காசியினில் யெப்போதும் துதிப்பார்தாமே. 678

துதிப்பாரே முனிவராஞ் சித்துதம்மை
துறையான முறையோடு ஆசீர்மித்து
மதிப்புடனே சீடர்களோ நூறுபேராம்
மகத்தான யீசுவர சித்துதம்மை

கதிப்புடனே வெகுகாலஞ் காத்திருந்து
கைகண்ட நூலிதனை வாங்கவென்று
அதிதமுடன் சீடரெல்லா மொன்றாய்க்கூடி
அங்ஙனவே யாசீர்மஞ் சென்றார்பாரே. 679

சென்றாரே யீசுவரரை முடிவணங்கி
சேர்வையது மிகப்புரிந்து மாண்பரெல்லாம்
வென்றிடவே யவர்செய்த நூலைவாங்க
வெகுகோடி வணக்கமுடன் மலைமேற்சென்று
நன்றிதனை யெங்களுக்குத் செய்யநண்ணும்
நாதாந்த சித்தொளிவைக் கண்டுநண்ணி
குன்றின்மேல் தானிருக்கும் சோதியாரைக்
கூட்டமிட்டுக் காணவென்று யேகினாரே. 680

சண்டீசுவர சித்துவை நூல்கேட்டது

ஏகவே யேகவெள்ள மாண்பரப்பா
எழிலான சித்தினிட மருகேசென்று
சாகமுடன் சித்தொளிவைத் தன்னைக்கண்டு
சட்டமுடன் குருபாத மடிவணங்கி
ஆகமங்கள் தானறிந்த வன்புளாரே
அடியார்கள் கூட்டமிட்டு வந்தோம்சாமி
போகமென்ற மாய்கைதனை விட்டொழித்துப்
பொங்கமுடன் கதிபெறவே வந்திட்டோமே. 681

வந்ததொரு யெங்களைத்தா னாசீர்மித்து
அன்புடனே யடியார்கள் யீடேறத்தான்
சொந்தமாய் மனதுவந்து ரிடியார்தாமும்
சித்தொளியா ரெங்கள்மேல் கிருபைவைத்து
அந்தமுடன் பாடிவைத்த சண்டீஸ்வரன்தான்
அப்பனே காவியந்தா னாயிரத்தை
இந்தமா னிலத்துதித்த யெங்களுக்கு
ஈஸ்வரரே கொடுமென்று வணங்கினாரே. 682

வணங்கியதோர் சீடர்களா மெங்களுக்கு
வாசீர்மந் தான்கொடுத்து நூலையீய்ந்தால்
இணங்கியே யென்னாளு மடியார்தம்மை
இன்பமுடன் தாம்நினைத்து கதியேகொள்வோம்
சுணங்கமது வாராமல் சொரூபர்தாமும்
துப்புறவாய் நூல்கொடுக்க வினயஞ்சொல்வார்
மணம்பெறவே நூல்கொடுத்தால் நாங்களெல்லாம்
மகத்தான மேற்பதவி பெறுவோம்பாரே. 683

பாரென்று சீடவர்க்குஞ் சொன்னபோது
பட்சமுடன் ரிடியாரு மன்புகூர்ந்து
நேருடனே நூலதனைக் கொடுத்தோமானால்
நேர்மையுடன் உலகமெல்லாஞ் சித்தாய்ப்போகும்
சீருடைய நூலதனைக் கொடுத்தபோது
சிறப்பாக ஒருவருக்கோர் மதியாரப்பா
பேருடைய பெருநூலைக் கொடுப்பேனானால்
பேரின்பக் கடலதனைப் பெருகலாமே. 684

பெருகவென்றால் அஷ்டசித்தி கைக்குள்ளாகும்
பேரின்ப வீடதனைக் காணலாகும்
மறுமையிலும் பிறவியது சென்மமப்பா
மகத்தான குருபீட மடையலாகும்
வறுமையது வந்தாலும் மனங்கோணாமல்
வளமான பேரின்பங் கொள்ளலாகும்
இருமாந்து இருந்தவர்க்கு ஒன்றுமில்லை
எழிலாக மாந்தர்களே கிட்டாதன்றே. 685

கிட்டாத பொருளதனைக் கிட்டியென்னை
கிருபையுடன் கேட்டதொரு புண்ணியத்தால்
இட்டமுடன் நூலதனைக் கொடுப்பேனென்று
எழிலான சாபமதை நிவர்த்திசெய்து
துட்டர்களுக் கின்னூலைக் கொடுக்கவேண்டாம்
துறையான கருவிகர ணாதியப்பா
சட்டமுடன் நூல்கொடுத்து வாசீர்மித்து
சதாகாலம் நற்கதியை அடைவீர்தாமே. 686

அடையவென்றால் நூலதனை வாங்கியப்பா
ஆருக்குங் காட்டாமல் மௌனங்கொண்டு
தடையறவே நூலிதனைச் சுத்தமாண்பர்
தகமையுடன் தான்கேட்பார் வதீதஞ்சொல்லு
இவைவிடா தென்னாளுங் குருநூலப்பா
எழிலான எங்களிட சமாதினின்று
விடைபோலே பூசைமுகந் தன்னில்வைத்து
விருப்பமுடன் போற்றுகின்ற நூலிதாமே. 687

நூலான நூலதனைக் கொடுக்கவென்று
நுட்பமுடனெங்கள்குரு நாதர்சொன்னார்
காலான சண்டீஸ்வர நூல்தானப்பா
காசினியில் வெகு ______________

இது முதல் பதினொரு பாடல்கள் முழுவதும் சிதைந்துவிட்டன.

பாரேதான் நூலதனை ஏற்றல்செய்து
பாங்குடனே திருக்கூட்டத் தார்களெல்லாம்
நேரேதா னின்னூலுக் குறியனூல்கள்
நேர்மையுடன் யாருந்தான் சொன்னதில்லை
சீரேதான் சங்கத்தார் எல்லாங்கூடி
சிறப்புடனே அரங்கேற்றஞ் செய்துமேதான்
தீரேதா னகஸ்தியர்க்கு குருப்பட்டந்தான்
திகழாகத் தான்கொடுத்தார் சித்தர்தானே. 699

அகஸ்தியர்க்கு பட்டச்சிறப்பு

தானான குருமுனியா ரென்றுசொல்லி
தன்மையுள்ள சங்கத்தா ரெல்லாருந்தான்
கோனான குருவணக்கம் மிகவுங்கூறி
குவலயத்தி லின்னூல்போல் யார்தான்செய்வார்
பானான பராபரியாள் கடாட்சத்தாலே
பாடிவைத்த பெருநூலாங் காவியந்தான்
தேனான மனோன்மணியாள்காமரூபி
தேற்றமுட னாசீர்மஞ் செய்தார்காணே. 700

காணவே அகஸ்தியர்க்கு திருமூலவர்க்கர்
கண்காணா அஞ்சலிகள் மிகவுஞ்சொல்லி
தோணவே பாரிசாத மாலையொன்று
தொடுத்தார்கள் அகஸ்தியர்க்குத் திருமூலத்தார்
வேணபடி சங்கத்தார் முன்னதாக
விருப்பமுடன் மகிமைகளும் மிகவுங்கூறி
வாணவர்முதல் பண்டிதங்க ளதிகங்கூறி
வளமாக செயவாழ்த்து கூறினாரே. 701

கூறவே பொதிகமலை நகரிமேளம்
குறிப்புடனே துத்தாரி தாரைசின்னம்
ஆறவே செயபேரி முரசுமார்க்கம்
அகஸ்தியர்க்கு சங்கத்தார் கொண்டுசென்று
மாறவே பொதிகைமலை சுத்தியல்லோ
மகத்தான முனிவரிடம் நடந்துவந்து
ஏறவே மலைதனிலே சென்றுமேதான்
எழிலான குகைக்குள்ளே வழிவிட்டாரே. 702

விட்டாரே அவரவர்க ளாசீர்மத்தில்
விடுபட்டுப் போனார்கள் சித்தரெல்லாம்
இட்டமுடன் வீற்றிருப்பார் அகஸ்தியர்தானும்
எழிலான பதிதனிலே இருந்தாரங்கே

வட்டமுடன் திருமூல வர்க்கத்தார்கள்
வாகுடனே சுத்திவந்து நமஸ்கரித்து
சட்டமுடன் தங்களது வாசீர்மந்தான்
சாங்கமுடன் செல்வதற்கு விடைகொண்டாரே. 703

விடைகொண்டார் திருமூல வர்க்கத்தார்கள்
மேதினியி லெல்லவரு மொன்றாய்க்கூடி
தடையறவே அகஸ்தியனார் பாதம்நோக்கி
தகைமையுட னெம்பதிக்குப் போறோமென்று
நடைகொண்டு திருமூல வர்க்கத்தோர்கள்
நளினமுடன் உத்தாரங் கேட்டுமேதான்
படைகூட்டந் தன்னுடனே மூலவர்க்கம்
பாங்குடனே செல்கவென்று விடைகேட்டாரே. 704

கேட்டவுடன் அகஸ்தியரு முளமகிழ்ந்து
கிருபையுடன் திருமூல வர்க்கத்தோரை
நீட்டமுட னாசீர்மம் மிகவுஞ்சொல்லி
நீட்சியாய் உங்கள்பதி யேகவென்று
வாட்டமுடன் திருமூல வர்க்கத்தாரை
வண்மையுட னகஸ்தியரும் விடைதான்கூடி
தாட்டிகமாய்த் திருமூல வர்க்கத்தார்கள்
சட்டமுடன் தம்பதிக்கு யேகினாரே. 705

ஏகவே திருமூல வர்க்கத்தார்கள்
எழிலான சண்டீசர் முனிவர்தானும்
பாகமுடன் அகஸ்தியர்க்கு முன்னேநின்று
பட்சமுடன் நல்வினையுங் கூறுலுற்றார்
வேகமுடன் கோபமதைத் தணிக்கவென்று
வெற்றியுடன் சண்டீசர் முனிவர்தானும்
சாபமது நேராமல் முனிவர்தாமும்
சட்டமுடன் அகஸ்தியரைத் துதித்திட்டாரே.; 706

துதித்தாரே அகஸ்தியரு மனமுவந்து
துப்புறவாய் சண்டீசர் முனிவருக்கு
மதிப்புடனே ஞானநூல் பெருநூலப்பா
மார்க்கமுடன் உபதேசஞ் செய்தாரங்கே
விதிப்படியே யாகமங்க ளோதியல்லோ
விருப்பமுடன் உபதேசஞ் செய்தாரங்கே
கொதிப்பகற்றி யகத்தீச முனிவர்தாமும்
கொப்பெனவே விடைதந்தார் ரிடியாருக்கே 707

அகஸ்தியர் மலையிலிருக்குஞ் சித்தர்பெருமை

தந்தாரே இன்னமொரு மார்க்கங்கேளு
தயவுள்ள புலத்தியனே சொல்வேன்பாரு
சொந்தமுட னெந்தனது வடிவுகண்டு
தோற்றமுடன் படம்வரையும் வாய்ப்புபோல
அந்தமுடன் குலதிலகா எந்தன்மைந்தா
அன்புடனே சொல்லுகிறேன் இந்திராகேள்
பந்தமுடன் நூல்தேடி வாழ்ந்தாலென்ன
பாங்குடனே நூல்கொடுக்காப் பாவியாமே. 708

பாவியாம் எட்டிமரம் பழுத்துமென்ன
பாருலகி லவந்தானு மிருந்துமென்ன
ஆவியுடன் காயமது தான் அழிந்தும்என்ன
அவர்தானுஞ் சாகம லிருந்துமென்ன
கோவில்குள மடாலயங்கள் கட்டியென்ன
குவலயத்தில் நீதியில்லா ரிருந்துமென்ன
மேவிடவே வையகத்தி லாசையற்று
மேன்மையுட னிருப்பவனே சித்தனாமே. 709

சித்தனாம் புலத்தியனே இன்னஞ்சொல்வேன்
சிறப்புடனே இருளகற்றுஞ் சூரியன்போல்
வெத்தியுட னெந்தனது மலைவளத்தை
விருப்பமுடன் சொல்லுகிறேன் வினவிக்கேளு
முத்திபெற சித்தர்களை காணவென்று
மூதுலகில் வெகுகோடி மாண்பரப்பா
நித்தியமும் எந்தனது கிரியைநாடி
நிஷ்டையுடன் தவமிருக்க வருவார்பாரே. 710

பாரேதான் எந்தனது மலைவாரத்தில்
!பான்மையுடன் வெகுகோடி சித்தருண்டு
நேரேதா னெழுகடலா மார்க்கத்தோர்கள்
நேர்மையுடன் கதிர்போலே நாடிவந்து
சீரேதான் சிவமலையைக் கண்டுமல்லோ
சித்தருட பதாம்புயத்தை நண்ணவெண்ணி
சேரேதா னவர்களிடங் கிட்டிநின்று
சேர்வைக்கும் முன்பணிக்கும் நிற்பார்தானே. 711

நிற்கையிலே சித்தர்களு மனங்குளிர்ந்த
நேர்மையுட னவர்மீதிற் கிருபைகூர்ந்து
விற்பனமாய் வந்ததொரு மாண்பருக்கு
விருப்பமுடன் ஞானோப தேசஞ்செய்ய

சொற்பழுது நேராமல் புண்ணியோர்க்கு
சொரூபமென்ற பரவொளியைக் கண்ணிற்காண
அற்பமென்று நினையாமல் மனதிலுன்னி
அன்புடனே எண்ணமது கொண்டிட்டாரே. 712

கொண்டாரே சித்தர்முனி ரிடிகள்தாமும்
கொப்பெனவே சித்தர்முனி ரிடிகள்தாமும்
விண்டதொரு இதிகாசப் புராணமெல்லாம்
விருப்பமுடன் இருப்பிடத்தைச் சொல்லவெண்ணி
உண்டான தலமதுவைக் காட்டியேதான்
உத்தமரைத் தொண்டனா யிருக்கவெண்ணி
கண்டுமே அவர்மனதை மிகச்சோதித்து
களிப்புடனே மனவுறுதி கூறுவாரே. 713

அகஸ்தியர் மலை சித்தர்கள் எழுகடல் மாண்பர்களைத் தேடியெடுத்த தொகை

கூறவே நாற்றிசையின் பாஷையெல்லாம்
குறிப்புடனே தானறிவும் புலத்தியாகேள்
ஏறவே சித்தர்மெச்சும் யெந்தன்பாலா
எழிலான பலதொழிலுங் கற்றபூபா
மாறல்வழி செல்லாத மன்னாகேளு
மார்க்கமென்ற சாகரத்தை விட்டதீபா
ஆறலுட னகத்தியனார் மலையிலப்பா
அன்பான மகிமைதனைச் சொல்வேன்கேளே. 714

கேளப்பா மலைதனிலே யடிவாரத்தில்
கெடியான குகையொன்று சுரங்கமுண்டு
ஆளப்பா படிதளமாம் நூத்தொன்றுண்டு
அப்பனே யதின்பிறகே கிணறொன்றுண்டு
நாளப்பா யுகங்கண்ட சித்தரப்பா
நலமான வஷ்டசித்து அங்குவுண்டு
பாளப்பா சித்தர்களின் பெருமைதன்னை
பாங்குடனே சொல்லுகிறேன் பண்பாய்த்தானே. 715

ரிடியார் பெருமை

பண்பான அஷ்டசித்து சொரூபந்தன்னை
பாருலகில் மாணாக்கள் கேழ்க்கவென்று
நண்புடனே யஷ்டமா சித்துதாமும்
நலமுடனே ஒருதாய்க்கெண் பிள்ளையாகும்

திண்பான முனிவரென்ற யெட்டுபேர்கள்
திறமான பேர்படைத்த சித்தரப்பா
கண்பான சித்தர்களின் மகிமைதேடி
கலியுகத்து சித்தரென் று நினைத்திடாயே. 716

நினைவுடனே திரேதாயி னுகத்திலப்பா
நேரான யாதவ குலத்துதித்த
தினகரன்போல் தான்விளங்குஞ் சொரூபசித்து
திகழான யெண்பேர்கள் கோயிலுண்டு
பனையளவு உயரமது சித்தர்தாமும்
பான்மையுடன் தாமிருப்பார் குகையினுள்ளே
கனகமென்ற மேனியது போலேவீசும்
கவிவாணர் சித்தரென் று சொல்லலாமே. 717

சொல்லவே யஷ்டமா சித்துதாமும்
தொல்லுலகில் ரிடியினுட வரத்தினாலே
வெல்லவே குருபாதம் தானுமில்லை
வேதாந்தத் தாயினது கடாட்சத்தாலே
வல்லதொரு விட்ட குறை யிருந்தாலும்
வாகான ரிடியினுட வரத்தினாலும்
புல்லவே யஷ்டமா சித்துகட்கும்
புகழான சரஸ்வதியும் பொருந்தலாச்சே. 718

பொருந்தவே காளியென்ற தாசன்போல
பொலிவான நாவுதனில் பாஷையெல்லாம்
திருந்தவே நாலுயுக பாஷையெல்லாம்
தீர்க்கமுடன் தானமர்ந்த சித்தர்தாமும்
வருந்தவே கோடிவரை யிருந்துமல்லோ
வாகான பாஷையெல்லாம் கறைதான்கண்டு
அருந்தவே காயாதி கற்பங்கொண்டு
அவனிதனில் வெகுகால மிருந்தார்தானே. 719

இலங்கைவேந்தன் யுத்தகளத்தை கலியுக சீஷருக்கு போதித்தல்

தானான யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
தண்மையுள்ள புலஸ்தியனே சாற்றக்கேளும்
மானான தென்னிலங்கைப் பதியிலப்பா
மகத்தான ராவணனார் போர்க்களத்தை
கோனான வஷ்டமா சித்தர்தானும்
குறிப்புடனே பார்த்திருந்த அதிசயங்கள்
தேனான கலியுகத்து மாண்பருக்குத்
தெளிவுடனே கூறலுற்றார் சித்தராமே. 720

ஆமேதான் வஷ்டமா சித்துதாமும்
அன்புடனே கலியுகத்து மாண்பருக்கு
தாமேதான் கண்டதொரு வதிசயத்தை
தாக்குடனே கூறலுற்றார் மாண்பருக்கு
நேமமுடன் தென்னிலங்கைப் பதியில்தானும்
நேர்மையுடன் தானடந்த போர்க்களந்தான்
காமரதி ஸ்ரீசீதா தேவிதன்னை
கரியமால் இராவணந்தான் சிறைகொண்டானே. 721

சீதாபிராட்டியால் இலங்கை அழிவது

கொண்டானே தென்னிலங்கைப் பதியோன்தானும்
கொப்பெனவே ராமருட தேவிதன்னை
வண்டுழலாள் சீதைதன்னைச் சிறையெடுக்க
வாகுடனே ஸ்ரீராமன் கோபங்கொண்டு
தண்டுளவு மாலையணி பூபன்றானும்
கார்குழலாள் சீதையது பாசத்தாலே
கொண்டல்முடி ராவணன்மேல் யுத்தஞ்செய்து
கோபத்தால் அரக்கர்தனை யழித்திட்டாரே. 722

அழித்தாரே கோடிவெள்ளஞ் சேனையப்பா
அரிராம ரப்பொழுது சினமுங்கொண்டு
பழியான பழிதனக்கு நேர்ந்தயுத்தம்
பாருலகி லெவராலுஞ் சொல்லப்போமோ
வழியான ராவணனார் யுத்தந்தன்னில்
வாகுடனே பத்மயூகம் தான்பிரித்து
விழிபிதுங்க நாக்குழற கால்களைக்க
விருப்பமுடன் நெஞ்சுலர்ந்து திடுக்கிட்டாரே. 723

திடுக்கிட்டார் தென்னிலங்கை யாழிதன்னில்
தீரமுடனே வெகுகோடி வெள்ளஞ்சேனை
அடுக்கடுக்காய் மலைபோலே யுத்தசேர்வை
ஆயுதங்கள் தானெடுத்துப் போர்கள்செய்ய
படுமுன்னே ராட்சதர்கள் கூட்டத்தோடும்
பாங்கான ராமருட சேனையோடும்
தொடுமுன்னே வானரங்கள் கூட்டத்தோடும்
தொடர்ந்துமே யுத்தமது சொல்லொண்ணாதே. 724

அஷ்டமாசித்துகள் அனுமாருக்கு சஞ்சீவிமூலி காட்டல்

சொல்லவென்றால் யுத்தமது செய்வதற்கும்
தோல்வியென்ற ....
கொல்லிமலைத் தானிருக்கு மூலியெல்லாம்
கொப்பெனவே யஷ்டமா சித்துதாமும்
நல்லதொரு வனுமார்கள் கூட்டத்தார்க்கு
நலமாக உபதேசஞ் செய்தாரங்கே
வெல்லவே ராவணனார் சேனைதன்னை
விருப்பமுடன் கொல்வதற்கு வழிசொன்னாரே. 725

சொன்னாரே சஞ்சீவி மூலியப்பா
தொல்லுலகில் யாரேனுஞ் சொல்வாருண்டோ
மன்னவனார் யிலங்கபதி ராவணனார்
மார்க்கமுடன் சஞ்சீவி மூலியப்பா
தென்னிலங்கைப் பதியோனைத் தாமெடுத்து
தீர்க்கமுடன் யுத்தமது புரியவேதான்
வின்னமது நேராமல் ரிடியார்தாமும்
விருப்பமுடன் மூலிமலை காட்டினாரே. 726

ஸ்ரீராமருக்கு அஷ்டமாசித்துக்கள் பிரம்மை மைகொடுத்தது

காட்டினார் இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
கருவான கண்மணியே கழறக்கேளும்
பூட்டவே யெந்தனிரு மணிவிளக்கே
புகழான தெள்ளமுர்தக் கோவேகேண்மோ
நீட்டமுடன் ஸ்ரீராம ரானவர்க்கு
நீடான யுத்தமது புரிவதற்கும்
வாட்டமுடன் ராவணனை செயிப்பதற்கும்
வளமான மையொன்று செய்தார்தாமே. 727

செய்துமே யஷ்டமா சித்துதாமும்
சிறப்புடனே ராமரென்ற பூபனுக்கு
மெய்தனிலே தானணிந்து யுத்தஞ்செய்ய
மேன்மையுடன் மையொன்று செய்தளித்தார்
பைவதம் பூண்டதொரு ராமர்தாமும்
பட்சமுடன் லாடமதி லணிந்துகொண்டே
மையதனால் தான்செபிக்க ராமர்தானும்
மாறாட்டஞ் செய்யவல்லோ மைதந்தாரே. 728

தந்தாரே யஷ்டமா சித்துதாமும்
தாரணியில் லங்கைபதி வேந்தன்தன்னால்
வந்ததொரு யுத்தமதைச் செயிக்கவென்று
வண்மையுள்ள மையதனை நிர்மித்தேதான்
சுந்தரமாம் ராமருக்குக் கொடுத்தாரங்கே
சூட்சமுடன் ராமனுத்தஞ் செய்யும்போது
அந்ததொரு யுத்தமதில் ராமர்தானும்
அதிசயமாய்த் தோன்றிட்டார் திசைநாலெட்டே 729

எட்டான மையினது மகிமையாலே
எங்கெங்கும் ராமருட அவதாரந்தான்
அட்டான திசையெல்லாம் ராமர்போலே
அங்கங்கு நிற்பதுபோல் சேர்வையுண்டு
மட்டான தன்பதியின் நின்றாப்போலும்
மார்க்கமுடன் யுத்தமதிற் சென்றாப்போதும்
கட்டான மையினது பெருமைதன்னால்
காசினியில் மையினது வதிதம்பாரே. 730

பாரேதான் அஷ்டமா சித்தர்தன்னால்
பாருலகில் ராவணனார் சேனைதன்னை
நேரேதான் மையினது வசியத்தாலே
நேர்மையுடன் தான்செயித்தார் இலங்கைதன்னை
சீரேதான் சித்தருட பலத்தினாலே
சிறப்புடனே தான்செயித்தார் லங்கைதன்னை
தீரேதான் மையினுட போக்கைச் சொல்வேன்
திறமான மாண்பர்களே செப்பக்கேளே. 731

இலங்கை வேந்தனை செயித்த பிரம்மை மை

செப்பவென்றால் மையினுட பெருமைசொல்வோம்
சிறப்பான மூலிகையின் மார்க்கம்பாரு
ஒப்பவே கையானின் மூலிதானும்
உயர்வான பொற்கையான் மூலிதானும்
கப்பமுடன் பொன்னினா வார்ரையோடும்
கருவான பொன்னி னூமத்தைமூலி
வெப்பமான கரும்பசளை செம்பசளையாகும்
வேட்கமுடன் கறுப்பலறி செவ்வலறியாமே. 732

ஆமேதான் குவளையோடு கருங்குவளையாகும்
அப்பனே பிரம்மமென்ற மூலிதானும்
தாமேதான் பேய்மிரட்டி புலிமிரட்டிதானும்
தாக்கான ஆள்வணங்கி செவ்வகத்தியாகும்

போமேதான் பொன்முசுட்டை கருமுசுட்டையாகும்
மோக்கான ஆள்மிரட்டி தொட்டால்வாடி
நாமேதான் சொன்னபடி சிறியானங்கை
நற்கொன்றை பெரியானின் நங்கைதானே. 733

தானான கொல்லியென்ற பல்லியோடும்
தாக்கான திகைப்பூண்டு மதியம்பூண்டு
கோனான குருசொன்ன தும்பல்பூண்டு
கொடிதான பூனையென்ற வணங்கிதானும்
மானான யானையுட மூலிதானும்
மகத்தான சிங்கத்தின் மிரட்டியாகும்
பானான பாற்சோற்றி மூலியோடும்
பாங்கான சித்தருட மூலியாமே. 734

மூலியாம் அடையென்ற வொட்டிமூலி
மூதாக்கள் தான்பருகும் கருவமூலி
வேலியாம் பருத்தியுடன் செங்கொன்றைதானும்
வெண்ணாவல் பேயத்திப் பேய்ப்பாகல்தானும்
வாலிபப் பெண்ருது ________ திரமூலி
வாகான நீரின்மேல் நெருப்புமூலி
சாலியனார் பானை ________க்குமூலி
சட்டமுடன் பெருமூலி யனந்தங்கேளே. 735

கேளேதான் மராமரமாம் விருட்சமூலி
கெடிதான ________________ட்சமூலி
பாளேதான் பாதாள மூலிதானும்
பாங்கான ____________லிக்காய்
கோளேதான் நேராமல் குருவிருட்சம்
________ மயக்கும் கோட்டான்சாறும்
நாளேதான் போ ________________
நலமான தேவதா விருட்சமாமே. 736

விருட்சமாம் காட்டாத்தி விருட்சப்பட்டை
விரிவான சந்தனமாம் மரத்தின்பட்டை
இருட்டினிலே ஒளிவீசும் சோதிப்பட்டை
யெழிலான குங்குமத்தின் பட்டையோடும்
மருங்கடலைத் தான்மயக்கும் மரத்தின்பட்டை
மாறாட்டந் தான்கொடுக்குங் கருவாய்ப்பட்டை
அருட்கடலைக் காட்டுகின்ற அருவிப்பட்டை
அப்பனே தேசோவின் பட்டைதாமே. 737

பட்டையாம் பேய்க்கருப்பன் சாற்றினோடும்
பாங்கான பேய்த்துளசி சாற்றினோடும்
இட்டமுடன் செவ்வணாத்தி சாற்றினோடும்
யெழிலான வெள்ளெருக்கன் சாற்றினோடும்
வட்டமுடன் துத்தியென்ற வட்டச்சாறும்
வன்மையுள்ள பேப்பலாவின் பட்டைதானும்
திட்டமுடன் சிறுகுறிஞ்சா பட்டைதானும்
சிறப்பான பேய்க்குறிஞ்சான் பட்டைதானே. 738

பட்டையா மழுகண்ணி தொழுகண்ணியாகும்
பாங்கான சிவகரந்தை விஷ்ணுகரந்தை
வட்டமுடன் மலைமீதிற் படர்ந்திருக்கும்
வளமான நிலக்கடம்புச் சாறுதானும்
திட்டமுடன் முசல்காது பச்சிலைச்சாற்
சிறப்பான கருநொச்சி வல்லாரைதானும்
குட்டமது தானீக்கும் ஆடாதோடை
குறிப்பான ஆடுதின்னாப் பாளையாமே. 739

பிச்சு மார்க்கம்

பாளையா மின்னமொரு பாகங்கேளு
பதினெண்பேர் சித்தர்களு முகந்துகொள்ளும்
காளையாம் புலஸ்தியனே கருவாய்க்கேளும்
காசியினில் சித்தர்களும் மெச்சும்தீபா
நாளையாம் தானெறிக்கும் கதிரோன்போலும்
நாட்டினிலே போற்றுகைக்கு நண்ணும்பாலா
வாளையென்னும் மடலி தாமரையின்மூலி
வகுப்பான செம்போத்து பிச்சுமாமே. 740

பிச்சான செம்போத்து கரும்போத்தாகும்
பேரான கண்ணனெ ________ட்சியப்பா
மச்சமுடள்ள பச்சோந்தி பிச்சுதானும்
மயிலினுட பிச்சு புறாவின்பிச்சு
கச்சணிந்த வில்போலே பறக்கும்பட்சி
கருவாலிப் பிச்சுடனாந்தைப்பிச்சு
நச்சரவங் கொண்டதொரு கொண்டலாத்தி
________சையென்ற புறாவுமாமே. 741

________ புறாவினுட பிச்சுதானும்
வப்பனே தூக்கணாம் பிச்சுதானும்
________ அடைக்கலத்தின் பிச்சுதானும்
தாக்கான காடையென்ற பிச்சுதானும்

.... தான் பன்றியிட பிச்சுதானும்
.... போக்கான காட்னாட
............................மேதான் கரும்பூனைக் கண்ணுதானும்
நலமான 742

கண்ணான வேங்கையது கண்ணுதானும்
கருவான கலைமானின் கண்ணுதானும்
மண்ணாளும் வேந்தனது யீரல்பிச்சும்
மகத்தான அரிக்கண்ணு நரிக்கண்ணுதானும்
திண்ணமுடன் யானையுட பிச்சுதானும்
திறமான பூனையுட பிச்சுதானும்
வண்ணமுள்ள வுடும்பினது பிச்சுதானும்
வகுப்பான சாரையுட பிச்சுதானே. 743

பிச்சான நல்லரவு பிச்சுதானும்
பேரான வவ்வாலின் பிச்சுதானும்
தச்சனது மாளிதனில் வீற்றிருக்கும்
தகைமையுள்ள பல்லினது முட்டைதானும்
மச்சுதனில் வீற்றிருக்கும் எலியின்பிச்சும்
மகத்தான கம்மாளன் பசுவின்பிச்சும்
இச்சையுடன் கம்மாளன் காதரந்த
யெழிலான கோவினது பிச்சியாமே. 744

பிச்சியாம் பாழான வீடுதன்னில்
பிரியமுடன் மேவுகின்ற கேசரியின்பிச்சும்
இச்சியென்ற மரந்தனிலே வாழும்பட்சி
யெழிலான கோட்டானின் பிச்சுதானும்
மச்சுதன்னில் வீற்றிருக்கும் பாம்பரானின்பிச்சு
மராமரத்தில் வாழுகின்ற குயிலனதுபிச்சும்
மெச்சிடவே யிவையெல்லா மொன்றாய்க்கூட்டி
மேன்மையுடன் குழிக்கல்லில் போட்டிடாயே. 745

போடவே முன்சொன்ன மூலிதானும்
பொங்கமுடன் தான்சேர்த்து குமுறநன்றாய்
ஆடவே யழிஞ்சியென்ற தயிலத்தாலே
அப்பனே தானறைப்பாய் நாலுசாமம்
கூடவே மைபோ லறைத்துமைந்தா
கொற்றவனே சீலைதனி லலறைத்துப்பூசி
சாடவே திரியாக்கினியில் வைத்து
சட்டமுட னைங்கோலத் தயிலத்தூட்தே. 746

ஊட்டவே கலசமதில் தீபமேற்றி
உத்தமனே யைங்கோலத் தயிலம்விட்டு
நீட்டமுடன் தீபமது யேற்றியல்லோ
நீடான பேரண்டந் தன்னிலப்பா
வாட்டமுடன் மையதனைப் பிடிக்கும்போது
வண்ணமுடன் மேற்பதங்க மேறிநிற்கும்
தாண்டிகமாய் மேற்பதங்கந் தன்னையப்பா
சட்டமுடன் சீவியல்லோ யெடுத்துக்கொள்ளே. 747

கொள்ளவே மேற்பதங்கம் மையெடுத்து
கொற்றவனே பச்சையென்ற பூரந்தானும்
விள்ளவே வாடையென்ற கஸ்தூரிதானும்
விருப்பமுடன் ரோசனையும் சமனாய்க்கூட்டி
மெள்ளவே புனுகுடனே சவ்வாதுதானும்
மேன்மையுடன் கருவதுவுங் கூடச்சேர்த்து
அள்ளவே குங்குமப்பூ ஒக்கக்கூட்டி
அப்பனே வைங்கோலத் தைலத்தாட்டே 748

ஆட்டியே மையதனைப் பதனம்பண்ணு
அப்பனே லாடமதில் தீட்டும்போது
நாட்டமுடன் லோகமெல்லாம் வசியமாகும்
நாதாக்க ளிருப்பிடமுங் கண்ணிற்றோற்றும்
வாட்டமுன் தேவாதி தேவரெல்லாம்
வணக்கமுட னுந்தனையு மாசீர்மிப்பார்
தேட்டமுடன் ராஜாதி ராஜரெல்லாம்
தெளிமையுடன் உனைக்கண்டு மயங்குவாரே. 749

மயங்கவே மையதனால் கோடிசித்து
மார்க்கமுடன் வையகத்தி லாடலாகும்
தியங்கவே மிருகமெல்லாம் வசியமாகும்
திகழான பட்சிமுதல் வசியமாகும்
புயங்கமுடன் னஷ்டசித்து மிதனாலாகும்
புகழான வஞ்சனங்க ளிதனாலாகும்
தயங்கவே ராஜாதி ராஜரெல்லாம்
தகைமையுட னுந்தனுக்குள் ளாவார்பாரே. 750

பாரேதான் போர்களத்தில் மையைத்தானும்
பாங்குடனே லாடமதில் தீட்டினாக்கால்
தீரேதான் யுத்தாதி களத்திலப்பா
திறமான சத்துருவை வெல்லலாகும்

நேரேதான் போர்களத்திற் செல்லும்போது
நேர்மையுடன் ரூபமது தோற்றாமற்றான்
சீரேதான் மாயாதி சொரூபங்காணும்
சிறப்பான மையினுட வேகந்தானே. 751

வேகமாஞ் சத்துருவு மித்துருவேயாவார்
வேதாந்தத் தாயுமனோன் மணியாள்தாமும்
சாகமுடன் மையதனாற் காணலாகும்
சட்டமுடன் ரூபமது யெதிரேகாட்டும்
பாகமுடன் கிருஷ்ணாவ தாரந்தானும்
பட்சமுடன் மையதனை லாடமிட்டு
ஆகமுடன் வையகத்துப் பெண்ணையெல்லாம்
அப்பனே வசியமது செய்தார்பாரே. 752

செய்தாரே பாவையர்க ளனேகங்கோடி
ஜெகந்தனிலே கணக்கதுவும் லக்கோயில்லை
கைதவமாம் மையதனா லெல்லாஞ்சித்தி
காசினியில் மையினுட பெருமைதானும்
பொய்யாது ஒருக்காலும் உலகிலப்பா
பொங்கமுடன் சித்தர்முனி செய்வாரோசொல்
மெய்யான பாகமிது யாருஞ்சொல்லார்
மேதினியில் தருமிகட்கு சொல்லலாச்சே. 753

சொல்லவென்றால் ரிடிமுனிவர் சித்தர்தாமும்
சொரூபமென்ற மையினுட பெருமைதன்னை
வெல்லவே யெவராலு முடியாதப்பா
விண்ணுலகு ரிடிமுதலோர் கண்டதில்லை
புல்லவே விட்டகுறை உடையோன்காண்பான்
புகழான கருமிகட்கு வாய்க்காதப்பா
நல்லதொரு கருவினுட மையின்மார்க்கம்
நாதாக்கள் செய்யுகின்ற முறைமைகாணே. 754

நாகமலை

முறையான இன்னமொரு பாகஞ்சொல்வேன்
மூதுலகில் கீர்த்தியுள்ள புலஸ்தியாகேள்
நிறையான தென்பொதிகை கிழக்கேயப்பா
நீடான நாகமலை என்றொன் றுண்டு
திறையான பூமிவளஞ் சொல்வேன்பாரு
திகழான சவுட்டுமண் பூமியப்பா
பறையான பூமிதனிற் கல்லுமுண்டு
பாங்கான அண்டக்கல் லென்னலாமே. 755

என்னவே அண்டக்கல் சுண்ணமாகும்
எழிலான அடியொன்றும் முடியொன்றுண்டு
பன்னவே நஞ்சென்று சொல்லலாகும்
பாங்கான அளர்பூமி என்னலாகும்
நன்னயமாய் நாகமலை அடிவாரத்தில்
நாதாக்கள் குடியிருப்பு மெத்தவுண்டு
சொன்னபடி மலையடி வாரந்தன்னில்
சுடரான குகையுண்டு வழிதானுண்டே 756

உண்டான குகையருகே மாண்பரப்பா
உத்தமனே நாதாக்கள் என்னைக்காண
கண்டிடவே குகையருகே போவாரங்கே
காணவந்த மாண்பர்களை சித்தர்தாமும்
திண்மையுடன் மாண்பர்களை உள்ளேசென்று
தீரமுடன் குகைவழியே செல்லும்போது
நண்மையுடன் காயகற்பந் தான்கொடுத்து
நாதாக்கள் தன்வசமாய்க் கொள்ளுவாரே. 757

கொள்ளவே மூலிவகை அனந்தகற்பங்
கோடான கோடிமுறை யாவுஞ்சொல்லி
எள்ளளவும் பிசகாது நேரும்வண்ணம்
எழிலான மாண்பருக்கு உபதேசித்துக்
கள்ளமின்றி மனதுவர நடந்தவர்க்கு
நாட்டுவார் வெகுகோடி மகிமைதன்னை
தெள்ளமுர்த மானதொரு ஞானப்பாலை
தேற்றமுடன் தாம்கொடுப்பார் சித்துதாமே. 758

கொடுப்பாரே ஞானமென்ற பாலையப்பா
குவலயத்தி லன்புள்ள மாணாக்கர்க்கு
தடுக்காமல் இருந்ததொரு மாண்பருக்கு
தாரணியி லுபதேசஞ் செய்வார்பாரு
அடுத்ததினால் தன்னுக்குள் சீடனாக்க
அங்ஙனமே கைமசக்கு யிலங்குபூட்டி
தொடுக்கவே வசியமென்ற மாற்றஞ்செய்து
சுத்தமுடன் தன்வசமா யாக்குவாரே. 759

ஆக்கவென்றால் சித்தர்களு மனதுவந்து
அங்ஙனமே நாகமலை ஆசீர்மத்தில்
நோக்கவே சித்தருட மகிமைதன்னை
நுண்மையுடன் காண்பதற்கு யிதவுகூறி

தாக்கவே நாகமலை கிழக்கேயப்பா
தகைமையுள்ள வோடையென்னுங் கானாறுண்டு
தேக்குடனே மராமரமாம் விருட்சமுண்டு
தெளிவான ரிடியொருவ ரங்கேயுண்டு. 760

அசுவதாரீடி வனமகிமை

உண்டான வாயக்கால் மண்டபத்தில்
ஓகோகோ நாதாக்கள் குடியிருப்பு
திண்டான வாயக்கால் மேற்புறத்தில்
திகழான வசுவதா ரிடியாருண்டு
செண்டான கமலமுனி சீஷரப்பா
சிறப்புடனே பதினெண்பே ரங்கிருப்பார்
பண்டான பொய்களவு பாவம்நீக்கி
பாரினிலேஅவதரித்த சித்துதாமே. 761

தானான பதினெண்பேர் சித்துதாமும்
தகைமையுள்ள தர்க்கமென்ற சாத்திரந்தான்
பானான பராபரியாள் கடாட்சத்தாலே
பாடிவைத்தார் காப்பிய நாலாயிரந்தான்
கோனான அசுவதா ரிடியார்முன்னே
கொண்டுவந்து அரங்கேற்றம் செய்யவென்று
தேனான சாத்திரத்தை முன்னேவைத்து
தெளிவுடனே ரிடியாரைப் பணிந்திட்டாரே. 762

பணிந்ததொரு சீடவர்க்கந் தன்னைப்பார்த்து
பதினெண்பேர் செய்ததொரு நூலைத்தானும்
அணியுடனே முகதாவில் வைத்துமல்லோ
அன்புடனே உபதேச மொழியுங்கூறி
துணிவுடனே சாத்திரத்தைப் பரீட்சைசெய்து
துப்புரவாய்க் கடையேடும் முதலும்பார்த்து
கனிவுடனே தர்க்கமதை கூறக்கூறி
கண்டிருந்தார் அசுவதா ரிடியார்தாமே. 763

அசுவதாரீடியார்முன் பதினெண்பேர் தர்க்கங்கூறுவது

தாமான இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
தகைமையுள்ள புலஸ்தியனே மைந்தாகேளு
ஆமான சாத்திரத்தைத் தர்க்கங்கூறி
அவரவர்க ளேற்பாட்டை முடிவுசெய்து
தேமான கனிபோலே கண்டாராய்ந்து
தெளிவுடனே சாத்திரத்தி னுளவுதேர்ந்து
நாமான பிரமாண மிகவுமோதி
நலமுடனே தாமுரைத்தார் சித்தர்பாரே. 764

பாரேதான் பதினெண்பே ரொன்றாய்க்கூடி
பண்புடனே நவசித்த ரெதிரியாக
தீரேதான் திருமூல வர்க்கத்தோடும்
திறமுடனே முப்பூவின் மார்க்கந்தன்னை
சீரேதான் பனிவிளையும் பூ நீர்தானும்
சிறப்பான காரமென்ற பிரிதிவிதன்னில்
நேரேதான் தான்விளைந்த உப்புமாச்சு
நேர்மையுடன் காய்ச்செடுத்த முப்புவாச்சே. 765

ஆச்சப்பா பனியினால் விளைந்தமுப்பு
அப்பனே வாதத்துக் குறுதியாச்சே
காச்சப்பா லவணமென்ற முப்புதானும்
காசினியில் பூநீரா முப்புவாகும்
நீச்சப்பா நிலந்தனிலே விளைந்தவுப்பு
நீடாழிக் குள்ளெழுந்த நிலைத்தவுப்பு
மாச்சலுடன் பிரிதிவினில் பிறந்தவுப்பு
மகத்தான சலமதனால் விளைவுமாச்சே. 766

விளைவான மேகமது திரண்டுருண்டு
விருப்பமுடன் வையகத்தில் மாரிதன்னால்
கிளையான பூமிவளந் தன்னிலப்பா
கிளர்ந்தெழுந்த வப்புவா லுதித்தமேகம்
தளையுடனே கதிர்போலே பூர்க்குங்கார்போல்
தகைமையுள்ள செங்கதிரோன் முன்னேசாகும்
மூளைபோன்ற பிரிதிவிதனில் முளைத்தமுப்பு
மும்மூர்த்தி யறியாத சொருபமாச்சே. 767

ஆச்சப்பா ருத்திரனார் விளைந்தமுப்பு
அப்பனே சிவன்விந்து யென்னலாகும்
மூச்சடங்கிப் பிணம்போல மாய்ந்தமுப்பு
மும்மூர்த்தி சொருபராய் விளைந்தமுப்பு
காச்சலென்ற ரவிதனிலே விளையுமுப்பு
கனகமென்ன முப்பதுவும் பிரிதிவாச்சு
நீச்சுடனே நீடாழி விளைந்தமுப்பை
நிர்வாணி மயேஸ்வரனா மென்றார்பாரே. 768

பார்க்கையிலே மயேஸ்வரனார் விளைந்தமுப்பை
பாரினிலே பனிமுப்பு யென்றார்பாரு
தீர்க்கமுடன் கதிரோனை யெதிர்த்தமுப்பு
திகழான சத்திசிவ மென்றமுப்பு

சேர்க்கையிலே வகஸ்தியனார் தாமுரைத்த
சிறப்பான பாடலென்னும் நூல்கள்தோறும்
ஆர்க்கவே முப்பூவின் வழலைமார்க்கம்
அப்பனே பலபலவாஞ் சொல்லிட்டாரே. 769

சொல்லவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
துரைராஜ சுந்தரனார் வாக்கெல்லாந்தான்
வெல்லவே குருமுடிக்கு மார்க்கமெல்லாம்
விருப்பமுட னிப்படியே யுரைத்தார்தாமும்
புல்லவே சாத்திரத்தைப் பதினெண்பேரும்
புகட்டினார் நவகோடி சித்தருக்கு
நல்லபடி தாமுரைக்கத் திருமூலத்தார்
நலமுடனே பதிலுரைப்பார் காண்டீர்தாமே. 770

திருமூலவர்க்கத்தார் ஆட்சேபித்தல்

கண்டாரே பதினெண்பேர் சித்துதம்மை
கருத்துடனே திருமூல வர்க்கத்தோர்கள்
கொண்டபடி நீயுரைத்த சாத்திரங்கள்
குவலயத்தில் பொய்யல்லால் மெய்யொன்றில்லை
அண்டமதில் விளைந்தமுப்பு ஆகாயந்தான்
அப்பனே பிரிதிவியினால் விளைந்ததல்ல
விண்டபடி மேகத்தால் விளைந்தமுப்பு
வீரான முப்பினுட வேகந்தானே. 771

தானான பனியினால் விளைந்தமுப்பு
சதகோடி நூல்களிலே சொன்னாரங்கே
கோனான திருமூல வர்க்கத்தோர்கள்
கூறினதோர் முப்புவழி கைபாகந்தான்
தேனான வப்பாலே முப்புவாச்சு
தேவிமனோன் மணியாளின் கடாட்சத்தாலே
பானான சாத்திரங்கள் பலவாய்ச்சொல்லி
பாடிவைத்தார் சித்தர்களுங் கைமறைப்புதானே. 772

மறைப்பான சாத்திரத்தில் பலவாறாக
மாறாட்ட மாகவல்லோ பாடிவிட்டார்
திறையான நூல்களிலே கருவியெல்லாந்
தீர்க்கமுடன் பாடிவைத்தார் சித்தர்வர்க்கம்
குறையான நூல்சொல்லிக் கோளுங்கூறி
குற்றமது வாராமல் முப்புசொல்லி
பறையான சாத்திரத்தின் வளப்பங்கூறி
பாகமுடன் தான்மறைத்தார் சித்தர்தாமே. 773

சித்தான கைமறைப்பு மாண்பர்காணார்
செகதலத்தில் சாத்திரத்தை மெய்யென்றெண்ணி
முத்தான நன்மனதுங் கெட்டலைந்து
மூதுலகில் சித்தர்மொழி மெய்யென்றெண்ணி
பத்தான பவநிலையைக் கடந்துமல்லோ
பாருலகில் கைகண்ட சித்தனைப்போல்
சத்தான காடுமலை தான்திரிந்து
சுட்டலைந்து கெட்டவர்கள் கோடியாமே. 774

கோடியாம் முப்பூவின் மார்க்கங்காணார்
கொப்பெனவே திருமூல வர்க்கத்தோர்கள்
பாடியதோர் நூலினுட ஒபருமைசொல்வார்
பகருகின்ற மொழியதுவுஞ் குட்சாசூட்சம்
நீடியதோர் முப்பென்றால் முப்புமல்ல
நீரான முப்பெடுக்கும் வழிமார்க்குந்தான்
தேடியே திருமூல வர்க்கத்தார்கள்
திறமுடனே பாடிவைத்த நூல்கள்தானே. 775

நூலான நூலதுதான் சொன்னமார்க்கம்
நுணுக்கமுடன் திருமூலர் மறைப்போயில்லை
காலான முப்பெடுக்கும் வழிதான் சொல்வோங்
காசினியி லாருந்தான் விள்ளாரப்பா
பாலான மொழிபோலே நூல்களெல்லாம்
பாடிவைத்தார் குருவான திருமூலத்தோர்
மாலான முப்பூவின் மார்க்கந்தன்னை
மாட்சியுடன் சொல்லுகிறோம் மகிமைபாரே. 776

திருமூலவர்க்கத்தார் முப்பெடுக்கு மார்க்கம்

பாரேதான் முப்பெடுக்கும் மார்க்கஞ்சொல்வோம்
பதினெண்பேர் சித்தர்களே பண்பாய்க்கேளும்
நேரேதான் சித்திரையாம் பருவந்தன்னில்
நெடிதான கானகத்தில் சென்றுமல்லோ
கூரேதான் பூமிவளந் தனையாராய்ந்து
கொப்பெனவே யளர்பூமி தன்னைக்கண்டு
சீரேதான் மண்ணதனைக் கிளறியல்லோ
சிறப்பான கெட்டணைகள் மிகவுஞ்செய்யே. 777

செய்யவே மூங்கிலென்ற குழாயைத்தானும்
செம்மையுடன் முழமளவாய் நறுக்கியல்லோ
பையவே பூமிதனில் முளையைப்போல்
பாங்குபெறத் தானடிப்பாய் கழுத்துமட்டும்

பெய்யவே பன்னாடை மேலேசாத்தி
பெட்புடனே மண்கொண்டு மூடிப்போடு
நய்யவே வைகாசி தன்னிலப்பா
நலமாக மண்ணதனை வாரிப்போடே 778

போடவே பன்னாடை யகற்றிப்போடு
பொங்கமுடன் குழாதனிலே பூர்க்கும்பூவை
ஆடவே வாதத்துக் குறுதிகேளு
அப்பனே தானெடுப்பாய் வழலைதன்னை
சாடவே வழலைதனை யெடுத்துமைந்தா
சட்டமுடன் பீங்கானில் பதனம்பண்ணு
கூடவே கடற்சலத்தை விட்டுமல்லோ
கொப்பெனவே தான்வடித்து காய்ச்சிடாயே. 779

காச்சவே தசதீட்சை செய்யவேண்டுங்
கருவாக வழலைதனை யெடுக்கவேண்டும்
நீச்சான வழலைதனில் குருமுடிக்க
நீணிலத்தில் வெகுபேர்கள் எண்ணங்கொண்டு
நேச்சலுடன் வழலைவேகம் அறியமாட்டார்
நேர்மையுடன் வழலைக்கு சுருக்குமெத்த
மாச்சலுடன் வழலைதனை யெடுக்குமார்க்கம்
மகாகோடி மாண்பரெல்லாங் கேட்டார்பாரே. 780

பாரேதான் வழலைதனை யெடுத்துக்கொண்டு
பாங்கான சுத்தசலந் தன்னிற்காய்ச்சி
நேரேதான் யெங்களது பரிபாஷைப்போல்
நேர்மையுடன் பதங்கண்டு வுளவுங்கண்டு
தீரேதான் வழலைதனைக் காய்ச்சியல்லோ
திறமுடனே தசதீட்சை செய்யவேண்டும்
சீரேதான் வழலையது முடித்தபின்பு
சிறப்புடனே போக்குமுறை சொல்வோம்பாரே. 781

சொல்லவென்றால் கண்டரைதான் குருமுடித்து
சூட்சமுடன் வெடியுப்புக் கூடச்சேர்த்து
வெல்லவே சீனமது ரெண்டுக்கொன்று
விருப்பமுடன் தானரைப்பாய் நாலுசாமம்
புல்லவே முன்சொன்ன சுத்தநீரைப்
புகழாகத் தானரைத்து வட்டுப்பண்ணி
நல்லவே ரவிதனிலே காயப்போடு
நலமான வோட்டிவிட்டுச் சீலைசெய்யே. 782

செய்யவென்றால் எமுசீலை வலுவாய்ச்செய்து
திறமுடனே குக்குடமாம் புடத்தைப்போடு
பையவே புடமாறி யெடுத்துப்பாரு
பாங்கான பற்பமது யென்னசொல்வேன்
துய்யவே தவளம்போல் நிறத்தானாகும்
துடியான காரமது அதிகங்காட்டும்
வெய்யவே பற்பமதை யெடுத்துக்கொண்டு
வேதாந்த மனோன்மணியை விரும்பிப்போற்றே. 783

போற்றியே அறுபத்து நான்குகாரம்
பொலிவான சரக்கனைத்துங் கட்டும்பாரு
நீற்றவே வழலையுட காரமப்பா
நீடாழி யுலகத்தில் கண்டதில்லை
நாற்றிசையும் சித்தர்முனி ரிடிகள்தாமும்
நாதாந்த வழலையுட மகிமைதன்னை
காற்றிடவே மறைத்துவைத்தார் நூல்கள்தோறும்
கருவான வழலைதனை மறைத்தார்தானே. 784

திருமூலர் முப்பூவின் பெருமை

தானான வழலையுட மகிமைசொல்வோம்
தாக்கான வழலையது சரக்கிற்பட்டால்
மானான சரக்கெல்லா மடிந்துகொல்லும்
மகத்தான லோகங்கள் நீறிப்போகும்
தேனான செம்பாறை மலைகளெல்லாம்
தேற்றமுடன் கடுகளவு பட்டபோது
வேனான தூம்தரம்போல் பழுக்கலாகும்
வேதாந்தத் தாயினது அருள் தான்பாரே. 785

பாரப்பா பட்டவிடந் தொட்டவிடமெல்லாம்
பாங்கான பசும்பொன்னு நிறமுமாகும்
தீரப்பா காயாதி கற்பமாகும்
திறமாக உண்டவற்கு வயதோமெத்த
ஆரப்பா எமைப்போலச் சொல்வாரப்பா
அப்பனே திருமூல வர்க்கத்தோர்கள்
நேரப்பா சொன்னதொரு வாக்கியங்கள்
நெறியுடனே தானடக்கும் உண்மைபாரே. 786

உண்மையா மென்றல்லோ மூலவர்க்கர்
உத்தமனே வுரைத்ததொரு மொழிமெய்யாகும்
தண்மையுடன் யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
தகைமையுடன் பதினெண்பேர் சித்தர்கேளும்

வண்மையா மின்னம்வெகு சித்தர்தாமும்
வாகுடனே பாடிவைத்தார் நூல்கள்தோறும்
நண்மையா மூலவர்க்கர் நூலைப்போல
நாட்டிலே யாரேனுஞ் சொல்லார்கானே. 787

காணவே அசுவதா ரிடியின்முன்னே
கதிப்புடனே சாத்திரங்கள் நூல்கள்வந்து
தோணவே தொந்தங்கள் மிகவும்பேசி
தோறாமல் பதினெண்பேர் மேலதாக
நீணவே தர்க்கங்க ளதிகமாகி
நினைத்தபடி மூலத்தோர் தர்க்கம்மேலாய்
பாணம்போல் சரமாரி சாத்திரந்தான்
சட்டமுடன் நேமகமுஞ் செய்தார்தானே. 788

அசுவதாரீடி திருமூலவர்க்கத்தார்க்கு வெற்றிதரல்

செ:ப்ததொரு சித்தர்முனி ரிடிகள்தம்மை
சிறப்புடனே வசுவதா முனிவர்தானும்
பையவே பதினெண்பேர் தர்க்கமார்க்கம்
பான்மையுடன் மிகவுமல்லோ கண்டாராய்ந்து
துய்யதொரு ரிடிமார்க்கம் இருவர்தன்னில்
துரைராச திருமூல வர்க்கத்தோரை
மெய்யான தர்க்கமது மேலதாச்சு
மேன்மையுடன் செயல்பட்டங் கொடுத்தார்தாமே. 789

கொடுத்ததொரு திருமூல வர்க்கத்தோர்கள்
கொப்பெனவே செயம்பெற்று வந்தோமென்று
அடுத்ததொரு வகஸ்தியனார் மலையோரத்தில்
அங்ஙனவே சித்தரெல்லாங் கூட்டங்கூடி
தொடுத்ததொரு நூலனைத்தும் வழலைபொய்யாய்
துப்புரவாய் செய்துவிட்டார் பதினெண்பேர்கள்
விடுத்ததொரு திருமூல வர்க்கத்தோர்கள்
விவரமதாய்ச் சொல்லிவிட்டா ரென்றிட்டாரே. 790

என்றிட்ட போதையிலே நூலைத்தானும்
எழிலான வசுவதா ரிடியார்தாமும்
துன்றிட்ட சூத்திரத்தின் சூட்சாசூட்சம்
துகளகற்றி மெய்ப்பூண்டு ரிடியார்தாமும்
தென்றிசையி லிருக்குமந்த மூலத்தோர்க்கு
திறளான அஞ்சலிகள் மிகவுஞ்செய்து
அன்றிடவே அவரவர்கள் பதிக்குப்போக
அசுவதா ரிடியாரும் விடைதந்ததாரே. 79:

தந்ததொரு விடைதனையே தாங்கள் பெற்று
தகைமையுடன் தம்பதிக்குப் போனார்தாமும்
வந்ததொரு பதினெண்பேர் சித்தருக்கு
வாகுடனே யாசீர்மம் மிகவுஞ்செய்து
நொந்துமே யவர்மனது போகாமற்றான்
நோக்கமுட னவர்தமக்கு மிகவுஞ்சொல்லி
குன்றிட்ட சாத்திரங்கள் மிகவுந்தந்து
கொப்பெனவே விடைதந்தார் ரிடியார்தாமே. 792

விடையான யின்னமொரு மார்க்கங்கேளு
வீரான அசுவதா ரிடியார்தாமும்
மடைபோன்ற திரவியங்க ளென்னசொல்வேன்
மகத்தான அசுவதா ரிஷிதானப்பா
தடையான அசுவதா மலையின்கீழே
தகைமையுள்ள குகையொன் று யிருக்கும்பாரு
குடைபோன்ற குண்டுக்கல் அங்கொன் றுண்டு
கொற்றவனே வாசல்வழி யதுதான்பாரே. 793

பாரேதான் அவ்வழியே செல்லும்போது
பாங்கான கோட்டையுண்டு தடாகமுண்டு
நேரேதான் தடாகத்தின் படிகளெல்லாம்
நேர்த்தியுடன் தங்கமென்றகல் தானப்பா
கூரேதான் சங்கத்தார் பலகைதானும்
கொற்றவனே தடாகமதில் யிருக்கும்பாரு
தேரேதான் விபூஷணனார் வைத்தவைப்பு
திரவியங்கள் மெத்தவுண்டு குகையிற்றானே. 794

குகையான குளந்தனிலே நடுமையத்தில்
கொற்றவனாம் விபூஷணனார் சமாதியுண்டு
வகையான பொற்பீடம் மேலேயப்பா
வரிசையுடன் எழுத்துமிக வரைந்திருக்கும்
பகையான ராவணனார் கோபத்தாலே
பாரினிலே தேடிவைத்த திரவியங்கள்
தகைபோன்ற மோராகைகள் கோடாகோடி
சட்டமுடன் பொற்பீட மிருக்குந்தானே. 795

விபூஷணன் திரவியம் அசுவதா ரிடியிடம் அடைக்கலம்

இருக்குமே திரவியங்க ளனைத்துமேதான்
எழிலான திரவியத்தை விபீஷணன்றான்
பொருக்கமுடன் சமாதிக்குப் போகுமுன்னே
பொங்கமுட னசுவதா ரிடியார்பக்கல்

பெருக்கமுடன் விபூஷணனார் வைத்தவைப்பு
பேரான திரவியங்கள் லக்கோயில்லை
செருக்குடைய திரவியத்தை மாண்பர்காண
தேசத்தில் யாராலு முடியாதன்றே. 796

அன்றான திரவியங்கள் கோடாகோடி
ஆண்மையுள்ள சித்துரிடி முனிவர்தானும்
குன்றான மலைத்தங்கம் சிவந்ததங்கம்
கூறவே யெவராலு முடியாதப்பா
பன்றான திருமூல வர்க்கத்தோர்கள்
பாரினிலே சித்தொருவ னதிலொருத்தன்
வென்றிடவே குகைவாசல் முன்னேநின்று
விருப்பமுடன் அசுவதா ரிடிகண்டாரே. 797

கண்டாரே திருமூலர் சீடர்வர்க்கம்
கருத்துடனே சித்துதனைக் கண்டபோது
கண்டாரே சிறுபாலா யாரென்றேதான்
கனிவாக சித்துதமைக் கேட்டபோது
கண்டவுடன் அசுவதா ரிடியாருக்கு
கரங்குவித்து சித்துமுனி சொல்வாரங்கே
கண்டதொரு பரமகுரு யெந்தன்நாதா
காசினியில் திருமூலப் படியென்றாரே. 798

அசுவதாரிடிக்கித் திருமூலவர்க்க சித்து சொன்னது

படியென்று கேட்டவுடன் சித்தர்தாமும்
பாங்குடனே அசுவதா ரிடியாருக்கு
மிடியான சித்துமுனிவர் என்றானும்
மிகவணங்கி அடிதொழுது மேன்மைகூறி
முடிவணங்கி ரிடியார்க்கு சித்துதாமும்
முயற்சியுடன் தாமுறைப்பார் முனிவர் தாமும்
அ[illegible]யான திருமூல வர்க்கத்தோர்கள்
துதிகொண்டு அனுப்பியதோர் சீடன்றானே. 799

[illegible] சீடனென்று ஞானம்பூண்டு
[illegible]மையுடன் தம்பதிக்கி வந்தேனென்றார்
[illegible] விபூஷணனார் வைத்தவைப்பு
கோடான கோடிசெம்பொன் களஞ்சியத்தை
[illegible]ான சாத்திரத்தின் முறையுங்கண்டு
பாங்கான சுகர்முனிவர் சா[illegible]த்தால்
[illegible]ான யென்பாட்டன் விபீட[illegible]
விருப்பமுடன் வைத்ததொ[illegible]னாச்சே. 800

சுகர்நாடி கிரந்தத்தால் முற்பிறப்பில் திருமூலவர்க்கசித்து விபீடணனுக்கு பேரனென்று தெரிந்தது

ஆச்சப்பா திரவியங்கள் மெத்தவுண்டு
அன்பான ரிடியார்க்குத் தாமுறைப்பார்
மாச்சலுடன் யென்பாட்டன் வைத்தவைப்பை
மகதேவா யெந்தனுக்குத் தருகவென்று
பேச்சுடனே ரிடியாரைக் கோள்விகேட்க
பிசகான வார்த்தையது நம்பேனென்றார்
வீச்சுடனே சாஸனத்தைப் பார்க்கவென்று
வினயமுடன் ரிடியாருங் கேட்டிட்டாரே. 801

சுகர்நாடி என்னும் கிரந்தத்தை அசுவதாரிடி பார்வையிடல்

கேட்டவுடன் சுகர் நாடி கிரந்தந்தன்னை
கிருபையுடன் திருமூல வர்க்கத்தோர்கள்
வாட்டமுடன் முகதாவில் கொண்டுவைக்க
வளமையுடன் சாத்திரத்தைப் பார்த்தபோது
நீட்டமுடன் விபீடணனார் பேரனென்று
நீட்சியுடன் சாத்திரத்தில் காணலாச்சு
கூட்டமுடன் திருமூல வர்க்கத்தோர்கள்
கொற்றவனார் முன்பாகப் பார்த்தார்பாரே. 802

பார்த்தாரே ஜாதகத்தைக் கண்டபோது
பாங்குடனே அசுவதா ரிடியார்தாமும்
நேர்த்தியுடன் சிறுபால சித்துதம்மை
நேர்மையுடன் தம்பக்கல் வரவழைத்து
தீர்த்தமுடன் குளக்கரையில் தானிறங்கி
திறமுடனே ஸ்நானமது செய்வித்தேதான்
பூர்த்தியாய் ஸ்நானமது செய்தபின்பு
புகழாக வாசீர்மஞ் செய்தார்பாரே. 803

பாரேதான் குண்டுக்குல் முனனதாக
பாலகனே நேர்முகத்தில் கொண்டுசென்று
சேரேதான் களஞ்சியத்தின் வாசல்முன்னே
சிறப்புடனே கொண்டுமல்லோ நிற்கவைத்தார்
மேரேதான் பொற்கதவு தான்திறந்து
மேன்மையுடன் திரவியங்க்ள் காணலாச்சு
நேரே தான் யீத்தாதி மகிமையெல்லாம்
நேர்மையுடன் ரிடியாரும் பார்த்திட்டாரே. 804

பார்த்திட்டு ரிடியாரு மனதுவந்து
பண்பான நிதிக்குடையா னென்றுசொல்லி
தீர்த்திட்டு சந்தேகம் மனந்தெளிந்து
தீரமுடன் குகைவாசல் முன்னேவிட்டார்
ஏர்த்திட்ட திரவியங்க ளெல்லாங்கண்டு
எழிலாக பூபால னானவந்தான்
சேர்த்திடவே நிதியெல்லாந் தனக்கேவேண்டி
செம்மலுடன் ரிடியாரைக் கேட்டிட்டாரே. 805

கேட்கையிலே ரிடியாரு மனதுவந்து
கிருபையுடன் சிறுபால னானவர்க்கு
தாட்கமலம் வீற்றிருக்கும் தாயார்தம்மை
தன்மனதில் தானினைந்து ரிடியார்தாமும்
நீட்கமுடன் நிதிக்குடையான் வந்தானென்று
நீடான யுககால திரவியத்தை
மீட்கமுடன் வொப்பிப்பே னென்றுசொல்லி
மிகத்துணிந்து ரிடியாரும் வணங்கிட்டாரே. 806

மனோன்மணியாள் திரவியத்தை ஒப்பிக்க பூதத்துக்கு விடை தந்தது

வணங்கிமிகக் கேட்கையிலே மனோன்மணியாள்தாமும்
மகத்தான வசுவதா ரிடியாருக்கு
இணங்கியே நிற்கையிலே விடையுந்தந்து
எழிலான திரவியத்தைக் கொடுக்கவென்று
சுணங்கமின்றி வேதாளந் தன்னைப்போக்கி
துப்புரவாய் காவலது தன்னைநீக்கி
அணங்கமுடன் வசுவதா ரிடியாருக்கு
அம்பாளு மனதுவந்து அருள்செய்தாளே. 807

செய்தாளே சொப்பனமாந் தன்னிலப்பா
செங்கமல நாயகியாள் ரிடியாருக்கு
பையவே சொற்பனங்கள் சாதித்தால்காண்
பாருலகில் மகிமையிது யார்தான்கண்டார்
மெய்யான வசுவதா ரிடியார்தாமும்
மேதினியில் கண்டதல்லால் மற்றோரில்லை
துய்யபதாம் புயத்தையல்லோ கண்டசித்து
துரைராஜ ரிடியாரு மிவர்தான்காணே. 808

காணவே யிவர்பெருமை யெவருக்குண்டு
காசினியில் பதினெண்பேர் சித்தர்க்கில்லை
வேணபடி நிதிகளெல்லாந் தானெடுத்து
விருப்பமுடன் விபீடணனார் பேரனுக்கு
தோணவே நிதிகளெல்லாம் ரிடியார்தாமும்
தொல்லுலகில் சாத்திரத்தின் பிரகாரந்தான்
சீணமிகு சிசுபால ரானவர்க்கு
சிறப்புடனே ஒப்புவித்த மகிமைபாரே. 809

பாரேதான் விபீடணனார் களஞ்சியத்தை
பான்மையுடன் பாலனுக்கு ஒப்புவிக்க
தீரமுடன் திருமூல வர்க்கச்சீடன்
சிறப்பான நிதிகளெல்லாந் தானெடுத்து
நேரேதான் திருமூல வர்க்கத்தோர்க்கு
நேர்மையுடன் மண்டபங்கள் தடாகந்தானும்
கூரேதான் திருமூலர் மடமுங்கட்டி
கொற்றவர்க ளிருக்கும் இடந்தேடினாரே. 810

திருமூல வர்க்கத்தார்க்கு விபீஷணன் பேரன் மடங்கட்டியது

தேடினார் மடங்கட்டி சிவாலயங்கள்
தேற்றமுடன் அதிதி பரதேசிகட்கும்
கூடியே நாளொன்றுக் காயிரம்பேர்
கூட்டமுட னன்ன தானங்களீய்ந்து
பாடிபர தேசிகட்கு வஸ்திர தானம்
பாங்குபெற நித்தியமுந் தான்கொடுப்பார்
நீடியே தானமது முப்பத்திரெண்டு
நீதியுடன் தான்கொடுப்பார் சித்தர்தானே. 811

சித்தான தானமது முப்பத்திரெண்டு
சிறப்புடனே சித்துமுனி செய்துவந்தார்
சத்தமுடன் பரிசனங்க ளெல்லோருந்தான்
சாங்கமுடன் திருமூல வர்க்கத்தோரை
சுத்தமுடன் சைதன்னிய வாசைவிட்டு
சுகமுடனே சின்மயத்தை மனதிலெண்ணி
பத்தியுடன் சமுசார வாழ்க்கையற்று
பட்சமுடன் மடாலயத்தில் சென்றிட்டாரே. 812

சென்றிட்டார் திருமூல வர்க்கரோடு
செம்மலுடன் கோடான கோடிபேர்கள்
குன்றிட்ட மலைபோலே சேனைவர்க்கம்
கோடிபேர் தவசிகளா யிருந்தாரங்கே

வென்றிட்ட தருமரிட மடாலயத்தில்
வெகுகோடி நாளிருந்து தவசிமாக்கள்
கன்றிட்ட சமாதிக்கு யிடமுந்தேடி
காலவரைத் தாமிருந்தார் கோடியாமே. 813

கெருட மகாரிடி யாசீர்மங்கூறல்

கோடியா மின்னமொரு வதிசயங்கள்
கனமான புலஸ்தியனே சொல்லப்பாரும்
நீடியே நர்மதா நதிக்குமேற்கே
நீடான ஊருணியுங் குளந்தானுண்டு
நாடியே சித்தர்முனி ரிடிகளப்பா
நலமுடனே யங்ஙனவே போவார்பாரு
தேடியே சித்தர்முனி ரிடிகள்யாவும்
தெளிவுடனே வதிசயங்கள் காண்பார்பாரே. 814

பாரேதான் நர்மதா மேற்கிலப்பா
பாங்கான வுதகமுண்டு கோட்டையுண்டு
நேரப்பா ஊருணியாங் குளமுமுன்னே
நேரான கோட்டையின்றன் வாசல்தன்னில்
வீரப்பன் காவலுண்டு காளிகோவில்
வீரான கல்லால விருட்சமுண்டு
சூரப்பன் கோட்டையது காந்தக்கோட்டை
சுத்தமுள்ள கெருடரிடி வனந்தானாமே. 815

ஆமேதான் வனந்தனிலே ரிடியார்தாமும்
அங்ஙனமே யாசீர்மந் தன்னிலப்பா
தாமேதான் சீடவர்க்க மாயிரம்பேர்
தாக்கான கூட்டமுடன் கொலுவிருப்பார்
நாமேதான் சொன்னபடி யாசீர்மத்தின்
நலமான பாதாள சுரங்முண்டு
போமேதான் சுரங்கத்துக் குள்ளதாக
பொங்கமுடன் கிடாரவைப்பு சொல்லக்கேளே. 816

திருச்சங்கு மகாராசன் வைத்த பொக்கிஷம்

கேளப்பா திருச்சங்கு ராசன்வைத்த
கெடியான நவகோடி திரவியங்கள்
நாளப்பா வரைகோடி சென்றகாலம்
நாதாக்கள் முன்பாக வைத்தவைப்பு
மாளப்பா ராசனது தேகந்தானும்
மண்மீதிற் சமாதியது பூணுமுன்னே
நீளப்பா வைத்ததொரு திரவியங்கள்
நீணிலத்தில் கண்டவர்க ளில்லைதானே. 817

தானான திரவியங்க ளிருக்கும்ஸ்தானம்
தாக்கான கெருடரிடி யாசீர்மந்தான்
மானான நாதாக்கள் முனிவர்தாமும்
மார்க்கமுட னங்கேதான் கொலுவிருப்பார்
தேனான திரவியங்க ளெடுப்பதற்கு
தேசத்தி லாராலு முடியாதப்பா
கோனான யெனதையர் சொன்னவாக்கு
குவலயத்தில் பொய்யாது மெய்யதாமே. 818

மெய்யான திரவியத்தை யெடுப்பதற்கு
மேதினியில் வெகுகோடி மாண்பரப்பா
பையவே சிவவேடம் பூண்டுகொண்டு
பாரினிலே'தவசிகளா யிருந்துமல்லோ
செய்யவே மனோலயத்தை வுள்ளடக்கி
செய்தவத்துக் குறுதியதாய் வேடம்பூண்டு
பொய்யான வாழ்வதுவை நம்பேனென்று
பொங்கமுடன் வேடமது கொண்டார்தாமே 819

கொண்டாரே வேடமது பூண்டுகொண்டு
குவலயத்தில் மெய்யான சித்தரைப்போல்
விண்டுமே காயாதி கொண்டோர்போல
விருப்பமுடன் சிமிட்டுவித்தை யாவுங்கற்று
அணடர்தொழும் ரிடியாரைக் கண்டுமல்லோ
அன்புடனே யாசீர்மஞ் சென்றுமேதான்
தெண்டனுட னவர்பாதம் வணங்கியல்லோ
தேற்றமுட னஞ்சலிகள் செய்தார்பாரே. 820

பாரப்பா வஞ்சலிகள் மிகவுஞ்செய்து
பக்குவமாய் ரிடியாரை யேவல்கேட்டு
சீரப்பா யெங்களுக்கு உபதேசங்கள்
சிறப்புடனே செய்யவென்று மனதுவந்து
நேரப்பா முகதாவில் கேட்கும்போது
நேர்மையுடன் ரிடியாரு மன்புகூர்த்து
ஆரம்பா யிவ்வனத்தை வந்ததென்ன
ஆச்சரிய மென்றுரைத்தார் ரிடியார்தாமே. 821

உரைத்தாரே கெருடமகா ரிடியார்தாமும்
ஓகோகோ நாதாக்கள் மேலேயல்லோ
வரைத்ததொரு சாத்திரங்கள் மிகவுங்கற்று
வளமுடனே காவி காஷாயம்பூண்டு

திரைப்புடனே வந்தீர்கள் மாண்பரப்பா
திரைகோடி வரைகோடி காலமப்பா
விரைப்புடனே கார்த்திருந்தா லுங்களுக்கு
வேதாந்தப் பிரகாசம் பெறுகலாமே. 822

பெறுகலா மென்றல்லோ ரிடியார் தாமும்
பிரியமுடன் தாமுரைத்தார் சீடவர்க்கம்
மறுவான வார்த்தையது மிகவுங்கூறி
மாட்சியுடன் வரங்கொடுத்தார் ரிடியார்தாமும்
குறுதலுடன் சீடவர்க்கங் கூட்டமிட்டு
கொற்றவனா ராசீர்மந் தன்னைச்சுற்றி
இறுகலுடன் வெகுகால மிருந்தாரங்கே
எழிலான ரிடிமாண்பர் கூட்டந்தானே. 823

கெருடமகா ரிடியினிடம் திருச்சங்குவைத்த திரவியத்தை லோகிதாசன் பெற்றுக்கொண்டது

கூட்டமா மின்னமொரு கருமானங்கேள்
கூறான புலஸ்தியனே சொல்வேன்பாரு
நீட்டமுடன் திருச்சங்கு பேரனுக்கு
நீணிலத்தில் வைத்ததொரு திரவியங்கள்
வாட்டமுடன் லோகமதி லிருக்குதென்று
வசனித்தார் வெகுகோடி சோசியங்கள்
தாட்டிகமாய் லோகனிட சாதனங்கள்
சட்டமுடன் நிர்மித்தார் வேதந்தானே. 824

தானான சாத்திரங்கள் கண்டாராய்ந்து
சட்டமுடன் சாதனங்கள் மிகக்குவித்தார்
கோனான லோகியென்ற தாசனுக்கு
கொற்றவனாந் திருச்சங்கு வைத்தவைப்பு
மானான கெருடமகா ரிடியார்பட்சம்
மார்க்கமுட னடைக்கலமாய் வைத்தபொன்னாம்
தேனான பாலனுட சாதகத்தில்
தேற்றமுடன் தானிருக்கக் கண்டார்தாமே. 825

கண்டாரே சாதகத்தை லோகிதாசன்
களிப்புடனே மனதுறுதி கொண்டுமல்லோ
தண்டுளவ மாலையணி பூண்டுகொண்டு
தண்மையுடன் யாசீர்மந் தன்னிற்சென்று
கொண்டதொரு மனோலயத்தை ரிடியார்முன்னம்
கூறுவார் லோகியென்ற தாசன்றானும்
விண்டபடி யென்பாட்டன் வைத்தபொன்னை
விருப்பமுடன் தருகவென்று பணிந்திட்டானே. 826

பணியவே ரிடியாரு மன்புகூர்ந்து
பட்சமுடன் பாலனைத்தான் கொண்டணைத்து
அணியுடனே சாஸனத்தைப் பார்த்துபோது
ஆண்மையுள்ள பாலனுக்கு பாட்டன்வைப்பு
கனிவுடனே வாசீர்மக் காவல்தன்னில்
காசினியில் வைத்ததொரு நிதியனைத்தும்
துணிவுடனே கிடைக்குமென்று சாதகந்தான்
துப்புரவாய் யெழுதிருக்கப் பார்த்திட்டாரே. 827

பார்க்கவே சாஸனத்தைக் கண்டபோது
பட்சமுடன் ரிடியாரு மனதுவந்து
தீர்க்கமுடன் நிதிக்குடையா னிவன்தானென்று
தீரமுடன் திரவியங்க லுளவனைத்தும்
ஏர்க்கவே யிவன்தனக்கே யீயவென்று
எழிலான வாசீர்ம ரிடியார்தாமும்
சேர்க்கவே எண்ணமது மிகவாய்க்கொண்டு
செம்மலுடன் பாலனுக்குக் கூறுவாரே. 828

கூறுவார் வேதாளந் தனையழைத்து
கொற்றவனார் திருச்சங்கு வைத்தபொன்னை
வீறுபுகழ் போனவன் லோகிதாசன்
விருப்பமுடன் நிதிகேட்க வந்தானிங்கே
மாறுபடா வண்ணங்கள் மிகக்கூறாமல்
வளமையுடன் வைத்ததொரு நிதிகளெல்லாம்
சீறுடைய பூபால பேரனுக்கு
சிறப்புடனே கொடுக்கவென வரந்தந்தாரே. 829

வேதாளம் நீதியைவிட்டு விலகியது

தந்தாரே கெருடமகா ரிடியார்தாமும்
தகைமையுள்ள வேதாள பூதத்துக்கு
சொந்தமுள்ள திருச்சங்கு பேரனுக்கு
சொர்ணமென்ற கிடாரமதை ஒப்புக்கொள்ள
இந்தமா னிலத்தைவிட்டு வேதாளத்தை
எழிலாகக் கானகத்தே சொல்கவென்று
அந்தமுடன் ரிடியாரும் பூதத்துக்கு
அன்புடனே விடையதுவுங் கொடுத்தார்பாரே. 830

கொடுக்கவே வேதாள பூதந்தானும்
கொப்பெனவே கிடாரமதை விட்டுநீங்கி
அடுக்கவே ஆசீர்மந் தன்னைநோக்கி
அன்படனே கெரு மகா ரிடியார்தம்மை

ஒடுக்கமுடன் அடிவணங்கி தெண்டனிட்டு
உண்மையுட னஞ்சலிகள் மிகவுஞ்செய்து
தடுக்கமின்றி கானகத்தைப் போரோமென்று
சாங்கமுடன் ரிடியாரைப் பணிந்ததாமே. 831

பணிந்ததொரு பூதங்கள் விடையும்பெற்று
பண்பாக திரவியத்தை விட்டுநீங்க
அணியுடனே சிசுபாலன் தனையழைத்து
அன்புடனே திரவியங்க ளுள்ளதெல்லாம்
துணிவுடனே கெருடமகா ரிடியார்தாமும்
துப்புரவாய் லோகியென்ற தாசனுக்கு
கனிவுடனே திரவியங்க ளுள்ளதெல்லாங்
கனமுடனே தான்கொடுத்தார் ரிடியார்தாமே. 832

கொடுத்தவுடன் லோகியென்ற தாசன்றானுங்
கொப்பெனவே நிதிகளெல்லாந் தானெடுத்து
அடுத்துமே ரிடிமுனிவர் பெரியோர்கட்கு
அன்புடனே மண்டலங்கள் மடாலயங்கள்
தொடுத்ததொரு கோயில்குளங் கேணியாவும்
தோற்றமுடன் வன்னமென்ற சத்திரந்தான்
விடுத்ததொரு யாகத்தின் மண்டபந்தான்
வேதியர்கள் தாமிருக்கக் கட்டினாரே. 833

கட்டினார் அதிபதி பரதேசிகட்கு
களஞ்சியமாம் அன்னமென்ற தானத்தோடு
கொட்டினார் சொர்ணமென்ற தானந்தானும்
கொப்பெனவே லோகியென்ற தாசனப்பா
திட்டமுடன் நாளொன் றுக் காயிரம்பேர்
தினகரனா ருதிப்பினு மன்னதானம்
சட்டமுடன் பாலித்தார் சங்கமற்கு
சாங்கமுடன் லோகியென்ற தாசன்றானே. 834

தானான திரவியங்கள் கோடாகோடி
சட்டமுடன் தானமது தான்கொடுப்பார்
கோனான திருச்சங்கு மைந்தன்பேரால்
கொப்பெனவே தகப்பனையும் நினைத்துமல்லோ
மானான யாகமுத லர்ச்சனைகள் தானும்
மகத்தான குருதனக்கும் பொருளையீவார்
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
தேசமெல்லாந் தானமது வழங்கினாரே. 835

தானமது முப்பத்தி இரண்டுதானம்
தகைமையுடன் தான்கொடுத்தான் லோகி தாசன்
வானமுதல் தேவாதி தேவரெல்லாம்
வாழ்த்திமிகக் கூறலுற்றார் பாலனுக்கு
மானமுடன் வெகுகாலம் பூமிதன்னில்
மன்னவனார் பேரனவன் தாமிருந்து
கானமது சமாதிக்குச் சொல்கவென்று
கருத்துடனே ஆசீர்மம் பெற்றார்தாமே. 836

லோகிதாசன் கெருடமகா ரிடியினிடம் ஆசீர்வாதம் பெறல்

பெற்றாரே லோகியென்ற தாசன்றானும்
பேரான மாய்கைதனை விட்டொழித்து
கற்றாரே சமாதிக்கு இடமுந்தேடி
கைலங்கிரி பதிதனையே காணவென்று
சுற்றாரைத் தான்மறந்தார் லோகிதான்
சுருதிபொருள் தானறிந்த மார்க்கம்போல
பற்றறவே தேகத்தை மறந்துதானும்
பாரினிலே தான்மடித்தார் பாலன்றானே. 837

யுகாந்த ரிடி யாசீர்மம்

பாலனாம் இன்னமொரு மார்க்கங்கேளு
பாங்கான புலஸ்தியனே சொல்வேன்பாரு
காலகாலங் கடந்த ரிடியாரப்பா
கனமான யுகாந்தரிடி ஆசீர்மந்தான்
சீலமுடன் கண்ணபிரான் கடலுக்கப்பால்
சிறப்பான திருப்பாலின் கடலின்மேற்கே
கோலமுடன் பூங்காவனச் சோலையுண்டு
கொற்றவனே ரிடிபெருமை சொல்வேன்பாரே. 838

பாரேதான் பூங்காவனச் சோலைசுத்தி
பாங்கான சித்துமுனி நாதரப்பா
நேரேதான் கோட்டைமுகம் வாசலுண்டு
நேர்மையுடன் ராட்சதாள் காவலுண்டு
சீரேதான் பத்துசுத்து கோட்டையப்பா
சிறப்பான முகவாசல் எட்டுமுண்டு
ஆரேதான் கண்டவர்களாருமில்லை
அவனியிலே எந்தன்குரு சொன்னவாக்கே. 839

வாக்கான அசுவனியார் சொன்னவாக்கு
வையகத்தில் பொய்யாது மெய்யேயாகும்
தாக்கான முதல்வாசல் காளிகாவல்
தகைமையுடன் யிரண்டாங்கால் வாசலப்பா
தூக்கான கெண்டபே ரண்டந்தானும்
துறையான வாசலுக்குக் காவலுண்டு
நோக்கான மூன்றாவது வாசல்தானும்
நொடிதான காத்தவீரன் காவலுண்டே 840

உண்டான காவலுக்கு நாலாம்வாசல்
உத்தமனே காட்டானைக் காவலுண்டு
கொண்டான யைந்தாங்கால் வாசலுக்கு
கொடிதான பூதங்கள் காவலுண்டு
திண்டான ஆறாங்கால் வாசலுக்கு
திறமான வேங்கையது காவலுண்டு
செண்டான யேழாங்கால் வாசலுக்கு
செம்மலுடன் சிங்கமது காவலுண்டே 841

காவலா மெட்டாங்கால் வாசலுக்கு
கனமான நாதாக்கள் காவலுண்டு
ஆவலுடன் கோட்டைதனைக் காண்பதற்கு
அவனிதனில் மாண்பர்களுஞ் சென்றபோது
சாபமது நேருமென்று தவசிமார்கள்
சட்டமுடன் சொல்லுவதற் கையமில்லை
கோவமுடன் காவலது கூட்டத்தார்கள்
கொப்பெனவே கடித்துமல்லோ கொல்வார்தாமே. 842

கொல்லவே மடிந்தவர்கள் கோடாகோடி
குவலயத்தில் மாண்பர்கள்தான் கூறப்போமோ
எல்லையது தான்கடந்து போனபேர்கள்
யெழிலுடனே திரும்பிவரக் கண்டதில்லை
வல்லதொரு ஆசீர்மந் தன்னிலப்பா
மகத்தான மகிமையுண்டு நிதிதானுண்டு
புல்லவே யாசீர்மம் நடுமையத்தில்
புகழான சுரங்கமுண்டு படிதானுண்டே 843

படியான சுரங்கத்தின் கீழேயப்பா
பாங்கான கிடாரமது கோடியுண்டு
துடியான வேதாளங் காவலுண்டு
துப்புரவாய்ச் செல்வது முடியாதப்பா

கொடியான யுகாந்தவரை ரிடிதானப்பா
கொற்றவனே வெகுகால மிருந்தார்தாமும்
மிடிபோன்ற நாதாக்கள் ரிடியார்தாமும்
மிகுதியுடன் ரிடிதனையே காணுவாரே. 844

காணயிலே ரிடியாருந் தன்னைநோக்கி
கருத்துடனே யாசீர்மம் மிகவுங்கூறி
தோணவே தான்கற்ற கல்வியெல்லாம்
தோற்றமுடன் சீஷருக்கு வுபதேசித்து
வேணபடி மார்க்கங்கள் மிகவுங்கூறி
விருப்பமுடன் தன்பதிக்கு யிருக்கவென்று
வாணரென்னுங் கவிவாணர் போற்றுகைக்கு
வளங்கொடுத்தார் ரிடியாரும் வளமைபாரே. 845

பாரேதான் புலஸ்தியனே மைந்தாகேளு
பாங்கான யெனதையர் சொன்னநீதி
நேரேதான் சோடசமாம் பிரம்மாவப்பா
நேரான யுகங்கடந்த சித்துதாமும்
ஆரோதா னிவர்போலே சித்துவுண்டு
அவனியிலே பதினாறு பிரம்மாவப்பா
கூரேதான் யுகங்கடந்த சித்துதாமும்
குவலயத்தி லிவர்பெருமை யாருக்குண்டே 846

உண்டான கோடியுகங் கண்டறிந்து
ஓகோகோ நாதாக்கள் கண்டதில்லை
திண்டான பிரம்மலபி கடந்தசித்து
திரளான பிரளயங்க ளறிந்தசித்து
சென்டான ராஜாதி ராசரெல்லாம்
செங்கண்மால் முதலோரு மறிந்தசித்து
கொண்டல்பிரான் கிருஷ்ணாவ தாரனப்பா
குவலயத்தில் லறிந்தசித்து யிவர்தானாமே. 847

ஆமேதான் ருத்திரனா ரறிந்தசித்து
வப்பனே திருமூர்த்தி கடந்தசித்து
தாமேதா னிந்திரரு மீடுமல்ல
தகைமையுள்ள சப்தரிடி யீடுமல்ல
போமேதான் மன்மதனா ரீடுமல்ல
புகழான வடிவேல ரீடுமல்ல
[illegible]மேதான் தக்கவை ரீடுமல்ல
வேதாந்த மனோன்மணியு மல்லதானே. 848

தானேதான் ரிடியார்க்கு யீடுமல்ல
தாரணியி லிவர்க்கீடு யாருண்டோசொல்
கோனான வீரபத்திர னீடுமல்ல
குறிப்பான சூரபத்திர னீடுமல்ல
மானான மகதேவ ரீடுமல்ல
மகத்தான காத்தவீரியன் யீடுமல்ல
பானான பத்திரகாளி யீடுமல்ல
பாங்கான முனிவர்களு மில்லைகாணே. 849

காணவே பதினெண்பேர் சித்துதாமும்
கருவான நவசித்தர் ஈடுமல்ல
பூணவே நாற்பத்தி யெட்டுபேரும்
புகழான ரிடியார்க்கு யொப்பேயில்லை
தோணவே திருமூல வர்க்கத்தாரும்
தொல்லுலகைக் கடந்ததொரு சித்துதாமும்
நீணவே யவர்தமக்கு வொப்பேயல்ல
நீடான வசுவனிக்கு வொப்பதாச்சே. 850

ஆச்சப்பா வசுவனிக்க வொப்பேயாவார்
வன்பான யுகங்கடந்து சித்துதாமும்
மூச்சடங்கி வெகுகால மிருந்தசித்து
மூதுலகைத் தானறிந்த முனிவரப்பா
பேச்சடங்கிப் பூரணத்தைக் கடந்தசித்து
பேரான வாசினிலை யறிந்தசித்து
வீச்சுடனே சின்மயத்தி நிலையினின்று
விருப்பமுடன் நாலுயுகங் கடந்தசித்தே. 851

சித்தான யின்னமொரு மார்க்கங்கேளு
சிறப்பான புலஸ்தியனே மைந்தா பாரு
முத்தான நாதரிடி முனிவரல்லோ
மூதுலகைக் கடந்ததொரு ஞானசித்து
வித்தான சொருபமென்ற ரிடிதானப்பா
வேதாந்த ஞானசித்து யென்னலாகும்
பத்தான பரமகுருக் கொப்பலாகும்
பாருலகில் கோடியுகங் கண்டசித்தே. 852

டில்லிக்குமேற்கே ஐராவதத்தின் சித்தர்வளப்பம்

கண்டனே யின்னமொரு மார்க்கங்கேளு
கனமான டில்லிக்கு மேற்கேயப்பா
உண்டான வதிசயங்கள் மெத்தவுண்டு
வுரைத்திடுவேன் புலஸ்தியனே மைந்தாபாரு

அண்டர்முனி ராட்சதர்களறியாக்காடு.
அழகான அயிராவத மென்னலாகும்
திண்டான நாதாக்கள் பெருமைசொல்வேன்
திறமான வயததுதான் சொல்லக்கேளே. 853

கேளப்பா அயிராவதந் தெற்கேயப்பா
கெடியான மனிதரப்பா யந்தவண்ணம்
ஆளப்பா வுயரமது முழந்தானெட்டு
அப்பனே தெய்வமது பலவண்ணமாகும்
நாளப்பா சாத்திரங்கள் மெத்தவுண்டு
நலமான சமுசார வாழ்க்கையுண்டு
மாளப்பா அருந்துவது கிழங்குகாய்கள்
மார்க்கமுடன் வயததுதான் இருநூறாமே. 854

ஆமேதான் அயிராவதம் மேற்கேயப்பா
அழகான மனிதரப்பா ரத்தவர்ணம்
தாமேதான் உயரமது பனையளவேயாகும்
தாக்கான தெய்வமது சதாசிவந்தான்
நாமேதான் சொன்னபடி வயதேதென்றால்
நலமான வயததுதான் நாநூறாகும்
வேமேதான் ஆகாரம் யென்னவென்றால்
விதமான நவக்கனிகள் சலமுந்தானே. 855

தானான அயிராவதங் கிழக்கேயப்பா
தண்மையுள்ள மனிதரப்பா நீலவர்ணம்
தேனான மனோன்மணியாள் தெய்வமாகும்
தெளிவான வுயரமது முழந்தா நூறு
பானான வயததுமே யாயிரந்தான்
பாருலகில் முக்கனியு முண்பார்பாரு
கோனான பரிதியது கண்கூசாது
குவலயத்தில் வாழுகின்ற சித்தர்காணே. 856

காணவே அயிராவதம் வடக்கேயப்பா
கண்காணா வடகோடி கானகத்தில்
தோணவே மனிதரப்பா பச்சைவர்ணம்
தோற்றமுடன் வயததுதான் லட்சமாகும்
பூணவே வுயரமது யிருநூறுமுழந்தான்
புகழான தெய்வமது கைலங்கிரியாகும்
நீணவே யருந்துவது பஞ்சகனியாகும்
நீதியுடன் காயகற்ப முண்பார்பாரே. 857

பாரப்பா வயிராவது தான்குதிக்கும்
பாலகனே வெகுகோடி வதிசயங்கள்
நேரப்பா சித்தருட மகிமைதன்னை
நேர்மையுடன் யானுரைப்பேன் சொல்லக்கேளும்
ஆரப்பா வயிராவத மலையிற்றானும்
வப்பனே கோடியுக ரிடிகளுண்டு
சீரப்பா நாதாக்கள் போக்குதன்மை
சிறப்புடனே யானுரைப்பேன் பாருபாரே. 858

துவாபர ரிடியாசிர்மம்

பாரேதா னயிராவத மடிவாரத்தில்
பாலகனே சுனையுண்டு குளமுமுண்டு
நேரேதான் குன்னருகே மண்டபந்தான்
நிலையான பன்னிரு காதமப்பா
கூரேதான் அகலமது நீளமப்பா
குறையாது பன்னிரு காதமாகும்
தீரேதான் மண்டபத்தைச் சுத்தியல்லோ
திறமான தசலட்ச சீடருண்டே 859

உண்டான சீஷவர்க்கங் கோடிபேராம்
ஓகோகோ நாதாக்கள் பெருமைமெத்த
கண்டவர்கள் மண்டலத்தி லாருமில்லை
கண்காணா சித்தர து மகிமைகோடி
விண்டலமாம் மார்க்கமதிற் போகுஞ்சித்து
விண்ணுலகு சித்தரென்று விளம்பலாகும்
அண்டர்முனி சித்தர்களு மிவர்க்கீடல்ல
ஆகாய சித்தரென்றே வியம்பலாமே. 860

இயம்பவே மண்டபமாம் நடுமையத்தில்
எழிலான யுகாந்தவரை சித்துதம்மை
நயம்படவே காணுதற்கு எவராலாகும்
நாட்டினிலே வாழுகின்ற நாதர்தம்மால்
செயமுடனே காணுதற்கு வாகாதப்பா
செயலான யுகங்கண்ட சித்துதம்மை
புயங்கமுட னவர்சீடர் காணலாகும்
புவிதனிலே மற்றொருவர் காணாதன்றே. 861

அன்றான சித்துதன்மைக் காணவென்றால்
அரனாலு மரியாலு முடியாதப்பா
தென்றிசையில் வாழுகின்ற நாதர்தம்மில்
தேற்றமுடன் விட்டகுறை இருக்குமானால்

குன்றான மலைதனிலே இருக்குஞ்சித்தர்
கூரான விதியறிந்து பதியறிந்து
சென்றாலோ வொருவேளை காணலாகும்
சிறப்பான யுகாந்தவரை சித்துதானே. 862

தானான சித்துதம்மைக் காணவென்றால்
தாரணியில் வெகுகோட்டி தர்மம்வேண்டும்
கோனான அரசனா யிருந்திட்டாலும்
கொற்றவனார் ரிடியாரைக் காணப்போமே.
தேனான மனோன்மணியாள் கடாட்சங்கண்டால்
தேர்வேந்த யுகாந்தசித்தைக் காணலாகும்
மானான வையகத்தில் மற்றோர்காணார்
மானிலத்தில் யான்கண்ட வரைசொல்வேனே. 863

யுகாந்தவரை சித்து நாலுயுக அதிசயங்களைச் சொல்வது

சொல்வேனே இன்னமொரு மார்க்கங்கேளு
சுருதிகண்ட புலத்தியனே மைந்தபாரு
புல்லவே அசுவனியாத் தேவர்தானும்
புகழவே எந்தனுக்குச் சொன்னநீதி
வெல்லவே ரிடிதனையே கண்டேன்யானும்
வெகுகோடி காலமது யிருந்தேனங்கே
அல்லவே ரிடிதனையே கண்டுமல்லோ
அன்புடனே எந்தனுக்கு விடைதந்தாரே. 864

தந்தாரே யுககோடி சித்துதாமும்
தாரணியி லதிசயங்கள் தாமுரைத்தார்
நொந்தாரே துவாபரா யுகத்திலப்பா
நொடிதான பிரளயங்கள் வந்தபோது
சொந்தமுடன் தவநிலையி லிருந்துகொண்டு
சுத்தமுடன் சின்மயத்தி லதிதங்கண்டு
வந்துமே தவசிகளு மெச்சுதற்கு
வளமையுடன் பிரளயத்தில் நிற்பார்பாரே. 865

பாரேதான் துவாபர யுகத்திலப்பா
பண்பான பிரளயத்தைக் கண்டேன்யானும்
நேரேதான் தென்னிலங்கை முழுகிப்போச்சு
நேரான கோட்டைமுத லிடியலாச்சு
கூரேதான் தென்மதுரை தேவஸ்தானம்
குறிப்பாகப் பிரளயந் தன்னிலப்பா
சேரேதான் முழுகியல்லோ மண்மேடாச்சு
தென்னிலங்கை மாமதுரை முழுகலாச்சே. 866

ஆச்சப்பா இன்னமொரு அதிசயங்கேள்
அப்பனே சொல்லுகிறேன் யுகந்தான்ரெண்டில்
போச்சப்பா தென்மதுரை முழுகிப்போச்சு
பேரான கோபுரத்தின் சிகரங்கண்டேன்
நீச்சப்பா கடல்தனி லங்கைகண்டேன்
நேரான கோட்டைதனில் பாதிகண்டேன்
பாச்சலுடன் பிரளயங்கள் வடியக்கண்டேன்
பாங்களான கோட்டைமுகம் பதிகண்டேனே. 867

கண்டேனே மூன்றாவது யுகத்திலப்பா
கனமான மதுரையின் தேவஸ்தானம்
திண்டான கோபுரத்தின் பாதிகண்டேன்
திரளான மண்டபங்க ளனேகங்கண்டேன்
உண்டான பிரளயங்கள் வற்றக்கண்டேன்
ஓகோகோ நாதாக்கள் மகிமைகண்டேன்
பண்டான நான்காவது யுகத்திலப்பா
பாலகனே வெள்ளமது வற்றலாச்சே. 868

வற்றவே இன்னமொரு கருமானங்கேள்
வகையான பிரம்மாக்கள் அனேகங்கண்டேன்
செற்றதொரு பிரளயத்தில் அனேகம்பேர்கள்
சிறப்பான சமாதிகளு மனேகங்கண்டேன்
கொற்றவர்கள் ராசாதி ராசர்தன்னில்
கோடான கோடியொரு சமாதிகண்டேன்
பெற்றவர்கள் நாதாக்கள் மூதாக்கள்தம்மை
பிரளயத்தில் மிதந்தவர்க ளனேகமுண்டே 869

யுகந்தவரைசித்து மதுரையில் சொக்கலிங்கத்தைக் கண்டது

உண்டான பிரளயங்கள் கடந்தபின்பு
ஓகோகோ நாதாக்கள் கூட்டத்தோடு
திண்டான தென்மதுரை சென்றேன்யானும்
திகழான மனுக்கூட்டஞ் சோழர்தம்மை
அண்டான பாண்டிவள நாட்டார்தம்மை
அங்ஙனவே மதுரைபதி தன்னிற்கண்டேன்
குண்டோதர னென்னுமோர் பூதங்கண்டேன்.
கொற்றவனே அலயத்தின் பதிகண்டேன். 870

பதியான தென்மதுரை உள்ளேசென்றேன்
பாங்கான கோட்டைமுத லாழிகண்டேன்
துதியாக பாண்டிவள தேசனாடு
துப்புரவாய்ச் சொல்வதற்கு எவராலாகும்
நிதியான திரவியங்கள் சொல்லப்போமோ
நீடான கோட்டைக்குள் அலங்கந்தன்னில்
நதியான வைகைநதி யென்னாசொல்வேன்
நாதாந்தத் திருவடியில் வந்ததாமே. 871

ஆமேதான் கேட்டைமுகம் உள்ளேசென்றேன்
அழகான திருப்பாண்டி மண்டபந்தான்
போமேதான் பொன்னுலோகந் தன்னிற்சென்ற
புகழான சொக்கலிங்கந் தன்னைக்கண்டேன்
தாமேதான் பிரம்மனுக்கும் வாசனுக்கும்
தாயான பார்வதியாள் தந்தசாபம்
வேமேதான் போகாமல் வினையின்பாகம்
விட்டகுறை யிருந்ததொரு பிறவியாச்சே. 872

பிறவியாஞ் சென்மமென்ற பிறவியல்லோ
பேரான விட்டகுறை நேர்ந்ததாலே
துறவியால் வெகுகால மிருந்துமல்லோ
துப்புரவாய்ச் சொக்கலிங்கம் வாழ்கவேண்டி
உறவோடு தடாதகைப் பிராட்டியாரை
உத்தமர்க்குப் பாரிமணஞ் செய்யவென்று
திறமுடனே தேவாதி ரிடிகூட்டங்கள்
சிறப்புடனே மாலைமணஞ் செய்தார்பாரே. 873

தடாதகைப் பிராட்டியைச் சொக்கலிங்கத்துக்கு மணம் புரிவித்தல்

பாரேதான் சொக்கலிங்கந் தன்னைக்கண்டேன்
பாங்கான தடாதகைப் பிராட்டியாரை
நேரேதான் திருமண முகூர்த்தசாலை
நேர்புடனே நியமித்தார் சொக்கலிங்கம்
சேரேதான் சேனாதி கலைகளோடு
செழிப்பான தேவரிடி முனிவர்கூட்டம்
கூரேதான் யாகமணஞ் செய்தாரல்லோ
கொற்றவனார் சொக்கலிங்கம் மணங்கண்டேனே. 874

கண்டேனே காந்தமதி யாகந்தன்னை
கைலாச மகமேரு பர்வதத்தின்
உண்டான ரிடிக்கூட்டம் தேவர்கூட்டம்
உத்தமர்க ளாசீர்மம் மிகவுஞ்செய்து

அண்டர்முனி தேவாதி ரிடிகளோடு
ஆரணங்கே சொக்கலிங்கந் தன்னைப்பற்றி
செண்டான திரள்கூட்ட மனுக்களங்கே
தேச சஞ்சாரிவளஞ் செய்தார்காணே. 875

காணவே திருமணப் பிராட்டியாரைக்
கைலாய நாதர் கைலாவுகொண்டு
தோணவே சோடசோ பசாரஞ்செய்து
தோற்றமுட னாசீர்மம் மிகவுஞ்செய்து
வேணபடி திருக்கூத்து வறுபத்துனான்கும்
விருப்பமுட னாடி வந்தார் சொக்கநாதர்
நீணவே கலியுகம் முன்னிற்றானும்
நீடான காட்சிதனைக் கண்டேன் தானே. 876

தடாதகைப் பிராட்டிக்கு தெய்வலோகத்திலிருந்து எண்ணைக்கால் மண்டபஞ் செய்தது

தானான இன்னமொரு உண்மைசொல்வேன்
தாக்கான புலஸ்தியனே மைந்தாபாரு
தேனான தென்மதுரைப் பதியிலப்பா
தேவாதி தேவகண கூட்டத்தோடு
கோனான குருக்கள்மா ராசரோடும்
கொற்றவர்கள் நாதாக்கள் ரிடிகளோடு
மானான மகதேவர் கடாட்சத்தாலே
மகத்தான வேள்விமணங் கண்டேன்தானே. 877

கண்டேனே காந்தமதி நாயகிக்கு
கனமான எண்ணைக்கால் மண்டபந்தான்
அண்டமுடன் தேவாதி தேவரெல்லாம்
அரிவையர்க்கு வெகுமதியா யனுப்பினார்கள்
கொண்டல்முனி ராட்சதர்கள் பூதத்தோடு
குவலயத்தில் கொண்டுவந்து நிறுத்தினார்கள்
தெண்டிரைசூழ் பதிமலையில் கண்டதில்லை
திடமான வயிரக்கல் கறுப்புமாமே. 878

கறுப்பான தூணதுவும் நாலுமாகும்
கனமான வயிரத்தூண் ஆணிப்பொன்னாம்
மறுவதுவு மில்லாத சாணைக்கல்லாம்
மகத்தான தேவர்கோ னனுப்புங்கல்லாம்
குருமுனிவர் மலைதனிலுங் கண்டதில்லை
கூறான நாமக்கல் லென்றும்பெயராம்
துறுப்புடைய பிரிதீவாங் கல்லுமாகும்
துடியான கறுப்புக்கல் கண்டேன்தானே. 879

கண்டேனே நாலுக்கால் மண்டபந்தான்
கனமான தென்மதுரை தேவஸ்தானம்
செண்டான மகபதிக ளிருக்கும்தானம்
செங்கமல நாயகியாள் தானிருக்கும்
வண்டுரையுந் தென்மதுரை பதிதானப்பா
வளமான கோயிலது நடுமையத்தில்
அண்டபிரா னருளாலே சமைந்தமார்க்கம்
அழகான பதிதனிலே பார்த்திட்டேனே. 880

பார்த்தேனே யின்னம்வெகு வதிசயங்கள்
பாங்கான தென்மதுரைப் பதியில்யானும்
தீர்த்தமுடன் சிவலிங்கம் மகிமைகண்டேன்
திகழான செந்தாமரைப் பொய்கைகண்டேன்
நேர்த்தியுடன் பொய்கைதனி லதிசயங்கள்
நேர்மையுடன் சொல்வதற்கு நாவோயில்லை
மார்த்தாண்ட மாமுனிவ ராழ்வாராதி
மார்க்கமுடன் பூசைசெய்யும் பொய்கையாமே. 881

பொய்கையா மற்புதங்க ளின்னமுண்டு
பொங்கமுடன் சலமதனில் ஸ்நானஞ்செய்தோர்
மெய்யான புத்திரபாக்கிய முண்டாகும்
வேலான பொய்கைதனில் மூழ்கினோர்க்கு
துய்யநல்ல வஷ்டமா சித்திதானும்
சுகமுடனே அடைவதும் உண்மையாகும்
வையகங்கள் தான் துதிக்கும் பொய்கைகண்டேன்
மகத்தான மதுரைபதி பெருமைதானே. 882

பெருமையாஞ் சங்கமென்ற பலகையுண்டு
பேரான பொற்றாமரை தன்னிற்றானும்
அருமையாய் அருந்தவசி ரிடிகள்மார்கள்
அணியணியாய்த் தவமதுவுஞ் செய்துநிற்பார்
குருமுனிவர் நாதாக்க ளனேகம்பேர்கள்
கூட்டமுடன் பொய்கைதனில் மூழ்குவார்கள்
திருவுடைய ரிடிமுனிவர் சித்தர்தாமும்
சிறப்பான வாசமது செய்வார்பாரே. 883

வாசமது செய்கின்ற பொதிகைதானும்
மகத்தான பெருமையது சொல்லொண்ணாது
நேசமுடன் மகிமைகளு மனேகங்கண்டேன்
நேரான தென்மதுரை பதியில்தானும்

ஆசுகவிப் புல்லாணித் தீர்த்தங்கண்டேன்
அங்ஙனமே குண்டோதரன் பதிதான்கண்டேன்
வீசுபுகழ் குண்டோதிர னென்னும்பூதம்
வீரான மார்க்கமது கண்டேன்தானே. 884

குண்டோதிரனுண்ண வைகையாற்றை யுகாந்தவரை சித்துகண்டது

கண்டேனே தென்மதுரை பதியிலப்பா
கனமுள்ள வைகைநதி தன்னைக்கண்டேன்
அண்டமுடன் தேவர்முடி தனிலிருந்து
அங்ஙனவே தானழைத்து வைகைதன்னை
குண்டோதிர னானதொரு பூதந்தானும்
குறிப்புடனே கரநீட்டி யுண்டஆற்றை
தொண்டிரைசூழ் வாரிதிபோல் யானுங்கண்டேன்
தெளிவான வைகைநதி மகிமைதானே. 885

மகிமையா மின்னமொரு அதிசயங்கேள்
மார்க்கமுடன் சொல்லுகிறேன் சீடவர்க்கம்
அகிலமுடன் சோடசமாம் யுகமுங்கண்டேன்
அவனிதனி லிப்பெருமை கண்டதில்லை
சகிதமுடன் கோடியுக மிருந்தேன்யானும்
தாரணியி லிப்பெருமை கண்டதில்லை
பகிரதனாம் ராவணனார் கோட்டைமார்க்கம்
பாருலகில் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளே. 886

யுகாந்தசித்து லங்கைபெருமை

கேளப்பா புலஸ்தியனே என்னசொல்வேன்
கெவனமுட னின்னம்வெகு அதிசயங்கேள்
நாளப்பா நாலுயுகங் கடந்தசித்து
நலமான ரிடியினுட பெருமைமெத்த
மாளப்பா தென்னிலங்கைப் பதியில்தானும்
மகத்தான பிரளயங்கள் சென்றபின்பு
ஆளப்பா ராவணனார் கோட்டைகண்டார்
அழகான தென்னிலங்கைப் பதிகண்டாரே. 887

பதியான இலங்கைபதி அரசன்கண்டார்
பாங்கான கோட்டைமுத லாழிகண்டார்
விதியான கோட்டைமுகந் தன்னைக்கண்டு
வீரான கிங்கிலியர் தன்னைக் கடந்து

மதிபோன்ற ராவணனார் தன்னைக்கண்ட
மகத்தான கோடியுக சித்துவப்பா
கதிரோனுங் காணாத லங்கைக்கோட்டை
காசினியில் நாலுமுறை முழுகிப்போச்சே. 888

போனதொரு வல்லரக்கின் கோட்டைதன்னைப்
பொங்கமுடன் நாலுதரங் கண்டசித்து
ஆனதொரு மூலபல சண்டைதன்னை
அன்புடனே தானறிந்த யுகாந்தசித்து
சேனைபடை திரள்வீர கூட்டந்தன்னை
செருக்களத்தில் மடிந்தவரைப் பார்த்தசித்து
சானகியாள் காவணத்தை யறிந்தசித்து
தாரணியில் யுகங்கடந்த சித்துவாமே. 889

சித்தான சித்துமுனி ரிடிதானப்பா
செங்கண்மால் தானறிந்த ———— சித்து
முத்தான மூதுலகங் கடந்தசித்து
முசியாமல் வெகுநாளாய் வாழ்ந்தசித்து
தத்துவத்தின் சாகரத்தை யறிந்தசித்து
தாரணியில் யுககாலம் இருந்தசித்து
பத்தியுடன் பரமசிவ மறிந்தசித்து
பாங்கான யுகாந்தவரை சித்துவாச்சே. 890

ஆச்சப்பா திருப்பாலின் கடலிலிப்பா
அலைவாரி நடுமைய மறிந்தசித்து
மூச்சடங்கித் திருப்பாலின் கடலின்மேலே
முசியாம லாலிலைமேற் பள்ளிகொண்ட
மாச்சலுடன் வீற்றிருந்த கண்ணன்தன்னை
மகத்தான ஸ்ரீராமர் கண்ட சித்து
வீச்சுடனே ராமாவ தாரந்தன்னில்
வீரான மகுத்துவங்கள றிந்தோர்தானே. 891

யுகாந்தசித்து ஆஞ்சநேயரைக் கண்டது

அறிந்தாரே இன்னம்வெகு அதிசயங்கள்
அணியான இலங்கைபதிக் கோட்டைக்குள்ளே
செறிந்துமே திருவாஞ்ச னேயர்கூட்டம்
சிறப்பான இலங்கைபதிக் குள்ளேயப்பா
குறிப்பான ஆஞ்சநேயர் ராமருக்கு
கோடிவெள்ளஞ் சேனையுடன் ஏவல்செய்ய
முறியான ராமருடயேவலுக்கு
மூர்க்கமுடன் தாமிருந்த மிருகமாமே. 892

ஆமேதான் யித்தாதி மகிமையெல்லாம்
அன்புடனே தானறிந்த சித்துதாமே
போமேதா னுலகுதனில் யாவுங்கண்ட
பொங்கமுடன் ரிடிதேவர் சித்தென்பார்கள்
நாமேதான் கண்டவரை யாவுஞ்சொன்னோம்
நலமான துவாபர அதிசயந்தான்
வேமேதா னிலங்கைக்கு மேற்கேயப்பா
வேகமுடன் நதியொன்று குகைதானுண்டே 893

தென்னிலங்கை வடமேற்கில் துவாபர சீடரிருப்பிடம்

உண்டான இன்னமொரு அதிசயங்கேள்
உத்தமனே புலஸ்தியனே சொல்லக்கேளும்
திண்டான லங்கைக்கு வடமேற்கப்பா
திகழான நதியொன்று குகைதானுண்டு
கண்டவர்கள் விண்டவர்க ளாருமில்லை
கைலாய சித்தர்முனி யிருக்கும்ஸ்தானம்
கொண்டல்முடி ஸ்ரீராமர் வனவாசந்தான்
கூறான வாசீர்ம மென்னலாமே. 894

என்னலாம் யுகாந்தரிடி சீடவர்க்கம்
எழிலான கோடான கோடிபேர்கள்
பன்னவே நதியருகில் காத்திருப்பார்
பாங்கான தவசிகளோ சொல்லொண்ணாது
தென்னகரில் ராமரல்லோ பிறப்பதற்கு
சிறப்பான தவமிருந்த சித்துமல்லோ
பொன்னகர மானதொரு குகைதானல்லோ
புகழான கோட்டையுண்டு வுதகந்தானே. 895

யுகாந்தசித்து சீடர்கோட்டை

தானான கோட்டைக்கு எட்டுவாசல்
தாரணியில் மாண்பர்களுங் கண்டதில்லை
கோனான என்குருவாம் அசுவனியாந்தேவர்
கொற்றவனார் திரேதாயி னுகத்திலப்பா
பானான கோட்டைதன்னைக் கண்டேனென்று
பாங்குடனே எந்தனுக்குச் சொன்னநீதி
தேனான மனோன்மணியா ளிருக்கும்ஸ்தானம்
தேற்றமுடன் கோட்டையது என்றார்தாமே. 896

என்றாரே அசுவனியாந் தேவர்தானும்
எழிலான யுகாந்தரிடி சீடவர்க்கம்
வென்றிடவே கோட்டைக்குள் காவணத்தை
விருப்பமுடன் கார்த்திருக்குஞ் சீடரல்லோ
சென்றாலும் நடுவாசல் மத்திபத்தில்
சிறப்பான வுதகமுண்டு மண்டபந்தான்
தென்றலுடன் அலைவீசுங் காவணந்தான்
தென்னகரி ராமருட நிதியுந்தானே. 897

ராமருக்குப் பாட்டன் திரவியவைப்பு

நிதியான ராமருட பாட்டனப்பா
நேர்மையுடன் தானும்வைத்த நிதிகள்கோடி
பதியான கோட்டைமுகம் நடுமையத்தில்
பாங்குடனே தேவதா பூதத்தோடும்
துதியான சீடர்களி னிணக்கத்தோடும்
துப்புரவாய்க் காத்திருக்கும் திரவியங்கள்
மதியான மலைபோன்ற திரவியங்கள்
மகத்தான கோடியுண்டு வகுக்கலாமே. 898

வகுக்கலா மாசீர்மந் தன்னிலப்பா
வரைகோடி திரவியங்கள் கிடாரந்தன்னை
தொகுப்புடனே ராமரென்னும் பேரனுக்குத்
தொல்லுலகைப் பட்டமது யாளும்போது
நகுப்புடனே கிடாரமதைக் கொடுப்பதற்கு
நலமான காலம்வரும் வேளைமட்டும்
சகுப்புடனே காவலது யிருக்கவென்று
சட்டமுடன் பூதத்துக் குறுதியாமே. 899

ஸ்ரீராமருக்குச் சாதகங்கணித்தது

உறுதியாஞ் ஸ்ரீராம ரானவர்க்கு
உத்தமனார் பாட்டனவர் வைத்தவைப்பு
அறுதியாம் யுகாந்தரிடி சீடவர்க்கம்
அன்புடனே தானிருக்கு மாசீர்மத்தில்
இறுதியுடன் கிடாரங்கள் கோடாகோடி
எழிலுடனே நிதிகளது யிருக்குதென்று
மறுவன்றி ஸ்ரீராமர் பாலனுக்கு
மன்னவர்கள் சாதகங்க ளெழுதினாரே. 900

எழுதினார் சாஸனங்கள் வேதபாகர்
எழிலான திரவியங்கள் கிடைக்குமென்று
பழுதுபடா ஸ்ரீராம ரானவர்க்கு
பாரினிலே வயதுமிக வந்தபின்பு
தொழுதிடவே திரவியங்கள் வேணதெல்லாம்
தோற்றமுடன் பாலனுக்குக் கிடைக்குமென்று
வழுதுறவே சாதகங்கள் கணித்தாரல்லோ
வளமுடனே யிருபிறப் பாளர்தாமே. 901

தாமான ராசருட பேரந்தானும்
தாக்கான சாதகத்தை யுவந்துகொண்டு
வேமான மாகவல்லோ தடமுங்கொண்டு
வேதாந்த யுகாந்தரிடி தன்னைக்கண்டு
போமெனவே யுகாந்தரிடி யாசீர்மத்தில்
பொங்கமுடன் பாலனவன் முன்னேவந்து
நாமெனவே சொன்னபடி யுகாந்தசித்தை
நலமுடனே கண்டானே பாலன்றானே. 902

பாலனாம் ராசருட பேரந்தானும்
பாங்கான யுகாந்தரிடி தன்னைநோக்கி
சீலமுடன் சாதகத்தைக் கையிலீய்ந்து
சிறப்புடனே விண்ணபங் கேட்கலுற்றான்
கோலமுடன் யுகாந்தமுனி சித்துதாமும்
கொப்பெனவே சாதகத்தை மனதுவந்து
தாலமுடன் குறிப்பதனைப் பார்க்கும்போது
தாரணியில் சாதகமும் மெய்யாச்சே. 903

ஆச்சப்பா சாதகமும் மெய்யதாச்சு
அன்பான பாலனவன் தன்னைப் பார்த்து
மூச்சடங்கிப் போனதொரு ராமர்தானும்
முன்யுகத்தில் வைத்ததொரு கிடாரந்தன்னை
பேச்சொன்று பேசாமல் குடுப்பதற்கு
பேரான யுகாந்தமுனி சித்துதாமும்
மாச்சலுடன் தன்மனதி லெண்ணங்கொண்டு
மகத்தான பூதமதை நினைத்திட்டாரே. 904

இட்டாரே யுகாந்தவரை சித்துதாமும்
எழிலான பூதமதைத் தானழைத்து
திட்டமுடன் பாட்டன்வைத்த கிடாரந்தன்னை
சிறப்புடனே ராமருக்குக் கொடுக்கவென்று

சட்டமுடன் பூதத்துக் குறுதிசொல்லி
சாங்கமுடன் கிடாரமதை விலகிநிற்க
இட்டமுடன் யுகாந்தவரை சித்துதாமும்
எழிலான விடையதுவுந் தந்திட்டாரே. 905

தந்தவுடன் பூதமது கிடாரமேகி
தாக்கான காட்டகத்தே சென்றதாங்கே
அந்தமுடன் ரிடியாரும் பாலனுக்கு
அன்புடனே ஒப்பிவைத்தார் நிதிகள்தன்னை
சொந்தமுடன் நிதியனைத்தும் ராமர்தானும்
சுத்தமுடன் கைக்கொண்டார் திரவியத்தை
விந்தமுடன் கிடாரமதைப் பெற்றுக்கொண்டு
விருப்பமுடன் தருமங்கள் மிகச்செய்வாரே. 906

பாட்டன் சொத்தை ராமர் தானமீதல்

செய்யவே மடாலயங்கள் கட்டிவைத்தார்
செகத்திலுள்ள அதிதிபர தேசிகட்கு
துய்யநல்ல நெய்யோடு பாலோடன்னம்
துப்புரவாய்த் தானளிப்பார் மாண்பருக்கு
வெய்யதொரு சாவடிகள் குளமடுக்கள்
வெட்டவெளி மண்டபங்கள் மிகவுஞ்செய்வார்
பையவே வூருணிகள் தோப்புசாலை
பாங்கான கேணிமுதல் செய்வார்பாரே. 907

பாரேதான் சித்துமுனி ரிடிகளுக்கு
பாங்கான மடதடங்கள் கட்டிவைப்பார்
ஊரேதான் குடியேற்ற மிகவுஞ்செய்வார்
உத்தமனே நரளொன் றுக் காயிரம்பேர்
சீரேதான் போசனங்கள் மிகப்பாலிப்பார்
சிறப்புடைய தர்மமது செய்வார்பாரு
தீரேதான் நவகோடி திரவியங்கள்
தீரமுட னளித்தாலு மாளாதன்றே. 908

அன்றான ராமருட திரவியங்கள்
அளவில்லா வரைகோடி நிதிகளுண்டு
குன்றான திரவியத்தைச் செலவுசெய்ய
கொற்றவனால் முடியாத நிதியனைத்தும்
வென்றிடவே ராமாவ தாரந்தானும்
விருப்பமுடன் சையோக வலையிற்சிக்கி
சென்றுமே கோபிகா ஸ்திரீகள்மாரை
சிறப்புடனே லீலைமிகச் செய்தார்பாரே. 909

பார்க்கையிலே பன்னீரா யிரந்தானப்பா
பாங்கான மாதர்களை லீலைசெய்து
தீர்க்கமுடன் திரவியங்க ளனைத்துமேதான்
சிறப்புடனே சிலவுமிகச் செய்தார்பாரு
சேர்க்கவென்றால் பொருளேது நிதிகளேது
செம்மலுடன் மாய்கையென்ற வாசையாலே
ஏர்க்கவே நிதிகளெல்லாஞ் செலவழித்து
எழிலாகத் தாமிருந்தார் ராமர்தானே. 910

மலையரச முனிவராசீர்மங்கண்டது

தானான புலஸ்தியனே சொல்லக்கேளும்
தண்மையுள்ள மைந்தாநீ கேளுகேளு
கோனான மலையரசன் பட்டணந்தான்
கொற்றவனாம் மலையரச ரிடிதானுண்டு
தேனான வடமதுரை மேற்கேயப்பா
தேற்றமுடன் வடகாஞ்சி தென்கிழக்கு
பானான மலையரசன் பதிதானுண்டு
பகவானா ரசுவனியாஞ் சொன்னநீதி. 911

நீதியாம் மலையரசன் பதிதானப்பா
நிலையான மலையமுனி ரிடிதானப்பா
சோதியாஞ் சொர்ணகிரி மலைதானப்பா
சோழவள நாடென்றே சொல்லலாகும்
பாதிமதி சடையணிந்த தம்பிரான்போல்
பாங்கான மலையமுனி சித்துவுண்டு
ஆதியிலே அசுவனியாந் தேவர்தானும்
அன்புடனே யவர்பதிக்குப் போனார்தாமே. 912

பதியான மேருகிரி யென்னலாகும்
பாருலகி லம்மலைபோ லெங்கிலுண்டோ
நதியதுவுமலையதனை சுத்தியல்லோ
நலமாகத் தானிருக்கும் மலைதானப்பா
துதிபுரியும் மலையமுனி சித்துதம்மை
துப்புரவாய்க் கொலுவிருக்கு மாசீர்மந்தான்
மதியுடனே சூரியனுங் காணாநாடு
மகத்தான மலையரசன் நாடுதானே. 913

நாடான நாடதனில் வரைகோடிகாலம்
நலமுடனே யரசாட்சி செய்திருந்தார்
கோடான கோடிவரை மாண்பரோடு
குறையாமல் அரசாட்சி செய்திருந்தார்

தாடாண்மை யாகவல்லோ வுலகுதன்னில்
சக்கரமாம் நெறிப்படியே யரசுசெய்து
ஆடாண்மை யுள்ளவராய் வெகுகாலந்தான்
அன்புடனே யரசாட்சி செய்தார்பாரே. 914

பாரேதான னரசாட்சி செய்யும்போது
பாருலகில் மும்மாரி பொழியும்பாரு
சேரேதான் குடிப்படைக ளெல்லாருந்தான்
செவ்வையுட னாறிலோர் கடமைதந்து
தீரேதான் மனுச்சக்கரவர்த் திபோல
திறமான செங்கோலு மிகச்செலுத்தி
கூரேதான் வையகத்தை யாண் டிருந்தார்
கொற்றவனா மலையரசன் வண்மைதானே. 915

வண்மையா மலையகத்தில் அரசுசெய்து
மார்க்கமுடன் செகதலத்தை யாளும்போது
உண்மையாந் தத்துவத்தில் மிகுத்தசித்து
உத்தமனாம் நவகண்ட ரிடியார்தாமும்
திண்மையாம் மலையரசன் தன்னைப்பார்த்து
தீரமுடன் வுபதேசஞ் செய்யவென்று
நண்மைபெற நாதாந்த சித்துதாமும்
நலமுடனே வுபதேசங் கூறுவாரே. 916

மலையரசனுக்கு நவகண்டரிடிஉபதேசங்கூறல்

கூறுவார் நவகண்ட ரிடியார்தாமும்
கொற்றவனாம் மலையரசன் தன்னைப்பார்த்து
வீறுபுகழ் வில்வேந்தே மன்னவாகேள்
விருப்பமுட னுலகனைத்தும் ஆண்டீரல்லோ
மாறுடைய வையகத்தி னாசையெல்லாம்
மறந்துமே யெந்தனிடஞ் சீடனாகி
ஆறுதலம் வனாந்திரங்கள் திரிந்துமேதான்
அவனியெலாங் கண்டிடலா மென்றிட்டாரே. 917

என்றாரே நவகண்ட ரிடியார்தாமும்
எழிலான மலையரச னானவர்க்கு
குன்றான யுபதேசங் கூறும்போது
குணமான வேந்தனவர் மனதுவந்து
இன்றுமுதல் மனைவிமக்க ளெல்லாமற்று
எழிலாக வனவாசஞ் செல்வதற்கு
தன்றனுளமனமகிழ்ந்து மன்னர்தானும்
தாங்கமுடன் செப்பலுற்றார் குடும்பத்தோர்க்கே. 918

ஆர்க்கவே யுலகுதனி லாசையற்றேன்
அன்பான மனைவிமக்க ளெல்லாமற்றேன்
தீர்க்கமுடன் குடும்பத்தோ ராசையற்றேன்
திரளான வரைகோடி செல்வமற்றேன்
பார்க்கவே சிம்மாசனம் யான்மறந்தேன்
பாங்கான செங்கோலும் யான்மறந்தேன்
ஆர்க்கமுடன் மாடமாளிகை மறந்தேன்
அவனிதனி லாசையெல்லா மொழிந்தேன்தானே. 919

தானான நவகண்ட ரிடியார்தானும்
தகைமையுடன் மலையரசன் தன்னோடொக்க
கோனான பதிவிட்டு யிருவர்தாமும்
கொப்பெனவே வனவாசந் தான்திரிந்து
தேனான மனோன்மணியின் கடாட்சத்தாலே
தேசமெல்லாந் தான்திரிந்து சித்துதாமும்
பானான மலையரச னானவர்க்கு
பாங்குபெற ஞானோபஞ் செய்தார்காணே. 920

காணவே யுபதேசம் பெற்றபின்பு
காசினியை யாண்டதொரு வேந்தன்றானும்
வேணபடி யுபதேசம் பெற்றவேந்தன்
வீரான நவகண்ட முனியைப்பார்த்து
நீணவே சமாதிக்கு அடியேன்றானும்
நீதியுடன் வருவதற்கு ஐயமில்லை
ஆணவங்கள் தானொடுங்கி சமாதிக்கேக
அன்புடனே யெந்தனுக்கு வருள்கொள்வீரே. 921

நவகண்ட முனி மலையரசனை தர்க்கித்தல்

கொள்ளவே மலையரசன் சொல்லும்போது
கூறான நவகண்ட முனிவர்தானும்
உள்ளபடி யுந்தனுக்கு மாய்கையாசை
உத்தமனே யொழியவில்லை யென்றுரைத்தார்
கள்ளமனம் தானறிய சித்துதாமும்
கடூரமுடன் மனதுவந்து கூறும்போது
தெள்ளமுர்த மானதொரு மன்னன்றானும்
தீரமுடன் தாமுரைப்பார் வதிதந்தானே. 922

அதிதமாம் நவகண்ட முனியார்தாமும்
அன்புடனே தாமுரைக்கும் வார்த்தைதன்னை
துதிதமுடன் மலையரசன் றானும்பார்த்து
துப்புரவாய் சொல்லலுற்றார் முனியாருக்கு

கதிதமுள்ள காசினியி லாசையெல்லாங்
கட்டறுத்தேன் மெய்ஞ்ஞானி யென்றுமல்லோ
பதிதமுள்ள பேர்கொண்டேன் அடியேன்றானும்
பட்சமுடன் எந்தனுக்கு அருள்செய்வீரே. 923

மலையரசனை நவகண்டரிடி சோதித்தது

அருளவென்று மலையரசன் கேட்கும்போது
அன்பான நவகண்டரிடியார்தாமும்
மருளுடனே யடியாரைச் சோதித்தேற
மார்க்கமுடன் தானழைத்து முனிவர்தானும்
இருளான வனந்தேடி யிருவர்தாமும்
எழிலான சஞ்சாரஞ் செய்துமல்லோ
தெருளுடனே நாம்திரும்பி வருவோமென்று
தேற்றமுடன் சீடனைத்தான் அழைத்தார்பாரே. 924

பாரேதான் சித்தருட னரசன்றானும்
பாங்குடனே மலைநாடு சுத்தும்போது
நேரேதான் தெற்குமுகங் குகைதான்தாண்டி
நேரான கானகத்தின் கடலோரந்தான்
ஊரேதான் பஞ்சமர்க ளிருக்கும்ஸ்தானம்
உத்தமர்க ளிருவருந்தான் போகும்போது
தேரேதான் வேந்தனுக்குப் பசியுமாச்சு
தெளிவான் ஞானமது பறந்துபோச்சே. 925

போச்சப்பா மலையரசன் வேந்தனுக்கு
பொங்கமுடன் நவகண்டரிடியார்தாமும்
ஆச்சப்பா பசியதுவு மேலதாச்சு
ஆண்டவனே ரிடியாரை யென்னசெய்வேன்
மூச்சடங்கிப் போகுதையா பிராணவாயு
மூதுலகை யாண்டதொரு சித்துவெண்பார்
நீச்சுடைய சேரியிலே யென்னவுண்டு
நிட்களமாய்ப் பதிகடந்து போவோமென்றார் 926

போவோமென்று சொல்லுகையில் வேந்தர்தாமும்
பொங்கமுடன் நவகண்டரிடியாருக்கு
தாகமுடன் களைதாக்கிப் போகுதென்றார்
சட்டமுடன் ரிடியாரும் வேந்தனுக்கு
ஆவதுதா னொன்றில்லை யிந்தவேளை
அப்பனே யுந்தனுக்கு களைகள்மாற
சாவதுதா னகற்றி யுந்தனுக்கு
சட்டமுடனாகாரம் தருவேனென்றார். 927

தருவேனென்று தானுரைத்துச் சேரிதன்னில்
தகைமையுடன் நவகண்ட ரிடியார்தாமும்
பருவமுள்ள வேந்தனுக்கு மாட்டிறைச்சி
பண்பாகத் தான்வாங்கி கொடுத்தாரல்லோ
சருவமது தான்கடந்த வில்வேந்தேகேள்
சட்டமுடன் பசியாறுமென்று சொன்னார்
அருவருவாய் வில்வேந்த ராசன்றானும்
அப்போதே தான்பொசித்தார் வேந்தர்தானே. 928

வேந்தருந்தான் பொசிக்க ரிடியார்தாமும்
வேற்றுமைக ளில்லாமல் தானுங்கொண்டார்
சாந்தமுடன் ரிடியாரு முண்டுமல்லோ
சட்டமுடன் மலையரசன் றன்னைத்தானும்
காந்தலெனு மன்மதனைச் சோதித்தேதான்
கவனமுடன் ரிடியாரு மனதுவந்து
போந்தமுடன் மலையரசன் றன்னைநோக்கி
பொங்கமுட லுண்டகறி கக்கென்றாரே. 929

கக்கென்று சொல்லுகையில் முனிவர்தாமும்
கனமான மலையரசன் மனதுவந்து
பொக்கெனவே மாமிசத்தை கக்கும்போது
பொலிவான யிறைச்சியது யிறைச்சிபோலாம்
சிக்கெனவே நவகண்ட ரிடியார்தாமும்
சிறப்புடனே மாமிசத்தை கண்டாரங்கே
அக்கணமே ரிடியாருந் தானுங்கொண்ட
அருங்கறியைக் கக்கினார் புட்பமாச்சே. 930

ஆச்சப்பா அருங்கறியும் புட்பமாச்சு
அரசனே நீயுண்ட மாமிசந்தான்
நீச்சுடனே மாமிசமா யிருந்ததப்பா
நீடாழி யுலகத்தி னாசைமார்க்கம்
மாச்சலுட னுந்தனுக்கு வொழியவில்லை
மகத்தான வாசையது யின்னமுண்டு
ஏச்சலுடன் தாமுரைத்தார் ரிடியார்தாமும்
எழிலான வேந்தனுக்கு துயரமாச்சே. 931

ஆச்சென்று சொல்லுகையில் நவகண்டர்தாமும்
அன்பான மலையரசன் மனம்புண்ணாகி
பேச்சடங்கி களைசோர்ந்து திகைத்துநின்றார்
பேரான மலையரசன் வில்வேந்தன்றான்

வீச்சலுடன் மலையரசன் தன்னைப்பார்த்து
விருப்பமுடன் சொல்லுகிறார் வேந்தனுக்கு
ஆச்சரிய மகாவல்லோ அரசனுக்கு
அன்புடனே மனதுவந்து விதிசொல்வாரே. 932

மலையரசனுக்கு நவகண்டர் தேறுதல்கூறல்

விதியான மன்னவனே யின்னங்கேளீர்
விருப்பமுடன் சொல்லுகிறே னுந்தமக்கு
பதியான சமுசார வாழ்க்கையல்லோ
பாரினிலே யுந்தனுக்கு வொழியவில்லை
மதியீன மாகவல்லோ மாய்கைதன்னில்
மயங்கிறதே யுந்தனுளம் வேந்தாகேளு
துதியான ஞானவழி வாய்க்கவில்லை
துப்புரவாய் அஞ்ஞான மூடலாச்சே. 933

மூடவென்றா லஞ்ஞான வழியிலப்பா
உத்தமனே மெய்ஞானம் வாய்க்காதப்பா
நீடாழி யுலகத்தி னாசையெல்லாம்
நிட்களங்க மாகவில்லை யுந்தனுக்கு
கோடான கோடிபொருள் வெறுத்தேனென்றீர்
குவலயத்தி லுந்தனுக்கு வாசைமார்க்கம்
சாடவே மூவாசை யற்றேனென்றீர்
சாங்கமுட னொழியவில்லை. யென்றிட்டாரே. 934

இட்டாரே நவகண்ட முனியார்தாமும்
எழிலான மலையரச னானவர்க்கு
சட்டமுட னின்னமுண்டாஞ் சிலதுகாலம்
தாரணியி லெந்தனது ஞானோபந்தான்
திட்டமுடன் கூடிருந்து வருளும்பெற்று
திகழான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
அட்டதிசைப் புகழவல்லோ பெயருங்கொண்டு
அன்புடனே யிருப்பீரென் றியம் பினாரே. 935

இயம்பவே மன்னவனார் சிலகாலம்
எழிலாகத் தாமிருந்தார் சித்தரோடு
நயம்படவே ஞானோப தேசமெல்லாம்
நன்மையுடன் தானடைந்தார் வேந்தர்தானும்
தயம்பிடவே நவகண்ட ரிடியார்தாமும்
தண்மையுட னுபதேசஞ் செய்திட்டார்பார்
சயம்படவே மலையரச முனிவர்தானும்
சாங்கமுடன் விடையென்று கேட்டார்பாரே. 936

பாரேதான் ரிடியாரை வேந்தன்கண்டு
பட்சமுட னாசீர்மம் மிகவுஞ்செய்து
சேரேதான் யென்சாமி சித்துநாதா
சீரான மனுவொன்று அருளவேண்டும்
ஊரேதான் வுலகமெல்லாஞ் சுத்தியேதான்
உத்தமனார் சொரூபமென்ற சித்துதம்மை
தீரேதான் யான்கண்டு வுபதேசங்கள்
சிறப்புடனே வருவேனென் றியம்பினாரே. 937

இயம்பவே மலையரசன் விடையும்போது
எழிலான காட்டகத்தில் செல்லும்போது
நயம்படவே சொரூபமென்ற சித்துதாமும்
நாடாண்ட வேந்தனையுந் தானும்பார்த்து
பயப்படவே தாமழைத்து வதிகஞ்சொல்லி
பான்மையுட னெந்தனுக்குச் சீடனாக
புயம்படவே சிலகால மிருப்பாயானால்
புண்ணியனே வருள்கொடுப்பே னென்றிட்டாரே. 938

இட்டாரே சொரூபமென்ற சித்துதாமும்
எழிலான மலையரசன் வேந்தனுக்கு
கிட்டாத பொருளெல்லாங் கிட்ட வென்று
கீர்த்தியுடன் பலகாலு முபதேசித்து
சட்டமுடன் மெய்ஞ்ஞானப் பாலையூட்டி
தத்துவத்தின் பிரம்மலபி கடக்கச்செய்து
அட்டதிசைத் தான்புகழ வரமுந்தந்து
அட்சரமாம் ஞானமதை விளக்கிட்டாரே. 939

விளக்கவே மலையரச னானவேந்தன்
விட்டகுறை யிருந்ததினால் மன்னனுக்கு
துளக்கம்வர பலகலையுந் தாமுணர்ந்து
துப்புரவாய்ச் சின்மயத்தை யறிந்துகொண்டு
களக்கமிலா பயிரங்க யோகவானாய்
காசினியில் கீர்த்திபெற சித்தனாகி
வளக்கமுடன் சிலகாலஞ் சென்றுமேதான்
வண்மையுடன் குருதனையே வணங்கிட்டாரே. 940

வணங்கியே பராசமுடி மன்னர்தானும்
மகத்தான ரிடியினிடம் விடைகள்பெற்று
இணங்கவே நவகண்ட ரிடியைக்காண
எழிலான மனதுவந்து — — —

மணங்கமழும் நவகண்ட ரிடியார்பக்கல்
மார்க்கமுடன் மலையரசன் வந்துநின்று
சுணங்கமது வாராமல் கும்பிட்டேதான்
சுத்தமுடன் அடிபார்த்தே தொழுதிட்டாரே. 941

மலையரசன் நவகண்டரிடியைக் காணல்

தொழுதுமே மலையரசன்வேந்தன்றானும்
தோற்றமுடன் நவகண்ட ரிடியாருக்கு
பழுதுபடா மேனியனே பட்சலோகா
பாருலக மெலாஞ்சுத்தி சொரூபர்தன்மை
வழுதுறவே யான்கண்டு உபதேசங்கள்
வண்மையுடன் பெற்றுவந்தே னென்றுசொல்லி
தொழுதுமே பலகாலு மடிவணங்கி
தோற்றமுடன் வினயங்கள் கூறுவாரே. 942

கூறயிலே நவகண்ட ரிடியார்தாமும்
கொப்பெனவே மலையரசன் றன்னைப்பார்த்து
ஆறவே யுந்தனுக்கு லோகவாழ்க்கை
அப்பனே மாய்கையது மாய்ந்துபோச்சோ
தூறவே யுந்தனையுஞ் சோதிப்பேன்யான்
தூரான சோதனைக்கு முன்னேநின்றால்
மீறியே யுந்தனுக்கு வுபதேசங்கள்
மென்மேலும் யான்தருவே னென்றிட்டாரே. 943

என்றுமே நவகண்ட ரிடியார்தாமும்
எழிலான மலையரசன் தன்னைநோக்கி
சென்றுமே சிலகாலங் காட்டகத்தை
திரள்மன்னா போய்வருவோ மென்றழைக்க
இன்றுமுதல் யில்வாழ்க்கை யான் துறந்து
எழிலான காட்டகத்தை யேகியாமும்
தன்றனுள மகிழவே வேந்தன்றானும்
தகைமையுடன் புறப்பட்டார் ரிடியார்காணே. 944

காணவே நவகண்ட ரிடியாரோடு
காட்டகத்தே வனசாரி வருகும்போது
தோணவே தன்மனதி லுள்ளடக்கி
தோராமல் வேந்தனையும் மனதுவந்து
வேணபடி யுபசார மிகவுஞ்செய்து
விருப்பமுடன் சேரியது பக்கல்சென்று
நாணவே மாமிசத்தைத் தானெடுத்து
நலமாகத் தான்கொடுத்தார் சித்துதாமே. 945

சித்தான நவகண்ட ரிடியார்தாமும்
சிறப்புடனே மாமிசத்தைக் கொடுக்கும்போது
முத்தான வாய்திறந்து வரசன்றானும்
முசியாம லுண்ணுகையில் வேந்தனுக்கு
பத்தாவாம் சொருபனார் கடாட்சத்தாலே
பாங்கான மேனியிலே வாசம்வீசும்
சுத்தமுள்ள வேம்புகா புட்பவாடை
சுருதியுள்ள தேகமெல்லாம் வீசலாச்சே. 946

ஆச்சப்பா தேகமது வாசம்வீசும்
ஆண்டவனார் நவகண்ட ரிடியார்தாமும்
நீச்சடங்கி தேகமது வாசம்வீச
நிலையான நவகண்ட ரிடியார்தாமும்
மூச்சுடனே பிரம்மைகொண்டு திடுக்கிட்டேங்கி
மூதுலகி லிவர்போல சித்துவுண்டோ
மாச்சலுடன் தன்மனதி லுள்ளடக்கி
மகத்தான மாமிசத்தை கக்கென்றாரே. 947

என்றாரே நவகண்ட ரிடியார்தாமும்
எழிலான மலையரசன் தன்னைப்பார்த்து
குன்றான பருவதமே தேர்வேந்தேகேள்
கொண்டதொரு மாமிசத்தைக் கக்கவேண்டும்
இன்றுயான் சந்தேகந் தெளியவேண்டும்
எழிலான வேந்தரை மனதுவந்து
வென்றிடவே முகதாவில் கேட்கும்போது
வேதாந்த மலையரசன் காண்பித்தாரே. 948

காண்பித்தார் மாமிசத்தைக் கக்கும்போது
கருவான மாமிசமும் புட்பமாச்சு
ஆண்மையுடன் மலையரசன் வேந்தன்றானும்
அதிசயங்கள் காண்பிக்க ரிடியார்தாமும்
மாண்மையுட னவர்மீதில் கிருபைவைத்து
மகத்தான ரிடியாருங் களிப்படைந்து
தாண்மையுடன் மன்னனுக்கு வாசீர்மங்கள்
தக்கபடி செய்தாரே முனியார்தாமே. 949

முனியான நவகண்ட ரிடியார்தாமும்
முயற்சியுடன் மலையரச னானவர்க்கு
இனிகால முலகமதி லிருந்துமென்ன
எழிலான தேசத்தை யொழிக்கவேண்டும்

தனியான சமாதிக்குப் போகவேண்டும்
தாரணியி லாசைதனை யொழிக்கவேண்டும்
கனிவுடனே மலையரசன் தானுங்கேட்டு
காசினியி லாசைதனை யொழித்தேன்பாரே. 950

பாரேதான் மலையரச னானவேந்தன்
பாருலகில் வெகுகால மிருக்கவெண்ணி
நேரேதான் காயாதி கற்பந்தன்னை
நேர்மையுடன் காயாதி கற்பந்தன்னை
தீரேதான் ஆசீர்மஞ் சமனாய்ப்பூண்டு
திட்டமுடன் கொலுவிருந்தார் அரசன்றானும்
சீரேதான் நவகண்ட ரிடியார்தாமும்
சிறப்புடனே வேந்தனை கொண்டணைத்தார்தாமே. 951

அஞ்சனகிரி மகிமை

தாமான யின்னமொரு கருமானங்கேள்
தகைமையுள்ள மேற்குமுகம் வடபாகத்தில்
ஆமான மஞ்சனமாங் கிரிதானப்பா
அழகான நடுமையந் தன்னில்தானும்
வேமான மண்டபந்தான் குண்ணுக்கல்லாம்
வெளியான குகையுண்டு தடாகமுண்டு
சாமான மாகவல்லோ ரிடிகள்தாமும்
சாங்கமுடன் மலைசுத்தி யிருப்பார்காணே. 952

காணவே புலஸ்தியனே யின்னங்கேளு
கருவான கோட்டைக்கு நான்குபக்கம்
தோணவே பாறைகொண்டு சாத்திருக்கும்
துலைதூரம் பார்த்தாலுந் தடமுங்காணார்
வேணபடி மாண்பரெல்லாஞ் சுத்திருப்பார்
விதமான வாசல்வழி தன்னைக்காணார்
தூணதுபோல் நவகோடி தூண்களப்பா
சுற்றிலுமே வரிசையதாய் நிற்குந்தானே. 953

தானான தூண்மறைவில் பாறையப்பா
சட்டமுடன் அமைத்திருக்கும் ரிடிகள்கோட்டை
மானான கோட்டைக்கு வழியுங்காணார்
மகத்தான சித்தர்முனி காண்பார்பாரு
தேனான நிறம்போலே கற்றூணப்பா
தெளிவான தூணதுவுந் தடந்தானாகும்
கோனான ராசாதி ராசர்தாமும்
கொற்றவனா ராண்டதொரு வழியுமாமே. 954

வழியான முன்யுகத்தில் ராசரெல்லாம்
வையகத்தை யாண்டதொரு தடமுமாகும்
பழியான ரிடியினது சாபத்தாலே
பாங்கான கோட்டையது மண்மேடாச்சு
அழியாத வாஸ்தான மண்டபங்கள்
அவனிதனில் பிரளயத்தால் மூடலாச்சு
குழியான கோட்டைதனை சுத்தியல்லோ
கொடிதான கானாறு ஓடையுண்டே 955

அஞ்சனமகா. ரிடியாசீர்மம்

உண்டான வஞ்சனமாங் கிரியிலப்பா
உத்தமனா ராசீர்மங் கோடியுண்டு
கண்டவர்க ளில்லையப்பா ரிடியாசீர்மம்
காசினியி லாராலு முடியாதப்பா
அண்டமுனி தேவாதி தேவரெல்லாம்
அங்ஙனமே தவமெய்துங் கிரிதானப்பா
திண்டான வாசீர்மந் தன்னைச்சுற்றி
திகழான சித்துமகா கூட்டந்தானே. 956

கூட்டமாம் பாறையது திறந்துமல்லோ
கூரான சித்தர்முனி போகர்தானும்
வாட்டமுடன் நிலைதாண்டி வுள்ளேசென்று
மகத்தான கோட்டைவளந் தன்னைக்காண்பார்
நீட்டமுடன் கோட்டையது வாயில்சுத்தி
நீதியுடன் ரிடிக்கூட்டங் காவலுண்டு
தேட்டமுட னாசீர்மங் கிட்டிச்சென்றால்
தேவரிடி அஞ்சனா ரிடியுமுண்டே 957

உண்டான ரிடியினிட பெருமைதன்னை
ஓகோகோ நாதாக்கள் கூறுதற்கு
செண்டான மாண்பர் வொருவராலும்
தேசத்தில் காண்பதற்கு முடியாதப்பா
அண்டவொண்ணா சேனைபடை கூட்டந்தானும்
அன்புடனே யவர்மகிமை கண்டோரில்லை
கொண்டல்வண்ண வச்சுதனா ரென்றேசொல்வார்
குவலயத்தி லவர்போலும் ரிடியுமுண்டோ. 958

உண்டோதா னிவ்வுலகில் யார்தான்காண்பார்
உத்தமனா ரஞ்சனா ரிடியார்தம்மை
கண்டமெனும் வுலகமதைக் கடந்தசித்து
காசினியில் பத்துயுகங் கண்டசித்து

தண்டவன ரிடிகளெல்லா மிவர்க்கீடுண்டோ
தாரணியில் பிரளயங்கள் கடந்தசித்து
குண்டவமா காயமதைக் கண்டசித்து
கூரான சித்துமுனி பெருமைகேளே. 959

கேளப்பா புலஸ்தியனே யின்னஞ்சொல்வேன்
கெவனமுடன் குளிகைகொண்ட சித்துவென்பார்
ஆளப்பா லோகமெல்லாந் திரிந்தசித்து
அப்பனே அஷ்டகிரி பர்வதத்தில்
மாளப்பா குளிகைகொண்டு சென்றாரங்கே
மார்க்கமுட னஷ்டகிரி பர்வதத்தில்
ஆளப்பா வெகுகால மங்கிருந்து
அப்பனே தவயோக நிலைநின்றாரே. 960

நின்றாரே தவநிலையில் நிற்கும்போது
நீட்சியுட னுமார்கள் கூட்டந்தானும்
குன்றான மலைகள்தேடி குகைகள்தேடி
கொப்பெனவே தானும்வந்து ரிடியைக்கண்டு
சென்றுமே ரிடியாரின் பாதம்போற்றி
தேவ சேனாதிபதியே யெங்களுக்கு
இன்றுமுதல் காட்சியது கொடுக்கவென்று
எழிலுடனே வாசீர்மஞ் செய்யலாச்சே. 961

அனுமாருக்கு அஞ்சனமகாரிடி வரமீதல்

ஆச்சப்பா ரிடியாரு மனதுவந்து
அன்புடனே அனுமாரின் சேனைகட்கு
பாச்சலுடன் சஞ்சீவி மூலிதன்னை
பட்சமுடன் தான்கொடுத்து வினயஞ்சொல்லி
மாச்சலுடன் மலைதனையே தூக்குதற்கு
மகத்தான சாத்திரங்கள் மிகவும்ஓதி
வீச்சலுமே பிராணாய வுபதேசங்கள்
வீறுடனே போதித்தார் ரிடியார்காணே. 962

காணவே வுபதேச மறிந்தபின்பு
கருவான அனுமந்த கூட்டமெல்லாம்
தோணவே மலைநாடு குகைவனங்கள்
தோறாமல் தான்திரிந்து கனிவர்க்கங்கள்
வேணபடி ரிடியார்க்கு வருளவென்று
விருப்பமுடன் தானெடுத்து வந்துமல்லோ
பூணவே ரிடியாருக்குத் தானளித்து
பொங்கமுடன் கனிப்புறவே யிருக்குந்தானே. 963

தானான வனுமந்த கூட்டத்தார்மேல்
தகைமையுள்ள ரிடியாரு மனங்களித்து
வேனான மூலிவகை யுயிர்மூலிதானும்
விருப்பமுடன் தான்கொடுத்து விடமுஞ்சொல்லி
கோனான ரிடியாரு மாசீர்மித்து
கொப்பெனவே யானுமந்த கூட்டத்தார்க்கு
மானான வுபதேசம்யாவுஞ்சொல்லி
மார்க்கமுடன் ஞானவழி காட்டினாரே. 964

காட்டவே யனுமார்கள்கூட்டத்தாரும்
காசினியி லிவர்போல ரிடியுமுண்டோ
நீட்டமுடன் அஷ்டகிரி மலையைத்தானும்
நேர்மையுடன் தானெடுத்து தலைமேற்கொண்டு
வாட்டமுடன் ரிடியாருந் தவமிருக்க
வண்மையுட னுமார்கள் கூட்டந்தானும்
ஆட்டமுடன் அவனியெல்லாஞ் சுத்தியல்லோ
அன்புடனே தான்கொண்டு அமர்ந்ததாச்சே. 965

ஆச்சப்பா அனுமந்தக் கூட்ட மெல்லாம்
அஞ்சனா ரிடியாரின் வரத்தினாலே
மூச்சுடனே மலைசுத்தி உலகஞ்சுத்தி
மூதுலகந் தான்கடந்து ரிடியாருக்கு
வீச்சுடனே அவனியெலாஞ் சுத்தியல்லோ
விருப்பமுடன் நாதாந்த ரிடிகளெல்லாம்
ஆச்சரியங் கானவல்லோ நடக்கலாச்சு
அஞ்சனா ரிடியினுட பெருமைதானே. 966

பெருமையாம் அஞ்சனா ரிடியார்தாமும்
பேரான கிருபையது மிகவுங்கொண்டு
அருமையாய் ஆஞ்சநேயர் கூட்டந்தன்னில்;
அன்புடனே வைத்ததொரு பட்சத்தாலே
ஒருமையுடன் லோகமதில் நிதியெடுக்க
ஓகோகோ நாதாக்கள் மைமுடித்தார்
சொரூபமென்ற வஞ்சனா மையினாலே
தொல்லுலகி லெல்லவரு மயங்கலாச்சே 967

அஞ்சனாரிடியின் வரத்தினால் மைபோடும்போது ஆஞ்சநேயர் தோன்றும் அற்புதம்

மயங்கவே லோகமதி லஞ்சனத்தை
மார்க்கமுடன் மாண்பரெல்லாங் காணும்போது
தியங்கியே மையுருகும் பார்வைதன்னில்
திகழுடனே ஆஞ்சனேயர் முன்னேநிற்பார்

புயங்கவே மற்றதோர் தெய்வமெல்லாம்
புகழவே பின்புறத்தே விலகிநிற்பார்
தயங்கவே மைபோடும் பாவனத்தில்
தாரணியில் நிதிகளெல்லாங் காட்டுந்தானே. 968

தானான அஷ்டகிரி சென்றபோது
தண்மையுள்ள ஆஞ்சநேயர் மனதுவந்து
தேனான அஞ்சனா ரிடியாருக்கு
செம்மலுடன் செய்ததொரு ஏவலுக்கு
கோனான குருபரனார் மனமகிழ்ந்து
குவலயத்தி லாஞ்சநேயர் தன்தமக்கு
பானான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
பட்சமுடன் தான்கொடுத்த வரமுந்தானே. 969

மலைவளம் சித்தர் பெருமை

வரமான யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
மகத்தான புலஸ்தியனே மைந்தாகேளும்
நிரமான சித்தர்முனி மலைவளத்தை
நீட்ச்சியுட னென்தேவர் சொன்னநீதி
உரமான டில்லிக்கு வடக்கேயப்பா
உற்றதொரு மலையாரு குகைகள்நான்கு
திரமான சித்தர்களே ஆயிரம்பேர்
சீடர்களும் ரெண்டாயிர மென்னலாமே. 970

என்னவே டில்லிக்கு மேற்கேயப்பா
எழிலான மலையைந்து குகைதான்ரெண்டு
சொன்னதோர் சித்தர்களா யிரத்துப்பத்து
தோற்றமுடன் சீடர்களோ மூவாயிரம்பேர்
மன்னவே டில்லிக்கு தெற்கேயப்பா
மகத்தான மலைகள்பதி னெட்டதாகும்
வின்னமிலா சித்தர்களோ ஆயிரம்பேர்
விருப்பமுடன் சீடர்களு மெண்ணாயிரந்தானாமே. 971

தானான டில்லிக்கு கிழக்கேயப்பா
தண்மையுள்ள புலஸ்தியனே சொல்லக்கேளும்
மானான மலையேழு குண்ணிமூன்று
மகத்தான சுனையுண்டு தடாகமுண்டு
பானான நர்மதா கிழக்கேயப்பா
பாங்கான மலையிரண்டு சுனைகளாறு
தேனான நர்மதா மேற்கேயப்பா
தெளிவான மலை[illegible] குன்றுரெண்டே 972

ரெண்டான மலைதனிலே சித்தரல்லோ
எழிலான மௌனமென்றற சித்தர்கோடி
கண்டதொரு கலைகளிலே சித்துமுண்டு
கைலாய மௌனசித்து யென்னலாகும்
பண்டான நர்மதா வடக்கேயப்பா
பாங்கான மலையொன்று நெடுந்தூரந்தான்
செண்டான மலையதுதா னுயரமப்பா
செம்மலுட னளவதுதான் சொல்லொண்ணாதே. 973

ஒண்ணாத ரிடிகளல்லோ சொல்லப்போமோ
உத்தமனே எட்டுபத்து பெயரேயாகும்
அண்ணாந்து பார்த்தாலும் முடியாதப்பா
அவர்களது சொரூபநிலை யாருங்காணார்
திண்ணமுடன் இந்நாட்டு சித்தரல்லோ
தேவகண சித்தரென்றே செப்பலாகும்
நண்ணவே காசிக்கு மேற்கேயப்பா
நலமான மலையொன்று குகைகள் மூன்றே. 974

மூன்றான மலைதனிலே சித்தரப்பா
முயற்சியுள்ள சித்துமுனி நாற்பதாகும்
தோன்றலுடன் காசினியோர் மாண்பரப்பா
தோற்றமுடன் போயவரைக் காணலாகும்
சான்றவராங் காசிக்கு கிழக்கேயப்பா
சாட்டமுடன் மலைமூன்று நதிகள்ரெண்டு
தேன்பொழியுங் காசிக்குத் தெற்கேயப்பா
தெளிவான சித்தர்முனி யிருக்கும்நாடே 975

நாடான சித்தர்முனி கூட்டமப்பா
நலம்பெரிய மலைதனிலே யிருக்குஞ்சித்தர்
காடான சதுரகிரி கிழக்கேயப்பா
கருவான மலையெட்டு நதிகள்ரெண்டு
பாடான சித்தர்களோ நூத்திப்பத்து
பாங்கான சீடர்களே யிருநூறாகும்
தாடாண்மை சதுரகிரி மேற்கேயப்பா
சட்டமுடன் மலையைந்து குகைகள் நான்கே. 976

நான்கான நதியாறு கானாறொன்று
நலமான சித்தர்களோ நூத்திப்பத்து
பான்மையாஞ் சீடவர்க்க முன்னூறாகும்
பாங்குடனே தேறினதோர் சீடவர்க்கம்

மேன்மையா மறுபத்து நான்குசித்தர்
மேதினிலே குடியுண்டு வாசமுண்டு
கான்மையா மசுவனியார் சொன்னவாக்கு
காசினியில் மெய்யாச்சு கண்டிட்டேனே. 977

கண்டேனே சதுரகிரி தெற்கேயப்பா
கருவான மலைமூன்று குண்ணுயேழு
விண்டதோர் சித்தர்களோ நாற்பத்தெட்டு
வீரமணி சீடர்களோ யெண்பத்திரெண்டு
பெண்டுடனே குடித்தனக் காரரப்பா
பேரின்ப சிற்றின்ப வாழ்க்கையுண்டு
கொண்டதொரு தவவுறுதி மெத்தவுண்டு
கோடான கோடிமுறை நூல்கள்தாமே. 978

நூலான சாத்திரங்கள் வேதகோஷம்
நுணுக்கமுடன் தேவதைகள் பிடாரிகோவில்
காலான அனேகவித தெய்வமுண்டு
காட்டகத்தைச் சென்றுமல்லோ தவமுஞ்செய்வார்
பாலான வாகியதோர் காயகற்பம்
பாரினிலே வெகுகால மிருப்பார்தாமும்
சேலான வரைகடந்த சித்தர்தாமும்
செகதலத்தில் கூறுதற்கு நா வொண்ணாதே. 979

ஒண்ணாது விராலிமலை கிழக்கேயப்பா
ஓகோகோ நாதாக்கள் மலைகள்சொல்வேன்
கண்ணான புலஸ்தியனே சொல்லக்கேளும்
கருவான மலையெட்டு குகைதானாறு
தண்ணான சித்தர்முனி கூட்டமப்பா
தகைமையுள்ள கல்லடியாஞ் சித்தர்தாமும்
வண்ணமுடன் யிருநூறு பேரேயாகும்
வகுப்பான சீடவர்க்க முன்னூறாமே. 980

ஆமேதான் விராலிமலை தெற்கேயப்பா
அழகான மலையாறு குகைகள்நான்கு
தாமேதான் கானாறு ஓடைரெண்டு
தண்மையுள்ள நதிமூன்று யென்னலாகும்
போமேதான் சித்தர்களோ குடியிருப்பு
பொலிவான நாதாக்கள் கூட்டந்தானும்
வேமேதா னிருநூற்று நாற்பதாகும்
விரிவான சித்தர்முனி கூட்டந்தானே. 981

தானான உதயகிரி கிழக்கேயப்பா
    தாக்கான மலையாறு குகைகளெட்டு
பானான நதிரெண்டு கானாறொன்று
    பாங்கான சித்தர்முனி கூட்டமப்பா
தேனான மனோன்மணியா ளிருக்கும்வாசம்
    தேசத்தில் சித்தர்முனி கண்டதில்லை
மானான சித்தர்களோ நூத்தியெட்டு
    மகத்தான சீடவர்க்க மென்னலாமே. 982

நூறான வுதயகிரி மேற்கேயப்பா
    நுணுக்கமுள்ள புலஸ்தியனே சொல்லக்கேளும்
ஆறான நதியாறு மலைகைளெட்டு
    ஆஸ்தான மண்டபங்க ளாறேயாகும்
வீறான சித்தர்முனி கூட்டவர்க்கம்
    விரும்பமுட னெழுபத்தி ரெண்டேயாகும்
கூறான சீடவர்க்கம் நூத்திரெண்டுபத்து
    குறிப்புடனே சொல்வதற்கு நாவொண்ணாதே. 983

நாவான பொதிகைக்கு தெற்கேயப்பா
    நலமான மலையெட்டு குகைகள்பத்து
பாவான சித்தர்முனி கூட்டவர்க்கம்
    பகரவே யிருநூற்று பதினாறாகும்
தாவான சீடவர்க்க மதற்குப்பாதி
    தகைமையுள்ள சித்தர்களோ வதிகமெத்த
ஆவான மருந்துவது கனிவர்க்கமாகும்
    அப்பனே சித்தருட மகிமைதானே. 984

தானான பொதிகைக்கு கிழக்கேயப்பா
    தண்மையுள்ள புலஸ்தியனே சாற்றக்கேளும்
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
    கொற்றவனா ரெந்தனுக்குச் சொன்னநீதி
பானான பராபரியாள் கடாட்சத்தாலே
    பாங்கான மலையெட்டு குகைதானாறு
வேனான சித்தர்களின் கணக்குமார்க்கம்
    வேகமுடன் சொல்வதற்கு கணக்கில்லைதாமே. 985

தாமான பொதிகைக்கு வடக்கேயப்பா
    தண்மையுள்ள திருப்பாலின் கடல்தான்மையம்
ஆமான மானதொரு மலைதானுண்டு
    அதற்கப்பால் குன்றுகளோ அனேகமுண்டு

சாமான்னிய மானதொரு நாதாந்தசித்து
தாரணியில் காண்பதற்கு லக்கோயில்லை
நாமாகக் கண்டதொரு சாத்திரத்தின்
நலம்பெரிய கணிதமதை சொல்லொண்ணாதே. 986

சொல்லவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
துரைராச சுந்தரனார் சொன்னநீதி
வெல்லவே யமுனைக்கு கிழக்கேயப்பா
விருப்பமுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு
வல்லதொரு மலையாறு குகைதான்பத்து
வளமான சித்தர்களின் கூட்டந்தானும்
புல்லவே முன்னூற்றப் பதினாறாகும்
புகழான சீடவர்க்க மறு நூறாமே. 987

நூறான யமுனைக்கு மேற்சேயப்பா
நோக்கமுடன் யானுரைப்பேன் மைந்தாகேளு
கூறான மலையமுனி தனைநிகர்க்கும்
குறிப்பான சித்தர்முனி யிருக்கும்வாசம்
வாறான மலையேழு குகைதான்ரெண்டு
வகுப்பான மாண்பர்களின் சித்தர்நேர்மை
சேறான சித்தர்களோ நூத்திமூன்றுபத்து
செம்மலுடன் சீடவர்க்கம் நூற்றறுபதாமே 988

ஆமேதான் யமுனைக்கு வடக்கேயப்பா
அழகான மலையெட்டு நதிதான்ரெண்டு
நாமேதான் சொன்னபடி சீடவர்க்கம்
நலமான நாற்பத்தி யெண்பேராகும்
போமேதான் சீடவர்க்க முன்னூறாகும்
புகழான நாதவொளி சித்தர்தாமும்
வேமேதான் வெளிக்காட்டு சித்தராகும்
வேதாந்த நுட்பசித்து யென்னலாமே. 989

என்னவே கெங்கைக்கு மேற்கேயப்பா
எழிலான வுதகமொன்று மலைதானெட்டு
பன்னவே நதிமூன்று பதிதானொன்று
பாங்கான சித்தர்முனி யிருக்கும்ஸ்தானம்
துன்னவே நவகோடி ரிடிகளப்பா
துறைகோடி முறைகோடி தொந்தங்கோடி
அன்னமது வாகாரம் பழவர்க்கந்தான்
அப்பனே சித்தர்முனி யிருப்பார்தானே. 990

தானான கெங்கைக்கு கிழக்கேயப்பா
சார்பான மலைநாலு குகைதானாறு
கோனான குருவர்க்கம் சீடவர்க்கம்
கொற்றவனே நூற்றியறு பதுதானாகும்
தேனான தேவமுனி கடாட்சத்தாலே
தேர்ந்தெடுத்த சித்தர்களு மிவர்தானாகும்
பானான பராபரியாள் கடாட்சத்தாலே
பா[illegible]லகில் பாடிவைத்த நூலிதாமே. 991

நூலான நூலிதுதான் மைந்தாகேளு
நுணுக்கமுள்ள புலஸ்தியனே யின்னஞ்சொல்வேன்
காலான யின்னூலுக் கதிகநூலும்
காசினியில் பாடி வைத்தார் சித்தர்மாண்பர்
பாலான நூலதுவு மதிகஞ்சொல்லி
பாடிவைத்தார் பலபலவாஞ் சித்துதாமும்
மாலான நூல்தனில் மலைவளத்தை
மார்க்கமுடன் மறைத்துவைத்தார் சித்தர்தாமே. 992

சித்தான சித்தர் நூ லளவுங்கொண்டு
சிறப்பான கருவு நூல் யாவும்விண்டு
முத்தான முனிவர்மொழி நூல்கள்தன்னில்
முதன்மையாய்ப் பாடவில்லை மலைவளத்தை
சத்தான பரிசனங்க ளெல்லாந்தேர்ந்து
சாங்கமுடன் பாடிவைத்த பெருநூலாகும்
வித்தான நூலிதுக்குள் அனேகநூலும்
விளம்பினார் பலபலவாம் பேதமாமே. 993

பேதமாம் நகர்வளமும் மலைவளந்தான்
பேரான சத்தநதி கானாறுதான்
நீதமுடன் குண்ணுவகை ஓடைதாமும்
நீட்சியுடன் தடாகமது கடலோரந்தான்
சாதகமா யானுரைத்த நூலிற்றானும்
தப்பாமல் வரைகோடி தொத்தஞ்சொன்னோம்
சூதமது தான்விளையும் வுதகஞ்சொன்னோம்
சுத்தமுடன் பெருநூலின் பெருமைதானே. 994

பெருமையா யின்னூல்போல் யாருஞ்சொல்லார்
பேருலகில் சித்தர்முனி சொன்னதில்லை
அருமையாய் அசுவனியார் கடாட்சத்தாலே
அண்டபகி ரண்டமெலாங் கண்டாராய்ந்து

ஒருமையாய் வுளமனதைத் தானடக்கி
ஓகோகோ நாதாக்க ளுளவுபார்த்து
கருமையாய்க் கருனூலுஞ் சிறுனூலுதானும்
கடையேடுங் காப்பேடுங் கண்டார்தானே. 995

கண்டுமே வரையேடு முறைதப்பாமல்
கருவாக பலனூலுங் கண்டாராய்ந்து
விண்டுமே மலைவளத்தை வினயங்கொண்டு
விட்டகுறை யிருந்ததொரு சித்தர்தம்மை
தொண்டுமே செய்ததொரு சீடவர்க்கம்
சிதாபாச மகத்திருந்த சித்தர்தாமும்
பண்டுமே யான்றெளிந்து வுதகங்கொண்டு
பட்சமுடன் தேர்ந்தெடுத்த வுதகம்பாரே. 996

பாரேதான் பன்னீரா யிரந்தானப்பா
பாடிவைத்தேன் மலைவளத்தை யளவொண்ணாது
நேரேதான் பெருனூலாங் காண்டமப்பா
நேர்மையுடன் பனிரெண்டு காண்டமாகும்
ஆரப்பா பன்னீரா யிரந்தானாகும்
அண்டபகி ரண்டமெலா மிதற்குள்ளாச்சு
சாரப்பா சித்தர்முனி யிருக்கும் தானம்
சார்பான சீடவர்க்கம் வாழ்க்கையாமே 997

வாழ்க்கையாம் பெருநூல் காவியந்தான்
மகத்தான நூலிதுபோல் யாருஞ்சொல்லார்
நீழ்க்கமலம் வீற்றிருக்கும் தயார்பாதம்
நீட்சியுட னடிவணங்கி செப்பலுற்றேன்
தாழ்க்கவே சாத்திரத்தின் பேதாபேதம்
தகைமையுடன் கண்டல்லோ மிகவாராய்ந்து
வீழ்க்கவே பெருநூலாங் காவியத்தை
விருப்பமுடன் பாடிவைத்த நூலிதாமே. 998

நூலான காவியமாம் பெருநூலப்பா
நுணுக்கமுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு
நூலான நூலிதுக்குள் தோற்றம்யாவும்
நுட்பமுடன் விட்டகுறை காணலாகும்
நூலான நூலிதுதான் விரினூலாகும்
வேதாந்த நுட்பமிதிற் காணலாகும்
நூலான நூலிதுதான் குருநூலாகும்
நோக்கமுடன் பெருநூலா மியன்றவாறே. 999

இயன்றிடவே பன்னீரா யிரந்தானப்பா
எழிலான சாத்திரங்க ளெல்லாந்தேர்ந்து
நயம்படவே வுலகத்து மாண்பருக்கு
நாதாக்கள் சொல்லாத தெல்லாஞ்சொல்லி
பயன்படவே பெருனூலாக காவியம்தாக்கி
பாங்கான சித்தர்களுக் குறுதி நூலாய்
செயம்பெறவே காண்டம் பன்னிரண்டுமாக்கி
செப்பினேன் புலஸ்தியனே யின்னங்கேளே. 1000

கேளேதா னுந்தனுக்குச் சொன்ன நூலை
கெவனமுடன் புலஸ்தியனே செப்பக்கேளும்
பாளேதான் போகாம லிந்த நூலை
பாரினிலே யொருவருக்குங் காண்பியாமல்
சூளேதான் குகைதனிலே யடக்கஞ்செய்து
சுத்தமுடன் பூஜாதி வினயங்கொண்டு
நீளேதான் வையகத்தில் சித்தனாகி
மிக்கபதி யுலகுதனில் வாழ்குவீரே. 1001

வாழ்கவென்றா லுந்தனைப்போல் சித்துமுண்டோ
வையகத்தில் நீயுமொரு சித்தனாச்சு
தாழவென்றால் நாதாக்க ளுனக்கீடுண்டோ
தண்மையுள்ள சித்தனைப்போல் நீயுமாவாய்
சாழவே வெகுகாலந் தாமிருந்து
சாத்திரத்தை யொருவருக்குங் கொடுக்காமற்றான்
வீழவே மனோன்மணியாள் கடாட்சம் பெற்று
விருப்பமுடன் வெகுநாளாய் வாழ்வீர்காணே. 1002

காணவே பனிரெண்டு காண்டஞ்சொன்னோம்
பாலகனே வாயிரத்துக் கொருகாண்டந்தான்
தோணவே காவியமா யிரந்தானாகும்
துப்புறவாய் யிதிற்கருவு மெத்தவுண்டு
பூணவே முதற்காண்ட மிதுதானப்பா
புகழான புலஸ்தியனே சொல்லக்கேளும்
வேணவே காண்டமிது வாயிரந்தான்
விருப்பமுடன் பாடிவைத்தேன் முற்றதாமே. 1003

அகஸ்தியர் 12000 என்னும் பெருநூல்காவியம்

முதல் காண்டம் முற்றிற்று

❀ ❀ ❀

அகஸ்திய மகாமுனிவர் அருளிய
12000
என்னும்பெருநூல் காவியம்
இரண்டாம் காண்டத்தில்...

அகஸ்திய மகாமுனிவர் தமது பெருநூல் காவியமாகிய இந்த நூலின் இரண்டாவது காண்டத்தில் பல அற்புதமான விஷயங்களைக் கூறியிருக்கிறார்.

இரண்டான காண்டமது யின்னூலுக்குள்
எழிலான பஞ்சபூத மிதிலடக்கம்
திரண்டதொரு காவியந்தானி ரண்டுக்குள்ளே
திரளான தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
முரண்டதொரு சத்துருக்கள் மையின்மார்க்கம்
மூதுலகில் நாதாக்கள்மறைப்பு மார்க்கம்
விரண்டதொரு செந்தூர பற்பமார்க்கம்
விருப்பமுடன் பாடிவைத்த பெருநூலாமே.

என்று அகத்தியர் பெருமான் இரண்டாவது காண்டத்தைப் பற்றிக் கூறுகிறார்.

இதில் மனோன்மணி தியானம், மயேஸ்வரர் பூஜை முதலாக ஞானமடைவதற்குக் கற்றுணர வேண்டிய நூல்களைப் பற்றி 44வது பாடலில் கூறுகிறார். 51வது பாடல் முதல் ஒரு அற்புதமான எளிய காயகற்ப முறையைக் கூறுகிறார்.

ஒரு சேர் செங்கடுக்காயை ஒரு சேர் பாதரசத்தில் உரைத்துப் போட்டு மலைத் தேனில் ஊறவைத்துப் பூமிப்புடமாக பூமிக்குள் புதைத்து வைத்து மூன்று மண்டல காலம் 144 நாள் சென்று எடுத்துப் பார்த்தால் கடுக்காயும் சூதமும் சேர்ந்து மெழுகு ஆகியிருக்கும். இதை உட்கொள்ள நரை திரை மாறி உடல் கல்தூண் போலாகிவிடும் என்கிறார்.

இப்படி ஓர் அற்புதமான காயகற்ப மருந்தை வேறு யாரும் கூறவில்லை.

பிராணாயாமம், யோக நிலை; சிவநிலைகளைப்பற்றி 73வது பாடல் முதல் கூறிவரும் அகத்திய மாமுனிவர்.

அன்றான சிவவேடம் பூண்டு
அப்பனே காவி காஷாயம்பூண்டு
குன்றான மலைமீதில் சென்றேனென்றும்
கோடானகோடி தவம் செய்தேனென்றும்
வென்றான பவக்கடலைக் கடந்தேனென்றும்
விருப்பமற சமுசாரம் மறந்தேனென்றும்
சென்றுமே காட்டகுத்தின் நிலையில்நின்று
செத்தாரே கோடி பொருள் வயிற்றுக்காமே.

வயிற்றுப் பிழைப்புக்காக காஷாய வேடம் போடும் வேஷதாரிகளுக்கு நல்ல கதி கிடைக்குமா? ஒருக்காலும் கிடைக்காது. ஆனால் இவர்களிடம் மதிமயங்கி, பொருள்களைப் பறிகொடுத்து ஏமாந்து போகும் இல்லறத்தார்களுக்காகப் பரிதாபப்படுகிறார். போலி வேடதாரிகளை நம்பாதீர்கள் என்று மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறார்.

90வது பாடல் முதல் அஷ்ட கர்மத்தைப் பற்றிக் கூறத் தொடங்கிய அகத்தியர் பெருமான் வசியம் ஒன்றைப்பற்றி மட்டுமே கூறுகிறார். ஆசன விதி, காவி காஷாயம் உடுத்துபவர்க்கான நெறிமுறைகள், காசி யாத்திரை செல்வற்கான விதிமுறைகள். சங்கமர்களாக - ஆண்டி பரதேசிகளாக வாழ்வோர் அனுஷ்டிக்க வேண்டிய விதிமுறைகள் இப்படி ஒழுக்க நெறிகளைப்பற்றி விரிவாகக் கூறிய பின்.

224வது பாடல் முதல் பொதிகை மலையின் அதிசயத்தை கூறத் தொடங்குகிறார். ஒரு பிணத்தை மலையின் மேல் தூக்கிக் கொண்டு போனால் அங்குள்ள சித்தர்கள் உயிரூட்டும் மூலிகைகளால் அதைப் பிழைக்க வைத்து அனுப்பி விடுவார்கள் என்கிறார். கருநெல்லி போன்ற கற்ப மூலிகைகள் அநேகம் அம்மலைமேல் இருப்பதாகக் கூறுகிறார்.

மலையின் அடிவாரத்தில் சுப்பிரமணியர் கோயில் இருப்பதாகவும் கோயில் வாசலில் மகிடாவிசூரனும் மேற்குத் திசையில் பத்மாதி சூரனும் வடதிசையில் வடபத்திரகாளியும் தென் திசையில் மாரனும் காவல் இருக்கிறார்கள் என்கிறார்.

கோபுர வாசலில் செப்பேடுகள் பதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் வரலாறுகள் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. அங்கு ஞானாமிர்தத் தடாகத்தில் மூழ்கி எழுவதற்காக சித்தர்கள் போய்க்கொண்டும் வந்து கொண்டுமிருப்பார்கள். ஆனால் எல்லோருக்கும் அவர்களுடைய தரிசனம் கிடைக்காது. பூர்வ ஜென்ம புண்ணிய பலன் உள்ளவர்களுக்குத் தரிசன பாக்கியம் கிடைக்கும் என்று கூறுகிறார்.

அகஸ்தியர் மலையில் தட்சிணாமூர்த்தி திருமந்திர நூலைக் கண்டு புலஸ்தியர் அதிசயிக்கிறார். (தட்சிணா மூர்த்தி மெய்ஞானம் திருமந்திரம்

1500-தாமரை வெளியீடு கிடைக்கும்) அந்த நூலின் பெருமையை அகஸ்திய முனிவர் கூறுகிறார்.

249வது பாடல் முதல் புசுண்ட மகாமுனிவர் உட்கொண்ட ஆனந்த கற்பத்தைப் பற்றி அகஸ்தியர் கூறுகிறார்.

கோரக்கர் மூலி, தும்பல் பூண்டு, நிழல் வணங்கி, தொட்டால் சிணுங்கி, தும்பை, சிறியா நங்கை, திகைப்பூடு, மலைதாங்கி, மலை வேம்பு, நிலவேம்பு, கருவேம்பு, நல்வேம்பு, இருவகைக் கோரைகள், இருவகை கௌதாரிப் பூண்டு, இருவகை தும்பைப் பூண்டு, இருவகை விளா இருவகைப் பசளை, இருவகை முருங்கை, மூவகை வேலி, இருவகைச் சாரை, இருவகைச் சூரை, ஐந்து வகை மணி, காளி இரண்டு, கண்ணி ஐந்து, நங்கை மூன்று, ஆவாரை ஐந்து, ஊமத்தை மூன்று வகை, கிலுப்பை இரண்டு வகை, வந்தி, கரந்தை, அலரி, இரண்டு வகைகள், அகத்தி ஐந்து வகை, நந்தி இரண்டு வகை, வேளை நான்கு வகை,

கள்ளி எட்டு வகை, முள்ளி நாலு வகை, கூந்தல் மூன்று வகை, தாழை மூன்று வகை, தகரை இரண்டு வகை, தாமரை ஐந்து வகை, தொட்டி இரண்டு வகை, மல்லி பத்து வகை இவற்றையெல்லாம் சூரிய வெப்பத்தில் காயப்போட்டு, கல்லுரலில் இடித்துச் சூரணம் செய்து கொண்டு.

சுக்கு	ஒன்று	மிளகு	இரண்டு
விளங்கம்	”		
மூலம்	”		
அரத்தை	”		
ரோசனை	”		

பூமி சர்க்கரைக் கிழங்கு, பரங்கிப்பட்டை, லவங்கம், லவங்கப்பட்டை, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, குரோசாணி ஓமம், வால்மிளகு, ஓமம், வசம்பு, மிளகுதாளி, கச்சோலம், அதிவிடையம், தான்றிக்காய், நெல்லிக்காய், கொடிவேலி, கடுக்காய்ப்பூ, வால்மிளகு, ஏலம், நறுஞ்சீரகம், காட்டுச் சீரகம், தேசாவரம், தக்கோலம், பேரறத்தை, மாசிக்காய் இந்தச் சரக்கெல்லாம் வகைக்குக் கால்பலம் வீதம் எடுத்துக் கொண்டு எல்லாவற்றையும் நெருப்பில் வாட்டிச் சூரணம் செய்து கொள்ளவும்.

இரண்டு வகைச் சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து கோரக்கர் மூலிகையைக் கியாழம் செய்து அதனுடன் பசும்பால் சேர்த்துக் கொதிக்க வைத்து சூரணங்களைக் கூட்டி சூரணத்துக்கு இரு மடங்கு சர்க்கரை சேர்த்துப் பாகுபதம் வரும்போது பசுவின் நெய்யும் தேனும் சேர்த்து மெழுகு பதமாகக் கிண்டி, ஒரு பலம் குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம் மூன்று சரக்கும் வகைக்குக் கால்பலம் சேர்த்துத் தாளியை

இறக்கி வைத்து கணபதிக்கும் மனோன்மணிக்கும் பூஜை செய்து களஞ்சி அளவு வீதம் உட்கொள்ளக் கூற்றனுக்கு இடமில்லாமற்போகும் என்கிறார்.

பாடல் எண் 285 முதல் தென் பொதிகையில் காணப்படும் அதிசயங்களைப் பற்றி மேலும் கூறும் அகத்தியர் பெருமானார் அங்குள்ள சூதக்கிணறு பற்றியும் அதன் வேதையாக்கும் தன்மையால் பொன் அம்பரால் வெள்ளி, செம்பு முதலிய உலோகங்கள் பொன் ஆவதையும் கூறு கூறுகிறார்.

301 மிருதார் சிங்கியைக் கட்டு ஆகச்செய்வது, ஆறு வகைச் செயநீர்கள் தயாரிப்பது, சிங்கியை ஆறு வகை செயநீரால் அரைத்துப் பத்துமுறை கோழிப்புடம் போடப் பற்பமாகும் என்றும் செம்பை உருக்கும்போது இந்தப் பற்பத்தை கிராசம் கொடுக்க சிங்கி பொன்னாகும் என்றும் கூறுகிறார்.

309 கெந்தகத்தைச் செம்பு செய்து அந்தச் செம்பினுள் செய்யப்பட்ட குவளையில் சூதத்தை வைத்து உருக்க மணியாகும். அந்தச் சூதமணியைச்செந்தூரம் செய்து மற்ற உலோகங்களுடன் கொடுக்க அவை தங்கமாகும் என்கிறார்.

332 தாமிரச் செந்தூரத்தால் உண்டாகும் வேளை கூறப்படுகிறது.

341 முதல் 349 வரை ஆறாதார திராவகம் செய்யும் முறை கூறப்படுகிறது.

371 முதல் 375 வரை அக்காலத்தில் வழக்கிலிருந்த பல வகைப் போர்க் கருவிகளைப் பற்றி விவரமாகக் கூறுவது வியப்பூட்டும் செய்தி. அப்படிப்பட்ட ஆயுதங்களை இக்காலத்தில் கண்காட்சிகளில் கூடப் பார்க்க முடியாது எனலாம்.

394வது பாடல் முதல் சட்டை முனி கற்பம்பற்றிக் கூறுகிறார்.

387வது பாடல் முதல் திருமந்திரம் பற்றிக் கூறும் அகத்தியப் பெருமான்.

ஒண்ணாது திருமந்திர மறியவென்றால்
உத்தமனே தேகநிலை அறியவேண்டும்
வண்ணமுடன் காயாதி கொள்ள வேண்டும்
வளமான மூப்புதிரை அகற்றவேண்டும்
எண்ணரிய நற்பொருளை அறியவேண்டும்
ஏகாந்த உட்பொருளைக் காணவேண்டும்
திண்ணமுடன் சிதாபாசங்களை அறுத்து
சிக்கறுத்த வேரறுத்துத் தெளிவில் நில்லே. 411

என்று கூறுகிறார்.

மேலும் தென் பொதிகை மலையில் ஓர் நாள் மூலி, இரண்டு நாள் மூலி, வார மூலி, பட்ச மூலி, திங்கள் மூலி, இரண்டு திங்கள் மூலி, ஆறு திங்கள் மூலி, ஓராண்டு மூலி, ஈராண்டு மூலி என்று நூறாண்டு மூலி வரை இருப்பதாகவும் அவற்றைத் தின்பவர்களுக்கு மூலியில், குறிப்பிடும்; காலம் வரை பசி இராதெனவும் சித்தர்கள் இந்த மூலிகைகளை உண்டு பசி, தூக்கம், ஆயாசம் இன்றி ஆண்டுகள் கணக்காகத் தவம் செய்யவும் சமாதி நிலையில் இருக்கவும் வலுப் பெற்றனர் என்றும் கூறுகிறார்,

மேலும் இரண்டாவது காண்டத்தில் உள்ள அற்புதமான விஷயங்களைப் பற்றி நூலைப் படித்து விரிவாக அறிந்து கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

❀ ❀ ❀